Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நவீன இலக்கியச் சிந்தனைகள்

ம. மதியழகன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Foundation

Gurukul Ka

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the
Compliments of the Dept. of Education;
Govt. of India, New Delhi.

D 9919

DONATION

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நவீன இலக்கியச் சிந்தனைகள்

7719

DONATION

முனைவர் ம. மதியழகன்
விரிவுரையாளர், தமிழ்த்துறை
புதுவைப் பல்கலைக்கழகம்

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगडी विश्वविद्यालय

ஸ்ரீத் வெளியீட்டகம்
மயிலாடுதுறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல் குறிப்பு

நூல்பெயர்	:	நவீன இலக்கியச் சிந்தனைகள் (Thought on Modern Literature)
பொருள்	:	இலக்கியத் திறனாய்வு
ஆசிரியர்	:	டாக்டர் ம. மதியழகன்
பதிப்பகம்	:	ப்ரீத் வெளியீட்டகம் 25, புனுகீசுவரர் வடக்கு வீதி, கூறைநாடு, மயிலாடுதுறை
உரிமை	:	ஆசிரியர்
அச்சகம்	:	ஸ்ரீ வேலன் பிரஸ், சிதம்பரம்
ஆண்டு	:	டிசம்பர் 1991
படிகள்	:	1000
விலை	:	35—00
தாள்	:	சேசாயி 14.2 கி.கி
பக்கங்கள்	:	12 + 165

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணிக்கை

வாழும் வயதில் வாழாமல் மறைந்த
என் தம்பிக்கும்
நிறைவு வாழ்க்கை வாழ்ந்துமறைந்த
என் மாமனார்க்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டுரைகள் இடம்பெற்ற நூல்களும் படிக்கப்பெற்ற கருத்தரங்குகளும்

1 பிற மாநிலத்தில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள் ஒரு கண்ணோட்டம்
நோக்கு, தமிழ்த்துறை வெளியீடு, காரைக்கால், 1989.

2 நாவல் ஆய்வு (1970 வரை)
நோக்கு, தமிழ்த்துறை வெளியீடு, காரைக்கால் 1990.

3 விதைகள் பாலைவனத்தில் முளைப்பதில்லை, (மலேசியத் தமிழ் நாவல் திறனாய்வு), நாவல் வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1989.

4 வரலாற்றியல் திறனாய்வு நோக்கில் நாவல் இலக்கியம்
1-4-90 அன்று புதுவைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறையில், 'பயன்பாட்டு நோக்கில் திறனாய்வு' என்ற கருத்தரங்கில் படிக்கப்பட்டது. செந்தமிழ், மதுரை செப்டம்பர், 1990.

5 இலக்கியமும் பிறகலைகளும்,
குடந்தை அரசினர் கலைத்தொழில் கல்லூரி சார்பில் நடத்தப்பெற்ற நுண்கலைக் கருத்தரங்கில் 2—4—90 அன்று படிக்கப்பட்டது.

6 நவீன இலக்கியங்களில் புராண, இதிகாசச் செய்திகள்-ஞாலத் தமிழ்ப் பண்பாட்டுக் கருத்தரங்கில் 8—6—91 அன்று கட்டுரைச் சுருக்கமாக அளிக்கப்பட்டது.

7 'இந்திய விடுதலைப் போராட்டம் தமிழ்ப் புனைக் கதைகளில் அதிகம் இடம்பெறாமைக்குரிய காரணிகள்' ஆய்வுக்கோவை, சிதம்பரம், 1989. (கருத்தரங்கில் படிக்கப்பட்டு, ஆய்வுக்கோவையில் இடப்பெற்றது)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நன்றியுரை

1987-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் நான் புதுவைப் பல்கலைக் கழகக் காரைக்கால் மையத்தில் பணியில் சேர்ந்த போது, விரிவுச் சொற்பொழிவுகளாகப் 'புதுமை இலக்கியம்' பற்றிப் பேசுமாறு, மதிப்பிற்குரிய துறைத்தலைவரும் பேராசிரியருமான டாக்டர் அ. பாண்டுரங்கன் அவர்களால் பணிக்கப்பட்டேன். அச்சொற்பொழிவுகளுக்காகத் திரட்டிய குறிப்புக்களே, இந்நூல் கட்டுரைகளின் ஒரு பகுதியாக அமைந்து உள்ளன. அவற்றை விரைவில் நூலாக வெளிக்கொணர வேண்டுமென்று அடிக்கடி துறைத்தலைவர் வற்புறுத்தியதன் விளைவே, இந்நூல் எனில் மிகையாகாது. தன்னலமற்ற அப்-பெருந்தகைக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

கட்டுரையின் பெரும்பகுதிகளை, ஆர்வத்துடன் தட்டச்சு செய்து கொடுத்த, துறையின் தட்டச்சாளர் திருமதி கிரகலெட்சுமி அவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூலினை அழகுற அச்சிட்டு உதவிய ஸ்ரீவேலன் அச்சக உரிமையாளருக்கும் மேலாளர் முருகப்பன் அவர்களுக்கும் என் நன்றிகள்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளடக்கம்

முன்னுரை

1	இலக்கியம் — சில விளக்கங்கள்	1
2	புதுமை இலக்கியம் — சில குறிப்புகள்	11
3	இலக்கியமும் பிறகலைகளும்	21
4	புதுமைநாடகங்கள் — ஓர் அறிமுகம்	30
5	நாவல் திறனாய்வு (1970 வரை)	42
6	1970 க்குப்பின்னர் எழுந்த நாவல் திறனாய்வுகள்	60
7	மலேசியத் தமிழ் நாவல் திறனாய்வு	76
8	தலைமுறைகள் — ஒரு வட்டார நாவல்	88
9	நாவல் இலக்கிய அணுகுமுறைகள்	98
10	வரலாற்றியல் திறனாய்வு நோக்கில் நாவல் இலக்கியம்	105
11	இந்திய விடுதலைப் போராட்டம் தமிழ்ப் புனைகதைகளில் அதிகம் இடம் பெறாமைக்குரிய காரணிகள்	116
12	பிற மாநிலத்தில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் — ஒரு கண்ணோட்டம்	126
13	அசோகமித்திரனின் 'விடிவதற்குள்'	137
14	புதுக்கவிதை — சில விளக்கங்கள்	143
15	நவீன இலக்கியங்களில் புராண, இதிகாசச் செய்திகள்	151
	சொல்லடைவு	161

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னுரை

இலக்கியம் என்றால் என்ன? இப்படைப்பு இலக்கியமா? இலக்கியமில்லையா? அதனை எப்படி அறிவது? போன்ற கருத்துக்கள், அரிஸ்டாட்டில் காலந்தொட்டு நிலவி வருகின்றன. இருபதாம் நூற்றாண்டில் ரெனிவெல்லாக் (Theory of Literature), சார்தர் (What is Literature), டெரி ஈகிள்டன் (Literary Theory) போன்றவர்கள் இலக்கியங் குறித்து, பல கருத்துக்களை முன் வைத்துள்ளனர். அவர்களை அடியொற்றி, நம் தமிழ் மரபிற்கேற்ற, இலக்கிய வரையறைகளை ஏற்படுத்த முடியுமா? என்ற ஆசையின் விளைவாய் எழுந்ததே 'இலக்கியம் - சில விளக்கங்கள்' என்னும் கட்டுரையாகும்.

நவீன இலக்கியம் அல்லது புதுமை இலக்கியத்தைச் சிலர் தற்கால இலக்கியம் என்றும் இக்கால இலக்கியம் என்றும் கூறுகின்றனர். தற்காலம் அல்லது இக்காலம் என்பதில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்த எல்லாப் படைப்புகளும் அடங்கிவிடும். காவியம், சிற்றிலக்கியம், தலபுராணம் போன்றவை இப்போதும் படைக்கப்பட்டுகின்றன. எனவே, அவையும் நவீன இலக்கியத்தில் சேர்ந்துவிடும். நவீன இலக்கியத்தின் பண்புகள் என்ன? அவற்றை எங்ஙனம் வரையறை செய்யலாம்? என்ற எண்ணத்தில் விளைந்தது, புதுமை இலக்கியம் சில குறிப்புகள்' என்ற கட்டுரையாகும்.

இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் இலக்கியத்திற்கும் பிறகலைகளுக்குமுள்ள தொடர்புகள் பற்றிய எண்ணங்கள் வளர்த்தெடுக்கப்படவில்லை. தாகூரைப் போல கவிதை, சிறுகதை, ஓவியம் போன்ற பல துறையிலும் முற்றிய படைப்பாளர் நமக்குக் கிட்டவில்லை. இலக்கிய அறிஞருக்குப் பிற கலைகள் பற்றிய அறிவும், ஆர்வமும் கிடையாது. இலக்கியப் படைப்பு வேறாகவும், ஓவியம் மற்றும் சிற்பப் படைப்புகள் வேறாகவுமே நோக்கப்படுகின்றன. இலக்கியம், உணர்வுகளை எழுத்து என்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊடகவழி விளக்குகிறது என்றால், ஓவியம், வண்ணங்கள் வழி விளக்குகின்றது. இவ்வாறு இலக்கியத்திற்கும் பிறகலைகளுக்கு-முள்ள தொடர்பை ஆய்கிறது, 'இலக்கியமும் பிறகலைகளும்' என்ற கட்டுரையாகும்.

தொன்மையான கலைகளுள் ஒன்றாகிய நாடகம், நம்மிடையே இலக்கியமாகக் காட்டப்பட்டுள்ளதேயன்றி, நிகழ்த்துங் கலையாக அறிமுகப்படுத்தப்படவில்லை. அதிலும், நவீன நாடகங்கள் பற்றிய செய்திகள், இன்னமும், கல்லூரி ஆசிரியர்களையும் மாணவர்களையும் எட்டவில்லை. இந்நவீன நாடகங்கள் பற்றிய அறிமுகமாக அமைகிறது, 'புதுமை நாடகங்கள்' - ஓர் அறிமுகம்' என்ற கட்டுரை.

நவீன இலக்கியம் பற்றிய ஆய்வுகள் அதிகம் நிகழ்த்தப் பட்டது, 1970 களுக்குப் பிறகு என்று சொல்லப்படுகின்றது. அவ்வாறு நிகழ்த்தப்பட்டவைகளைத் தொகுத்துப்பார்க்கும் போதுதான், நாம் எந்த அளவிற்குப் பின்தங்கியிருக்கின்றோம் என்பது தெரியவரும். நவீன இலக்கியங்களில் அதிகம் ஆய்வுக் குட்பட்டது நாவல் இலக்கியமே. 1970 வரை ஏறத்தாழ 5 நூல்கள் முழுமையாகவும் 20 நூல்கள் கட்டுரைத் தொகுப்-பாகவுமே எழுந்துள்ளன. 1970 க்குப்பிறகு நூற்றுக்கும் மேற் பட்டவை எழுந்திருப்பினும், நாவல் கூறுகளான பாத்திரப் படைப்பு, கதைப்பின்னல், பின்னணி, மொழிநடை போன்ற-வற்றைப் பற்றிய முழு நூல்கள் ஒன்றிரண்டே வந்துள்ளன. அந்த ஓரிரு நூல்களும் முனைவர்பட்ட ஆய்வுகளாக இருக் கின்றன. இச்செய்திகளை, நாவல் திறனாய்வு 1970 வரையும் 1970 க்குப்பின்னும் என்ற இரு கட்டுரைகளில் விளக்க முனைந்துள்ளேன்.

மலேசியத் தமிழ் நாவல்கள் குறித்து நான் ஆய்வு செய்து, முனைவர் பட்டம் பெற்றிருப்பினும், மலேசிய எழுத்தாளர்கள் சிலரைத் தமிழுலகிற்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில், சீ. முத்துசாமி என்பவரின் 'விதைகள் பாலை-வனத்தில் முளைப்பதில்லை' என்ற நாவலைத் திறனாய்வு செய்து, "நாவல் வளர்ச்சி" என்ற நூலுக்கு அனுப்பி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைத்தேன். அக்கட்டுரையே, இத்தொகுப்பில் 'மலேசியத் தமிழ் நாவல் திறனாய்வு' என்ற பெயரில் இடம் பெற்றுள்ளது.

இரு பண்பாட்டுச் சூழல் கொண்ட (Bicultural Novels) நாவல்களை எழுதிப் புகழ் பெற்றவர் நீல. பத்மநாபன். அவருடைய நாவல்களில் ஒன்றான 'தலைமுறைகள்', ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தின் பண்பாடு, மொழி, சமூகச்சூழலை வெளிப்படுத்தும் ஒன்றாகத் தோன்றியது. அதை, 'வட்டார நாவல்' என்று குறுக்கினாலும், அதையும் மீறி, இந்திய நாவல்-கள் வரிசையில் சிறப்பிடம் பெறும் தகுதியுண்டு என்பதைத் தான் இக்கட்டுரை காட்ட முற்படுகிறது.

நாவல் இலக்கியத்தை அணுகுவதில் பல சிக்கல்கள் உள்ளன. தொடக்க கால நாவல்களை அணுகிய முறையில் இக்கால நாவல்களை அணுகமுடியவில்லை. கால மாற்றத்-தினால் கரு மாற்றம்; கரு மாற்றத்தினால் கதை நிகழ்ச்சிகளில் மாற்றம்; கதை நிகழ்ச்சிகளால் கதைப்பின்னல் மாறுகிறது. கதைப்பின்னல் மாறுவதற்கேற்பக் கதை மாந்தர்களின் செயல் கள் மாறுகின்றன. இதனால், கதை கூறும் முறையில் மாற்றம் ஏற்பட்டு, நாவல் வடிவமே மாறி விடுகின்றது. இது நாவல் தானா? என்று ஐயுறுமளவிற்கு, உருவமும் உள்ளடக்கமும் மாறி வருகின்றன. எனவே, நாவலை அணுகுகின்ற முறைகளும் மாறத்தானே வேண்டும். இச்சிக்கலைப் பற்றி ஆராய்கிறது, 'நாவல் இலக்கிய அணுகுமுறைகள்' என்ற கட்டுரையாகும்.

'பயன்பாட்டு நோக்கில் திறனாய்வு' என்னுங் கருத்-தரங்கை நடத்தி, வரலாற்றியல் நோக்கு என்னும் தலைப்பில் நாவல் இலக்கியத்தை ஆய்வு செய்ய வேண்டும், என்று புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறைத் தலைவர் பணித்ததன் விளைவே, 'வரலாற்றியல் நோக்கில் நாவல் இலக்கியம்' என்னுங் கட்டுரையாகும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில், புனைகதைகளின் பங்கு மிகக் குறைவானதாகவே காணப்படுகின்றது. இந்தியத் தேசிய அரசியலில், அன்றைய சென்னை மாகாணம் மற்ற மாகாணத்திலிருந்து வேறுபட்ட நிலையில் இருந்தமையும், புனைகதைகளின் இலக்கியப் பண்பும், பிறவும் காரணிகளாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அமைந்துள்ளன. இக்காரணிகளை விளக்கி, அதன் பின்னணியில் புனைகதை இலக்கியத்தில் விடுதலைப் போராட்டக் கருத்துக்கள் அதிகம் கையாளப்படாமை நோக்கப்படுகிறது. 1989 இல் சிதம்பரத்தில் நடைபெற்ற பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மாநாட்டுக் கருத்தரங்கிற்காகத் தயாரிக்கப்பட்ட கட்டுரையாகுமிது.

தமிழகத்தில் வாழ்ந்து கொண்டு இலக்கியங்களை உருவாக்கும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கும் பிற மாநிலங்களுக்குச் சென்று, வாழ்கின்ற எழுத்தாளர்கள் உருவாக்கும் படைப்புக்கும் கதைக்கரு, மொழி நடை, பின்னணி, கதைமாந்தர் படைப்பு போன்ற பல கூறுகளில் வித்தியாசங்கள் வெளிப்படுகின்றன. அவை தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்குப் புதிய பரிமாணங்களை அளிக்கின்றன. இது பற்றிய கருத்துக்களை முன் வைக்கிறது, 'பிற மாநிலத்தில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் – ஒரு கண்ணோட்டம்' என்ற கட்டுரை.

நாடகம், நாவலை அடுத்து நவீன இலக்கியங்களில் ஒன்றான சிறுகதை ஆய்வுக்கு, அசோகமித்திரனின் 'விடிவதற்குள்' என்ற கதை எடுத்துக் கொள்ளப்பட்டது. சிறுகதையை அடுத்து புதுக்கவிதை விவரிக்கப்படுகிறது. புதுக்கவிதையின் முக்கியப் பண்பாகக் கருதப்படும் புரியாமைக்குரிய (Obscurity) விளக்கங்கள் கூறப்பட்டுள்ளன.

இறுதியாக, நவீன இலக்கியங்களில் புராண, இதிகாசச் செய்திகள் பல இடம் பெற்றுள்ள விதம் நோக்கப்படுகிறது சிறுகதை, நாவல், நாடகம், புதுக்கவிதை போன்ற இலக்கிய வகைகளில் அவை எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளன என்ற சிந்தனையின் விளைவே, 'நவீன இலக்கியங்களில் புராண, இதிகாசச் செய்திகள்' என்ற கட்டுரையாக உருவெடுத்துள்ளது.

இந்நூல் பல கட்டுரைகள் அடங்கியத் தொகுப்பாக இருப்பினும், நவீன இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டே ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. இந் நவீன இலக்கியச் சிந்தனைகள் மேலும் ஆய்வுக்குரியன; விமரிசனத்திற்குரியன. ஆய்வும், விமரிசனமுமே திறனாய்வுக் கலையை வளப்படுத்த முடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியம் — சில விளக்கங்கள்

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே' என்று இலக்கியத்தின் நோக்கத்தையும் 'புவியினுக்கணியாய் ஆன்ற பொருள் தந்து, அகத்துறை நிரம்பி, ஐந்திணை நெறியளாவி' கவிதை இருக்க வேண்டும் என்று கவிதையின் தன்மையையும் 'தன்னிகரில்லாத் தலைவனை உடைத்தாய்' என்று காப்பி-யத்தின் இலக்கணத்தையும் தமிழ் இலக்கிய மரபு சிந்தித்து வெளியிட்டதேயொழிய, இலக்கியம் என்றால் என்ன? என்ற அடிப்படையைச் சிந்திக்கத் தவறிவிட்டது.

நான் யார்? என் உள்ளம் யாது? ஞானங்கள் யார்? என்ற ஆன்மீகத் தேடலைக் கொண்டிருந்த தமிழுலகம், பதி, பசு, பாசம் என்றால் என்ன? என்ற தத்துவத் தேடலைத் துருவிக் கொண்டிருந்த தமிழ் உள்ளம், இலக்கியம் என்றால் என்ன? என்ற கேள்விக்கு இதுவரை பதில் அளிக்கவில்லை என்றே தோன்றுகிறது. 'உள்ளத்தில் உள்ளது கவிதை — இன்பம் உருவெடுப்பது கவிதை' என்று கவிமணி கூறியுள்ளார் என்று விளக்கப் புகுந்தால், இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்கின்ற நம் உள்ளம் அவ்விளக்கத்தில் நிறைவு கொள்ளவில்லை. இதற்கு மேலும் இலக்கியம் பற்றிய சிந்தனை விரிவடைந்துள்ளது.

இலக்கியவாதிகள், சமூகவியலார், உளவியலார், அமைப்-பியல்வாதிகள், போன்றவர்களால் அவரவர் நோக்கிற்கேற்ப

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியம் வியாக்கியானம் செய்யப்படுகின்றது. 'ஆரணம் காணென்பர் அந்தணர்' என்ற கூற்றுக்கிணங்க, அவரவர் நோக்கில் எழுந்த இலக்கியம் பற்றிய விளக்கங்களைக் கொண்டு வரையறை ஒன்றை ஏற்படுத்த முடியுமா? என்று முயற்சிப்பதில் தவறுமில்லை. உருவம் கைக்கடங்கினால் மகிழ்ச்சி. அடங்காது போனாலும், இலக்கியம் பற்றிய விளக்கங்களை எண்ணிப் பார்ப்பதிலும் மகிழ்ச்சிதானே!

அரிஸ்டாட்டில் காலந்தொட்டு இலக்கியம் பற்றிய சிந்தனைகள் மேலை நாட்டில் இருந்து வந்திருக்கிறது. எனினும், 19 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே இலக்கியச் சிந்தனைகள் உலகளாவிய நிலையில் எழுந்தன. ஜீன் பால் சார்தர் (**Jean Paul Sartre**) போன்றோர் கவிதையை ஒதுக்கி விட்டு, உரைநடையையே இலக்கியமாகக் கொள்கின்றனர்.[1] பெரும்பாலான கலை, இலக்கிய இயக்கங்களுக்கு முன்னோடி-யாக விளங்கிய பிரான்சு நாட்டினரான சார்தர் இவ்வாறு சிந்திப்பதில் வியப்பில்லை. மேலைநாடுகளில் உரைநடை இலக்கியம் பல ஆண்டுகளாக வளர்ந்து உச்சக்கட்டம் எய்திய நிலையில் இச் சிந்தனைப்போக்கு எழுகின்றது. அதைப் பின்பற்றி நாமும் உரைநடைதான் இலக்கியம் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. கவிதை மரபு வேரோடி இருப்பதுபோல், நமக்கு உரைநடை மரபு இன்னும் வேரூன்றவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தாதராவ் (**Tzvetau Todorou**) என்பவர் இலக்கியத்தை வரையறை செய்யும்போது செயல்பாட்டுநிலை, அமைப்பியல் நிலை (**Functional and Structural**) என்ற வகையில் நோக்க வேண்டும் என்கிறார். இலக்கியம் ஒரு புனைவு (Fiction); இலக்கியம் ஓர் ஒழுங்கமைவு (System) என்ற கருத்துக்களை முன்வைத்து விளக்குகிறார்.[2] இவரும் கவிதையைப் புனைவு என்ற நிலையில் ஏற்றுக் கொள்ளத் தயங்குகிறார்.

டெரி ஈகிள்டன் (**Terry Eagleton**) என்பவர் இலக்கியம் என்பது சாதாரண பேச்சு மொழியை முறையாக மாற்றியும் ஆழப்படுத்தியும் எழுதும் முறை என்கிறார்.[3] உண்மைக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புனைவுக்குமுள்ள வேறுபாடே இலக்கியத்தையும் இலக்கிய மல்லாததையும் பிரிக்கிறது. நிருபரின் செய்திகளை நாம் இலக்கியமாகக் கொள்வதில்லை. புனைவு இருப்பதனாலேயே சூப்பர்மேன் நகைச் சுவைகளையும் (Superman Comics) பிறவற்றையும் இலக்கியமாகக் கொள்கின்றோமா? என்ற ஐயத்தையும் எழுப்புகின்றனர்.

ரெனிவெல்லாக்கும் ஆஸ்டின் வாரனும் இலக்கியம் பற்றி முருகியல் அல்லது அழகியல் நோக்கில் (Aesthetics) விளக்கங் கூறுகின்றனர். எப்பொருள் பற்றி எழுதப்பட்டவை-யாயினும் கருத்தை வெளியிடும் நிலையில் சிறந்த மொழிய-மைப்புப் பெற்றவை இலக்கியம் என்று கூறலாம் என்ற கருத்தை ஆராய்கின்றனர்.[4] மேலும், இலக்கியம், இலக்கியமல்லாதது என்று பிரித்து இலக்கியத் தன்மைகளை நிறுவ முயலுகிறார். அமைப்பியல் நோக்கில் இலக்கியம் ஒரு பிரதியாக (Text) நோக்கப்படுகின்றது. சினிமா, நாடகம் போன்று இலக்கியமும் ஒரு பிரதியே.

மேற்குறிப்பிட்ட அறிஞர்கள் இலக்கியம் பற்றிய சிந்தனை-களை முன்வைத்து விளக்கிச் செல்கின்றனரேயன்றி, இலக்கியத்தை வரையறை செய்துவிடவில்லை. அவ்வாறு செய்வதும் எளிதான காரியமன்று. இனி, தமிழ்ப் படைப் பாளர்கள், திறனாய்வாளர்கள் இலக்கியத்தை எப்படிக் காண்கின்றனர் என்பதை நோக்குவோம்.

எழுதப்பட்டு, இலக்கியம் என்ற பெயரில் வருகின்ற படைப்புகள் எல்லாம் இலக்கியம் ஆகுமா? புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் சிறுகதைகள் எழுதியுள்ளனர். வார இதழ் களிலும் சிறுகதைகள் என்ற பெயரில் பல கதைகள் வெளிவரு கின்றன. இவற்றுள் இலக்கியத் தகுதி பெற்றவை எவை? தி. ஜானகிராமன் பல நாவல்களைப் படைத்துள்ளார். நீல பத்மநாபனும் நாவல்களை எழுதியுள்ளார். மாத நாவல்களும் மலிவு விலையில் கிடைக்கப் பெற்றுப் பலராலும் படிக்கப்படு-கின்றன. இவற்றுள் இலக்கியத்தரம் வாய்ந்தவை எவை? கம்பனும் இளங்கோவும் பாரதியும் கவிதை எழுதியுள்ளனர். இன்று கவிதை என்ற பெயரில் பல துணுக்குகள் வெளிவந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்டிருக்கின்றன. இவற்றை எப்படித் தரம் பிரிப்பது? இலக்கியம் எதுவென்று நிர்ணயம் செய்வது? போன்ற வினாக்கள் நம்முன் தோன்றுகின்றன.

'இலக்கியத்தைப் பற்றி விஸ்தரிக்கலாம்; விவாதிக்க முடியாது; சூத்திரத்தால் விளக்க முடியாது. தர்க்கத்திற்கு அடங்கியதல்ல' என்ற புதுமைப் பித்தனின் வரிகளை இங்கு நினைவில் கொள்ளவேண்டும்.[5] அதனால்தான் இன்றுவரை இலக்கியத்தை வரையறை செய்ய முடியவில்லை போலும்! இலக்கியம் பற்றி விளக்கம் அளிக்கின்ற சிலர், தரமான இலக்கியம் என்றும் நச்சிலக்கியம் என்றும் பரிந்துரைக்கின்றனர். இலக்கியம் என்றாலே அது 'தரமுடையதாகத்தான் இருக்க முடியும்; இருக்க வேண்டும். பிறவெல்லாம் இலக்கியம் அல்லாதனவாக இருக்க வேண்டும். இலக்கியம் என்று ஏற்றுக் கொண்ட பிறகு, அதில் முற்போக்கு, பிற்போக்கு, தரம்-நச்சு போன்ற வார்த்தைகளுக்கே இடமில்லை. அதேபோல் நவீன இலக்கியம், வட்டார இலக்கியம் போன்றவை திறனாய்வாளர்களின் வசதிக்காகக் காலம், இடம், பின்னணி போன்ற அடிப்படையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பிரிவுகள் என்றே கொள்ள வேண்டும்.

தமிழவன், 'படைப்பும் படைப்பாளியும்' என்ற நூலில் இலக்கியம் என்பது சமூகவியல், வரலாறு, உளவியல், தத்துவம், மொழியியல் போன்ற பலதுறைகள் வெளிப்படுத்தும் பலவித அர்த்தங்களின் ஒருமித்த பிரதிபலிப்பு என்றும் இந்த ஒருமிப்பு என்ற மையத்தின் பெயர்தான் இலக்கியம் என்றும் கூறுகின்றார். முடிவில்,

> 'இலக்கியம் என்ற ஒன்று என்றுதான் பேசமுடிகிறது;
> இதுதான் இலக்கியம்; அதுதான் இலக்கியம் என்ற
> கூச்சல்கள் அர்த்தமிழக்கின்றன'[6]

என்று திட்டவட்டமாக வரையறுக்கிறார். இது மேலும் ஆய்வுக்குரிய கருத்தாகும்.

இலக்கியம் என்பது வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி (Literature is the mirror of life) என்று இது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரை கூறிவந்துள்ளோம். ஆனால் இது போன்ற விளக்கம் இன்று பொருந்தி வரவில்லை எனலாம். இலக்கியங் காட்டும் வாழ்க்கை வேறு; நடப்பியல் வாழக்கை வேறு. பார்க்கும் மனிதன் வேறு, இலக்கியத்தில் காட்டப்படும் மனிதன் வேறு. யதார்த்தம் என்பது நிகழ்ச்சிகளில் வெளிப்படலாமேயொழிய, மனித ஆளுமைகளைப் படைப்பதில் வெளிப்பட முடியாது. இலக்கியம் என்பது பிம்பங்களின் கலை (Literature is the art of Images) என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. நாளை வேறொரு விளக்கம் கொடுக்கப் படலாம்.

சமுதாயச் சிந்தனைகள் மாற, மாற இலக்கியம் பற்றிய நோக்கமும், பயனும் மாறிக் கொண்டே வந்துள்ளது. 'அறம், பொருள், இன்பம், வீடடைதற் நூற்பயனே' என்ற பழைய இலக்கியப் பயன்பாட்டிற்கும் இலக்கியத்தை இலக்கியமாகக் காணவேண்டும் என்ற இன்றைய இலக்கிய நோக்கத்திற்கும் இடையே எவ்வளவு வேறுபாடு. இந்நிலையில் இலக்கியம் என்பதற்கு நாடு, மொழி, இனம், காலம், சிந்தனை போன்ற பல்வேறு கூறுகளையும் ஒன்று நோக்கிப் பார்க்க வேண்டிய சூழலில் உள்ளோம்.

இலக்கியம் என்பது உணர்வோடு தொடர்புடையது. அறிவின் சிந்தனைக்கு அப்பாற்பட்டது இலக்கியம் என்ற கருத்துமுண்டு. தமிழில் அறிவியல் நூல்கள் கூட செய்யுள் வடிவிலேயே எழுதப்பட்டன. சிறுபஞ்சமூலம் போன்று மருத்துவ நூல்களும் எழுதப்பட்டன. ஆனால், நம் தமிழ் இலக்கிய வரலாற்றில் அறிவியல் நூல்கள் குறிப்பிடப்படவில்லை. ஆங்கில இலக்கிய வரலாற்றில் அறிவியல் துறைகளும் சேர்க்கப் பட்டுள்ளன. 'Cambridge History of English Literature' என்ற நூலில் "The Literature of Science" என்ற தலைப்பின் கீழ் இயல்பியல், கணக்கு, உடலியல் மற்றும் வேதியியல் போன்றதுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இலக்கியம் என்ற வரையறை மேலும் விரிவுபடுத்துதற்குரியது என்பதையே இது காட்டுகிறது எனலாம்.

இலக்கியத்தைப் படைப்பு என்று கூறுகிறோம். ஆனால், இன்று படைப்பு என்பதைவிட 'உற்பத்தி' என்ற சொல்லே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருத்தமாகப்படுகிறது. உணர்வின் உந்துதலினால் ஒரு படைப்பு உருவானால் அது எப்போதோ தோன்றக்கூடியது. ஆனால் பிரச்சனைகளுக்காக இன்று இலக்கியம் உற்பத்தி செய்யப்படுகிறது. கவிதைகள் உருவாவதில்லை. மாறாக உற்பத்தி செய்யப்படுகின்றன. கவிதை போல வடிவம் கொண்டிருந்தாலும் செய்நேர்த்தி அதில் இருந்தாலும் உண்மைத் தன்மை இன்றில்லை. இன்றைய சூழலில் இலக்கியத்தில் சமுதாயப் பிரச்சனைகள் இடம்பெற்றிருக்க வேண்டும். ஆனால், சமுதாயப் பிரச்னைகளுக்காக இலக்கியம் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த இடத்தில் புதுமைப்பித்தனின் வரிகள் குறிப்பிடத்தக்கது.

> "ஒழுக்கத்தையும் தர்மத்தையும் கம்பனும் மற்ற தலவர்களும் பாடியுள்ளனர். முதலாவதில் ஒழுக்கம் கவிதையில் இடம்பெறுகிறது. மற்றதில் ஒழுக்கத்திற்காகக் கவிதை இயற்றப்படுகிறது."[7]

இந்த அடிப்படையைப் புரிந்துகொண்டால் நாம் இலக்கியம் என்றால் என்ன என்பதை ஒரளவிற்குப் புரிந்து கொண்டவர்களாகவோம்.

காலத்தைக் கடந்து நிற்பது (Permanence) இலக்கியம் என்ற விளக்கமும் இங்குக் குறிப்பிடத்தக்கது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியம் இன்னும் ரசிக்கத் தக்கதாக உள்ளது. இளங்கோவின் கற்பனையும் கம்பனின் வருணனையும் இன்றும் சுவைக்கத் தக்கதாய் உள்ளன. மனிதனைப் பாடுகின்ற எப்படைப்பும் மனிதன் இருக்கின்ற வரை உணர்ந்து போற்றப்படவே செய்யும். போற்றப்படுதலுக்கான காலம் வேண்டுமென்றால் முன்பின் அமையலாம். பாரதி காலத்தில் ஒதுக்கப்பட்ட அவரது கவிதைகள் இன்று பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

இலக்கியம் என்பதற்கு உளவியல் ரீதியான விளக்கமும் தரப்படுகின்றது. படைப்பாளியின் இயற்கையான உணர்வுகளுக்கு உண்மையான வடிகால் கிடைக்காத போது ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாற்று வடிகாலாக (**Substitute Gratification**) அமைவதே இலக்கியம் என்பர் சிக்மெண்ட் ப்ராய்டு. இவ்விளக்கம் இலக்கியத்தின் பரிணாமத்தை முழுதும் விளக்குவதாக அமைய வில்லை என்பதை உணரமுடியும்.

இலக்கியம் என்பது படைப்பாளனோடு மட்டும் தொடர் புடையதன்று. வாசகனை அடைந்து பல்வேறு உணர்வுகளை ஏற்படுத்தும் போதுதான் இலக்கியம் வாழ்ந்து கொண்டிருக் கிறது எனலாம். நாம் இதுவரையில் இலக்கியம் என்பதைத் தனிப்பட்ட ஒரு பொருள் என்ற அடிப்படையிலேயே நோக்கி, படித்து, திறனாய்வு செய்து வருகின்றோம். அப்பொருள், படைப்போன் - படிப்போன் இருவரின் உள்ள ஒன்றுதலின் விளக்கம் என்பதை உணரத் தவறி விடுகிறோம். இந்த உள்ள ஒன்றுதல், காலத்தைக் கடந்தும் சூழலைக் கடந்தும் நிகழ்வத-னால் தான் மனிதன் தோன்றியதிலிருந்து கலை, இலக்கியங்-களும் உடன்பிறந்தே நிற்கின்றன; வாழ்ந்து வருகின்றன.

சூழலுக்கும் காலத்திற்கும் உட்பட்ட படைப்புக்கள் அப்போதைக்குப் பரபரப்பை உருவாக்கிவிட்டுப் பின்னர் மறைந்து விடுகின்றன. அதனாலேயே அவை இலக்கியத் தகுதியை இழந்து விடுகின்றன. விடுதலை இயக்கம் மற்றும், அரசியல் கொள்கையைக் கொண்டெழுந்த படைப்புக்களில் சிலவே கால வெள்ளத்தில் நிலைத்து நிற்கின்றன. மற்றவை பெயர் சுட்டக்கூட தகுதியில்லாதவையாகி விடுகின்றன. இதற்கான காரணத்தை இலக்கியத் தரத்தின் அடிப்படை யினின்றும் நோக்க வேண்டும்.

இலக்கியம் - இலக்கியம் அல்லாதது என்ற இருபிரிவுதான் இருக்க முடியும், என்பதற்குச் சான்றுகளை அழகியல் நோக்கில் இங்குக் காண்போம்.

> "கற்க கசடறக் கற்பவை கற்றபின்
> நிற்க அதற்குத் தக"

என்ற குறளும்,

> "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு
> நல்ல படாஅப் பறை"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற குறளும் இங்கு நோக்கப்பட வேண்டியன. 'கற்கத் தகுந்தவைகளை ஐயமறக் கற்று, கற்ற பின்னர் வாழ்க்கையில் அதையொட்டியே நடக்க வேண்டும்' என்பது முதற் குறளின் கருத்து. இக்குறளில் கருத்து மட்டுமே உள்ளது. கற்பனை என்பது ஒரு விழுக்காடு கூட இல்லை. இந்நிலையில் இலக்கியத் தகுதி என்பதை இக்குறள் பெறத் தவறி விடுகிறது. வெறுங் கருத்தை நேரடியாகக் கூறுவது இலக்கியம் ஆகாது, இலக்கியத்தின் நோக்கமும் அதுவன்று.

அடுத்த குறளை நோக்குவோம். இக்குறள் 'நலம் புனைந்துரைத்தல்' என்ற அதிகாரத்தில் வருவது. தலைவன், தலைவியின் அழகைப் புகழ்ந்து கூறுகின்ற நிலையில் இக்கூற்று வள்ளுவரால் எடுத்தாளப்பட்டுள்ளது. தலைவியின் இடை மிக மென்மை வாய்ந்தது என்பதை அவன் கூற முனைகிறான். மலர் போன்ற மென்மை என்று கூறினால் கூட அவன் மனம் நிறைவடையவில்லை. அனிச்சப்பூவை அந்த பெண் காம்போடு சேர்த்து சூட்டிக்கொண்டாள். அதனால் அவளுடைய இடை நோவுற்றது. நோவுற்றதனால் நல்ல பறைக்கு இனி இடமிருக் காது என்கிறான்.

தலைவியின் மெல்லிய இடையைக் கூறவந்த தலைவனின் கூற்றில் உள்ள கற்பனையே இக்குறளை ரசிக்கத்தக்க இலக்கியமாக ஆக்கியிருக்கிறது. இவ்விடத்தில் கற்பனை உடையதெல்லாம் இலக்கியம் ஆகிவிடுமா? என்ற ஐயத்தை எழுப்பினால், இலக்கியப் பரிச்சயம் உடையவர்களுக்கு அவர் களுடைய அனுபவத்தின் மூலமும் உணர்வின் மூலமுமாகவே இலக்கியம் இது இலக்கியமில்லாதது என்று பகுத்துணர முடியும் என்ற பதிலே தரமுடியும். இன்று கவிதையை விட கவிதை போல வருகின்றவைகளே அதிகமுள்ளன. இவற்றைப் பிரித்துணர இலக்கியம் பற்றிய தெளிவு ஒவ்வொரு இலக்கிய வாசகர்கட்கும் தேவை.

அதேபோல் பாரதி, பாரதிதாசனிடமும் இலக்கியத் தகுதி பெற்ற கவிதைகளும் இலக்கியத் தகுதி பெறாத கவிதைகளும் உள்ளன. பாரதிதாசனின்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரில் பழுத்த பலா"

என்ற கவிதை வரிகளுக்கு உள்ள இலக்கியத்துவம் இக்கால நவீன கவிதைகளுக்கு இருக்கின்றதா என்பது ஐயமே! விதவைப் பெண்ணின் துயரத்தை வெளிப்படையாகக் காட்டாமல், பலாவாகவும் நிலாவாகவும் காட்டிய கற்பனைத் திறனே அதன் இலக்கியத் தகுதியை அதிகப்படுத்தியது எனலாம். படிமத்திற்கும் குறியீட்டிற்கும் இக்கவிதையைச் சான்று காட்டலாம். பாரதியார் பாடல்களில் இலக்கியநயங்குறைந்து காணப்படுபவை அவரது தேசிய இயக்கப் பாடல்களாகும். இவ்வாறு அழகியல் நிலையில் இலக்கியம் - இலக்கியமல்லாதவற்றைப் பிரித்துணர வேண்டும்.

கவிதை என்பது உணர்ச்சிகளைக் கட்டவிழ்த்து விடுவதல்ல; உணர்ச்சியிலிருந்து தப்பித்தல். அது ஒரு ஆளுமையின் வெளிப்பாடு அல்ல; ஆளுமையிலிருந்து தப்பித்தல் என்கிறார் டி.எஸ். எலியட் (Tradition and the Individual Talent). இது வேர்ட்ஸ்வொர்த்தின் கவிதை விளக்கத்திற்கு எதிரானதாகத் தோன்றுகிறது. "Poetry is the spantaneous overflow of powerful feeling's" என்ற கருத்துக்கு முரணாக எலியட்டின் கருத்து உள்ளது. கவிதை பற்றிய எண்ணங்கள் இவ்வாறு கருத்து மாறுபாடுகளைக் கொண்டிருக்க, இலக்கியம் என்பதை எளிதாக வரையறுத்து விட முடியுமா? வரையறுப்பிற்கான முயற்சியே இலக்கியக் குளித்தலாகும். வரையறுப்பு தொடர்ந்து கொண்டேயிருக்கும். கற்பனைக்கு ஏது எல்லை? கற்பிக்கப்பட்ட கடவுளுக்கும் ஏது எல்லை? கம்பன்,

"ஊழ்கொண்ட சமயத் தன்னான்
உருவு கண்டாரை யொத்தார்"

என்று பரம்பொருளுக்குக் கூறுவது இலக்கியத்திற்கும் பொருந்தி வருவதைக் காணலாம்.

த. ராசு என்பவர் தன் 'புதிய நோக்கில் படைப்பிலக்கியம்' என்ற நூலில் புலமை இலக்கியம், பொழுது போக்கு இலக்கியம், படைப்பிலக்கியம், சோதனை இலக்கியம் என்று வகைப்படுத்தி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விளக்குகின்றார். புலவர்கள் வேறு, கவிஞர்கள் வேறு என்று கூறியுள்ளார். படைப்பாளன் வேறு; கவிஞன் வேறு என்றும் கூறியுள்ளார். இக்குழப்பங்கள் எல்லாம் இலக்கியம் என்ற அறிதலில் உள்ள குறைபாடேயாகும். இலக்கியம் பற்றிய தெளிவு ஏற்பட்டுவிட்டால் இப்பிரிவுகளே தேவையில்லை; இப் பிரிவினால் விளையும் குழப்பங்களுக்கும் இடமில்லை.

> "படைப்பிலக்கியமும் சோதனை இலக்கியமும் படைத்துக்கொண்டிருக்கும் போதே இடையிடையே பொழுதுபோக்கு இலக்கியமும் படைக்கலாம்"[8]

என்கிறார். இலக்கியப் படைப்பிற்கு அட்டவணைப் போட்டு காலம் கொடுத்து உற்பத்திப் பொருளாக்க நினைக்கும் இவ் விமரிசகர் போன்றவர்களால் வாசகர்களுக்கு இலக்கியம் எது? என்பது பற்றிய குழப்பம் இருந்து கொண்டேதானிருக்கும்.

அடிக்குறிப்புகள்:

1 Jean Paul Sartre, What is Literature, (Methuen & Co., London 1986) pp. 1-23.

2 Tzvetan Todorov, Genres in Discourse (Cambridge University press, cambridge, 1990) pp. 1-12.

3 Terry Eagleton, Literary Theory - An Introduction (Basil Blackwell Ltd., England, 1983) pp. 1-15.

4 ரெனிவெல்லாக் & ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை (குளோரியா சுந்தரமதி மொழிபெயர்ப்பு) (பாரி நிலையம் சென்னை, 1966) பக். 10-20.

5 புதுமைப்பித்தன், புதுமைப் புத்தன் படைப்புகள், (தொகுதி-2) ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1988) பக் 53

6 தமிழவன், படைப்பும் படைப்பாளியும், (காவ்யா, பெங்களூர், 1989) பக். 136.

7 புதுமைப்பித்தன், மேற்படி நூல், பக். 58.

8 த. ராசு, புதிய நோக்கில் படைப்பிலக்கியம், (மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1985) பக். 125.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுமை இலக்கியம் - சில குறிப்புக்கள்

இலக்கியப் படைப்பாளரிடத்தும் திறனாய்வாளரிடத்தும் கடந்த 20, 25 ஆண்டுகளாகப் புதுமை, நவீனம் என்ற சொற்கள் வெகுவாகப் பயன்படுத்தப்பட்டு ஓர் உச்சக் கட்டத்தை அடைந்து, தற்போது படிப்பாளர்களிடத்தும் பரவலாக்கப்பட்டு, தேய்ந்துபோன நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன. புதுமைக்கு விளக்கங்கொடுக்கும்போது, மரபை மீறுதல் என்ற கருத்து அடிப்படையாகக் கூறப்படுகின்றது. மரபு மீறல் என்பது இலக்கியந்தோன்றிய காலந்தொட்டு நிகழ்ந்து வருகின்ற தொடர்ச்சியான இலக்கிய மரபாகும். பழையன கழிதலும் புதியன புகுதலும் காலந்தோறும் நடந்துவரும் இலக்கியப்போக்கு என்பது நாம் அறிந்ததே. இலக்கிய மரபுகள் அவ்வப்போது மீறப்பட்டு வந்துள்ளன. இலக்கிய வடிவங்களும் பாடுபொருளும் மாறித்தான் வந்திருக்கின்றன. தனித் தனிப் பாடல்கள் (Lyrics) கொண்ட நிலைமாறி நீண்டபாடல்கள் கொண்ட பத்துப் பாட்டு எழுந்தது. கதை கூறும் காப்பியம் (Epic) எழுந்தது. ஆசிரியம் என்கிற பா நிலை மாறி, வெண்பா திருக்குறளில் இடம்பெற்றது. பின்னர், விருத்தம் நிலை கொண்டது. கலம்பகத்தில் அரசர்க்கு இவ்வளவு பாடல்கள் இறைவனுக்கு இவ்வளவு பாடல்கள் என்கிற வரையறை மீறப் பட்டது. வான்மீகியைக் கம்பன் பின்பற்றினாலும் மூலத்தை அப்படியே பின்பற்றவில்லை. உயர்ந்தகுடி மக்களேயன்றி, தாழ்ந்தகுடி மக்களைக் கொண்ட பள்ளு, குறவஞ்சி இலக்கியங் களும் எழுந்தன. அப்போதெல்லாம் மரபை மீறுகிறோம்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுமை செய்கிறோம் என்கிற குரல் ஒலிக்கவில்லை. இப்போது தான் 'புதுமை' என்கிற சொல்லும் 'மரபை மீறுதல்' என்கிற கருத்தும் பிரக்ஞை பூர்வமாக எழுத்தாளர்களால் கையாளப் பட்டு வருகின்றது இந்தப் பிரக்ஞை பூர்வ உணர்வே புதுமை இலக்கியத்திற்கு அடிப்படை வகுக்கிறது எனலாம்.

புதுமை என்கிற சொல் பரந்துபட்ட பொருளைக் குறித்து நிற்பது. 'Modern Literature' என்கிற ஆங்கிலச் சொல்லை 'இக்கால இலக்கியம்' 'தற்கால இலக்கியம்' 'நவீன இலக்கியம்- 'புதுமை இலக்கியம்' என்ற தமிழ்ச் சொற்களால் எடுத்தாளு கின்றனர். இக்காலம் என்பதும் நவீனம் என்பதும் புதுமைப் பொருளில் வழங்கப்பட்டாலும் 'இக்காலம்' என்பது குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய அனைத்து இலக்கியங்களும் அடங்கும், என்ற பொருள் தருகிறது. இன்று கூட உலா, பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள், தலபுராணங்கள் வெளிவருகின்றன. இவற்றை உள்ளடக்கியே 'இக்கால இலக்கியங்கள்' என்ற சொல் பொருள் தருகிறது. ஒரு சிறப்புச்சொல் பொதுச்சொல்லாக வழங்கப் படுகிறது. காரணப்பெயர் காலப்போக்கில் இடுகுறிப்பெயராதல் போல புதுமைப்பண்பைக் குறிக்கும் 'புதுமை' என்ற சொல் இக்காலத்தில் எழும் எல்லா இலக்கியங்களையும் உள்ளடக்கிய சொல்லாகமாறிவிட்டது எனலாம். ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்,

> "தற்காலத் தமிழ் இலக்கியம் என்றால் இந்தக் காலத்தில் எழுதப்பெறும் தமிழ் நூல்கள் என்று பொருள் இல்லை... மேனாட்டு நாகரிகத்தாலும் கலைகளாலும் மோதுண்ட நமது சமுதாயத்தில் புதிய சக்திகள் தோன்றி வருகின்றன. மக்களின் லட்சியப் போக்கிலும் வாழ்க்கையிலும் மாறுதலைக் காண்-றோம். இவைகளைப் பொருளாகக் கொண்ட இலக்கியம்தான் தற்காலத் தன்மையை அல்லது தற்காலப் பண்பை உடையது என்று சொல்லலாம்" என்கிறார் (தற்காலத் தமிழ் இலக்கியம் - முன்னுரை).

ஆங்கிலத்தில் புதுமை இலக்கியம் (Modern Literature) என்பதோடு சமகால இலக்கியம் (Comtemporary Literature)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். இவற்றுள் இரண்டாவதை சமகால இலக்கியங்கள் என்று தமிழில் குறிக்கலாம் சமகாலம் என்பது அவ்வக் காலத்திற்கேற்ற பொருளுடைய சொல். சமகால இலக்கியத்தில் புதுமை, பழமை, இரண்டும் கலந்து நிற்கும். ஆனால் புதுமை இலக்கியத்தில் அந்நிலை இல்லை.

இவ்விடத்தில் இன்னொன்றையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். புதுமை என்பது சார்புத் தொடர் (Relative Term). இன்றைய புதுமை நாளைய மரபு. இன்றைக்கு நாம் முற்போக்குடையது என்று கருதிக் கூறுவது சில ஆண்டுகள் கழித்து, பிற்போக்குத்தனமாகக் கருதப்படலாம். எனவே, புதுமை என்பதற்கு நாம் இப்போது வரையறுத்துக் கொள்ளும் கருத்துக்கள் யாவும் பின்னால் மாறக் கூடிய தன்மை உடையன என்று பொருள் கொள்ளலாம்.

புதுமை என்று நாம் வரையறை செய்வதற்கு எவ்வவற்றை அளவுகோலாகக் கொள்ளவேண்டும் என்பது சிந்திக்கத்தக்கது. காலத்தைக் கொண்டு வரையறை செய்கிறோமா? இலக்கிய வடிவம், பாடுபொருள் கொண்டா? என்ற கேள்விகளுக்கு எல்லாவற்றையும் பார்க்கின்ற நிலையிலேயே பதில் கூற வேண்டும். இதுபற்றிய சிந்தனைகளை அறிஞர் கைலாசபதியும் டாக்டர் சிவத்தம்பியும் ஓரளவுக்குச் சுட்டிக்காட்டிச் சென்றுள்ளனர். (நவீன இலக்கியத்தின் அடிப்படைகள், இலக்கியமும் கருத்துநிலையும்.)

நவீனகால எல்லையை வகுக்கும்போது பேராசிரியர் கைலாசபதி 1850க்குப் பிற்பட்ட காலத்தை நவீன இலக்கிய காலத்தின் தொடக்கநிலை என்று வரையறை செய்கிறார். (பக் 21). இவ்வரையறை, ஆங்கிலேயர் ஆட்சி, மெக்காலேயின் கல்வித்திட்டம் என்பதைக் கொண்டே செய்யப்படுகிறது. ஆனாலும், அதனைத் திட்டவட்டமான வரையறை என்று கூறுவதற்கு அவரே தயங்குகின்றார். இவ்விடத்தில் மேலை நாட்டில் தோன்றிய கலை இலக்கியப் புதுமைகளை நோக்க வேண்டியுள்ளது. அங்கிருந்து பெற்ற கலை இலக்கியத்தாக்கம், நமது தமிழ் இலக்கிய நவீன அடிப்படைகளில் ஒன்றாக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளது. குறிப்பிடத்தக்க வேற்றுமை என்னவென்றால், மேலைநாட்டில் புதுமை முயற்சி என்பது உரைநடை தோன்றிப் பல்லாண்டு வளர்ந்த பின்னரே ஏற்பட்டது. ஆனால் தமிழில் உரைநடை, புதுமை வடிவம், பாடுபொருள் இரண்டும் ஒன்றாகவே கலந்து வந்தன. இங்கே இதனை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலைநாட்டில் புதுமையியல் என்பது 1880க்கும் 1920க்குமிடையே ஏற்பட்ட கலையுலகப் புரட்சியாகும். பிரஞ்ச் புரட்சியும், ருஷ்ய புரட்சியும், முதல் உலகப்போரும் மேலை நாட்டில் நிலமானியச் சீரழிவையும் மனிதனின் நாகரிகப் போக்கையும் மாற்றி அமைத்தது. போதிக்கப்பட்டுவந்த ஒழுக்க நெறிகள், மதக்கருத்துக்கள் கட்டுப்பாடுகள் பெரிய சுமையாகக் கருதப்பட்டன. இவற்றிலிருந்து விடுதலைபெற்று எண்ணியபடி வாழவேண்டும் என்ற எண்ணம் எழுந்தது போலி மனித உருவம் தூக்கி யெறியப்பட்டு உண்மை மனிதனின் உணர்வுகள் வெளிக்காட்டப்பட வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. பார்க்கும் பொருள்களிலிருந்து விடுதலை (Emancipation of the object)என்கிற கருத்து முன்வைக்கப் பட்டது. விரக்தி, ஏமாற்றம், கசப்புணர்வு, எதிர்கால நம்பிக்கையின்மை போன்ற உணர்வுகளால் எல்லோரும் அலைக்கழிக்கப்பட்டனர். பிராய்டின் மனவியல் கோட்பாடும், மார்க்சின் பொருளாதாரக் கோட்பாடும் பெரும் மாற்றங்களைப் பல நிலைகளிலும் ஏற்படுத்தின.

கலை, இலக்கிய இயக்கங்களின் தாயகமாக அப்போது பிரான்ஸ் திகழ்ந்தது. மரபுகளை முழுமையாகப் புறக்கணித்த இயக்கமான டாடாயிசம், ஆக்கபூர்வமான கருத்துக்களைக் கொண்டிராததால் சர்ரியலிசம் தோன்றியது. இச்சர்ரியலிசந்தான் புதுமையியலுக்கு ஓர் அடித்தளமிட்டது எனலாம். (It effaces the border line between tradition and Modernity) இந்தச் சர்ரியலிசப் போக்கும் அதன்பின் ஏற்பட்ட இலக்கிய இயக்கங்களின் தாக்கமும் தமிழ் இலக்கியத்திலும் இடம் பெறலாயிற்று. இதுவும் நவீன இலக்கிய அடிப்படைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் நவீனத்தன்மையின் முன்னோடியாகப் பாரதியார் கூறப்படுகின்றார். அவருடைய புதுமைச் சிந்தனையும் தளர்ந்துவிட்ட தமிழ் இலக்கியப் போக்கை மாற்றியமைத்த செயலும் அவ்வாறு கூறுவதற்கு அடிப்படைகளாக அமைந்தன. மற்றொரு குழுவினரால் வசனகவிதை எழுதியவன் என்கிற காரணத்தினால் பாரதி, நவீன இலக்கிய முன்னோடியாகக் கருதப்பட்டான். காலப்போக்கில் பாரதியையும் மிஞ்சுகின்ற இலக்கியப் போக்கு தமிழில் எழ ஆரம்பித்தது. இதை இவ்வாறு கூறவேண்டும் என்ற பழைய இலக்கிய மரபிலிருந்து எதையும் எவ்வாறும் கூறலாம் என்ற புதிய கட்டுப்பாடற்ற இலக்கிய மரபு உதயமாகிறது. பழைய இலக்கியங்களிடுருந்து நவீன இலக்கியங்களை வேறுபடுத்தும் அடிப்படைப் பண்புகளில் இதுவுமொன்று என்பர் எம்.ஏ. நுஃமான்(மார்க்சியமும் இலக்கியத்திறனாய்வும் பக். 178) இவ்வாறு யாப்பு, பாடுபொருள், கூறுமுறை, மொழிநடை என்ற பல்வேறு நிலைகளிலும் பழைய இலக்கியங்களி-னின்றும் புதுமை இலக்கியம் தனித்துநின்றது. நாவல் சிறுகதை என்கிற இலக்கிய வடிவம், உரைநடை என்கிற மொழிநடை, நடைமுறை வாழ்க்கை என்ற பாடுபொருள் கதை கூறல் என்ற உத்தி போன்றன புதுமை இலக்கியத்தின் அடிப்படையாக அமைந்தன எனலாம்.

காலவரையரையை நவீன இலக்கியத்திற்குக் கொள்ளும்போது அச்சு வடிவம் என்பது குறிப்பிடத்தக்கது. புதுமை இலக்கியங்கள் அச்சுவடிவத்தில் இருப்பது மட்டுமல்லாமல், ஓலைச்சுவடி வடிவில் இருக்கமுடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது. அச்சுக்கலை ஏற்பட்டபின்னர் தோன்றிய இலக்கிய மாற்றம் இதுவெனலாம்.

இந்த மேலை இலக்கியப்போக்கைத் தமிழில் கையாண்ட-வர்கள் ஆங்கிலம் படித்த தமிழ் எழுத்தாளர்கள். நாவலில் தொடங்கிய இப்போக்கு 1932 அளவில் மணிக்கொடி இதழ் தொடங்கப்பெற்றபோது உச்சக்கட்டம் எய்தியது. அதனுடைய எழுச்சிஇன்றுவரை தொடர்ந்து வருகிறது எனலாம். மணிக்கொடிவழி வந்தவர்களைக் கருத்துமுதல் வாதிகள் என்பதிலும் கலை கலைக்காவே என்ற கோஷத்தைக் கொண்டவர்கள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதிலும் இருவிதக்கருத்துக்கு இடமில்லை. பாரதிக்கு அடுத்து பிச்சமூர்த்தி புதுக்கவிதையில் செய்த மாற்றமும், கு.ப.ரா. சிறுகதைகளில் காட்டிய பாடுபொருளும் உடனடித்தாக்கத்தை ஏற்படுத்தாவிடினும், 'எழுத்து' இதழ் தோன்றிக் கவிதைக்கு முக்கியத்துவம் அளித்தபோது, புதுக்கவிதை எழுதியவர்களுக்குப் பிச்சமூர்த்தியே முன்னோடியாகத் திகழ்ந்ததும் கு.ப.ரா. வின் தாக்கம் தி. ஜானகிராமனிடம் வளர்ச்சி பெற்றதும் புதுமைப் பித்தனின் எழுச்சி, ஜெயகாந்தனிடம் முடிவுற்றதும் சங்கிலித் தொடர்போல புதுமைப்போக்கிற்கு வித்திட்டன. சர்ரியலிசப், போக்கு கொண்ட சில நாவல்களும், புதுக்கவிதைகளும் மேலை இலக்கியப் போக்கைப் பின்பற்றின. இவையெல்லாம் நவீன தமிழ் இலக்கியத்திற்குத் தம் பங்கைச் செலுத்தின. இவ் வணியினர்க்கு மேலை இலக்கியப் போக்கின் தாக்கமும் ப்ராய்டின் மனோதத்துவ ஆய்வுக் கருத்தும் அடித்தளமிட்டன. ப்ராய்டின் அறிக்கைக்குப் பிறகு நனவோடை நாவல்கள் தோன்றின. அதன் தாக்கம் புதுமைப்பித்தனில் தொடங்கி லா. ச. ரா வுடன் மலர்ச்சி பெற்றது எனலாம்.

நவீன இலக்கியத்தின் பண்புகளில் மற்றுமொன்றாகத் திகழ்வது உலகப்பொதுவான இலக்கிய வடிவங்கள். நாவல், சிறுகதை, புதுக்கவிதை போன்றவை குறிப்பிடத்தக்கன. இவை மூன்றுமே மேலை இலக்கியப் போக்கின் தாக்கத்தாலும், ஆங்கிலேயர் ஆட்சியின் காரணத்தாலும், அச்சுக் கலையின் தோற்றத்தாலும் எழுந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. இந்த இலக்கிய வகைக்கேற்பப் பாடுபொருளும், உத்தியும், கூறுமுறையும் புதுப்பொலிவு பெற்றன எனலாம். 'நாவல்' என்ற இலக்கிய வகையை எழுதும் ஒருவர் காப்பிய, இதிகாசங்களைப் போன்ற கடவுளின் திருவவதாரத்தையோ, திருவிளையாடல்களையோ கூறமுடியாது. கண்ணெதிரே, நடமாடும் மனிதனின் செயல்களும் எண்ணங்களுமே அவ்விலக்கிய வகையின் பாடுபொருளாகின்றன.

நவீன இலக்கியத்தின் மற்றொரு பண்பாக, பழைமைகளைப் புதிய கண் கொண்டு நோக்குதல் என்பதைக் கொள்ளலாம். வான்மீகியிலிருந்து வருகின்ற 'அகல்யை' என்ற பாத்திரம்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நவீன எழுத்தாளர்களால் எப்படியெல்லாம் நோக்கப்படுகிறது என்பதைச் சான்றாகக் கொள்ளலாம். புதுமைப்பித்தனின் 'சாப விமோசன'த்தில் இராமன் குற்றக் கூண்டில் நிறுத்தப் படுகின்றான். கு.ப.ரா வின் 'பெண் இருதயம்' என்ற நாடகத்தில் மேனகை குற்றக் கூண்டில் நிறுத்தப்படுகின்றாள். மலையாளக் கவிஞர் குமரன் ஆசானின் 'சிந்தா விஷ்டயாய சீதா' இராமனைத் தலைகுனிய வைக்கிறாள். வள்ளத்தோளின் 'அச்சனும் மகளும்' என்ற சிறு காவியத்தில் விசுவாமித்திரர் சகுந்தலையால் தலைகுனிகிறார்.

'கற்பு' என்கிற தமிழரின் உயிரியக் கோட்பாடு, புதுமைப் பித்தனின் 'பொன்னக'ரத்தில் தவிடுபொடியாகிறது. ஜெயகாந் தனின் 'அக்கினிப்பிரவேசத்தில்' மாற்று மருந்தாகக் கற்பிழந்த-வளுக்கும் விமோசனம் அளிக்கப்படுகிறது. 'மீரா' வின் ஊசிகள் பழைய குறுந்தொகைப் பாடலான 'யாயும் ஞாயும் யாராகியரோ' என்ற உன்னதக் காதல் பாடலுக்கு மாறாக, 'உனக்கும் எனக்கும் ஒரே ஊர் வாசுதேவ நல்லூர்' என்று இன்றைய காதலின் உன்னதத்தைக் காட்டுகிறது.

புதுமைப்பித்தனிடம் கடவுள் கைகோர்த்துக்கொண்டு ஓட்டல்களிலும் வீடுகளிலும் நுழைகிறார். (கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்).

> ''கடவுளே வெளிச்சமானவன்
> அவனுக்கு எதற்கு இத்தனை திருவிளக்கு
> ஒளியா வா! இந்தச் சேரியின்
> இருள்போக்கு'' (தமிழ் நாடன்)

என்று இறைவனுகே உச்சவரம்பு விதிக்கும் கட்டளைகள்.

> ''பரதன் மட்டுமே செருப்பை
> அரியணையில் ஏற்றியதாகக்
> கதை விடாதீர்கள்
> பரதன்தான் முதன்முதலில்
> செருப்பை அரியணையில்
> ஏற்றினான் என்று வேண்டுமானால்
> சொல்லிக்கொள்ளுங்கள் (புகழேந்தி)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்று பரதனின் செய்கைக்குப் புதிய கோணத்தில் விளக்கம் தரப்படுகிறது. இத்தகு சிந்தனைகளை எல்லாம் நவீன இலக்கியப் பண்புகள் எனலாம்.

தீயதை விலக்கி, நல்லதைக் காட்டும் இலக்கிய மரபை மாற்றியமைக்கும் புதிய போக்கும் இன்றைய புதுமை இலக்கியப் பண்பு எனலாம். தனிமனிதனின் அந்தரங்கச் செயல்களும், இடக்கரடக்கல் என்று ஒதுக்கி வைக்கப்பட்ட வார்த்தைகளும், முறை தவறிய பாலுணர்வுச் செய்திகளும் இன்றைய படைப்புக்களில் ஒளிவு மறைவின்றிக் காட்டப்படுகின்றன. இலக்கியத்தில் இப்படித்தான் எழுதவேண்டும் என்ற சட்டங்கள் இங்கே மீறப்படுகின்றன. 'எக்ஸிஸ்டன்ஸியலிசமும் பேன்சி பனியனும்' போன்ற நாவல்கள் மேற்கூறிய கருத்துக்களைக் கொண்ட புதுமை இலக்கியங்களின் சான்றுகள் எனலாம்.

"வான் பொய்ப்பினும்
தான் பொய்யா
மலைத்தலைஇய
கடற்காவிரி'

என்ற பட்டினப்பாலை வரிகள் அன்றைக்கு வேண்டுமானால் உண்மையைக் கூறியதாக நம்பலாம். ஆனால் இன்று இப்பாடல் வரிகளைப் படிக்கின்ற நமக்கு வறண்ட காவிரியின் நிலையும் இப்பாடல் அதற்கு முரணாக அமைந்துள்ள விதமும் மனதிற்குள் ஒரு விரக்தியை ஏற்படுத்துகின்றது. இவ்விரக்தி நிலையே நவீன இலக்கியத்தின் மனோநிலை (Modern Consious) எனலாம். மருங்குவண்டு சிறந்தார்ப்ப மணிப் பூவாடை போர்த்திச் சென்ற சிலம்பின் காவிரி இன்று கர்நாடகாவின் கருணைக்குத் தவம் கிடக்கிறது. இப்பின்னணியில் காவிரி வேறுவிதமாகத் தான் நோக்கப்படும். இதைத் தான் நவீன இலக்கியத்தின் அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

அதேபோல்தான், தன்னேரிலாத தலைவன் என்கிற பழையநிலை; நற்குணமே கொண்ட இராமநிலை; தீயகுணம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொண்ட இராவணநிலை. இரண்டிற்கும் தனித்தனியான குறியீடு கொண்ட கதைமாந்தர்கள்; கதை நிகழ்ச்சிகள், இன்றைக்கு அந்நிலை மாறிவிட்டது. இராமன், இராவணன் என்கிற தனித்தனி மனிதன் என்ற நிலை மாறி, இராமனின் குணங்களும், இராவணனின் குணங்களும் கொண்ட ஒரே மனிதன் இன்று காட்டப்படுகின்றான். இன்றைய நாவல், சிறுகதைகளில் நல்ல மனிதன் இடம்பெறுவது கிடையாது; நடப்பியல் மனிதனைக் காட்டுவதே இக்கால இலக்கியத்தின் கொள்கைநிலை. இவற்றையும் நவீன இலக்கியத்தின் அடிப் படையாகக் கொள்ளலாம்.

தெய்வ அனுக்கிரகம் பெற்ற கவிஞன், நாவில் கடவுள் வந்து எழுதிட அருட்பாக்கள் பாடிய புலவன், தனிமனிதர்-களின் அருளிச்செயல்கள் போன்றவற்றை இன்றைய இலக்கியங்-களில் காணமுடியாது. கடவுள் நம்பிக்கை பெரும்பாலான மக்களிடத்தில் காணப்பட்டாலும், படைப்பாளன் கூட கடவுளிடத்தில் பக்தி கொண்டவனாக இருந்தாலும் இன்றைய இலக்கியங்களில் அவை வெளிக்காட்டப்படுவதில்லை. தெய்வ நிலை, மதக்கொள்கை, அருளிச்செயல்கள் எல்லாம் கடந்த நிலையிலேயே நவீன இலக்கியங்கள் நடையிடுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. 'கடவுள் வாழ்த்து' பாடுதல் என்ற சடங்கு நிலை ஒதுக்கப்பட்ட நிலையிலே இன்றைய இலக்கியங்கள் பிறக் கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அதனால்தான் கடவுளர் களும் விமர்சனத்திற்கு உட்படுகிறார்கள்.

> ''உரிமைகளை இழந்தவர்களே
> இனிமேல் ஒரு கன்னத்தில் அறைந்தால்
> மறுகன்னத்தைக் காட்ட வேண்டாம்'' (வெண்மணி)

என்று இயேசுவின் அறிவுரையையே மாற்றுஞ்சூழலில் வாழ் கின்ற இன்றைய மனிதர்களின் எண்ண !வெளிப்பாடுகளின் கலவையே புதுமை இலக்கியமாகிறது.

புதிய இலக்கிய இயக்கங்களான கற்பனையியல், நடப்பியல், நனவோடை, குறியீட்டியல், இருப்பியல்வாதம் போன்றவை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களைப் பின்பற்றி எழுந்த படைப்புக்களும் புதுமை என்பதைக் கூறாமலேயே கூறிவிடுகின்றன. இவ்வாறு பல பண்புக் கூறுகளின் அடிப்படைகளிலேயே புதுமை இலக்கியம் என்பதை வரையறுக்கமுடியும். அவ்வரையறுப்பும் ஒரு காலகட்டத்தோடு முடிவடைந்துவிடும். இன்னும் 50 ஆண்டுகள் கழித்து, புதுமை இலக்கியம் என்பது இவற்றைக் கடந்து நிற்கக்கூடியவைகளே என்பதை மனதில் கொள்ளவேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

DONATION 7719

இலக்கியமும் பிறகலைகளும்

பிரஞ்ச் கலை இலக்கிய வரலாற்றில் இலக்கியம், ஓவியம், சிற்பம், கட்டிடம், நாடகம், இசை, திரைப்படம் போன்ற கலைகள் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தன என்பது இலக்கிய வரலாற்றுண்மையாகும். அங்குள்ள கலைஞர்கள் ஒருதுறையில் மட்டுமல்லாது, பிற துறைகளிலும் ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பது இந்நிலைக்குக் காரணம் எனலாம். ஒரு எழுத்தாளர் ஓவிய ராகவும், நாடக ஆசிரியராகவும், கவிஞராகவும், விமர்சக ராகவும் திகழ்வது அவர்களுக்குப் பலகலைகளிலுமுள்ள பரிச்சயத்தைக் காட்டுகிறது எனலாம். ஆனால் இந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் இதற்கு மாறுபட்ட நிலையே இருந்து வருகிறது எனலாம். ஓர் இசையாசிரியனுக்கு இலக்கியம் பற்றியோ ஓவியம் பற்றியோ பெரும்பாலும் அறிவு இல்லை எனலாம். ஓர் இலக்கிய ஆசிரியனுக்கு இசையறிவோ, ஓவிய அறிவோ இருப்பதில்லை. இதனால் இலக்கியத்திற்கும் பிற கலைகளுக்குமுள்ள இடைவெளி நீண்டு ஒவ்வொன்றும் இயைபு படாமல் தனித்தனியே நிற்கின்றன. ஆனால் பண்டைக் காலத்தில் இத்தகு நிலை கிடையாது. ஒரு கவிஞன் நல்ல இசையாசிரியானகவும், ஓவியப் புலவனாகவும், சிற்பம் போன்ற கலைகளின் நுணுக்கம் அறிந்தவனாகவும் விளங்கினான். சிலம்பைப் படைத்த இளங்கோ ஒரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவிஞராக மட்டுமன்றி, பலகலை வல்லுநராகவும் விளங்கினார் என்பதை அவர் படைப்பின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

கல்வி நிலையங்களில் நாடகம், படிப்பதற்குரிய ஓர் இலக்கியமாகப் பயிற்றுவிக்கப்படுகின்றதேயன்றி, நடிப்பதற்குரிய கலையாகப் பார்க்கப்படுவதில்லை. ஓவியம், சிற்பம் போன்ற பிறகலைகளை தனித்ததொரு நிலையில் பயிற்றுவிக்கப்பட்டே வருகின்றன. கவிதைக்கலை போன்று பிறகலைகளை இலக்கிய மாணவர்கள் அறியக்கூடிய வாய்ப்பும் இல்லை. இவைபோன்ற காரணங்களால்தான் நுண்கலைகளுக்கிடையேயுள்ள தொடர்பும், அவை உணர்வுகளை வெளிப்படுத்தும் பாங்கும் பெரும்பாலான மக்களுக்குப் புரிவதில்லை.

நம் நாட்டில் கவிஞனும், பிறகலைஞனும் வேறுபடுத்தியே பார்க்கப்படுகின்றனர். சிற்பியும் ஓவியனும் கலைஞர்களே. எழுத்தாளனும் கவிஞனும் கலைஞர்களே. கவிஞனின் உளவெளிப்பாடுகளும் பிறகலைஞர்களின் உணர்வு வெளிப்பாடுகளும் எவ்வகையில் ஒன்றுபட்டும், வேறுபட்டும் வருகின்றன. என்று நாம் எண்ணிப்பார்ப்பதில்லை. எல்லாக் கலைகளுமே உணர்வு வெளிப்பாட்டின் வெவ்வேறு ஊடகங்களே என்பதை நாம் உணரவுமில்லை; நம் தலைமுறைக்கு உணர்த்தப்படவுமில்லை. ஒப்பிலக்கிய ஆய்வில் இலக்கியத்தோடு பிறகலைகளையும் இணைத்துப்பார்த்தல் ஒரு கோட்பாடாகவே இன்று கூறப்படுகிறது.

'I can't describe her beauty in words but I can play it on a violin' - என்ற ஒரு கலைஞனின் கூற்று இங்கு நோக்கத்தக்கது. வார்த்தைகளால் வருணிக்கமுடியாத ஒருத்தியின் அழகைத் தன்னுடைய வயலின்மூலம் வருணிக்க முடியும் என்கிறான் அக்கலைஞன். உணர்வு வெளிப்பாடு என்பது நாம் நினைத்துக் கொண்டிருக்கின்ற சொற்கள் (கவிதை) மூலம் மட்டும் வெளிப்படுவதன்று. பல்வேறு கலை ரூபங்கள் வழி வெளிப்படக் கூடியது. வியட்நாமில் நடந்த கொடுமைகளை வெளிப்படுத்த அலறி ஓடும் எட்டுவயதுச் சிறுமியின் நிர்வாணப் புகைப்படம் உதவியது. கவிதைவரிகள் புலப்படுத்தும் உணர்வை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்புகைப்படம் கல்லாதவர்கட்கு உணர்த்திவிட்டது. இவ்வாறு, உணர்வு வெளிப்பாடுகள் பல்வேறு கலை ரூபங்கள் வழி வெளிப்படுத்தப்படுகின்றன. இவற்றை இணைத்துப் பார்க்கின்ற முயற்சிதான் நம்மிடையே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

கோயிலிலுள்ள பழங்காலச் சிற்பங்கள் அல்லது ஓவியங்கள் சில குறியீட்டு உத்திகளைப் பெற்றுள்ளன. மனுநீதிச்சோழன் மார்க்கண்டேயன் போன்றவர்களின் கதையில் இடம்பெறும் முக்கிய நிகழ்ச்சிகளுக்குத் தேவையான சின்னங்கள் மட்டும் (மாடு, கன்று, தேர், மண் சிவலிங்கம், எமன், பாசக்கயிறு) ஒரே காட்சியாகச் சிற்பியின் கைவண்ணத்தில் வெளிப்படுத்தப் பட்டிருக்கும். அக்காட்சியமைப்பே இன்னாருடைய கதை என்பதைப் பார்ப்பவருக்கு உணர்த்திவிடுகிறது. இவைபோன்ற குறியீட்டு உத்திகள் கவிதை போன்ற படைப்புக்களிலும் எடுத்தாளப்படுவதை ஒப்பிட்டு நோக்கவேண்டும்.

நவீன இலக்கியங்கள் பற்றிப் படிக்கின்றவர்கள் பிற நவீன கலைகளைப் பற்றியும் அறிந்துகொள்வது அவசியமாகிறது. நவீன கவிதை பற்றி அறிய வேண்டுமாயின் நவீன ஓவியங்கள், சிற்பங்கள், கட்டிடக் கலை முதலியவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும். நவீன இலக்கிய இயக்கங்களின் தோற்றமே ஓவியங்களிலிருந்துதான் பிறப்பெடுத்தது என்பது நவீன இலக்கிய வரலாற்றைப் படித்தவர்கள் அறிவர். ஓவியங்களில் ஏற்படுத்தப்பட்ட நவீன உத்திகளே பிறகு கவிதையிலும் மற்ற நவீன படைப்புக்களிலும் இடம் பெறலாயின. தொடக்ககாலத்தில் ஓவியங்களில் மனிதனின் நேர்முகமும் பக்க முகமும் மட்டுமே காட்டப்பட்டுவந்தன. ஆனால் பிகாஸோவின் ஓவியங்களில் பக்கவாட்டில் உள்ள மறுமுகத்தின் தோற்றத்தைக் காட்டும் முயற்சி மேற் கொள்ளப்பட்டது. இதுபோல் இலக்கியங்களிலும் (நாவல், சிறுகதை, புதுக்கவிதை) மனிதனின் இதுவரை பார்க்கப்படாத மறுபக்கங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

புதுக்கவிதைகளில் காணப்படும் 'Typography' எனப்படும் சித்திரவடிவ எழுத்துக்கள், 'Collage' எனப்படும் ஒழுங்கற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல உருவங்களைக் கொண்டு ஓர் உருவத்தை உண்டாக்குவது போன்ற முயற்சிகள் ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களின் விளைவுகளே எனலாம். தண்டியலங்காரத்தில் கூறப்படும் முரசபந்தம், நாகபந்தம் போன்ற சித்திரக் கவிதைகளும் இங்கே சிந்திக்கத்தக்கது. ஓவியம், சிற்பம் போன்ற கலைகளுக்குரிய காட்சித் தன்மையைக் கவிதைக்கும் கொடுக்கும் முயற்சியே இதுயெனலாம். ஓவியக்கலைமூலம் ஏற்பட்ட Impressionism, Cubism, Expressionism போன்ற இயக்கங்கள் பின்னர் இலக்கியத் திறனாய்வுகளிலும் இடம் பெற்றமையை உணரவேண்டும்.

இனி, இலக்கியத்திற்கும் பிறகலைகளுக்கும் படைப்பு நிலையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நோக்குவோம் ஒத்தகலைகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமை களையும் ஆராய்வது கலையியலின் முதற்படி எனலாம். ஜாமினிராயின் ஓவியமோ, எலியட்டின் கவிதையோ கம்பனின் காவியமோ, பித்தோவனின் இசையோ, மலையாளியின் கதகளியோ, தமிழர்களின் தெருக்கூத்தோ எதுவாகயிருப்பினும், உண்மையான கலைமுயற்சிகள் அனைத்திலும் பொதுவான பண்பொன்றுண்டு என்பது மரபுவழி கலைச்சுவை இயலார் களின் கருத்தாகும். ஒவ்வொரு கலைப்பொருளும் ஒரு தனித் தன்மை கொண்டது. எனவே பொதுக் கொள்கைமூலம் கலையை பார்க்கக்கூடாது என்ற கருத்துமுண்டு.

ஓவியத்துடன் இலக்கியத்திற்குள்ள தொடர்பை மூன்று நிலைகளாகக் குறிப்பிடலாம்.

1. இலக்கியம் தோன்றத் தூண்டுகோலாக (Inspiration) இருக்கும் நிலை.

2. ஓவியம், இலக்கியத்தின் பொருளாகும் நிலை. (Subject matter)

3. இலக்கியம் ஓவியமாகவே அமையும் நிலை.

எனவே, கலைகள் ஒன்றன் பயனை மற்றொன்று கொள்ள முயற்சி செய்துள்ளன என்பதையும் அதில் வெற்றிபெற்றுள்ளன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பதையும் உணரவேண்டும். ஓவியத்திற்கும் இலக்கியத்திற்கும் தொடர்பைக் கொண்டுதான் 'சொல்லோவியம்', 'எழுத்தோவியம்' என்ற தொடர்கள் பிறந்துள்ளன. காலின்ஸின் (Collins) மாலைப் பாடல்கள் (ode to Evening) 'சிற்பப் பாட்டு' (Sculptured Poem) என்று அழைக்கப்படுவதும் கவிதைக்கும் பிற கலைகளுக்குமுள்ள தொடர்பைக் காட்டும்.

'காவியப் புலவரும் ஓவியக் கலைஞரும்' என்ற கட்டுரையில் மயிலை சீனிவேங்கடசாமி அவர்கள் கவிதைச் சிலேடைக்கும் சிற்பச் சிலேடைக்குமுள்ள ஒற்றுமையைக் காட்டி விளக்கியுள்ளார். காவியத்தையும் ஓவியத்தையும் வெளிப்பாட்டியல் நெறியில் ஒன்றுபடுத்தும் அவரது முயற்சி பாராட்டத்தக்கது. கவிஞர்கள் சிலேடைச் சொல்லை அமைத்துச் சிலேடைச் செய்யுள் அமைப்பதுபோலவே ஓவியக் கலைஞரும், சிற்பங்களிலும் ஓவியங்களிலும் சிலேடையமைத்துப் படைக்கின்றனர் என்கிறார். யானையும் வைக்கோலும் ஒன்றாகும் என்ற சிலேடைப் பாடலுக்கு இணையாகக் கோயிலுள்ள கற்றூண் சிற்பங்களைக் கட்டுரையாசிரியர் ஒப்பிட்டுள்ளார். 'களிறேறு, (களிறு — யானை, ஏறு — எருது) என்ற சிற்பத்தில் வலதுபுறம் யானையின் உடம்பும் இடது புறம் எருதின் உடம்பும் காணப் படுகிறது. ஒரே அமைப்பு இரண்டு முகங்களாகத் தோன்றுகிறது. இது சிற்பக்கலையின் சிலேடையாகும். இதுபோன்ற பார்வைகளைப் பிற கலைகளோடும் பொருத்திப் பார்க்க வேண்டும்'

இக்கட்டுரையில் ஆசிரியர் வெளிஉருவத் தோற்றத்தை மட்டும் கருத்தில் கொண்டு விளக்கியுள்ளார். ஓவியப்புலவனுக்கும் காவியப்புலவனுக்கும் கற்பனை எப்படிப்பிறக்கிறது? அது எவ்வாறு உருக்கொள்கிறது? என்பது போன்ற சிந்தனைகளை அவர் முன்வைக்கவில்லை. அதனைச் சிந்திக்கும் பொழுதுதான் இலக்கியத்திற்கும் பிறகலைகளுக்குமுள்ள தொடர்பை உணரமுடியும். இலக்கியத்திலிருந்து இலக்கியத்திற்கு ஏற்படும் தாக்கத்தைவிட, நுண்கலைகளிலிருந்து இலக்கியத்திற்கு ஏற்படும் தாக்கம் நுட்பமானது என்ற கருத்து சிந்திக்கத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எல்லாக் கலைகளிலுமே தொனிப்பொருள் உண்டு. கவிதையில் தொனி வெளிப்படுவது எல்லோரும் அறிந்ததே. ஓவியத்தில் தொனி எங்ஙனம் வெளிப்படுகின்றது? வைகறையைக் குறிப்பிடுவதற்கு மலர்ந்த தாமரைகள், நீராடுவதற்கு விரையும் முனிவர்கள், வசந்தகாலத்தை உணர்த்த நறுமலர் வனங்கள், மழைக்காலத்தைச்சுட்ட மூடாக்கிட்ட மேகங்கள், வானத்தில் பறக்கும் வெள்ளை நாரைகள் போன்றவை குறிப்பிடத்தக்கவை. சுருங்கச் சொல்லல், இலக்கியக் கலையின் அழகாகக் கூறப்படுகிறது. அதேபோல் ஓவியத்தில் குறைவான வரைபடத்துடன் கூடியது தான் சிறந்த சித்திரமாகக் கருதப்படுகிறது. அளவுமீறிய அலங்காரமும், பகட்டான வண்ணமும் பழங்காலத்தில் குறைகளாகக் கருதப்பட்டன.

இந்தியக் கலைகளில் நம்மைப் பிரமிக்கச் செய்யும் பல வேற்றுமைகளின் ஊடே, எல்லாவற்றையும் இணைத்து ஒன்றுபடுத்தும் ஒரு தத்துவம் விளங்குகிறது. கலைஞன் தான் ஒரே நேர்க்காட்சியில் காண்பதையெல்லாம் காலம்-இடம் என்னும் வரம்பிற்குள் விவரமான வடிவில் அமைக்கிறான். புறத்தே தோன்றுவதை அப்படியே அமைக்காமல் ஒருமைப்பட்ட மனத்தின்கண் காண்பதை வடிவில் அப்படியே அமைப்பதே கலைஞனின் வேலையாகும். இந்நிலையில் எல்லாக் கலைகளும் ஒற்றுமை கொண்டுள்ளன எனலாம். பாவனைத் தொடர்பு கலைகளுக்குள்ள ஒற்றுமையாகும். இலக்கியத்திற்கு இது மிகப்பொருந்தும். மனித உணர்ச்சிகளின் குறியீடான உருவங்களைப் படைப்பதே கலை.

கலைகளின் தோற்றம், வளர்ச்சி குறித்துப்பேசும் கான்ட்டும் (Kant) ஹெகலும் (Hegal) கலைக்களுக்கிடையேயுள்ள வேற்றுமைக் கூறுகளையும் சுட்டுகின்றனர். கல்லிலும் மரத்திலும் மனிதன் உருவத்தைச் செதுக்கினான். இதுகலையின் தொடக்கம். இது வெறுங் குறியீடாகவே இருந்தது. பின்னர் சிற்பமாக மலர்ந்தது. இதையடுத்து, இசையும் கவிதையும் வந்தன. சிற்பத்தைவிட இவை அர்த்தம் நிறைந்தவை. ஆயினும், வடிவநோக்கில் அவை சிற்பத்திலும் தாழ்ந்தவை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்கிறார் ஹெகல். சிற்பம், ஓவியம் போன்ற கலைகளுக்கும் நடனம், கவிதை, இசை போன்ற கலைகளுக்குமிடையே ஒரு வேறுபாடு உண்டு. சிற்பமும் ஓவியமும் காலம்-இடம் (Time & Space) இரண்டிலும் இருப்பவை. மற்றவை காலத்தில் மட்டும் இருப்பவை என்கிறார் சட்டர்ஜி.

இலக்கியத்தைவிட பிறகலைகள் முருகியல் அளவுநிலையில் மிக முழுமையான பங்கு வகிக்கின்றன என்கிறார்கள் ஆஸ்டின் வாரனும் ரெனிவெல்லாக்கும். கலைஞர்கள் கொண்டுள்ள கொள்கைகளும் உள்ளார்வங்களும் வெவ்வேறு கலைகளிலும் வெவ்வேறானவையாகப் பொருள் தருவதுடன், இவை கலைஞனது செயற்பாட்டின் திட்டமான விளைவுகள் பற்றி- கலைஞனது படைப்பு, அதன் குறிப்பிட்ட உட்பொருள், புற வடிவம் போன்றவற்றைப் பற்றி அதிகமாக ஒன்றும் கூறுவ தில்லை. கலைகளுக்கிடையேயுள்ள தொடர்பை கலைஞரது உள்நோக்கங்கள், கொள்கைகள் ஆகியவற்றை வைத்துக் காண்பதைவிட, சமுதாயப் பண்பாட்டுப் பின்னணியின் அடிப் படையில் காண்பது மிகுந்த பயனைத்தரும்.

பல்வேறுபட்ட இந்தக் கலைகள் எப்போதும் ஒன்றோ- டொன்று தொடர்புடையவை என்பதில் ஐயமில்லை. ஆனால் இத்தொடர்புகள் ஒரு கலையினின்றும் தொடங்கி, பிற கலை களின் பரிணாமங்களைத் தீர்மாணிக்கும் ஆற்றல் பெற்றவை அல்ல. இவை ஒரு கலையினின்றும் மற்றொரு கலைக்கும் அதனின்று மாறியும் செயல்புரியும் தொடர்புகளான சிக்கலான திட்டம் என்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

படைப்புக்கும் கலைஞனுக்குள்ள தொர்டர்பும் ஆராயப்பட வேண்டிய ஒன்று. நாடகக்கலை உருவாக்க நிலையில் மற்ற கலைகளிலிருந்து வேறுபட்டு விளங்குகிறது. மற்ற கலைகள் முழுமைபெற்ற பிறகே, பார்வையாளரைச் சென்றடைகிறது ஆனால் நாடகக்கலை மட்டுந்தான் பார்வையாளர் முன்பே தோன்றி, வளர்ந்து, முடிவடைகிறது. நேரடியாகப் பாடப்படும் இசைக்கலையையும் இதில் அடக்கலாம். படைப்புக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பார்வையாளருக்குமுள்ள தொடர்பு என்று பார்க்கும்பொழுது மற்ற கலைகள் தனித்து நின்று ரசிக்கக் கூடியவை. ஆனால் நாடகக்கலை அப்படிப்பட்டதன்று. பலரோடு சேர்ந்து, சுவைக்கும் இயல்பினிது. எனவே, பார்வையாளர் அல்லது கலைஞர் என்ற நிலையில் கலைகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகளும் வேற்றுமைகளும் ஆராயப்படவேண்டிய ஒன்றாகும்.

திறனாய்வாளர்கள் இலக்கியத்தோடு பிறகலைகளையும் ஒன்றிணைத்துப் பார்க்கும் போக்கை உருவாக்க வேண்டும். திரைப்பட இயக்குநர், ஓவியர், சிற்பி, கவிஞர், எழுத்தாளர், நடிகர், கட்டிடக் கலைஞர் ஆகியோரை ஒன்றுகூட்டி, கலை வெளிப்பாட்டில் உள்ள ஒற்றுமைக் கூறுகளைத் திறனாய்வு செய்ய வேண்டும். அப்போதுதான் படைப்பாளனும் படைப்பும் எத்தகு நிலையில் படைப்புணர்வுத் தன்மையை எய்துகின்றனர்; எய்துகின்றன என்பது புலப்படும். இலக்கியத் திறனாய்வாளர்களில் வெங்கட் சாமினாதன் இம்முயற்சியைக் கையாண்டு (கலை வாழ்க்கை அனுபவம் வெளிப்பாடு) இப்போது விட்டு விட்டார். எழுபதுகளில் கலை இலக்கியம் என்று இலக்கு வெளியிட்டநூல் திரைப்படம், பத்திரிகை போன்றவற்றைக் சுட்டிக்காட்டுகின்றது. இன்று தேனுகா இலக்கியத்தோடு பிறகலைகளை இணைத்துப் பார்க்கும் முயற்சியை ஓரளவிற்குக் கையாண்டு வருகிறார். (வண்ணங்கள் வடிவங்கள்) இவை தொடக்க முயற்சிகளே. இவை போன்ற விமர்சனங்கள் தமிழில் அதிகம் வெளிவர வேண்டும். அத்தகு விமரிசனங்களே, இலக்கியப் படைப்புக்களின் தகுதியைப் பெறும் தன்மையுடையனவாகத் திகழும் இத்தகு முயற்சியை மேற்கொள்ள வெறும் இலக்கிய அறிவு மட்டும் போதாது. பிற கலைகளைப் பற்றிய அனுபவமும் தேவை.

கட்டுரைக்குப் பயன்பட்ட நூல்கள்:

1 ரெனிவெல்லாக் & ஆஸ்டின்வாரன், இலக்கியக்கொள்கை, பாரிநிலையம், சென்னை 1966.

2 தமிழண்ணல், 'ஒப்பிலக்கிய அறிமுகம்', சோலை நூலக வெளியீடு, மதுரை, 1985 (5ஆம் பதிப்பு)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயன்பட்ட கட்டுரைகள்:

1 பி.சி. சட்டர்ஜி, 'கலை அழகுச் சுவையியலில் ஆதாரப் பிரச்சினைகள்' ஆராய்ச்சி, மலர் 3, இதழ் 4, திருநெல்வேலி 1973. பக் 409—422.

2 மயிலை சீனி வேங்கடசாமி, 'காவியப்புலவரும் ஓவியக் கலைஞரும்' ஆராய்ச்சி, மலர் 3, இதழ் 2, திருநெல்வேலி, 1972, பக் 229—239.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுமை நாடகங்கள் - ஓர் அறிமுகம்

தமிழகத்தில் தொல்காப்பியத்தை அடியொற்றிய இலக்கிய ஆக்கங்களும் விமர்சனங்களும் தோன்றியது போன்று, மேலை நாட்டில் அரிஸ்டாட்டிலின் இலக்கியக் கொள்கைகளைப் பின் பற்றியே ஆக்கங்களும் விமர்சனங்களும் எழுந்தன. நாடகத்தைப் பொறுத்தவரையில், அரிஸ்டாட்டலின் நாடக முத்திறத்தை (Dramatic Trinity of Aristole) மாற்றியமைத்தவர் நார்வே நாட்டின் ஹென்றி இப்சென். இவருடைய 'பொம்மைவீடு' (Doll's house) என்ற நாடகம் குறியீட்டு உத்திமுறைக்கு ஏற்றதொரு சான்றாக அமைந்தது. இவருடைய முயற்சிக்குப் பின் மேலைநாடுகளில் நாடக இலக்கியம் வேகமாக முன்னேறத் தொடங்கியது. அங்கு நாடகத்தில் மட்டுமின்றி, மற்ற நாவல், கவிதை, ஓவியம் போன்ற கலை இலக்கியங்களிலும் புதிய நோக்கு ஏற்பட்டது.

ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை. நீண்டதொரு, இலக்கிய மரபு இடையறாது இருந்து வந்திருப்பினும், நாடகக் கலை தேய்வுற்று, தெருக்கூத்து என்ற அளவில் மட்டுமே பழம்பெருமையைச் சாற்றி நிற்கின்றது. சங்கரதாஸ் சுவாமி கள், டி. கே. ஷண்முகம் போன்றவர்களால் நாடகம் உயிர்ப்புப் பெற்றாலும், அரங்கக் கலையை உள்வாங்கிக் கொண்ட படைப்பாக நாடகம் ஆக்கப்படவில்லை. பின்னால் வந்தவர் களால் நாடகம், கொள்கையை விளக்கும் ஊடகமாகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்ளப்பட்டதேயன்றி, கலையம்சம் புறக்கணிக்கப்பட்டது எனலாம். நடிப்போரையும் பார்ப்போரையும் பிரித்துவைக்கும் போக்கிலேயே இவை செயல்பட்டன. பார்வையாளர்களையும் நாடகத்தில் பங்கேற்க வைக்கும் புதிய சிந்தனையோடு மேடைக் கலையின் சிந்தனையோடு செயல்படுகின்ற போக்கு வங்காளம், மகாராட்டிரம், கேரளா போன்ற மாநிலங்களில் உருப்பெற்று பின்னரே தமிழகத்தில் தடம்பதிக்கத் தொடங்கியது.

தமிழ் நாடகம் என்கிறபோது, நாடகம் இலக்கியம் என்ற நிலையிலும் நாடகக்கலை என்ற நிலையிலும் பார்க்க வேண்டியுள்ளது. தமிழ் இலக்கியக் கல்வியில் நாடகம் ஒரு இலக்கியமாகக் கற்பிக்கப்பட்டும் உணர்த்தப்பட்டும் உணரப்பட்டும் வந்துள்ளதேயன்றி, அரங்கத்தோடு தொடர்புடைய கலையாக நோக்கப்படவில்லை. கேரள நாடக ஆசிரியர் ஜி. சங்கரப்பிள்ளையைப் பொறுத்தவரையில் படிப்பதற்குரிய நாடகம் நடிப்பதற்குரிய நாடகம் என்ற இருவேறு நிலைகள் இல்லை என்கிறார். (வெளி, நாடக இதழ், டிசம்பர், 1990, பக். 22) மேடைப் படைப்புக்குரிய நல்ல நாடகம் நல்ல இலக்கியமாகத் திகழ்வது, இலக்கியப் பாங்கும் நாடகத்தின் கூறுகளின் ஒன்று என்பதாகும் என்ற அவரின் கூற்றும் இங்குச் சிந்திக்கத் தக்கது,

இந்நிலையில், மேலைநாட்டு நாடகக் கூறுகளை உள்வாங்கிக் கொண்டு, இந்திய மரபிற்கேற்ற பழைய கூத்து வடிவங்களைப் புதுபிக்கும் நோக்கோடு (தமிழ் நாட்டில் தெருக்கூத்து, கர்நாடகாவில் யட்சகானம், ஆந்திராவில் வீதி நாடகம், கேரளாவில் கதகளி, மகாராஷ்டிரத்தில் தமாஷா வங்காளத்தில் ஜாத்ரா) தமிழகத்தில் சிலர் நாடக அமைப்புக்களை உருவாக்கி, அதன்மூலம் புதிய சோதனை முயற்சி நாடகங்களை இயற்றி, மேடையேற்றி வருகின்றனர்.

அவற்றுள்,

ந. முத்துசாமியின் கூத்துப்பட்டறை
ஞாநியின் பரீக்ஷா
மு. இராமசாமியின் நிஜநாடக இயக்கம்
இராமானுஜத்தின் தளிர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

போன்றவை குறிப்பிடத்தக்கவை. இப்பின்னணிகளோடு இக் கட்டுரையில் கீழ்க்கண்ட ஆசிரியர்களின் நாடகப் படைப்புக்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

1. இந்திராபார்த்தசாரதி — மழை
2. முத்துசாமி — நாற்காலிக்காரர்
3. பிரபஞ்சன் — முட்டை
4. ஞாநி — பலூன்
5. ஞான இராஜசேகரன் — வயிறு, மரபு
6. கோமல் சுவாமிநாதன் — நள்ளிரவில் பெற்றோம்
7. நி.சு. இளஞ்செழியன் — வேதாளம் சொன்ன கதை

ஆகிய புதுமை முயற்சி நாடகங்களின் பாடுபொருள், நாடக உத்தி போன்றவற்றைக் காண்போம். இது புதுமை நாடகம் பற்றிய அறிமுகப்படுத்துதலேயன்றி, முழுமையான ஆய்வன்று என்பதை நினைவில்கொள்ள வேண்டும்.

இந்நவீன நாடகங்களின் சிறப்பம்சம் என்னவெனில், தெருக்கூத்து வடிவங்களின் உத்திமுறைகளைப் பின்பற்றுவதும் மேலைநாட்டு அரங்க உத்திகளைக் கடைப்பிடிப்பதும் புராணச் செய்திகளுக்குப் புதிய விளக்கம் அளிப்பதும், இன்றைய சமூக நடப்புக்களை நவீன வடிவில் காட்டுவதும் என்கிறப் போக்கில் காணப்படுதலேயாகும். இன்றைக்கு வெளிவந்து கொண்டிருக்கும் கவிதை நாடகங்களுக்கும் புராண, வரலாற்று அடிப்படை கொண்ட உரைநடை நாடகங்களுக்கும் முற்றிலும் முரண்பட்டவை இந்நவீன நாடகங்கள். இதுவரை ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள நாடக விதிகளை இந்த நாடகங்கள் மீறியுள்ளதைக் காணலாம். இவற்றுக்குத் தனி விதிகள் அமைத்துக் காட்ட வேண்டிய தேவை உள்ளது.

இந்திராபார்த்தசாரதியின் 'மழை' நாடகத்தை நவீன நாடகத்தின் தொடக்ககால முயற்சி எனலாம், நாடக உத்தியில் எத்தகைய புதுமையும் இந்நாடகத்தில் கையாளப் படவில்லை. எனினும், பாடுபொருள் நவீனத்தன்மை பெற்றது. இந்நாடகத்திற்கு முன்னுரை வழங்கிய வெங்கட் சாமிநாதன். (கசடதபற அக்டோபர் 1972) 'மழை ஒரு சம்பிரதாய நேரான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்றங்க நாடகம், நடிப்பு முறைகளிலேயே, மேடையேற்ற உத்திகளிலே எத்தகைய சிரமத்தையும் புதுமைகளையும் தராது. நமக்குத்தான், நாம் கண்மூடித்தனமாக வளர்த்துள்ள மரபுகளுக்குத்தான் இது வேற்றுமையானது, புதுமையானது என்கிறார்.

இந்நாடகத்தில் போராசிரியர் சந்திரசேகர், அவர்பெண் நிர்மலா, நிர்மலாவின் அண்ணன் ரகு, டாக்டர் ஜேம்ஸ் என்கிற நால்வரின் உரையாடலே நாடகமாக உருவாகியுள்ளது. உரையாடல்வழி, நிர்மலா, ஜேம்ஸ் இருவரின் மனநிலைகளை எடுத்துக்காட்டும் பாணியில் இந்நாடகம் அமைந்துள்ளது. நாடகத்தில் வரும் மூன்று காட்சிகளில் முதல் காட்சியில் நிர்மலா, ஜேம்ஸ் இருவரின் உரையாடலும், இரண்டாம் காட்சியில் நிர்மலா, ரகு இருவரின் உரையாடலும், மூன்றாம் காட்சியில் நிர்மலா, ஜேம்ஸ், ரகு மூவரின் உரையாடலும் அமைந்துள்ளன.

இந்நாடகத்தில் உரையாடல்வழி, நிர்மலா, ஜேம்ஸ் இருவரின் குணநலன்கள் வெளிப்படுத்தப்படுகின்றதேயன்றி, நாடகக்காட்சி மாற்றம், அரங்க அமைப்பு, போன்றவற்றில் எவ்விதப் புதுமையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்திரா பார்த்தசாரதியின் 'நிலமென்னும் நல்லாள்' என்கிற நாவலின் கருவே இந்நாடகத்திலும் இடம்பெற்றுள்ளது.

இந்நாடகத்திற்கு முற்றிலும் மாறுபட்டு, பாடுபொருள், நாடக உத்தி, அரங்க அமைப்பு மூன்றிலும் புதுமைப்போக்குக் கொண்டது ஞாநியின் 'பலூன்' என்ற நாடகமாகும். பஸ் கட்டண உயர்வை எதிர்த்துப்போராடும் இளைஞர்கள் குற்றம் செய்தவர்களாக நீதிமன்றத்தில் தண்டிக்கப்படுவதே இந் நாடகத்தின் கருவாகும்.

நாடகத்தின் தொடக்கமே புதுமையான நாடக அரங்க அமைப்பைக் கொண்டுள்ளது. அரங்கத்தின் நுழைவாயிலிலேயே நாடகம் தொடங்கிவிடுகிறது. நுழைவாயிலில் ஒரு பெரிய பலூன் கட்டப்பட்டிருக்கிறது. பலூனைச் சுற்றிப் பார்வை யாளர் கூடும்போதே நாடகம் துவங்கிவிடுகிறது. இளைஞர்கள் பஸ் கட்டண உயர்வை எதிர்த்துக் கோஷங்கள் எழுப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றனர். 'இன்னும் சிறிது நேரத்தில் கூட்டம் ஆரம்பமாகும்' என்று அறிவிப்பு செய்தபடி, பார்வையாளர்களை அரங்கிற்குள் அனுப்புகிறார்கள். அரங்கிற்குள் எல்லோரும் சென்றபின், விளக்குகள் அனைத்தும் அணைகின்றன. கூச்சல் குழப்பம் கேட்கிறது. ரேடியோகுரல் ஒலிக்கிறது. "பஸ் கட்டண உயர்வைக் கண்டித்து நடந்த ஊர்வலம் வன்முறையில் முடிந்தது. இதுவரை ஒரு பெண் உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று ரேடியோ குரல் கூறுகிறது.

பிறகு மேடையின் ஒருபகுதி மட்டும் விளக்கால் உயிர் பெறுகிறது. பத்திரிகையின் தலைமை நிருபர் வைத்யநாதனும், நிருபர் ரங்கராஜனும் இந்நிகழ்ச்சி பற்றிப் பேசுகின்றனர். ரங்கராஜன், ஆறுபேரைப் பற்றியும் ஒவ்வொருவராக வைத்தியநாதனுக்குத் தெரியப்படுத்துகிறான். ஒவ்வொருவரும் தன்வரலாறு கூறுவதுபோல மேடையில் மறுபகுதியில் தோன்றி மறைகின்றனர். நாடகம் முழுவதும் பல்வேறு காட்சி கள் இருப்பினும், ஒரே மேடையில் காட்சியளிப்பதுபோல் அமைத்துள்ள விதம் புதுமையாய் உள்ளது.

நாடக மாந்தர்களின் அறிமுகத்திற்குப்பின் நீதிமன்றக் காட்சிதான் கடைசிவரை காட்டப்படுகிறது. விசாரணைக்குப் பின், அறுவருடன் அவர்களுக்காக வாதாடிய அட்வகேட் விஜயனுக்கும் சேர்த்துத் தண்டனை அளிக்கப்படுகிறது. இந்த நீதிமன்றக் காட்சிகள் தொடர்ந்துவருவதால், பார்ப்பவர் களுக்கு அலுப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. நீதிமன்றக் காட்சிகளுக்கிடையே மாற்றங்களைப் புகுத்துவதன் மூலம் குறையைத்தவிர்க்கலாம்.

அடுத்து, பிரபஞ்சன் எழுதிய 'முட்டை' என்ற நாடகம் குறிப்பிடந்தக்கது. அந்நாடகத்திற்கு அவர் எழுதிய 'பின்னுரை'யில் சில செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். நாடக சபாக்கள் பார்வையாளர்களை அரங்கத்தினின்றும் அறவே பிரித்தன. நாடகப் பாத்திரங்கள் ஒளி வெள்ளத்தில் நீச்சல் அடித்தபோது, பார்வையாளர்கள் இருளில் ஆழ்ந்து கிடந்தார்-கள் என்று கூறிச்செல்கிறார். மேற்குறிப்பிட்ட கருத்திற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாறாக, அவர் தன்னுடைய நாடகத்தை அமைத்துள்ளாரா என்றால் இல்லை எனலாம்.

முட்டை விற்க வந்தவனைச் சிறையிலடைத்து, அவனைப் பார்ப்பதற்கு வந்த இளம்மனைவியைக் கற்பழித்துவிட, அவள் வேப்பமரத்தில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொள்வதுதான் இந்நாடகத்தின் கரு. நாடகத்தின் முதற் காட்சி, டீக்கடையில் மூவர் உட்கார்ந்து அன்றைய செய்தி பற்றிப் பேசுவதும், அதில் கோட்டை வேப்பமரத்தில் யாரோ ஒருத்தி தூக்கு மாட்டிக்கொண்டதாகவும், கோட்டையின் துரை அவளைக் கெடுத்துவிட்டதாகவும் காட்டப்படுகிறது. பிறகு அந்தத் துரையே அங்குவர, அவர்கள் அவனுக்கேற்றாற் போலப் பேசுவதும் காட்டப்படுகிறது.

இரண்டாம் காட்சி, பின்னோக்கு உத்தியாக, முட்டை விற்க வருபவனின் காட்சி காட்டப்படுகிறது. காட்சி மூன்றில் துரை, முட்டைக்காரனை விசாரிப்பதும் காட்சி நான்கில் முட்டைக்காரனின் மனைவி வருவதும் அவளைத் துரை களங்கப்படுத்துவதும் காட்டப்படுகிறது. இறுதிக்காட்சியில் முதல் காட்சியின் அபிநயம் மௌனமாக நடத்தப்படுகிறது.

இந்நாடகத்தில் அதிகாரம் படைத்தவர்களின் அயோக்கியத் தனங்களும் அதை நிறைவேற்றுபவர்களின் கையாலாகாத் தனங்களும் காட்டப்பட்டு நடப்பியல் தன்மையை ஏற்படுத் தினாலும், புதுமை நாடகத்திற்குரிய அரங்க அமைப்பு, காட்சி மாற்றம், ஆசிரியர் முன்னரே குறிப்பிட்டுள்ளபடி பார்வை-யாளரின் பங்கேற்பு போன்றன இந்நாடகத்தில் காட்டப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பார்வையாளன் நாடகத்தில் தன்னை இழந்துவிடாமல் கதைக்கும் நாடகப் பாத்திரங்களுக்கும் புறத்தேநின்று 'இது நாடகம்தான்' என உணர்ந்துகொண்டு நாடகம் பார்க்க வேண்டும் என்ற ஜெர்மன் நாட்டு நாடக ஆசிரியர் பெர்டோல் ப்ரக்டின் (Bertolt Brecht) பாணியைக் கையாண்டுள்ளதாகக் கோமல் சுவாமிநாதன் தன்னுடைய 'நள்ளிரவில் பெற்றோம்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற நாடகத்தின் பின்குறிப்பில் குறிப்பிடுகின்றார். அதற்கேற்ற நவீன நாடக உத்திகளையும் இந்நாடகத்தில் புகுத்தியுள்ளார். நாடகத்தின் இடையே பார்வையாளார்களைப்போல நான்கு பேர் மேடைக்குவந்து நாடகத்தை விமர்சிப்பதும் ஆங்காங்கே நாடக உணர்வைக் கத்தரிப்பதும் இதில் அவர் கையாண்ட உத்திகள்.

நாடகத்தின் முதற்காட்சியில் பத்திரிகைக்காரர் (இரண்டு செய்திகள் படிப்பதாக) நேரடியாகப் பார்வையாளர்களைப் பார்த்து காட்டப்படுகிறது. பார்வையாளர்களின் மத்தியில் ஒருவர் பொரிகடலை விற்க, பார்வையாளர்களில் ஒருவர்

> ''யாருய்யா இது! நாடகம் ஆரம்பிச்சாச்சு
> இங்க வந்து பொரிகடலை வித்துக்கிட்டிருக்கிறது
> போய்யா அந்தப்பக்கம்'' என்று கூறுவதாக

உரையாடல் அமைக்கப்பட்டுள்ளது. செய்திவாசித்த பத்திரிகையாளர் பொரிகடலை விற்றவரை மேடைக்கு அழைக்கிறார். அவனிடம் பேசுகிறார். இவ்வாறு, பாத்திரம் விற்கும் சாயபும் அவ்வழியில் போகும் விசுவநாதய்யரும் சேர்ந்து பேசுகிறார்கள்.

மந்திரிசபை மேல் உள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றுப் போனதுக்கும் 65 வயதுக்கிழவர் தூக்கில் தொங்கினதுக்கும் நெருங்கின சம்பந்தமுண்டு என்று பத்திரிகையாளர் எல்லோருக்கும் கூறி, அதுக்குப் பின்னால பெரிய நாடகமே இருக்குது. அதை உங்களுக்குக் காட்டப்போகிறேன் என்கிறார். அதற்குப்பின் இரண்டாங்காட்சி தொடங்குகிறது. முதன் மந்திரியும், கட்சித் தலைவரும் பேசுவதாக உரையாடல் அமைக்கப்படுகிறது. இடையில் பத்திரிகையாளரும் மற்ற மூவரும் பேசுகின்றனர்.

இவ்வாறு, அவ்விரு செய்திகளுக்கும் இடையேயுள்ள காட்சிகள் தொடர்ந்து காட்டப்பட, இடையிடையே இந்நால்வரும் தோன்றி அதுபற்றிப் பேசுவதும் விமரிசிப்பதும் செய்கின்றனர். இம்முறை, நாடகம் என்கிற எண்ணம் பார்வை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாளர்களை விட்டு நீங்கி ஒரு நடப்பு என்பதும் தாமும் அதில் பங்கேற்பதாக ஒரு நினைவு ஏற்படுத்தும் பிரக்டின் பாணியை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளது எனலாம். நவீன நாடகங்களுக்கான உத்திமுறைகளில் இதுவுமொன்று என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

ஞானராஜசேகரனின் 'வயிறு' நாடகம் உத்திமுறைகளில் புதுமையைக் காட்டாவிட்டாலும் பாடுபொருளில், அதை எடுத்தாண்டவிதத்தில் நவீன நாடக பாணியை எட்டுகிறது. ஓரங்க நாடகமாகவே இது ஆக்கப்பட்டுள்ளது. அனாதைக் குழந்தையொன்று வீறிட்டழுவதைக் கண்டவர்கள் அதன் பசியைப் பற்றிக் கவலை கொள்ளாது, அதன் பிறப்பு, தாய் தந்தையர் பற்றிப் பேசுகிறார்கள். தாய் என்று ஒருத்தி வந்து குழந்தைக்குப் பேசக் கற்றுக் கொடுக்கிறாள். ஆனால் குழந்தை பசி, வயிறு என்கிறது.

மேடையின் மற்றொரு புறத்தில் கணக்காசிரியர் மாணவர்களுக்குப் பாடஞ்சொல்லிக்கொடுத்துக் கொண்டிருக் கிறார். வாய்ப்பாடுதெரியாத பையனை வகுப்பைவிட்டு வெளியேற்றுகின்றார். அவன் பசியினால் தனியாக நிற்க, அங்கேவரும் இளம்பெண் அவனைப் பார்த்து காதல்மொழிபேச, அவன் பசியினால் வாடுகிறான். அவள் வெறுத்துத் திரும்பு கிறாள். அவன் பசியினால் மயக்கமடைந்து விழுகிறான். விழுந்தவனைப் பார்ப்பனர் நால்வர் சூழ்ந்து அவன் பூணூல் போட்டிருக்கிறானா என்று பார்க்கின்றனர். பூணூல் இல்லை. அவன் அவர்களிடம் பசிக்கிறது என்கிறான். அதுபற்றி அவர்கள் கவலைப்படாது, அவனுக்குப் பூணூல் மாட்டுகின்றனர். மந்திரம் ஓதச் சொல்கின்றனர். மீண்டும் பசி என்கிறான் அவன். அவர்கள் போய்விடுகிறார்கள். அரசியல் கூட்டம் ஒன்று அவ்வழியே போகிறது, ஓட்டு வாங்க முயற்சிக்கிறது. வாக்காளர் பட்டியலில் அவன் பெயர் இல்லையென்றதும் அப்படியே விட்டுவிட்டுத் திரும்புகிறது.

மயக்கமடைந்து கிடப்பவனை எழுப்பி, ஒருத்தி அவனிடம் வயிற்றுப்பசி மட்டுமா உலகத்திலே இருக்கிறது என்று கூறி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடற்பசியையும் சுட்டிக்காட்டி, அவனுக்குப் பசியைத் தணிக்கிறாள்.

இந்நாடகத்தில் சொல்லவந்த செய்தி நேரடியாகவே காட்டப்பட்டுவிடுகிறது பசி உள்ளவனின் நிலையை உணராது அவரவர் தத்தம் சுயநலத்தையே பெரிதாகக் கருதும் உலகியல் நிலை, அப்படியே படம் பிடித்துக்காட்டப்படுகிறது. பாடுபொருள்தான் புதுமையேயன்றி, நவீன நாடக உத்திகள் எதுவும் இதில் எடுத்தாளப்படவில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

இவ்வாசிரியரின் மற்றொரு நாடகமான 'மரபு' எடுப்பிலேயே பழைய நாடக பாணியைக் கிண்டல் செய்வதாய்த் தொடங்குகிறது.

> 'அலங்காரமான மேடையில்லை, அலறுகின்ற ஒலி பெருக்கியில்லை, இந்த வெறுமையில நாடகம் வேறு இங்கே நடக்கப்போகிறதா? என்ன, உளறுகிறாய்'

என்று ஒரு நாடக மாந்தர் கேட்பதுபோல் அமைத்துள்ளார். நவீன நாடகங்கள் இத்தகைய அமைப்புகள் இல்லாமல் நடைபெறுந்தன்மையன என்பதை இதன்மூலம் உணரலாம். மேலும்,

'வாழை பல்புகள், மின்மினி விளக்குகள், மேலே சுருண்டு ஓடும் திரைகள், பக்கவாட்டில் நழுவிச்செல்லும் படுதா, வீடு போன்ற பின்புற அடைப்புகள், நடுரோட்டைக் காட்டும் காட்சி சீலைகள், எங்கும், எதுவுமில்லை' என்றும்

'மாயாஜாலம், ராஜபார்ட்டு, உள்ளம் அனைத்தையும் கசக்கிப்போடும் குடும்பநாடகம் காணவந்தோம், ஏமாந்து போனோம்' என்றும் நாடகமாந்தர் பேச்சுவழி, நவீன நாடகத்தின் அமைப்பையும், பழைய நாடகபாணியின் அமைப்பையும் வெளிப்படுத்துகின்றார்.

ந. முத்துசாமியின் 'நாற்காலிக்காரர்' என்ற நூலில் மூன்று நாடகங்கள் உள்ளன. அந்நூலின் பின்னுரையில் ந. முத்துசாமி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> 'உயிருடன் பார்த்துக்கொண்டிருக்கிறவருக்குப் படைப்புக் கலைஞன் மேடை என்று சொல்லப்படுகிற ஒன்றில், நாடகம் என்று தான் உணர்ந்த ஒன்றை நிகழ்த்தி, முற்றிலும் புதிய அனுபவத்தில் அவர்கள் பிரக்ஞையில் இதுவரையில்லாததை ஏற்படுத்தி விடுகிறதாகவே நாடகம் இருக்க வேண்டும் என்றே நான் விரும்புகிறேன்'

என்று கூறுவதன் மூலம் நவீன நாடகத்தின் உயிர்ப்பை வெளிப்படுத்தி விடுகின்றார். இக்கூற்றுக்குரிய இலக்கியமாகவே 'நாற்காலிக்காரர்', 'காலம் காலமாக' என்ற இரு நாடகங் களையும் அவர் படைத்துள்ளார் எனலாம். 'நாற்காலிக்காரர்' ஒரு அரசியல் நாடகம். 'காலம் காலமாக' ஒரு தலைமுறைப் பிரச்சினை. அரசியல்வாதிகள், தீர்வுகளுக்காகச் சிக்கல்களை ஏற் படுத்திக் கொள்கிறார்கள் என்பதே நாடகத்தின் கரு. ஆனால் நாடகத்தில் அரசியல்வாதிகளோ, அரசியல் பிரச்சனைகளோ காட்டப்படவில்லை. அதற்கு மாறாக, சீட்டு விளையாட்டும், கோலி விளையாட்டும் ஆடிக்கொண்டிருக்கின்றவர்களின் கருத்து மோதல்களும் காட்டப்பட்டு, ஒதுங்கி நின்ற நாற்காலிக்காரரைத் தங்களது போட்டியில் சேர்க்கவைத்து, பின் அவரையே மிரட்டும் அளவிற்குச் சென்று, தப்பினால் போதும் என்று அவர் ஓடும்படிவைக்கிறார் ஆசிரியர்.

சாதாரண காட்சி அமைப்பும், நேரடியான அரசியல் பிரச்சாரம் இல்லையென்றாலும், அதனைப் பார்ப்பவர்கள், உணரும் வண்ணம் உரையாடல்களையும், நிகழ்ச்சிகளையும், கொடுத்திருக்கும் முறையும் நாடகத்தின் வெற்றிக்கு உறுதுணையாகின்றன.

இந்நாடகத்தைப் போன்று 'காலம் காலமாக' என்பதன் மூலம் இளந்தலைமுறை, முதியதலைமுறை எழுத்தாளர்களிடையே நிகழ்ந்த கருத்துமோதல்களையும் வேறுபாடுகளையும் கருவாகக்கொண்டு அதனை வெளிப்படையாகக் காட்டாது ஒரு நோயாளியை வைத்துக்கொண்டு இரு குழுவினர், நோயைத் தீர்க்காது, அவர்களுக்குள் கருத்துமோதல் ஏற்பட்டு,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோயாளியைச் சாகடித்து விடுவதைக் காட்டி, மேற்காட்டிய கருத்தை உணரவைக்கிறார்.

தி. சு. இளஞ்செழியனின் 'வேதாளம் சொன்னகதை' என்ற நாடகம் பழைய மரபைக் கொண்டு புதியன படைக்கும் முயற்சியாகக் காட்சியளிக்கிறது. விக்கிரமாதித்தன் கதையும் வேதாளம் புதிர்போடலும் நமக்குத் தெரிந்த கதையே. அவ்வேதாளத்தைத் தன் நாடகக் கதைமாந்தராக்கி, நிகழ் காலச் சமுதாயப் பிரச்சனைகளைக் காட்டியுள்ள விதம் அந் நாடகத்தை வெற்றிபெறச் செய்திருக்கிறது எனலாம்.

பல்வேறு கவலைகளுக்கிடையே மூழ்கியிருக்கும் ஒரு குடும்பஸ்தனின் முன்னால் வேதாளம் தோன்ற, அவன் அது பற்றிக் கவலைப்படாது இருக்கும் நிலையும், வேதாளத்திடம் அலட்சியமாகப் பேசுகின்ற உரையாடல்களும் இக்கால மாந்தரின் இறைநிலை உணர்வை வெளிப்படுத்தும் சான்று களாகும். கடவுள் என்பதும் கடவுள் அவதாரம் எடுத்து அருள் புரிந்தார் என்கிற நிலையும் போய், நேரில் வந்தால் கூட நம்பாத மனநிலையே இன்றைய சமுதாய நிலை என்பதை நாடக ஆசிரியர் முதல் காட்சியிலேயே உணரவைத்து விடுகிறார்.

பிறகு மருத்துவமனையில் நிகழ்ந்த ஒரு காட்சி காட்டப் பட்டு, அதற்குக் காரணம் யார் என்று வேதாளம் கேட்க, அவ்விளைஞன், மக்களின் பொறுப்பற்ற தன்மை என்று கூறி, வேதாளத்திடம் மூன்று வேலைகளைச் செய்யச் சொல்கிறான். தன் மகனுக்கு மெடிக்கல் கல்லூரியில் சீட் வேண்டும் என்றும் வீடு ஒன்றினைக் கட்டி, தாலுகா ஆபிஸில் பதிவு செய்ய வேண்டும் என்றும் கேட்கிறான். வேதாளம் தன்னால் முடியாது என்று கூறி, அவன் பத்து எண்ணுவதற்குள் தலை வெடித்து இறக்கிறது.

இந்நாடகத்தில் எல்லோருமறிந்த வேதாளக் கதையை எடுத்துக்கொண்டு, சமூகப் பிரச்சனைகளை முன்வைத்து, நாடக உரையாடல் உத்தியைக் கையாண்டு ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளார் என்று கூறலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பயன்பட்ட நாடகங்கள்

1 கோமல் சுவாமிநாதன், நள்ளிரவில் பெற்றோம், சுந்தர நிலையம், சென்னை, 1985.

2 இந்திரா பார்த்தசாரதி, பசி, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1986. (இரண்டாம் பதிப்பு).

3 ந. முத்துசாமி, நாற்காலிக்காரர், கரியா, சென்னை, 1974.

4 தி.சு. இளஞ்செழியன், வேதாளம் சொன்னகதை, சுயம் வரம் (தொகுப்பு), அன்னம், சிவகங்கை, 1986.

5 பிரபஞ்சன், முட்டை.

6 ஞானி, பலூன், கட்டியங்காரன் வெளியீடு, சென்னை, 1981.

7 ஞான இராஜசேகரன், வயிறு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவல் திறனாய்வு (1970 - வரை) ஒரு கண்ணோட்டம்

தமிழ்நாவல் வரலாறு நூற்றாண்டைத் தாண்டிச் சென்று கொண்டிருக்க, தமிழ் நாவல் பற்றிய திறனாய்வும் அதே கால அளவைக் கடந்து கொண்டிருக்கிறது எனலாம். தொடக்க கால நாவலாசிரியர்களின் முன்னுரைகளை நாவல் பற்றிய விமர்சனங்களாகக் கொண்டால் இக்கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதே. முதல் நாவலாசிரியர்கள், நாவல் வடிவம், மொழி நடை போன்றவற்றைப் பற்றிச் சிந்தித்துள்ளனர் என்பது அவர்தம் முன்னுரைகள் மூலம் புலனாகின்றன. எனவே, தமிழ் நாவல் படைப்பாளர்களின் முன்னுரைகள் தனியே எடுத்து ஆய்வதற்குரியன.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே விவேகசிந்தாமணி, விவேகபோதினி, ஞானபோதினி செந்தமிழ் போன்ற இதழ்களில் நாவல் பற்றிய விமர்சனங்கள் வெளிவந்துள்ளன.[1] இது மணிக்கொடி, சரஸ்வதி, எழுத்து போன்ற இலக்கிய இதழ்கள் மூலமாக வளர்த்தெடுக்கப்பட்டு, இன்றைய இலக்கிய இதழ்கள் வரை நாவல் விமர்சன இலக்கியம் செம்மையாக மூற்றியுள்ளதை உணர முடிகிறது. எனவே, இதழ்களில் வெளியான நாவல் பற்றிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கட்டுரைகள் தொடக்கம் முதல் இன்றுவரை தொகுக்கப்பட்டுத் தனியாக ஆராய்தற்குரியன.

இக்கட்டுரையில் 1929 முதல் 1970 வரை நூல் வடிவில் வந்த நாவல் பற்றிய திறனாய்வுச் செய்திகளே கொள்ளப் படுகின்றன. 1927 இல் கே. எஸ். சீனிவாசப்பிள்ளையின் 'தமிழ் வரலாறு' என்ற நூலில் தமிழ் மொழி நடை பற்றிய கட்டுரையில் நாவல் பற்றிய செய்தி குறிப்பிடப்படுகின்றதேயன்றி, நாவல் திறனாய்வு என்று அதைக் கூறமுடியாது.[2] 1992-இல் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை எழுதிய 'Tamil Literature' என்ற நூலில் தான் 'நாவல்' என்ற தலைப்பில் இரு பக்கங்களில் நாவல் இலக்கியம் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. எனவே, 1929 கீழ் எல்லையாக இக்கட்டுரையில் கொள்ளப் படுகிறது. 1970க்குப் பிறகு நூறுக்கும் அதிகமான நாவல் பற்றிய நூல்கள் வெளிவந்துள்ளன. எழுபதுகளில் தான் பல்கலைக்கழகங்களிலும் கல்லூரிகளிலும் முனைவர் முதலான பட்டங்களுக்குப் பெருமளவில் நாவல் இலக்கியம் ஆய்வுப் பொருளாக மேற்கொள்ளப்பட்டது. ஆராய்ச்சியாளர், மேற் பார்வையாளர் போன்றோரின் கல்வித் தகுதி, பாடத் திட்டங்கள், ஆராய்ச்சிமுறை, இன்றைய கல்விநிலை போன்ற வற்றை அடிப்படையாகக் கொண்டு முனைவர் பட்ட ஆய்வுகள் தனியாக ஆய்வு செய்யப்பட வேண்டும். 1970க்குமுன் ஏறக் குறைய 25 நூல்களே நாவல் பற்றிய விமரிசனங்களைத் தாங்கிவந்துள்ளன.[3] அவற்றுள் ஐந்து நூல்களே நாவல்பற்றிய முழுநூல்கள்; மற்றவற்றில் நாவல் மதிப்பீடுகள் நூலில் ஒரு பகுதியாகவோ, கட்டுரையாகவோ அமைந்துள்ளன. எனவே 1970-க்கு முன்னர் வந்த நூல்கள் கால அடிப்படையில் தொகுக்கப்பட்டு, அவற்றுள் நாவல் விமர்சனம் எங்ஙனம் செய்யப்பட்டுள்ளது என்பது தனித்தனி நூல்கள் மூலமாக இங்கு நோக்கப்படுகிறது. ஆனால் 1970க்குப் பிறகு வந்த நூல்களை அவ்வாறு காணுதல் இயலாது. காரணம், நூறுக்கும் மேற்பட்டவையாக அவை இருப்பதேயாகும். அவற்றை, ஆசிரியர் பற்றியன, நாவல் பற்றியன, ஒப்பீட்டாய்வு அடிப்படையில் அமைந்தன, நாவல் கூறுகள் பற்றியன, நாவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொள்கைகள் பற்றியன, நாவல் வகைகள் பற்றியன, கால அடிப்படையில் அமைந்தன என வகுத்துத் திறனாய்வு செய்யலாம். இக்கட்டுரையில் 1929 முதல் 1970 வரை வெளிவந்துள்ள நூல்கள் மட்டும் தனித்தனியாக ஆராயப்பெற்று, நாவல் விமர்சனப் போக்கு நோக்கப்படுகின்றது.

1970க்கு முன்னர்வந்த நாவல் திறனாய்வு பற்றிய கருத்துகள், இரா. தண்டாயுதத்தின் ஆய்வேடான (1963-68) 'A Study of the Sociological Novels in Tamil' என்பதில் தான் முதன்முதல் எழுத்தாளப்பட்டுள்ளன.[4] அதில் மு. வ.வின் 'இலக்கிய மரபு,' க.நா.சு. வின் 'முதல் ஐந்து தமிழ் நாவல்கள்,' கி. வ. ஜகந்நாதனின் 'தமிழ்நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்,' க. கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம்,' பூவை எஸ். ஆறுமுகத்தின் 'கல்கி முதல் அகிலன் வரை' கண. முத்தையாவின் 'தமிழ் நாவல்கள்' ஆகிய நூல்கள் தனக்கு முன்னர் வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றன. மேலும் அவர் தம் முன்னுரையில்,

> 'கடந்த நூறாண்டுகளில் பல சூழல்களுக்கிடையில்
> எண்ணிறந்த நாவல்கள் வெளிவந்தபோதிலும்
> நாவலின் தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றித்
> திறனாய்ந்து நடுநிலையில் நின்று ம்திப்பிடும்
> திறனாய்வு நூல் ஒன்று கூட வெளிவரவில்லை'[5]

என்று குறிப்பிடுவதால், 1970 வரையிலும் நாவல் இலக்கியத்தை முழுமைப் பார்வையில் நோக்கிய திறனாய்வு நூல் ஒன்றுகூட' வெளிவரவில்லை என்பது புலனாகிறது. வேதநாயகம் பிள்ளை தொடங்கி, கல்கி காலம் வரை நாவலின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆய்வாக வெளிவந்த நூல் அதுவேயெனலாம். தனக்கு முன்னர்வந்த நாவல் திறனாய்வுகளைக் குறிப்பிட்டு. அவற்றை மதிப்பீடு செயத முதல் முயற்சியும் இரா. தண்டாயுதத்தின்ஆய்வேட்டில் தான் காணப்படுகிறது என்பதையும் இங்கே குறிப்பிடவேண்டும். பல்கலைக்கழகங்களில் கல்லூரிகளில் நாவல் பாடப்பகுதியில் சேர்க்கப்பட்ட பின்னரே, மாணவர்களுக்கென நாவல் பற்றிய திறனாய்வுக் கட்டுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களும், நூல்களும் பெருகத் தொடங்கின. இப்பெருக்கம் 1970 களிலிருந்து தொடங்குகின்றது எனலாம்.

1929 இல் வெளிவந்த எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையின் 'Tamil Literature' என்ற நூலில் 'நாவல்' என்ற தலைப்பில் இருபக்கங்களில் நாவல் இலக்கியம் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. இதில் முதல் மூன்று நாவல்கள் குறிப்பிடப்படுகின்றன. ஆரணியாரின் நாவல்களைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது, அக்கால நாவலாசிரியர்கள் வாசகர்களைப் பரவச மூட்டுவதற்கே எழுதியுள்ளனர் என்றும், சிறுவயதினர் படிப்பதற்கு உகந்தவையல்ல என்றும் குறிப்பிட்டுள்ளார். (பக். 368) மொழி நடையைத் தாண்டி, பாடுபொருளில் கவனம் செலுத்தும் திறனாய்வுப் போக்கை இது காட்டுகிறது.

1933 இல் வெளியிடப்பெற்ற ஏ. வி. சுப்பிரமணிய அய்யரின் 'தற்காலத் தமிழ் இலக்கியம்' என்ற நூலே நாவல் திறனாய்வு வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த நூலாகும். நவீன இலக்கியம் பற்றிய தெளிவோடு திறனாய்வு செய்யப்பட்ட முதல் நூலாகுமிது. 'தமிழ் இலக்கியம்-வசனம்' என்ற தலைப்பில் பிரதாபமுதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பாரதியின் சந்திரிகையின் கதை ஆகிய நாவல்களைத் திறனாய்வு செய்துள்ளார். பிரதாபமுதலியார் சரித்திரத்தைப் பற்றிக் கூறும்பொழுது,

> 'அதை நாவல் இனத்தில் சேர்க்கக் கூடாது. ஏனென்றால், நாவல் என்ற முறையில் அதை நுட்பமாய்க் கவனித்தால் சில குறைகள் எளிதில் தென்படும். கதை வளர்வதில் இயற்கையான தன்மையாவது வேகமாவது, போதிய சுவராஸ்யமாவது, நுண்ணிய கலைப்பாங்காவது இல்லை. ஒரு நாவலில் இருக்கக் கூடாது உபகதைகளும் விடுகதைகளும் விஸ்தாரமாக வரையப்பட்டு மலிந்து கிடக்கின்றன'

என்று கூறுகிறார்.

மேலும், நடை, பொருட்செறிவு, பாத்திரங்கள் போன்றவற்றையும் திறனாய்வு செய்கிறார். இவ்வாறு நாவலின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல்வேறு கூறுகளையும் அதன் கொள்கைகளையுமொட்டித் திறனாய்வு செய்த முதல் நூல் இதுவெனலாம். கல்கியின் நாவல்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது, அவை ரஸமாயிருந்த போதிலும் கலைத்திறனுடன் ஆக்கப்பட்ட நாவல்கள் அல்ல என்று ஆணித்தரமாகக் கூறுகின்றார். (பக். 156)

1953-இல் எழுதப்பட்ட அ. ச. ஞானசம்பந்தத்தின் 'இலக்கியக்கலை' என்ற நூல், புதினம் பற்றிய கருத்துக்களை ஓர் இயலில் விரித்துரைக்கிறது, நாவல் கூறுகள் பற்றிய (கதைப்பின்னல், உரையாடல். கரு, நடை, கதைமாந்தர்) செய்திகள் ஓரளவு சுட்டப்படுகின்றன. தமிழ் நாவல்களைச் சான்றுகளுடன் காட்டி விளக்கும்முறை, இந்நூலில் மேற் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேதநாயகம் பிள்ளையும், கல்கியும். மு. வ.வும் சுட்டிக் காட்டப்படுகின்றன-ரேயன்றி, அவர்களுடைய படைப்புக்கள் விமர்சனம் செய்யப் படவில்லை.

1955-இல் எழுதப்பட்ட சாமி சிதம்பரனாரின் 'முன்சீப் வேதநாயகம்பிள்ளை' என்ற நூலில் அவருடைய வாழ்க்கை வரலாறும் படைப்புகளும் கூறப்பட்டுள்ளன. ஆனால் நாவல் முன்னோடி என்ற சிறப்புச் செய்தி அந்நூலில் குறிப்பிடப்பட வில்லை. சிறந்த நீதியை உணர்த்தும் நல்ல கதைகள் என்றே பிரதாப முதலியார் சரித்திரமும் சுகுண சுந்தரியும் குறிப்பிடப் படுகின்றன. மற்றபடி நாவல் பற்றிய பிற செய்திகள் இதில் குறிக்கப்பெறவில்லை. இதன் இரண்டாம் பதிப்பு 1976-இல் வெளிவந்துள்ளது. 1950-களில் கூட, நாவல் முன்னோடியாகத் திகழ்ந்த வேதநாயகம் பிள்ளையின் சிறப்பு ஏற்றுக்கொள்ளப் படவில்லை என்பதை இந்நூல் காட்டுகிறது.[6]

1957-இல் வெளிவந்த சாகித்திய அகடமியின், Contemporary Indian Literature' என்ற நூலில் தமிழ் இலக்கியம் பற்றிய தெ. பொ. மீயின் கட்டுரையில் நாவல் என்ற பகுதியில் மொழிபெயர்ப்பு, தழுவல் நாவல்களைப் பற்றிய செய்திகளும் மறைமலையடிகள், கல்கி என்ற இருவரின் பெயர்களுமே குறிக்கப்பட்டுள்ளன. நாவல் பற்றிய வேறு செய்திகள் எதுவும் தெ. பொ. மீயால் எழுதப்படாதது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விந்தையாகவே உள்ளது (பக். 283). 1933-இல் நவீன இலக்கியம் பற்றிய சிந்தனைப்போக்கு ஏ. வி. சுப்பிரமணிய அய்யரால் உருவாக்கப்பட்டிருந்தாலும், பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வந்த தொ. பொ. மீ. அவர்கள் 1957-களில் நாவல் மற்றும் சிறுகதையைப் பற்றிய தெளிவானதொருவிமர்சனக் கொள்கையைக் கொண்டிராதது, 1950-களில் தற்காலத் தமிழ் இலக்கியத் திறனாய்வின் முதிரா நிலைமையையே காட்டுகிறது எனலாம். இவரே பின்னர், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக இருந்தபோது, நவீன இலக்கிய ஆய்வுகளுக்கு உறுதுணையாக இருந்து வளர்த்தார் என்பதும் இங்கே சுட்டப்பட வேண்டிய செய்தியாகும்.

1950 களின் இறுதியில் க.நா.சு. அவர்களின் நாவல் பற்றிய விமர்சனங்கள் குறிப்பிடத்தக்கவை. 1957—59 களில் நான்கு நூல்களை அவர் எழுதியுள்ளார். அவற்றுள், 'முதல் ஐந்து தமிழ் நாவல்கள்' மட்டும் நாவல் பற்றிய முழு நூலாகும். மற்றவற்றில் நாவல் பற்றிய விமர்சனங்கள் நூலில் ஒரு பகுதியாகவோ கட்டுரையாகவோ எழுதப்பட்டுள்ளன.

1957 இல் வந்த 'முதல் ஐந்து தமிழ் நாவல்களின்' இவர் பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், தீனதயாளு, கமலாக்ஷி ஆகிய ஐந்து நாவல்களிலுமுள்ள நாவல் உருவம், நடை, பாத்திரப் படைப்பு போன்றவற்றைத் திறனாய்வு செய்கிறார். அந்நூலின் முன்னுரையில்,

> 'ஒரு நூறு பேர்வழிகளாவது என் சிறு நூலால் தூண்டப்பட்டு அந்த முதல் நாவல்களைத் தேடிப் பிடித்துப் படிப்பார்களானால் அதுவே என் முயற்சிக்குப் பயன்'

என்று குறிப்பிடுவதன் மூலம் அக்கால விமர்சன நோக்கம் எதுவாக இருந்தது என்பதை அறியமுடிகிறது. இதே நூலின் பின்னுரையில், ஐந்து வகையான நாவல் எழுதும் அணியைச் சுட்டுகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. தி. ம. பொன்னுசாமிப்பிள்ளையைப் பின்பற்றிய அணி (ஆரணி, வழுவூரார், கல்கி)
2. பண்டித நடேச சாஸ்திரியைப் பின்பற்றிய அணி (வை. மு. கோ., பி. எம். கண்ணன், அநுத்தமா)
3. ஆ. மாதவையாவின் அணி (வ. ரா. — தி. மு. க எழுத்தாளர்கள்)
4. பி.ஆர். ராஜமய்யரைப் பின்பற்றும் அணி (வேங்கடரமணி, சங்கர்ராம், க. நா. சு., சண்முகசுந்தரம், சிதம்பர சுப்பிரமணியன்).
5 வேதநாயகம்பிள்ளையைப் பின்பற்றுவோர் (சுத்தானந்த பாரதி, மு. வ.)

இவ்வைந்திலும் சேராது நிற்பது, எஸ். வி. வி. யின் எழுத்து என்றும் பிரித்திருப்பது, 1950 களின் இறுதியில் நாவலாசிரியர் களின் கொள்கை, நடை, படைப்பாற்றலைக் கொண்டு தரம் பிரிக்கும் விமர்சனப் போக்கைக் கையாண்டுள்ளதைக் காட்டு-கிறது.

'படித்திருக்கிறீர்களா!' என்ற நூலின் முதற்தொகுதியில் ந. சிதம்பரசுப்பிரமணியனின் இதயநாதம், சங்கரராமின் மண்ணாசை, மு.வ. வின் கரித்துண்டு, ஆர் சண்முக சுந்தரத்தின் நாகம்மாள், அ. சுப்பிரமணிய பாரதியின் ஜடாவல்லவர் ஆகிய ஐந்து நாவல்களை க, நா. சு. விமர்சனம் செய்துள்ளார். அந்நூலின் முன்னுரையில் க.நா.சு. அவர்கள்,

> 'எனக்குப் பிடித்திருந்தது என்று சொல்லி, ஏன்
> பிடித்திருந்தது என்று சொல்ல முயலுவதுதான்
> இலக்கிய விமர்சன வளர்ச்சியில் முதல் படி'

என்று கூறியுள்ளார். அதற்கேற்பவே அவரது விமர்சனங்களும் அமைந்துள்ளன என்பதும், அக்கால கட்டத்தில் அதுவே தற்கால இலக்கிய ஆய்வில் அதிகப்படியானது என்பதும் குறிப்பிடத்தக்கன. 'நாகம்மாள்' நாவலை விமர்சிக்கும் க. நா.சு. கொங்கு நாட்டுக் கிராமத்தை முழுமையாகக் காட்டி வெற்றி பெற்ற முதல் நாவல் என்று விளக்கிப் பின்னணி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதை மாந்தர் படைப்பு ஆகியவற்றின் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றார். மு. வ. வின் 'கரித்துண்டு' பற்றிக் கூறும் போது, அவரது நடையைப் பாராட்டுகிறார். திருக்குறளையே கதைநாயகனாகவும், நாயகியாகவும் வைத்துக் கதையை ஆசிரியர் நடத்தியுள்ளார் என்று விமரிசனம் செய்துள்ளார்.

'படித்திருக்கிறீர்களா?' II-ஆவது தொகுதியில் வ. ரா. வின் சுந்தரி, ஆர். வி. யின் அணையாவிளக்கு, வடுவூராரின் மேனகா, அநுத்தமாவின் கேட்டவரம், ஜே. ஆர். ரங்கராஜுவின் ராஜாம்பாள், அகிலனின் சிநேகிதி, க. நா. சு. வின் பொய்த்தேவு முதலிய ஏழு நாவல்கள் விமர்சனம் செய்யப்பட்டுள்ள. ஒரு நாவலாசிரியர் தன்னுடைய நாவலை விமர்சனம் செய்வது இதுதான் முதல் தடவை எனலாம். இந்நூலில் அக்காலத்தில் நிலவிய இரு விமர்சனப் போக்கை ஆசிரியர் சுட்டுகின்றார் (பக். 147).

1. எனக்குப் பிடித்தது இது, இதுவே உயர் இலக்கியம் என்று கூறுகிற டி. கே. சி, புதுமைப்பித்தன், சிதம்பர ரகுநாதன் முதலியோரைக் கொண்ட விமரிசனப் போக்கு.

2. தமிழ் ஆங்கிலப் படிப்பினால் சில அளவுகோல்களை ஏற்படுத்திக் கொண்டு, அவற்றைப் பழசுக்கும், புதுசுக்கும் பயன்படுத்திப் பார்க்க முயன்ற மு. வ., அ. ச. ஞா. போன்றோரைக் கொண்ட விமரிசனப் போக்கு.

இவ்விரண்டுப் போக்கும் இந்நாள்வரை தமிழ் இலக்கிய ஆய்வுலகில் இருந்துவருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

வ. ரா வின் 'சுந்தரி'யை விமரிசனம் செய்யும் க. நா. சு., விதவைத் திருமணம் என்கிற சமுதாயச் சீர்திருத்தக் கருத்தை மனத்தில் பதியும்படி நாவலைப் படைத்ததில் வெற்றி பெற்றுள்ளார் என்று அவரைப் பாராட்டுகின்றார்.

1957 இல் வெளிவந்த 'இலக்கிய விசாரம்' என்ற நூல், உரையாடல் வழியாக, இலக்கிய விமரிசனம் செய்யும் புதுமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முயற்சியாகும். ஆங்கில இலக்கியத்தில் ஜார்ஜ் மூர் (George Moore) செய்த 'Conversations in Ebury Street' என்பதைக் கொண்டு இவ்விமரிசன முயற்சி செய்யப்பட்டதாக, க.நா.சு வே குறிப்பிடுகின்றார். இதில் நாவல் பற்றிய விமரிசனம் (14-42) ஏறக்குறைய 30 பக்கங்களில் இடம் பெறுகின்றது. வ. ரா, அண்ணாதுரை, கருணாநிதி போன்றோரின் பிரச்சார நாவல்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்கள் நாவல் எழுதிய நோக்கங்களைப் பாராட்டலாமே தவிர, நாவல்களாக அவர்கள் நூல்களைப் பாராட்ட முடியாது என்கிறார் (பக் 40). மு.வ.வின் கதை மாந்தர்கள் மனித உருவில்லாமல், சிந்தனை உருவமாக விளங்குகின்றனர் (பக் 38) என்கிறார். கல்கியை நாவலாசிரியர் என்பதைவிடத் தொடர்கதை ஆசிரியர் என்றே கூறலாம் என்கிறார் (பக் 30). வாசகர்களை உருவாக்கித் தந்தவர்கள் என்ற நிலையில், கல்கி, ஆரணியார், வழுவூரார், ஜே. ஆர். ரங்கராஜு. பொன்னுசாமிப்பிள்ளை போன்றோரைச் சிறப்பாகச் சொல்லலாம் என்று குறிப்பிடுகிறார் (பக் 15).

'விமரிசனக் கலை' (1959) என்ற நூலில், விமரிசனம் வளர்ந்தால் தான் இலக்கியம் வளரும் என்ற அடிப்படைக் கருத்தையே பலவிடங்களில் வலியுறுத்துகிறார். 'இலக்கியத்தில் உருவங்கள்', 'தமிழ் நாவலில் விஷயம்', 'சில குறிப்புகள்' என்ற மூன்று பகுதிகளில் நாவல் திறனாய்வு காணப்படுகிறது.

> குறள் பண்பை வைத்தெழுதும் மு. வ.
>
> கம்யூனிஸச் சிந்தனையை மையமாக வைத்தெழுதும் ரகுநாதன், விந்தன், ஜெயகாந்தன்;
>
> குடும்ப விஷயங்களை வைத்துப் புரட்சி நோக்கத்துடன் எழுதும் ஆர்.வி, அகிலன்;
>
> குடும்ப விஷயங்களை வைத்துப் புரட்சி நோக்கமில்லாது எழுதும் அநுத்தமா, பி.எம். கண்ணன்

என்று இனம்பிரித்துச் (பக் 59) சுட்டுகின்றார்.

வேதநாயகம் பிள்ளையை Romanticist என்றும் ராஜமய்யரை Naturalist என்றும் மாதவய்யாவை Realist என்றும் குறிக்கலாம் என்கிறார் (பக் 76 - 78).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ் நாவல் திறனாய்வு உலகில், 1970க்கு முன், க. நா. சு. அவர்கள் மட்டும் தான் நாவல் விமரிசனத்திலும், நாவலாசிரியர்களை அவர்கள்தம் கொள்கை, நடை, எழுத்தாற்றல் மூலம் இனம் பிரித்துக் காண்பதிலும், மேலைநாட்டு நாவலாசிரியர்களுடன்தமிழ் நாவலாசிரியர்களை ஒப்பிட்டுக் காண்பதிலும் குறிப்பிடத்தக்கவராக உள்ளார். அடுத்து, கைலாசபதியைச் சுட்டலாம்.

1960இல் எழுதப்பட்ட 'இலக்கிய மரபு' என்ற நூலில் 'நாவல்' என்ற பகுதி 55 பக்கங்கள் கொண்டுள்ளது. **Richard Church** இன் **'The Growth of the English Novel'** மற்றும் **C. T. Winchester** இன் **'Some Principles of Literary Criticism** என்ற இரு ஆங்கில நூல்களின் கருத்துக்களைக்-கொண்டு நாவல் இலக்கியம் பற்றிய பொதுவான கருத்துகளை மு.வ. மொழிந்துள்ளார். நாவல் வகைகள், கதைகூறும் முறை, வருணனை, கதை மாந்தர் உரையாடல் முதலியன பற்றிய விளக்கங்கள் இருந்தபோதிலும், அவற்றிற்குரிய சான்றுகளாகத் தமிழ் நாவல்களைக் குறிப்பிட்டுச் சொல்லாதது குறையாகத் தென்படுகிறது. நாவல்களின் தோற்றம் பற்றிய கருத்துகள் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஆனால், தமிழ் நாவல்களின் தோற்றப் பின்னணி கூறப்படாமல், மேலைநாட்டுப் பின்னணி மட்டுமே கூறப்பட்டுள்ளது. தமிழ் நாவல்களில் கமலாம்பாள் சரித்திரம் மட்டுமே விமரிசிக்கப்பட்டுள்ளது. முதல் நாவலைப்பற்றிய எந்த விளக்கமும் அளிக்கப்படாமலிருப்பது வியப்பாக உள்ளது. கல்கியையும் அவர் காலத்தில் வாழ்ந்த வை.மு. கோ. வையும் தவிர, பிற நாவலாசிரியர்களைப் பற்றி எவ்விதக் குறிப்பும் இல்லை.

1962 இல் எழுதப்பட்ட 'ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி' (சில்லையூர் செல்வராசன்) 1967 இல் வெளியிடப்பட்டது. இந்நூலில், 1962க்கு முன் வந்த இலங்கைத் தமிழ் நாவல் பற்றிய திறனாய்வு முயற்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன (பக் 6-8). இந்நூலில், ஈழத்துத் தமிழ் நாவல்களின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆய்வதற்கான அடிப்படைக் கருவியாகிய நாவல் தொகுப்பு (கால அடிப்படையில்) தேவை என்று கருத்து வெளியிடப்பட்டுள்ளது. கால அடிப்படையில் தொகுக்கப்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவல் பட்டியல் இருந்தால்தான் நாவல் திறனாய்வு முழுமை-யுறும் என்ற கருத்தை 1962-லேயே இந்நூலாசிரியர் முன் வைத்துள்ளார் (பக் 10). ஈழத்துத்தமிழ் நாவல்கள் பற்றிய வளர்ச்சியைப் பார்க்கின்ற ஆய்வு முறை 1962இல் ஓரளவிற்குச் செம்மையாக நிகழந்திருக்க, 1966இல் கி.வா. ஜகந்நாதனின் 'தமிழ்நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூல் இத்தகு ஆய்வுப்பார்வை இல்லாது வெளிவந்துள்ளது, தமிழகத்தின் திறனாய்வு நிலையை உணர்வதற்குச் சிறந்த சான்றாகும்.

1963-இல் மலாயாப் பல்கலைக்கழகமும் மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் இணைந்து கல்கியின் படைப்புகள் குறித்துக் கருத்தரங்கு ஒன்றை நடத்தின. அக்கருத்தரங்கக் கட்டுரைகள், 1966-இல் 'எழுத்தாளர் கல்கி' என்னும் நூல் வடிவில் வெளிவந்தன. நவீன எழுத்தாளர்பற்றிய கருத்தரங்கங்-களும், அக்கருத்தரங்கக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியும் தமிழ்த்திறனாய்வு உலகில் ஏற்பட்ட முதல் முயற்சியாகும். இதிலுள்ள ஐந்து கட்டுரைகளில், கல்கியின் சமுதாய நாவல்கள், வரலாற்று நாவல்கள், பொன்னியின் செல்வன் என்ற மூன்று கட்டுரைகள் நாவல் தொடர்பானவை. இக்கட்டுரைகள் முறையே தனிநாயக அடிகள், வை. திருநாவுக்கரசு, ஈ. ச. விசுவநாதன் ஆகியோரால் எழுதப் பட்டவை. பின்னால் வந்த கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் பெங்களூர் இலக்கு போன்றவை கருத்தரங்கு நடத்தி, நூலாக வெளியிடும் முயற்சிக்கு இதுவே முன்னோடியெனலாம்.

1964-இல், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 'கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவுச் சொற்பொழிவு' மூலம், கி. வா. ஜகந்நாதன் 'தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பில் மூன்றுநாள் சொற்பொழிவை நடத்தியது குறிப்பிடத்தக்கது. இதுவே 1966-இல் நூல்வடிவம் பெற்றது. இந்நூலின் முன்னுரையில் கி. வா. ஜ.

> 'இன்றும் தமிழகத்தில் புகழ்பெற்ற நாவலாசிரியர்கள் பலர் இருக்கிறார்கள். பல அரிய நாவல்களை அவர்கள் படைத்திருக்கிறார்கள். அந்த நாவல்களைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பற்றி நான் ஆராயவில்லை. வாழும் ஆசிரியர்களின் படைப்புகளைப் பற்றி ஆராய்வதில் பல சங்கடங்கள் உண்டு'

என்று கூறுவதிலிருந்து, சமகாலத்தவரின் படைப்புகள் திறனாய்வு செய்யப்படக்கூடாது என்கிற தமிழரின் மனப்பான்மை, திறனாய்வு உலகிலும் இடம் பெறலாயிற்று என்பதை உணரமுடிகிறது. இதிலிருந்து மாறுபட்டு, க. நா. சு. அவர்கள் 1950-களிலிருந்தே, வாழ்ந்து வருகின்ற நாவலாசிரியர்களின் படைப்புகளை விமரிசனம் செய்துவந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழர்களுடைய கதைகேட்கும் மரபைக் காட்டித் தொல்காப்பியத்தில் சுட்டப்படும் பொருளொடு புணராப் பொய்ம்மொழியைச் சுட்டி, ஆங்கிலேயர் வருகைக்குப் பின் ஏற்பட்ட மாறுதல்களைக் கூறி, தமிழ் நாவல் தோற்றத்தைக் கூறியுள்ளார் கி. வா. ஜ. தொடக்கக் கால நாவல்களான பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் பத்மாவதி சரித்திரம் என்ற மூன்றையும் கதைச் சுருக்கம், கதை மாந்தர்கள், கட்டுக்கோப்பு போன்ற பிரிவுகளில் ஆராய்கிறார். நாவலின் நிறைகளும் குறைகளும் சுட்டிக் காட்டப்பெறுகின்றன. மூன்றாவது பகுதியில், கல்கியின் நாவல்கள் விமர்சிக்கப்படுகின்றன. சிவகாமியின் சபதமும், அலையோசையும் பல்வேறு வகைகளில் அலசப்படுகின்றன. ஆனால் அக்கால கட்டத்தில் அந்நாவல்கள் எழுந்ததற்கான காரணங்கள் என்ன? மற்ற நாவல்களிலிருந்து இந்நாவல்கள் எங்ஙனம் மாறுபட்டுள்ளன? போன்றவற்றை விளக்காமல், நேராக நாவலுக்குள் நுழைந்து விடுகிறார் நூலாசிரியர். இந்நூல் சொற்பொழிவின் தொகுப்பாதலால் இதில் திறனாய்வுச் செம்மைக்குரிய பண்பை அதிகம் காணமுடியவில்லை.

1966 இல் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய நாவல் விழாவும் அதில் படிக்கப்பட்ட 13 கட்டுரைகள், அவ்வாண்டிலேயே வெளியிடப் பெற்றதும் நாவல் திறனாய்வுப் போக்கில் குறிப்பிடத் தக்கதொரு நிகழ்ச்சி என்லாம். அதில் சம காலத்து நாவலாசிரியர்களின் படைப்புகளும் இடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்றுள்ளமை, திறனாய்வு, தமிழிலும் ஓரளவு முன்னேறியதற்கான அறிகுறி எனலாம். ஒவ்வொரு நாவலின் கதை மாந்தர்கள், கதைக்கரு, பின்னணி, நடை, கட்டுக்கோப்பு போன்றவை விமரிசனம் செய்யப்பட்டுள்ளன. கன்னிமாடம் (சாண்டில்யன்), பாவை விளக்கு (அகிலன்), குறிஞ்சித்தேன் (ராஜம்கிருஷ்ணன்), குறிஞ்சிமலர் (நா. பா), புத்தம் வீடு (ஹெப்சிபா ஜேசுதாசன்) நந்திபுரத்து நாயகி (விக்கிரமன்) போன்றோரின் நாவல்களை அவ்வாண்டில் விமரிசனத்திற்கு உட்படுத்தியதை பெரிய சாதனையாகக் கொள்ளவேண்டும்.

1968 இல் வெளிவந்தது, க. கைலாசபதியின் 'தமிழ் நாவல் இலக்கியம். தமிழ்நாவலின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் இன்றியமையாத வரலாற்றுச் செய்திகளுடன் இணைத்துப் பார்க்கின்ற முயற்சியை இந்நூலில் கையாண்டுள்ளார் கைலாசபதி. இதற்கேற்பக் கால ஆராய்ச்சியும், நாவல் பண்பாய்வும் ஒருங்கே மேற்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் நாவல் திறனாய்வுகளில் இது முன்னோடி முயற்சி எனலாம். கி.வா.ஜ.வின் நூல், தமிழ் நாவலின் தோற்றத்தை ஓரளவே கணித்திருக்க, கைலாசபதியின் நூல் காவியத்திற்கும் நாவலுக்குமுள்ள தொடர்புகள் - தொடர்பின்மைகள், உரை நடையோடு நாவல் கொண்ட நெருக்கம், தனிமனிதவாதம் நாவல் இலக்கியத்தில் இடம்பெற்றமை, சிறுகதைத் தோய்விற்கும் நாவலின் வளர்ச்சிக்குமுள்ள காரணங்கள் போன்றவற்றை மார்ச்சீயக் கண்ணோட்டத்தில் அணுகியிருப்பது, தமிழ் நாவல் திறனாய்வுப் போக்கில் முன்னோடி முயற்சி எனலாம். இதை அடியொற்றி, கா சிவத்தம்பி, எஸ். தோதாத்ரி, ஞானி போன்றவர்கள் நாவல் இலக்கியத்தைத் திறனாயத் தொடங்கினர் என்பதும், அம் முயற்சி, பல்கலைக்கழக ஆய்வாளர்களால் பெரிதும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் உணரத்தக்கச் செய்திகளாகும்.

1969 இல் எழுதப்பட்ட, சாலை இளந்திரையனின் 'புதுத் தமிழ் முன்னோடிகள்' என்ற நூலில் 'பிரதாப முதலியார் சரித்திரம்' மட்டும் திறனாய்வு செய்யப்பட்டுள்ளது. அந் நாவலின் பல்வேறு கூறுகள் ஓரளவிற்குத் தொட்டுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டப்பட்டுள்ளன. 'நாவல் இலக்கியம்' என்ற தலைப்பில் சுமார் 35 பக்கங்களுக்கு ஒரு நாவலைப்பற்றி மட்டுமே அக்காலத்தில் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

1969இல் தமிழ்ச் சிறுகதை, நாவல் பற்றிய கருத்தரங்கைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் சார்பில் நடத்தி, 1970-இல் 'வளரும் தமிழ் இலக்கியம்' என்ற நூல் வடிவில் வந்திருக்கும் நாவல் திறனாய்வு குறிப்பிடத்தக்கது. நாவல் பகுதியில், எஸ். சிவபாதசுந்தரம், கி. வா.ஜ, நா. பார்த்தசாரதி, கணமுத்தையா, சரஸ்வதி ராம்நாத், கு. அழகிரிசாமி, அகிலன், ஆகியோரின் ஏழு கட்டுரைகளும், கரித்துண்டு, பாரிசுக்குப்போ, மண்ணில் தெரியுதுவானம் என்ற மூன்று நாவல்களின் திறனாய்வும் இடம் பெற்றுள்ளன. இதில், 'நாவலும் விமரிசனமும்' என்ற சரஸ்வதி ராம்நாத்தின் கட்டுரை 1970 வரை நாவல் விமரிசனம் எந்நிலையில் இருந்தது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

> 'தமிழில் நாவல் இலக்கியம் வளர்ந்துள்ள அளவிற்கு விமர்சன இலக்கியம் வளரவில்லை' (பக் 50).

என்றும்,

> 'சமகால இலக்கியம் கல்லூரிப் பாடத் திட்டங்களில் இடம்பெறும் போதுதான் விமரிசன நூல்கள் தோன்ற ஓர் வாய்ப்பு ஏற்படும்' (பக் 40).

என்றும், கூறியிருப்பதன் மூலம், 1970 களில் சமகால இலக்கியங்கள் கல்லூரி, பல்கலைக்கழகங்களில் குறிப்பிடத்தக்க அளவு சேர்க்கப்படவில்லை என்பதும், 1970க்குப் பிறகே இது பெருமளவில் போற்றப்பட்டது என்பதும் பெறப்படுகின்றன.

தொகுப்புரை:

திரு. வி. க., உ. வே. சா. போன்ற தமிழறிஞர்களால் வெறுக்கப்பட்ட நாவல் இலக்கியம், டி. கே. சி. போன்றவர்களால் பண்டைய இலக்கியங்களே ரசிக்கத்தக்கவை என்ற இலக்கிய ரசனைப் போக்கை எதிர்த்தும் வளரவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இந்நிலையில், விமர்சனம் செம்மையாக வளரும் என்று எதிர்பார்க்க இயலாது. எனினும், இவ்வெதிர்ப்புகளிடையே க. நா. சு. நாவல் இலக்கியத்தைத் தூக்கி நிலை நிறுத்தியது குறிப்பிடத்தக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொரு விமர்சனப் பணியாகும். ஓர் இலக்கிய வகை, புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டு வளர்கின்ற சூழலில், திறனாய்வும் செம்மையாக இருக்கும் என்று எதிர்பார்த்தல் கூடாது. 1970க்கு முன்னர் வந்த நாவல் திறனாய்வுகளை நோக்கும்போது, ஒன்றிரண்டைத்தவிர மற்றவையெல்லாம் தனி நாவல்கள் பற்றிய விமரிசனங்களாகவே உள்ளன. எனினும், 1933 இல் ஏ.வி சுப்பிரமணியய்யர் நவீன இலக்கியப் பின்னணியில் நாவல் இலக்கியத்தை நோக்கியதும், படைப்பாளராக இருந்துகொண்டு நல்ல நாவல்களை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் விமர்சனம் செய்து க.நா.சு. எழுதியதும், ஒரு நாவலாசிரியரின் படைப்புகள் பற்றிக் கருத்தரங்கு நடத்தி, 1963 இல் அக்கட்டுரைகளை நூலாக வெளிக்கொணர்ந்த மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்க முயற்சியும், பல்கலைக்கழக முனைவர் பட்ட ஆய்விற்கு நாவல் இலக்கியத்தை 1963-68 ஆண்டுகளில் மேற்கொண்டு, தொடக்கக் கால முதல் கல்கி, அகிலன் வரை வளர்ச்சிப் போக்கை நோக்கிய இரா. தண்டாயுதத்தின் ஆய்வும், மார்க்சீயச் சமுதாயப் பின்னணியில், நாவல் இலக்கியத் தோற்றம் மற்றும் வளர்ச்சிப் போக்கைத் திறனாய்வு செய்த கைலாசபதியின் முயற்சியும் குறிப்பிடத்தக்கன, மற்றவை குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு, நாவல் பற்றிய திறனாய்வுப் பணியை மேற்கொள்ளவில்லை என்பதையும் உணர முடிகின்றது.

மேலைநாட்டுத் தொடர்பு, தமிழில் நாவல் தோன்றிய பின்னணி, அவற்றின் வளர்ச்சிப் போக்கு, ஆசிரியர்களின் கொள்கை போன்றவற்றைக் கொண்டு நாவல்களைக் கால அடிப்படையில் நோக்குகின்ற முறை 1970 க்குப் பின்னரே தொடங்குகிறது எனலாம். அந்நோக்கிற்கு அடித்தளமிட்டவை 1970 க்கு முன்னர் வந்த நாவல் திறனாய்வுகள் என்பதில் ஐயமில்லை.

அடிக்குறிப்புகள்:

1 1895 இல் விவேகபோதினியில் 'பிரேமகலாவத்யம்' நாவலை பி. எஸ். சுப்பிரமணிய அய்யர் திறனாய்வு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்துள்ளார். மா. இராமலிங்கம் (திறனாய்வு நெறி மணிவாசகர் 1983) பக் 81.

2 கே. எஸ். சீனிவாசப்பிள்ளை, தமிழ் வரலாறு (முதற் பாகம்), (பூர்ண சந்திரோதிய பிரஸ், தஞ்சை 1927) பக் 47.

3 பின்னிணைப்பு 1 இல் தரப்பட்டுள்ளது.

4 இவ்வாய்வேடு 1977 இல் தான் நூல் வடிவம் பெற்று உள்ளது. எனினும், 63—68 கால அளவில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆய்வேடாக மலர்ந்ததால் 1970 க்கு முன்னுள்ள காலப்பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளது. இது போன்று அமைந்த நூல்கள் பின்னிணைப்பு 2 இல் தரப்பட்டுள்ளன.

5. இரா. தண்டாயுதம், சமூக நாவல்கள், (தமிழில் க. வேங்கடராமன்), தமிழ்ப்புத்தகாலயம், சென்னை 1979.

6 சாமி சிதம்பரனார், முன்சீப் வேதநாயகம் பிள்ளை, (இலக்கிய நிலையம் சென்னை, இரண்டாம் பதிப்பு, 1976) பக் 111.

பின்னிணைப்பு 1

1970-க்கு முன்னர் வந்த நாவல் பற்றிய திறனாய்வு நூல்கள்

1 1929 எம். எஸ். பூரணலிங்கம்பிள்ளை Tamil Literature, the Bibliotheca, Munnirpal'am.

2 1933 ஏ. வி. சுப்பிரமணிய அய்யர், தற்காலத் தமிழ் இலக்கியம் நவயுகப் பிரசுரலாயம், சென்னை.

3 1949 கே எஸ். ராமசுவாமி சாஸ்திரிகள், கோதை நாயகியின் கலைச்செல்வமும் அருட்செல்வமும் ஜெகன்மோகினி வெளியீடு, சென்னை.

4 1953 அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, சுழக வெளியீடு, சென்னை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5 1955 சாமி சிதம்பரனார், முன்சீப் வேதநாயகம் பிள்ளை, இலக்கிய நிலையம், சென்னை.

6 1957 க. நா. சுப்ரமணியன், முதல் ஐந்து தமிழ் நாவல்கள், அமுத நிலையம், சென்னை.

7 1957 க. நா. சுப்ரமணியன், படித்திருக்கிறீர்களா? I, அமுத நிலையம், சென்னை.

8 1957 **Contemporary Indian Literature, Sahithya Academy, New Delhi.**

9 1958 க. நா. சுப்ரமணியன் படித்திருக்கிறீர்களா? II, அமுத நிலையம், சென்னை.

10 1959 க. நா. சுப்பிரமணியன், இலக்கிய விசாரம், அமுத நிலையம், சென்னை.

11 1959 க. நா. சுப்பிரமணியன், விமரிசனக்கலை, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

12 1960 மு. வரதராசன், இலக்கியமரபு, பாரிநிலையம், சென்னை.

13 1962 ப. கோதண்டராமன். இலக்கியமும் விமர்சனமும், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

14 1964 பூவை. எஸ். ஆறுமுகம், கல்கி முதல் அகிலன் வரை, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம்.

15 1966 **T.P.M. The Pageant of Tamil Literature, Sekar Pathippagam, Madras.**

16 1966 கா. பொ. இரத்தினம் (பதிப்பாசிரியர்), எழுத்தாளர் கல்கி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

17 1966 தமிழ் நாவல்கள் (நாவல் விழாக் கருத்துரைகள்) தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

18 1966 கி.வா. ஜகந்நாதன், தமிழ் நாவல்களின் தோற்றமும் வளர்ச்சியும், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை.

19 1967 சில்லையூர் செல்வராசன், ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி, அருள் நிலையம், சென்னை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

20 1968 க. கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம், பாரி நிலையம், சென்னை.

21 1969 சாலை. இளந்திரையன், புதுத்தமிழ் முன்னோடிகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

22 1970 அகிலன், ராஜதுரை (பதிப்பாசிரியர்), வளரும் தமிழ் இலக்கியம், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை.

பின்னிணைப்பு 2

1970க்கு முன்னர் எழுதப்பட்டு, ஆனால் அதற்குப்பின் வெளியிடப்பட்ட நூல்கள்

1 இரா. தண்டாயுதம், சமூக நாவல்கள், தமிழ்ப் புத்த காலயம், சென்னை, 1979. (இது 1963—68 அளவில் சென்னைப் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்ததன் தமிழ் மொழி பெயர்ப்பாகும்.)

2 மா. இராச்மாணிக்கம், இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை 1978, (இது 1966 இல் சென்னைப் பல்கலைக்கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவின் தொகுப்பாகும்.

3 சி. சு. செல்லப்பா, தமிழில் இலக்கிய விமர்சனம், எழுத்து பிரசுரம், சென்னை, 1974.

(இதில் நாவல் பற்றிய மூன்று கட்டுரைகள் 1959, 1961, 1965 ஆண்டுகளில் எழுதப்பட்டவை).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1970 - க்குப் பின்னர் எழுந்த நாவல் ஆய்வுகள்

1970-க்கு முன் எழுந்த நாவல் திறனாய்வில், ஏ. வி. சுப்பிரமணிய அய்யரின் திறனாய்வுச் சிந்தனைகளும் க. நா. சுப்பிரமணியத்தின் விமரிசனங்களும், க. கைலாசபதியின் ஆய்வுப் போக்கும், இரா. தண்டாயுதத்தின் முனைவர்பட்ட ஆய்வும் குறிப்பிடத் தக்கவையாக விளங்கின. 70-க்குப்பின், கல்வி நிறுவனங்களில் நவீனஇலக்கியங்கள் பாடப்பகுதியில் அதிகம் சேர்க்கப் பட்டமையாலும், எம்.ஃபில், பி.எச்டி. பட்ட ஆய்வுகளுக்கு நவீன இலக்கியங்கள் மேற்கொள்ளப்பட்டமையாலும் அவை பற்றிய திறனாய்வு நூல்கள் அதிகமாக எழத் தொடங்கின. அந்நவீன இலக்கியங்களில் நாவல் இலக்கியம் முதலிடம் பெற்றது எனலாம். 1970-90 ஆண்டுகளில் நூறுக்கும் மேற்பட்ட நாவல் தொடர்பான நூல்கள் எழுந்தன.

அவற்றுள், நாவல் இலக்கிய ஆய்வை மட்டும் நேரடியாகக் கொண்ட நூல்கள் ஏறத்தாழ 50 அடங்கும்.[1] பிற இலக்கியங்களோடு நாவலையும் சேர்த்துத் திறனாய்வு செய்த நூல்கள் எஞ்சியவையாகும்.[2] முதலில் குறிப்பிடப்பட்ட 50 நூல்களில் ஒரே தலைப்பின் பொருளில் அமைந்தவை ஏறத்தாழ 20. எனலாம். இவ்விருபதினுள், அனைத்துமே முனைவர் பட்ட ஆய்வுகளாக நிகழ்த்தப்பட்டு, நூல் வடிவம் பெற்றவை என்பது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பிடத் தக்கது.[3] மற்றவையெல்லாம் பல கட்டுரைகளின் தொகுப்பு நூல்களாகவே விளங்குகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட நூல்களன்றி, இலக்கியத் திறனாய்வு இலக்கிய வரலாறு போன்ற நூல்களிலும் நாவல் பற்றிய விமரிசனங்கள் செய்யப்பட்டுள்ளன. எனினும், இவை இலக்கியத்தை விட, திறனாய்வுக் கோட்பாடுகளுக்கு முதன்மை அளிப்பதால், நாவல் திறனாய்வில் அவற்றைச் சேர்க்க வேண்டியதில்லை.

இலக்கியத் திறனாய்வியல்	—	தா.ஏ. ஞானமூர்த்தி
இலக்கியத் திறனாய்வு	—	சு. பாலச்சந்திரன்
இலக்கியக் கொள்கைகள்	—	சி.இ. மறைமலை
தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்	—	முத்துச்சண்முகம்
தமிழ் இலக்கிய வரலாறு	—	மு. வரதராசன்

போன்றவற்றை நாவல் திறனாய்வுகளுக்குக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. சிலவற்றில் ஆசிரியர் வாழ்க்கை, அவர் எழுதிய பின்னணி, நாவல் எழுதும் முறை போன்றவை இடம் பெற்றிருக்கும்.

எழுதுவது எப்படி	—	மகரம் (தொகுப்பாசிரியர்)
எப்படி எழுதினேன்	—	தி. ஜ. ர
நான் கண்ட எழுத்தாளர்கள்	—	கு. அழகிரிசாமி
எழுத்தும் வாழ்க்கையும்	—	அகிலன்
பொன்னியின் புதல்வர்	—	சுந்தா

போன்ற நூல்கள் நாவல் பற்றிய செய்திகளைக் குறிப்பிடினும், இவற்றை நாவல் திறனாய்வு நூல்களாகக் கொள்ள வேண்டியதில்லை.

திறனாய்வு பற்றிய மதிப்பீடுகள்

நாவல் ஆய்வுகள் எங்ஙனம் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதைக் காண்பதற்கு முன், நிகழ்த்தப்பட்ட ஆய்வுகள் பற்றிய விமரிசனங்கள் நோக்கப்படவேண்டும். 1977 இல் வெளிவந்த 'தமிழ் நாவல் நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூலில் 'திறனாய்வு முயற்சிகள்' என்ற தலைப்பில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(பக் 91-103) 1915 முதல் இதழ்களில் வந்த நாவல் விமரிசனம் பற்றிய செய்திகள் மதிப்பிடப்பட்டுள்ளன. எனினும், அம்மதிப்பீடுகள் அக்கால நாவல் இலக்கியம் பற்றிய கொள்கை பற்றியனவாகவே அமைந்துள்ளன.

1979 இல் வெளிவந்த 'தமிழில் விமரிசன இலக்கியம் - ஒரு முன்னுரை' என்ற நூலில் 1970 களில் நிலவிய விமரிசனப் போக்கு, பத்திரிகைகளில் வெளிவந்த விமரிசனங்கள், நாவல் பற்றிய விமரிசன நூல்களின் நிலை போன்றவை எடுத்தாளப் பட்டுள்ளன. இந்நூலில் எல்லா இலக்கிய வகையையும் இணைத்தே விமரிசனம் நோக்கப்படுகிறதேயன்றி, நாவல் இலக்கிய விமரிசனம் பற்றித் தனியே அலசப்படவில்லை. அதேபோல் 1982 இல் வெளியிடப்பெற்ற 'எழுபதுகளில் கலை இலக்கியம்' என்ற நூலில் 'தமிழ் விமர்சனம்' என்ற பகுதியை மூவர், தனித்தனிக் கட்டுரைகளாக எழுதியிருப்பினும், நாவல் இலக்கியம் பற்றி வந்த விமர்சனங்கள் தனியாக நோக்கப் படவில்லை.

1989 இல் 'நாவல் வளர்ச்சி' என்ற நூலின் முன்னுரையில் 'நாவல் ஆய்வுகள்' பற்றிய செய்தி சுட்டப்பட்டுள்ளது. பல்கலைக்கழக ஆய்வுகள், தொகுப்புக் கட்டுரைகளாக வந்த நாவல் நூல்கள் போன்றன தொகுக்கப்பட்டு, வகைப்படுத்தப் பட்டுள்ளன. அதே ஆண்டில் 'தமிழ்ப்பொழில்' இதழில் ''நாவலும் விமர்சனமும்'' என்ற கட்டுரை வந்துள்ளது. குறிப்பிட்ட நான்கைந்து நாவல் விமர்சகர்களைக் கூறி, அவர்கள் எழுதிய திறனாய்வுகளைத் தவிர, வேறு எதையும் பொருட்படுத்தத் தேவையில்லை என்று கூறி, நாவல் இலக்கியப் போக்கை ஆய்வு செய்ய முனைந்துள்ளார் ஆசிரியர்.

1990 மார்ச் 'தாமரை' இதழில் 'தமிழ் நாவல் ஆய்வுகள்– ஒரு கோட்டுச் சித்திரம்' என்ற கட்டுரை, அனைத்து நாவல் திறனாய்வு நூல்களையும் தொகுத்து மதிப்பிடுகிறது.

விமரிசனத்திற்கு விமரிசனம்:

திறனாய்வுக் கலையில் விமரிசனத்திற்கு விமர்சனம் என்பது, வரவேற்கக் கூடிய ஆரோக்கியமான சூழலாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழில் இப்போக்கு மிகக் குறைவாகவே காணப்படுகின்றது. எனினும், ஆங்காங்கே இம்முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டி-ருப்பதைக் கவனிக்கும் போது சுவையாகவும் விறுவிறுப்பாகவும் இருக்கிறது எனலாம்.

க. கைலாசபதி எழுதிய ‘தமிழ் நாவல் இலக்கியம்’ (1968) பற்றி வெங்கட் சாமிநாதன் என்ற விமர்சகர் ‘மார்க்ஸின் கல்லறையிலிருந்து ஒரு குரல்’ என்ற தலைப்பில் (நடை, 1970) விமர்சனம் செய்துள்ளார். ஓர் எதிர்ப்புக் குரல்’ (1978) என்ற நூலில் அக்கட்டுரை இடம் பெற்று உள்ளது. வெங்கட் சாமிநாதனின் விமர்சனத்திற்கும் பதில் அளிக்கும் வகையில் ‘மல்லிகை’ இதழில் (1974-75) எம்.ஏ. நுஃமான் கட்டுரைத் தொடர் ஒன்றை எழுதியுள்ளார். அத் தொடரே, ‘மார்க்ஸியமும் இலக்கியத் திறனாய்வும்’ (1987) என்ற நூலில் ஒரு கட்டுரையாக இடம் பெற்றுள்ளது. இக் கட்டுரையில் வெங்கட்சாமிநாதனின் மதிப்பீடுகளில் உள்ள குறைகள் சுட்டிக்காட்டப் பெற்றுள்ளன.

மா. இராமலிங்கம் ‘திறனாய்வு நெறி’ (1983) என்ற நூலில் ‘முதல் புனைகதைத் திறனாய்வாளர்’ என்ற கட்டுரையை எழுதியுள்ளார். 1895 இல் ‘விவேகபோதினி’ என்ற இதழில், எஸ்.வி. குருஸ்வாமி சர்மா எழுதிய ‘பிரேமகலா வத்யம்’ என்ற நாவல் பற்றிய பி. எஸ். சுப்பிரமணிய அய்யரின் திறனாய்வைப் பாராட்டி, இராமலிங்கம் மதிப்பீடு செய்து உள்ளார்.

‘வளரும் தமிழ் இலக்சியம்’ (1970) என்ற நூலில் எஸ். சிவபாத சுந்தரம், தமிழில் முதல் நாவலாசிரியரான மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ முன்னுரையில் ‘வ்சனகாவியம்’ என்று குறிப்பிடுவது உரைநடை இலக்கியத்தையேயன்றிப் புனைகதை இலக்கியத்தையன்று என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இதற்கு மறுப்பு தெரிவிக்கும் வகையில், இரா. தண்டாயுதம் ‘ஓர் இலக்கிய ஆய்வு’ (1985) என்ற நூலில் ‘தமிழ் நாவல்களும் இலக்கியக் கொள்கைகளும்’ என்ற கட்டுரையில் விளக்கமளித்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'எழுத்து' என்ற இலக்கிய இதழில், மு. தளையசிங்கம் என்ற விமர்சகர், எஸ். பொன்னுதுரையின் 'தீ' என்ற நாவல் பற்றி விமர்சித்துள்ளார். அதற்குப் பதில் அளிக்கும்வகையில் தருமுசிவராம் எழுதிய பதிலே 'தமிழின் நவீனத்துவம்' (1986) என்ற நூலில், 'தீ பற்றி' என்ற பெயரில் கட்டுரையாக இடம் பெற்றுள்ளது.

மேற்கூறிய நாவல் திறனாய்வுக்கு எழுந்த விமர்சனங்கள் ஏதேனும் ஒரு கூறை மட்டுமே எடுத்துக் கொண்டுள்ளன. இவ்விமர்சனங்களில் பெரும்பாலும் சிறுபத்திரிகைகள் வாயிலாகவே (எழுத்து, மல்லிகை, நடை, ஆராய்ச்சி) வளர்த்தெடுக்கப்பட்டவை என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. கல்வி நிறுவனங்கள் வாயிலாகப் பல ஆய்வுக் கட்டுரைகள் கொண்ட தொகுப்பு நூல்களும் வெளிவந்துள்ளன. அவை பற்றிய மதிபீடுகள் இன்னமும் நிகழ்த்தப்படவில்லை.

நாவல் பற்றிய திறனாய்வு நூல்கள், முன்னர்க் குறிப்பிட்டது போல் நூற்றுக்கும் மேற்பட்டவையாக இருப்பதனால் அவற்றைக் கீழ்க்கண்ட முறைகளில் வகைப் படுத்தி மதிப்பீடு செய்யலாம். அதாவது, படைப்பாசிரியரை நோக்கிச் செய்யப்பட்ட திறனாய்வுகள், நாவல் கூறுகள் பற்றியவை, நாவல் வகைகள் பற்றியவை, கால அடிப்படையில் எழுதப்பட்ட நூல்கள், ஒப்பீட்டு முறையில் அமைந்தவை, நாவல் நுவலும் பொருள் பற்றி எழுந்தவை, நாவல் இலக்கணம் கூறுபவை, வெளிநாட்டுத் தமிழ் நாவல் பற்றியவை எனப் பிரித்து நாவல் ஆய்வுப் போக்கைத் தீர்மானிக்கலாம்.

அ) நாவலாசிரியரை அடிப்படையாகக் கொண்ட திறனாய்வு நூல்கள்

1 அகிலனின் பொன் மலர் - ஓர் ஆய்வு
2 நா.பா. நாவல்களில் ஒரு பார்வை
3 ராசீயின் நாவல்கள் — ஒரு விமர்சனம்
4 மு.வ. நாவல்களில் பாத்திரங்கள்
5 விந்தன் நாவல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6 டாக்டர் மு.வ. வின் நாவல்கள்
7 கலைஞரின் புதினங்கள் - ஓர் ஆய்வு
8 மு.வ. வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம்
9 கல்கி அகிலன் படைப்புக்கலை
10 இந்திரா பார்த்தசாரதி ஒரு மதிப்பீடு
11 கல்கியின் வரலாற்று நாவல்கள்

ஆ) நாவல் கூறுகள் பற்றிய திறனாய்வு நூல்கள்

1 மு.வ. நாவல்களில் பாத்திரங்கள்
2 நாவல்களில் பாத்திரப்படைப்பு
3 ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப்படைப்பு
4 தமிழ் நாவல்களில் மொழிப் பயன்பாடு
5 தமிழ் நாவல்களில் உடல்மொழி

இ) நாவல் வகைகள் பற்றிய திறனாய்வு நூல்கள்

1 தமிழ் நாவல் வகைகள்
2 தமிழில் சமூக நாவல்கள்
3 சமூக நாவல்கள்
4 தமிழ்வாணனின் மர்ம நாவல்கள்
5 கல்கியின் வரலாற்று நாவல்கள்
6. ஜெகசிற்பியனின் சமூகப் புதினங்கள்

ஈ) கால அடிப்படையில் எழுந்த திறனாய்வு நூல்கள்

1 ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்
2 தமிழ்நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்
3 விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள்
4 நூறாண்டுத் தமிழ் நாவல் தரும் செய்தி

உ) ஒப்பியல் அடிப்படையில் எழுந்த திறனாய்வு நூல்கள்

1 கல்கி முன்ஷி வரலாற்று நாவல்கள்
2 ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்
3 தமிழ் மலையாள நாவல் ஒப்பாய்வு
4 லட்சுமி சூடாமணி நாவல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஊ) வெளிநாட்டுத் தமிழ்நாவல் பற்றிய திறனாய்வு நூல்கள்

1 ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம்

2 மலேசியத் தமிழ் நாவல்கள் – ஓர் அறிமுகம்

எ) நாவல் பொருள் பற்றி எழுந்த திறனாய்வு நூல்கள்

1 நாவலும் வாழ்க்கையும்

2 தமிழ் நாவல்களில் மனிதவிமோசனம்

3 தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி சமுதாய மாற்றம்

4 மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம்

5 தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம்

6 தமிழ் நாவல்களில் பாலுறவுச் சித்திரிப்பு

7 தமிழ் நாவல்களில் மதிப்புகள்

8 மு.வ. நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்

ஏ) நாவல் இலக்கணம் கூறும் நூல்கள்

1 நாவல் இலக்கியம்

2 தமிழ் நாவல்கள் – ஓர் அறிமுகம்

நாவல்களில் பாத்திரப்படைப்பு பற்றிய திறனாய்வு:

மேற்குறிப்பிட்ட பகுதிகளுள் நாவல் கூறுகள் தொடர்பான திறனாய்வு நூல்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, அவை எந்த அளவிற்குத் தமிழில் செயற்பட்டுள்ளன என்பதைக் காண்போம். நாவல் கூறுகள் எனும்போது, நாவலின் கதைக்கரு, கதைப்பின்னல், பின்னணி, பாத்திரப்படைப்பு, நோக்குநிலை, உத்தி, மொழிநடை போன்றன அடங்கும். இவற்றுள் பாத்திரப் படைப்பு என்ற ஒரு கூறை மட்டும் இங்கு நோக்குவோம்.

கதைமாந்தர் படைப்புக்கும் (Characterization) கதை மாந்தர்களுக்கும் (Characters) வேறுபாடுண்டு. கதைமாந்தர் களின் பண்பையும் அவர்தம் செயலையும், அவர்கள் மற்ற கதைமாந்தர்களிலிருந்து வேறுபடும் பாங்கையும் காட்டுவது கதைமாந்தர் பற்றிய ஆய்வாகும். கதை மாந்தர் படைப்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்பது, கதைக்கருவுக்கு உயிரூட்டும் வண்ணம், கதைப் பின்னலை வளர்த்தெடுக்கும் வகையில், கதையின் கட்டுக் கோப்பை நிர்ணயிக்கும் போக்கில் அக்கதை மாந்தரின் படைப்பு எங்ஙனம் உதவியுள்ளது? அப்படைப்பில் ஆசிரியர் வெற்றி பெற்றுள்ளாரா? என்று காண்பதாகும்.

தமிழ் நாவல் திறனாய்வுகளில் இவ்வேறுபாடு தெளிவாக்கப் படாமலேயே, கதைமாந்தர்கள் பற்றிய ஆய்வும் கதைமாந்தர் படைப்பு பற்றிய ஆய்வும் நிகழ்ந்தவண்ணம் உள்ளன.

1 ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப்படைப்பு
— கரு. முத்தையா

2 நாவல்களில் பாத்திரப்படைப்பு
— த. ராசு

3 டாக்டர் மு.வ. வின் நாவல்களில் பாத்திரங்கள்
— பா. சம்பத்குமார்

என்ற மூன்று நூல்களே நாவல் பாத்திரப்படைப்பு பற்றியவை. இவற்றுள் முன்னது முனைவர் பட்ட ஆய்வாக இருந்து நூல் வடிவம் பெற்றது. பின்னவை கட்டுரைகளின் தொகுப்பாகும். இவையன்றிப் பலநூல்களில் சில கட்டுரைகள் பாத்திரப் படைப்பு பற்றித் திறனாய்வு செய்துள்ளன.

நவீன இலக்கியங்களின் ஆய்வும் அதிலும் நாவல் இலக்கியம் பற்றிய திறனாய்வும் அதிகம் செய்யப்பட்டதாகக் கருதிக் கொண்டிருக்கும் நிலையில், 'பாத்திரப்படைப்பு' என்னும் கூறுபற்றி முழுமையான ஒரே ஒரு நூல் மட்டும் உள்ளது. முனைவர்பட்ட ஆய்வாகச் செய்யப்பட்டதால் முழுமையான நூலாக வெளிவந்தது. நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாறு கொண்ட நாவல் இலக்கியத்தில் 'பாத்திரப்படைப்பு' என்ற கூறு, எங்ஙனம் ஆசிரியர்களால் கையாளப்பட்டு வந்துள்ளது என்கிற நோக்கு இதுவரை செய்யப்படவில்லை.

வகைப்படுத்திய எல்லாப் பிரிவுகளிலும் அடங்கிய திறனாய்வு நூல்களையும் தொகுத்து, மதிப்பீடு செய்வதால் நாவல் இலக்கிய ஆய்வும், தமிழில் திறனாய்வுப் போக்கு எப்படி உள்ளது என்பதும் புலனாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலும், தனிப்பட்ட நாவல் திறனாய்வாளர்களின் ஆய்வுப் போக்கு, (கைலாசபதி, சிவத்தம்பி, எஸ். தோதாத்ரி, மா. இராமலிங்கம், இரா. தண்டாயுதம், க. நா. சுப்பிரமணியம், தா.வே. வீராசாமி) சமூகவியல், உளவியல் நோக்கில் செய்யப் பட்ட ஆய்வுகள் போன்ற கோணங்களில் வகைப்படுத்திப் பார்ப்பதனாலும் தமிழின் நாவல் திறனாய்வுப் போக்கினை உணரமுடியும்.

அடிக்குறிப்பு:

1 பின்னிணைப்பு 1 இல் காண்க.

2 பின்னிணைப்பு 2 இல் காண்க.

3 பின்னிணைப்பு 3 இல் காண்க.

பின்னிணைப்பு — 1

நாவல் இலக்கியம் மட்டும் கொண்ட திறனாய்வு நூல்கள்

1 அகஸ்தியர், எஸ்., ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள், சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், 1988.

2 இரபிசிங், ம. செ., அகிலனின் பொன்மலர் - ஓர் ஆய்வு, நாகர்கோயில், தென்குமரிப் பதிப்பகம், இரண்டாம் பதிப்பு, 1976.

3 இராதாகிருஷ்ணன், நா. பா. நாவல்களில் ஒரு பார்வை, சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1978.

4 இராதாகிருஷ்ணன், சில புதினங்கள் சில பார்வைகள், மதுரை, சர்வோதய இலக்கியப் பண்ணை, 1979.

5 இராமலிங்கம், மா. (எழில்முதல்வன்), நாவல் இலக்கியம், சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1972.

6 இராஜசேகரன், இரா., தமிழ் நாவல் 50 பார்வை, பூம்புகார், பத்தினி கோட்டப்பதிப்பகம், 1978.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7 காமராசன், நா., ராசியின் நாவல்கள் ஒரு விமர்சனம், (நாவல் பழம்), சென்னை, அணியகம், 1978.

8 கீதா, கோ. வெ., தமிழ் நாவல்கள் ஓர் - அறிமுகம், சென்னை, அணியகம், 1979.

9 சம்பத்குமார், பா., மு.வ. நாவல்களில் பாத்திரங்கள், கோவை, ராஜ்காந்தி பதிப்பகம், 1988.

10 சிவத்தம்பி, கா., நாவலும் வாழ்க்கையும், சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1978.

11 சிவசுப்பிரமணியன், நா.. நாவல் படிக்க, பாளையங் கோட்டை, இலக்கியத் தேடல், 1989.

12 சுந்தரராசன். பெ.கோ. (சிட்டி) & சோ. சிவபாதசுந்தரம், தமிழ் நாவல்: நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், சென்னை, கிறிஸ்தவ இலக்கிய சங்கம், 1977.

13 சுப்பிரமணியம், க.நா. நாவல் கலை, கலைஞன் பதிப்பகம், 1985.

14 சுப்பிரமணியம், நா., ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், யாழ்ப்பாணம், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், 1978.

15 சுனந்தா தேவி, சு,, தமிழ்வாணன் மர்ம நாவல்கள் – ஒரு புதிய பார்வை, சென்னை, மணிமேகலை பிரசுரம், 1985.

16 தட்சிணாமூர்த்தி, பி., நாவல் ஆய்வு, திருநெல்வேலி, இலஞ்சியார் பதிப்பகம், 1979.

17 தண்டாயுதம், இரா., நாவல்வளம்; சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1975.

18 தண்டாயுதம், இரா., சமூக நாவல்கள், தமிழ் வடிவம்; சு. வேங்கடராமன் சென்னை, தமிழ்ப் புத்தகாலயம் 1976.

19 திருமலை, மா. சு., தமிழ் நாவல்களில் உடல்மொழி, மைசூர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், 1989.

20 தோதாத்ரி, எஸ். தமிழ் நாவல் - சில அடிப்படைகள், சிவகங்கை, அகரம், 1980.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

21 தோதாத்ரி, எஸ்., தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள், சென்னை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவேட்லிமிடெட், 1988.

22 பரமசிவன், மு., விந்தன் நாவல்கள், சென்னை, உமா பிரசுரம், 1987.

23 பாக்கியமுத்து, தி. (பதிப்), / விடுதலைக்குப்பின் தமிழ் நாவல்கள், சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1974.

24 பாக்கியமுத்து, தி. (பதிப்), தமிழ் நாவல்களில் மனித விமோசனம், சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1976.

25 பாக்கியமுத்து, தி. (பதிப்), தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி சமுதாய மாற்றம், சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1978

26 பாக்கியமுத்து, தி. (பதிப்), நூறாண்டுத் தமிழ் நாவல், தரும் செய்தி, சென்னை, கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் 1979.

27 பிச்சமுத்து, ந.,மு.வ.வின் நாவல்களில் சமுதாய மறுமலர்ச்சியின் தாக்கம், சென்னை, சக்தி புத்தக நிலையம், 1988.

28 மணிமாறன், பா.அ.ம., இந்திரா பார்த்தசாரதி ஒரு மதிப்பீடு, மதுரை, விஜய் பப்ளிகேஷன்ஸ், 1979.

29 மனுவேல், ஆர்., தமிழ் நாவல்களில் பாலுறவுச் சித்திரிப்பு திருப்பதி, திருவேங்கடன் பல்கலைக்கழகம், 1985.

30 மோகன், இரா., டாக்டர் மு.வ.வின் நாவல்கள், சிதம்பரம், மணிவாசகர் நூலகம், இரண்டாம் பதிப்பு, 1981.

31 மோகன், இரா., (பதிப்) நாவல் வளர்ச்சி, சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம், 1989.

32 ராசு.த. தமிழ் நாவல்களின் இலக்கியத் தரம், சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 1986.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

33 ராசு. த., நாவல்களில் பாத்திரப் படைப்பு, சென்னை, மணிவாசகர் பதிப்பகம், 1987.

34 வணங்காமுடி, கு. கலைஞரின் புதினங்கள் ஓர் ஆய்வு, சென்னை, பகுத்தறிவுப் பதிப்பகம், 1980.

35 வானமாமலை, நா. (பதிப்), தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு, சென்னை, நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் பிரைவெட் லிமிடெட், 1977.

36 வீராசாமி, தா. வே., கல்கி அகிலன் படைப்புக்கலை, சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1977.

37 வீராசாமி, தா. வே., தமிழ் நாவல் முன்னோட்டம், கோயமுத்தூர், மெர்க்குரி புத்தகக் கம்பெனி, 1973.

38 வீராசாமி, தா.வே., தமிழில் சமூக நாவல்கள், சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1978.

39 வீராசாமி, தா.வே., தமிழ் நாவல் வகைகள், சென்னை, தமிழ்ப் பதிப்பகம், 1979.

40 வீராசாமி, தா. வே., தமிழ் நாவல் இயல், சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், 1986.

41 யதார்த்த வாதமும் தமிழ் நாவல்களும் (தொகுப்பு நூல்), பெங்களூர், காவ்யா. 1986.

பின்னிணைப்பு — 2

பிற இலக்கியங்களோடு நாவலையும் திறனாய்வு செய்யும் நூல்கள்

1 அகிலன், கதைக்கலை, பாரி புத்தகப்பண்ணை, சென்னை, 1972.

1 அசோமித்திரன், படைப்புக்கலை, ஞானச்சேரி, சென்னை, 1987.

2 இராமலிங்கம், மா., புனைகதை வளம், தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், சென்னை, 1973.

3 இராமலிங்கம், மா. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1973.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4 இராமலிங்கம், மா., அகிலனின் கலையும் கருத்தும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1974.

5 இராமலிங்கம், மா., நோக்குநிலை, இராசி பதிப்பகம், திருச்சி 1984.

6 இராமலிங்கம், மா., திறனாய்வு நெறி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1983.

7 குருநாதன், இரா., வளவன், சா., கள்ளோ காவியமோ? சென்னை, வளர் அரசிப் பதிப்பகம், 1977.

8 கேசவன், கோ, இயக்கமும் இலக்கியப் போக்குகளும், சென்னை புக்ஹவுஸ், சென்னை, 1982.

9 ஞானி. மார்க்சீயமும் தமிழ் இலக்கியமும், பரிமாணம், கோவை, 1988.

10 சஞ்சீவி, ந., (பதிப்) இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும் சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, 1974.

11 சண்முகதாஸ், அ. (பதிப்) ஆக்க இலக்கியமும் அறிவியலும், யாழ்ப்பாணத் தமிழ்த்துறை, இலங்கை, 1977.

12 சிவக்கண்ணன், மு.வ.வும் காண்டேகரும், மதுரா பதிப்பகம், மதுரை, 1987.

13 சிவத்தம்பி, கா, இலக்கியத்தில் முற்போக்கு வாதம், பாட்டாளிகள் வெளியீடு, சென்னை, 1978.

14 சிவத்தம்பி, கா, ஈழத்தில் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1978.

15 சிவத்தம்பி, கா, இலக்கியமும் கருத்துநிலையும், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1982.

16 சுப்ரமணியம், க.நா. இலக்கியத்துக்கு ஓர் இயக்கம், காவ்யா, சென்னை, 1985.

17 சுப்ரமணியம், க.நா., இலக்கிய வளர்ச்சி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1986.

18 சுப்ரமணியம், க.நா., கலை நுட்பங்கள், வேள் பதிப்பகம், சென்னை, 1988.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

19 சுப்பிரமணியன், ச. வே. (பதிப்), திறனாய்வுக் கட்டுரைகள், அணியகம், சென்னை, 1977.

20 செல்லப்பன், கா., இலக்கியத்தில் பழம்புதுமையும், புதுப் பழமையும், மீரா பதிப்பகம், புதுக்கோட்டை, 1989.

21 தண்டாயுதம், இரா., தற்காலத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1973.

22 தண்டாயுதம், மு.வ.வின் இலக்கியங்கள், தமிழ்ப்புத்த-காலயம், சென்னை, 1975.

23 தண்டாயுதம், ஓர் இலக்கிய ஆய்வு, தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1985.

24 டாக்டர் மு.வ. தமிழ்ப்புத்தகாலயம், சென்னை, 1975.

25 திருமலை, ம. புனைகதை; இலக்கியப் பொலிவு, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1988.

26 தோதாத்ரி, எஸ். ஜெயகாந்தன் ஒரு விமர்சனம், அன்னம், சிவகங்கை, 1976.

27 பாக்கியமுத்து. தி, (பதிப்), இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை, 1972.

28 பாக்கியமுத்து, தி. இலக்கியத்தில் பெண்கள், சி. எல். எஸ். சென்னை, 1977.

29 பாக்கியமுத்து, தி. தற்கால இலக்கியத்தில் முற்போக்குப் பார்வைகள், சி. எல். எஸ்., சென்னை, 1981.

30 பிச்சமுத்து. ந. படைப்பிலக்கியம், தேன்மொழிப்பதிப்பகம், சேலம், 1976.

31 பெண்கள் படைப்பில் பெண்கள், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு, கொடைக்கானல், 1986.

32 மாலன், புரட்சிக்காரர்கள் நடுவே, வானதிபதிப்பகம், சென்னை, 1988.

33 மார்க்ஸ், அ. படைப்பாளி வாழ்க்கை இலக்கியம். இராதா பதிப்பகம், புதுக்கோட்டை, 1986.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

34 மோகன், இரா. புனைகதைத்திறன், ரெகவெளியீடு, மதுரை, 1980.

35 ராசு. த., புதிய நோக்கில் படைப்பிலக்கியம், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1985.

36 ராஜ்குமார் எச். பி. (பதிப்) தற்காலத் தமிழ் இலக்கியத்தில் வறுமையும் சாதீயமும், சி. எல். எஸ்., சென்னை, 1982.

37 விசுவநாதன், ஏ., கட்டுரை மலர், பாரிநிலையம், சென்னை, 1971.

38 வெங்கட். சாமிநாதன், என் பார்வையில், அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1983.

39 வெங்கட் சாமிநாதன்,ஓர் எதிர்ப்புக் குரல், மணி பதிப்பகம், திருச்சுழி, 1978.

40 வெங்கட் சாமிநாதன், பாலையும் வாழையும், மணி பதிப்பகம், ராஜபாளையம், 1976.

41 எழுபதுகளில் கலை இலக்கியம், காவ்யா, பெங்களூர், 1982.

பின்னிணைப்பு 3

முனைவர் பட்ட ஆய்வேடுகளில் நூல் வடிவம் பெற்றவை

1 R. Dhandayutham, A study of the Sociological Novels in Tamil, University of Madras, Madrrs, 1977.

2 Danial Devasangeetham, The Fiction of Dr. M. Varadarajan, Sri Venkateswara University, Tirupati, 1978.

3 கரு. முத்தையா, ஜெயகாந்தன் நாவல்களில் பாத்திரப் படைப்பு, முத்துமீனாள் பதிப்பகம், தேவகோட்டை, 1980.

4 இ. முத்தையா, தமிழ் நாவல்களில் மொழிப்பயன்பாடு, முத்தையா வெளியீடு, சிவகாசி, 1980.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5 சபா. அருணாசலம், தமிழ் நாவல்களில் காந்தியத்தாக்கம், காளத்தி நூலகம், தேவகோட்டை, 1981.

6 இரா. சேது, அண்ணாவின் கதை இலக்கியம், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1983.

7 க.த. திருநாவுக்கரசு, பேராசிரியர் மு. வரதராசனாரின் படைப்பிலக்கியம், பாரிநிலையம், சென்னை, 1984.

8 அ. சிவக்கண்ணன், மு.வ. நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள், மதுரா பதிப்பகம், மதுரை, 1984.

9 வெ. கனகசுந்தரம், ஜெகசிற்பியனின் சமூகப் புதினங்கள், வானதி பதிப்பகம், சென்னை, 1985.

10 சு. சுனந்தாதேவி, தமிழ்வாணனின் மர்மநாவல்கள் — ஒரு புதிய பார்வை, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1985.

11 ம திருமலை, தமிழ் மலையாள நாவல் ஒப்பாய்வு, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை, 1987.

12 ம. மதியழகன், மலேசியத் தமிழ் நாவல்கள் — ஓர் அறிமுகம், ப்ரீத் வெளியீட்டகம், காரைக்கால், 1988.

13 கலா, கே தாக்கர், கல்கி முன்ஷி வரலாற்றுநாவல்கள், தாக்கர் பதிப்பகம், சென்னை, 1988.

14 பூவண்ணன், கல்கியின் வரலாற்று நாவல்கள், வானதி பதிப்பகம், சென்னை, 1988.

15 இர. சித்ரலேகா, லட்சுமி சூடாமணி நாவல்கள், முத்துப் பதிப்பகம், மதுரை, 1989.

16 சேதுமணி மணியன், தமிழ் நாவல்களில் மதிப்புகள், செண்பகம் வெளியீடு, மதுரை, 1990.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மலேசியத் தமிழ் நாவல் திறனாய்வு

தமிழக நாவல் ஒன்றைத் திறனாய்வு செய்வதென்றால், அந்நாவலின் ஆண்டு, ஆசிரியர் பின்னணி முதலியனவற்றைக் குறிப்பிட்டு, நாவலுக்குள் நுழைந்துவிடலாம். ஆனால், மலேசிய நாவலை ஆய்வதற்குமுன், மலேசிய இலக்கியப் பின்னணியும் அதனோடு தொடர்புடைய அரசியல், சமூக, பொருளாதாரப் பின்னணியும் நோக்கப்படவேண்டும். அவ்வாறு பின்புலத்தைப் புரிந்துகொண்டு நுழையும்போதுதான், மலேசிய நாவலின் தரத்தை மதிப்பிட முடியும். எனவே, முதலில் மலேசியச் சூழலைச் சுருக்கமாக நோக்குவோம்.[1]

குடியேற்றம்:

தமிழகத்தோடு மலேசியாவின் தொடர்பு பல ஆண்டுகள் இருந்திருப்பினும், இந்தியாவும் மலேசியாவும் ஆங்கிலேயர் ஆளுகைக்குட்பட்ட 18ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே புதுத் தொடர்பு ஏற்பட்டது. வெள்ளைய முதலாளிகளுக்கு, மலேசியத் தோட்டத்தில் (இரப்பர்த் தோட்டங்கள்) வேலை செய்ய, குறைந்த ஊதியத்தில் நிறைந்த உழைப்பு கொண்ட தொழிலாளர் பலர் தேவைப்பட்டனர். அதற்குத் தென் இந்தியத் தொழிலாளர்களே ஏற்றவர்களாக இருந்தனர். குறிப்பாகத் தமிழர்கள் தொழிலாளர்களாக மலேசியாவிற்குக் குடிபெயர்ந்தனர். கண்காணிகளால் அழைத்துச் செல்லப்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழர்களின் தலைமுறையே இன்று மலேசியாவில் வாழ்ந்து வருகிறது. இங்ஙனம் மலேசியாவிற்குச் சென்றவர்கள், கல்வி இல்லா அறியாமையும், பொருளில்லா வறுமையுங் கொண்டவர்கள். இவர்களன்றி, வாணிகத்தின் பொருட்டுச் சென்ற சிலரும், இலங்கையிலிருந்து சென்று, பணிகளில் அமர்ந்த படித்த சிலரும் இருந்தனர். இவர்களால்தான் மலேசியத் தமிழ் இலக்கியம் முளைவிடத் தொடங்கியது.

சமூக, அரசியல் நிலை:

மலேசியாவில் இந்திய இனமும் (பெரும்பான்மையினர் தமிழர், சிறுபான்மையினர் மலையாளி, பஞ்சாபி, தெலுங்கர், வங்காளி போன்றோர்) சீன இனமும் மலாய இனமும் வாழ்-கின்றன. வெளி நிலைகளில் அவர்களுக்குள் தொடர்பிருப்பினும், அகநிலையில் (குடும்பம், பண்பாடு, உறவுநிலை போன்றவற்றில்) பெரும்பாலும் தனித்தனிப் பிரிவினராகவே வாழ்ந்து வருகின்றனர். மலேசியாவில் கட்டுப்படுத்தப்பட்ட ஜனநாயகம் நிலவுகிறது. அரசியலில், மலேசியத் தமிழர் ஆளுங்கட்சியோடு இணைந்து நின்றாலும், அரசியல்வலு, மலேயா ஐக்கியத்-தேசியக் கட்சிக்கும் பொருளாதாரவலு, சீன இனத்திற்கும் உரியதாக உள்ளன. இரண்டுமில்லாத திரிசங்கு நிலை இந்தியர்களுக்கு இருக்கிறது.

நகரங்களில் வாழ்கின்றவர்கள் ஓரளவுக்குக் கல்வியறிவு பெற்றும், பிற தொழிலில் ஈடுபட்டும் வாழ்க்கையைத் தரமுள்ளதாக நடத்துகின்றனர். தோட்டங்களில்தான் அதிகமான தமிழர்கள் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். 'கம்பம்' என்றழைக்கப் படுகின்ற கிராமங்களாகத்தான் அவர்களின் வாழ்விடங்கள் விளங்குகின்றன. மலேசியாவில் வாழும் பலர் தமிழகத்தோடு இன்றும் குடும்பத் தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகின்றனர். சிலர் அத்தொடர்பு விட்டுப்போய், மலேசியாவையே தாயகமாகக் கொண்டிருக்கின்றனர்.

இலக்கிய நிலை:

பிழைப்பதற்காக நாடுவிட்டு வந்தவர்கள், இலக்கியத்தைப் பற்றி கவலை கொண்டிருக்க மாட்டார்கள். வாழ்க்கையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முன்னேற வேண்டும் என்ற துடிப்பைத் தவிர வேறொன்றையும் அவர்களிடத்தில் எதிர்பார்க்க முடியாது. இரப்பர்த் தோட்டங்களில் தாம் பட்ட துயர்களையே அவர்கள் பாடல்களாக வெளிப்படுத்தியுள்ளனர். அவை தோட்டப்புறப் பாடல்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன.[2] வாணிகம் பொருட்டு வந்தவர்களும், இலங்கைத் தமிழர்களுமே கட்டுரை, கவிதை போன்றவற்றை எழுதத் தொடங்கினர். இவர்களுக்கும் தோட்டத் தொழிலாளத் தமிழர்களுக்கும் பெரிய இடைவெளி இருந்தது. இவர்கள் கல்வியறிவு, பொருளாதாரத்தில் மேம்பட்டவர்களாக விளங்க, தோட்டப்புறத் தமிழர்கள் இவ்விரண்டும் இல்லாத நிலையில் ஒதுக்கப்பட்டிருந்தனர். தோட்டப் புறங்களிலிருந்து, விழாக்காலங்களில்தான் நகரப்பகுதிகளுக்கு அவர்கள் வந்தனர். எனவேதான், மலேசியாவின் தொடக்ககாலத் தமிழ்ப் படைப்புக்களில் மலேசியச் சமுதாயமான தோட்டப்புறச் சமுதாயமே இடம்பெறாமலிருந்தது. மேலும், தொடக்கத்தில் படைப்பவர்களுக்குத் தமிழகப் படைப்புக்களே முன்னோடியாக இருந்தன. எனவே, தமிழகப் பின்னணியும், இலங்கைப் பின்னணியுமே அவர்களது கதைக் களன்களாக அமைந்தன. மலேசியச் சமுதாயத்தை, அதன் உயிர்ப்பிடமான தோட்டப்புறச் சமுதாயத்தை, அதன் பல்வேறு கோணங்களைக் காட்டவேண்டும் என்ற எண்ணம், மலேசிய நாட்டின் விடுதலைக்குப் பின்வரே (1957) எழுகின்றது. இத்தகு பின்னணி கொண்ட மலேசியாவில் 1917இல் முதல் நாவல் தோன்றுகிறது. இலங்கைத் தமிழர்களே இப்படைப்புக்கு முன்னோடியாகத் திகழ்ந்தனர்.

மலேசியாவைத் தமது தாயகமாக ஏற்றுக்கொள்ளத் தயங்கியதனாலும், தமிழகத்தை நினைத்து ஏங்கியிருந்ததனாலும் தமிழகத்தின் செய்திகள், எழுத்துக்கள் அவர்களுக்கு ஒரு மன ஆறுதலைத் தந்தன. எனவே, தமிழக இறக்குமதிப் படைப்புகளே மலேசிய நாளிதழ்களில் முழுமையாக இடம்பெற்றன. மலேசிய எழுத்தாளர்களின் படைப்புக்கள் அவ்வப்போது வெளிவந்தன. இந்நிலையில், 'வானம்பாடி' என்ற அமைப்பு 1980 ஆம் ஆண்டு, மாதம் ஒரு நாவல் என்ற திட்டம் வகுத்து,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்து நாவல்களை வெளியிட்டது. அப்பத்து நாவல்களில் ஒன்றுதான், ஜூலை 1980இல் வெளிவந்த சீ. முத்துசாமியின் 'விதைகள் பாலைவனத்தில் முளைப்பதில்லை' என்பதாகும்.[3]

ஆசிரியர் :

இந்நாவலின் ஆசிரியர் சீ. முத்துசாமி, புதுக்கவிதை எழுது கின்றவர். 'குமுதம்' நடத்திய சிறுகதைப் போட்டியில் இவருடைய 'இரைகள்' என்ற கதை பரிசு பெற்றது. இவரது 'சிறகுகள் முறியும் மானுடக் கனவுகள்' என்ற கதை, தமிழ்நேசன் நடத்திய மலேசியக் குறுநாவல் போட்டியில் (1979) முதற்பரிசு பெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. மலேசியாவில் வெளி-வந்த நாவல்களில் சற்று வித்தியாசமாக, பாத்திரங்களின் மன ஓட்டங்கள் வழி கதையை நடத்திச்செல்லும் நாவலாக இது விளங்குகிறது. மலேசியச் சூழலைப் படம்பிடிப்பதற்கு மட்டும் முக்கியத்துவம் அளிக்காமல், பாத்திரத்தின் எண்ணங்களை விளக்குவதில் அவர் பெற்ற வெற்றியே இந்நாவலை இங்கு அறிமுகப்படுத்தத் தூண்டியது எனலாம்.

சிவகாமி என்ற பெண்ணும் அவள் அப்பா, அண்ணன் ஆகிய இருவரும் சேர்ந்து நினைக்கும் மன ஓட்டக் கதைபோல் இந்நாவலை அமைத்துள்ளார் ஆசிரியர். மலேசிய நாவல்கள் பெரும்பாலும் குறைந்த பக்கங்களையுடைய குறு நாவல்களா-கவே காட்சியளிப்பன. தொகுதி தொகுதிகளாக வெளிவரக் கூடிய வாய்ப்பும், அதை எழுதுவதற்கான நேரமும், அப்படியே எழுதினாலும் வெளியிட யாரும் முன் வராமையும் நாவலின் வடிவத்தைச் சுருக்கிவிடுகின்றன. எனவே, மலேசிய நாவல் களில் அதிக வருணணைகளுக்கு இடம் இருப்பதில்லை.

கதையைவிட, கதைமாந்தர் படைப்பைவிட, கதைமாந்தர்-களின் எண்ணங்களைவிட கதை நிகழ்ச்சிகளுக்கே பெரும் பாலான மலேசியநாவல்கள் அதிக முக்கியத்துவம் தந்துள்ளன. இப்போக்கிலிருந்து மாறுபட்டு, கதைமாந்தர் படைப்பிலும், கதை கூறும் முறையிலும், வருணணை செய்வதிலும் புதிய முறையை ஏற்படுத்திய நாவலாசிரியர் என்ற முறையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'விதைகள் பாலைவனத்தில் முளைப்பதில்லை' ஆசிரியர் சீ. முத்துசாமி மலேசிய நாவல் இலக்கிய வரலாற்றில் சிறப்பிடம் பெறுகின்றார் எனலாம்.

சிவகாமி:

இந்நாவலின் கதைத் தலைவியாக, கதையை நடத்திச் செல்பவளாகச் சிவகாமி அறிமுகப்படுத்தப்படுகிறாள். சிவகாமி-யோடு அவளது தந்தை, அண்ணன் ஆகியோரின் நினைவு-களாகவும் கதை கூறப்பட்டுள்ளது.

சிவகாமி முதலில் அறிமுகப்படுத்தப்படும்போது, அவளைப் பற்றிய செய்திகள் தெரியவில்லை. ஆனால், அவளது குடும்ப உறுப்பினர்களான தந்தை, தாய், அண்ணன், தம்பி நால்வரும் அவளது நினைவில் வந்துபோவதாக ஆசிரியர் அறிமுகப் படுத்துகிறார். அந்த உறுப்பினர்களின் அறிமுகத்திலேயே, சிவகாமியின் அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்பதும், அண்ணன் வீட்டிற்கு வந்து பலநாள் ஆகிறது என்பதும், தம்பியின் நிலை என்னவென்று தெரியாநிலை என்பதும் கதைப் பின்னலுக்கு முத்தாய்ப்பாக அமைந்துவிடுகிறது.

முன்பின் தெரியாத ஒருவனை விரும்பி, குடும்பத்தார் அனைவருக்கும் பிடிக்காத நிலையில், அவனோடு சிவகாமி சென்றுவிடுகிறாள். சிறிதுநாளில் புற்று நோயால் அவன் மரணமடைகிறான். மீண்டும் குடும்பத்தோடு சேர்ந்து வாழும் நிலை சிவகாமிக்கு ஏற்படுகிறது.

> ''கல்யாணம்! நினைவுகளில் அது கரும்புகை ஊதி ரொம்ப நாளாகிறதே! ஒருவேளை அவரைப் பார்க்காமலே இருந்திருந்தால் இன்னேரம் கல்யாண மாகி தனக்கும் குழந்தை குட்டி என்று நினைத்துப் பார்க்க சந்தோஷமாகவே இருக்கிறது! ஆனால் தனக்கு இனியும் அவையெல்லாம் நினைத்துப் பார்க்க அருகதை உண்டா?
> (பக். 8)

என்று நினைத்துப் பார்க்கிறாள் சிவகாமி. அப்படியுள்ள சிவகாமி, தன்வீட்டு வழியே மோட்டார் சைக்கிளில் தன்னையே நோக்கிப் போகும் இளைஞனைச் சந்திக்கிறாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> "ரொம்பகாலமாய், போனவனே நிரந்தரமாய் சம்மணம் போட்டு உட்கார்ந்த மனசுள் இதென்ன புதுசாய்!" (பக். 23).

என்று அவளே எண்ணி வியக்கிறாள். அவனைப் பார்த்துப் பேசவேண்டும்போல் இருக்கிறது. ஒரு நாள், அவளை அவன் சந்தித்து, இரவு பத்துமணிக்குக் கடைப்பக்கம் வரச் சொல்கிறான். அவளும் செல்கிறாள். காருக்குள் அவளை உட்கார வைத்து, அவளது இடையைத் தடவுகிறான். அப்போது அவள்,

> 'என்ன கல்யாணம் பண்ணிக்குவீங்களா' என்று

கேட்கிறாள். அதற்கவன்,

> 'கல்யாணமா! உன்னவா? நீ என்ன கன்னி கழியாத சின்னப் பொண்ணா?' (பக். 52)

என்று கேட்க, அழுகையோடு வேகமாக வீட்டிற்குள் ஓடி வந்துவிடுகிறாள்.

இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, தமிழ் நாட்டிலுள்ள சிவகாமியின் மாமா வருகிறார். தமிழகத்திலிருக்கும் சிவகாமியின் அத்தைப் பையன் சிவகாமியைக் கல்யாணம் செய்துகொள்ளும் எண்ணத்தில் உறுதியாக இருக்கும் செய்தியைக் கூறுகின்றார். இதைக் கேட்டு, சிவகாமிக்கு அழவேண்டும்போல் இருக்கிறது. தன் தாய், தந்தை, தம்பி இவர்களையெல்லாம் விட்டுவிட்டுத் தன்னால் தமிழகம் வந்து திருமணம் செய்ய இயலாது என்பதை நாசூக்காகக் கூறி மறுத்துவிடுகிறாள். அப்போது அவளுக்கு,

> 'கல்யாணமா! உன்னவா? நீ என்ன கன்னி கழியாத சின்னப்பொண்ணா?' என்று அவன் கேட்டது மீண்டும்

ஒலிக்கிறது. அவள் கண்கள் கலங்கிச் சிவக்கின்றன. அத்தைப் பையன் சிறுவயதில் தன் குடும்பத்தோடு இருக்கும் புகைப் படத்தைப் பார்க்கின்றாள்.

சிவகாமியின் வாழ்க்கை என்ற பாலைவனத்தில் காதல், திருமணம், குழந்தை என்ற விதைகள் முளைப்பதில்லை; முளைக்கப் போவதுமில்லை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, கதைத் தலைவியான சிவகாமியின் எண்ண ஓட்டத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தோடே கதையை நடத்திச் செல்லும் பாங்கு நாவலுக்குரிய கட்டுக்கோப்பைச் சிறக்க வைக்கின்றன.

சிவகாமியின் தந்தை:

தமிழகத்திலிருந்து குடிபெயர்ந்து மலேசியாவில் வாழ்கின்ற வராகச் சிவகாமியின் தந்தை அறிமுகப்படுத்தப்படுகிறார். கதைமாந்தரின் நினைவுகள் மூலமாகவே, ஆசிரியர் கதையைக் கூறிச் செல்கிறார். சிவகாமியின் தந்தை மலேசியாவில் வாழ்ந்தாலும் தமிழகத்தையும், தன் முன்னோரையும் நினைக்கின்ற பிரதிநிதியாக இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளார். தமிழகத்தில் இருக்கும் தன் தங்கையின் குடும்பத்தோடு தொடர்புகொண்டவராகவும் காட்டப்படுகிறார். சிவகாமியால் அவளுடைய அண்ணன் அறிமுகப்படுத்தப்படுகிறான். சிவகாமியின் தந்தை மூலம் சிவகாமியின் அண்ணன் ஏன் வீட்டை விட்டு வெளியேறுகிறான் என்கிற காரணத்தை வெளிப்படுத்துகின்றார் ஆசிரியர். சிவகாமி யாரோ ஒருவனோடு வீட்டை விட்டு வெளியேறியபோது, சிவகாமியின் அண்ணனும் வெளியேறியவன். இன்னமும் வீடு திரும்பவில்லை. தன் பாட்டனின் ரோஷத் துளிகள்தான் இவனிடம் உள்ளன என்று நினைத்துப் பார்க்கிறார் சிவகாமியின் தந்தை.

குடும்பத்தில் தன் மகள் முன்பின் தெரியாத ஒருவனோடு வீட்டைவிட்டு வெளியேறி வாழ்க்கை நடத்தி, ஆறுமாதத்திற்குள் அவன் புற்றுநோயால் இறந்துவிட, தன் குடும்பத்துடனே வந்து விட்ட அவலம்; தமக்கை யாரோ ஒருவனுடன் சென்றுவிட்டாள் என்பதால் வீட்டிற்கே வராத மூத்த மகன்; நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று எண்ணிய இரண்டாவது மகன் தீய சகவாசத்தால் கெட்டழிந்த நிலை; இச் சூழலினால் மனம் பேதலித்து நிற்கும் மனைவி (சிவகாமியின் தாய்); என்ற நிலையில், தாயகத்தை (தமிழகத்தை) நினைத்துப் பார்க்கும் நிலையில் சிவகாமியின் தந்தை படைக்கப்பட்டுள்ளார். (பக். 24).

மலாயா காட்டில் காக்கை விரட்டியே நிறைய பொருளீட்டலாம் என்று எண்ணி வந்தது எவ்வளவு தவறு என்பதை நினைத்துப் பார்க்கிறார். இரப்பர்த் தோட்டத்தில் கஷ்டப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டதையும், ஜப்பானியர் ஆட்சியின்போது சயாம் மரண ரயில்வேயில் வேலை செய்து தப்பிப் பிழைத்ததையும் அசை-போட்டுப் பார்க்கிறார். சிவகாமியின் தந்தை மூலம்தான் மலேசியச் சூழலும் மலேசியாவில் நடந்த சில வரலாற்று நிகழ்வுகளும் ஆசிரியரால் எடுத்துக் காட்டப்படுகின்றன. (பக் 25, 26).

குடும்பத்தின் பல்வேறு இன்னல்களால் தாக்குண்ட சிவகாமியின் தந்தை, மருத்துவமனையில் சேர்க்குமளவிற்கு உடல் நலம் பாதிக்கப்படுகிறார்.

சிவகாமியின் அண்ணன்:

படித்தும் நல்ல வேலை கிடைக்காமல், வயிற்றுப் பிழைப்புக்காக, பில் (Bill) போடும் பணியில் அரை மனதுடன் ஈடுபட்டவனாகச் சிவகாமியின் அண்ணன் காட்டப்படுகிறான். தன் அக்காள், எவனோ ஒருவனுடன் சென்றுவிட்டாள் என்பதிலிருந்து வீட்டிற்கே திரும்பாமல் இருக்கும் ரோஷக்காரனாக ஆசிரியரால் அறிமுகப்படுத்தப்படுகிறான். அந்த ரோஷத்துளிகள், தன் பாட்டனின் துளிகளாக இருக்குமோ என்று அவனுடைய தந்தையே நினைக்கும் அளவுக்கு நடந்து கொள்கின்றான்.

நாட்டின் கல்விமுறையைக் கிண்டல் செய்கின்றவனாக அவன் காட்சியளிக்கின்றான்.

> "திட்டமில்லாத தொழிற்சாலைப் பொருட்களின் உற்பத்திபோல வருடா வருடம் எத்தனை வேலை தேடும் மனுஷப் பொருட்களை இந்தக் கல்வி முறை உற்பத்தி செய்கிறது" (பக். 34)

என்று நினைத்துப் பார்க்கிறான். இவன் நினைவாக இவ்வரிகள் இருப்பினும், ஆசிரியரின் குரலாகவே இது ஒலிக்கின்றது எனலாம்.

அரசியல்வாதிகளைச் சாடுகின்றவனாகவும் அவன் காட்டப்படுகின்றான்.

> "சமூகப் பிரச்சினைகளின்பால் ஒரு தீர்க்கமான அனுதாப உணர்ச்சி எள்ளளவும் அற்றவர்கள் என்ப

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தெல்லாம் தெளிவாய் உறுதியாகி அதுமுதல் இவர்க ளெல்லாம் மனக்கண்ணில் தோன்றும்போதெல்லாம் வெறும் புழுக்களாய் மட்டுமே நெளிந்தார்கள்''

என்பதாக ஆசிரியர், அவன்மூலம் அரசியல்வாதிகளின் செயல் களைச் சாடுகிறார்.

சிவகாமியின் தோழியாகிய சாந்தி என்பவளை அவன் விரும்புகிறான். சாந்தியும் அவனை விரும்புகிறாள். ஆனால், காதல் நிறைவேறாது அவளுக்குத் திருமணமாகிவிடுகிறது. அவளது நினைவுகளை மட்டுமே தாங்கி வாழும் நிலைக்குத் தள்ளப்படுகிறான். தன் அக்காள், ஒருவனுடன் போனபோது வீட்டை விட்டு வெளியேறியவன்; அக்காளின் கணவனை முதலில் பிடிக்காமல் போனவன்; அவன் மருத்துவமனையில் உயிருக்குப் போராடிக்கொண்டிருந்தபோது சென்று பார்க் கிறான். அவன் மேல் இரக்கங்கொள்கின்றான். (பக். 39)

இவனுடைய காதலி, திருமணமானது, அதற்கான காரணம், அவளுக்குக் குழந்தை இருப்பது போன்றவையெல்லாம் இவனுக்குத் தெரியாது. ஆனால், இவையெல்லாம் சிவகாமி மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. (பக். 43). இவன் வேலை-யில்லாதவன் என்ற ஒரே காரணத்திற்காகச் சாந்தியின் பெற்றோர், திருமணத்திற்குச் சம்மதிக்காமல் வேறொருவனுக்கு மணமுடிக்கின்றனர்.

சிவகாமியின் அண்ணன், ஆசிரியரின் கருத்துக்களை வெளி யிடும் ஒரு குரலாகவே இந்நாவலில் படைக்கப்பட்டுள்ளான். எனினும், அக்கருத்துக்களை வெளியிடும் முறைகளில் ஆசிரியர் கதைமாந்தனுக்கு எவ்வித ஊறும் செய்யாது படைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகாமியின் தம்பியும், அம்மாவும் மிகச்சிறிய பங்கே இந்நாவலில் வகிக்கின்றனர். அவர்களின் நிலைகள் சிவகாமி அவளது தந்தை, அண்ணன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன. அவர்களுடைய பேச்சும், எண்ணமும் ஆசிரியரால் வெளிப் படுத்தப்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வருணனை:

இந்நாவலின் சிறப்புக்கும், ஆசிரியரின் எழுத்தாற்றலுக்கும் நாவலின் வருணனைகளே முத்தாய்ப்பாக உள்ளன. மலேசியத் தமிழ் நாவல்களில் இதுபோன்ற வருணனை கொண்ட நாவல்கள் மிகக் குறைவே என்று சொல்லிவிடலாம். சிவகாமியின் எண்ண அலைகளில் எல்லாம் இந்த வருணனை அழகுற இடம் பெற்றுள்ளது.

அம்மாவைக் காண ஈப்போவில் இறங்குகின்ற சிவகாமி போகும்வழியில் பார்க்கும் இடங்களை ஆசிரியர் காட்டும் பகுதிகள், (பக். 9) அவரது கூரிய பார்வையைக் (Keen observation) காட்டுகிறது. அம்மாவுடன் கோயிலுக்குப் போன சிவகாமி, ஐந்து வருடங்களுக்கு முன் அவ்விடத்திற்கு வந்ததை யும் இப்போதிருக்கும் நிலையையும் மனக்கண்ணால் ஒப்பிட்டுப் பார்க்கிறாள்.

> ''இப்போதைய மண்டபத்தின் வாசலில் தொடங்கி, கக்கூஸ் பக்கமாய் நீண்டு கிடந்த கூடத்துக்கொட்டாய் இப்போது இடம் மாறி கோயில் காண்பவுண்டுக்கு வெளியே போய் விட்டது. அதில் கூடியிருந்த பள்ளிக் கூடம் ரொம்பத் தொலைவுக்குப் போய்விட்டது. கூத்துக்கொட்டாய் இப்போதெல்லாம் தைப்பூசத்திற்கு நாடகம் போடவும், அன்னதானம் வழங்கவும் மட்டுமே பயன்படுகிறது, மற்ற நாட்களில் பிணக்காடி முகப்பில் நிற்கிறது. துணைக்கு கறுத்த நாய் மட்டுமே நீட்டவாக்கில் படுத்துக்கிடக்கும்'' (பக். 13)

என்று நீண்டுகொண்டே செல்கிறது அவ்விட வருணனை. இவைபோன்ற புற வருணனைகள் மட்டுமின்றி, அகவருணனை களிலும் ஆசிரியர் தன்னாற்றலை வெளிப்படுத்தியுள்ளார்.

> 'கனவுகள் மட்டும்தானே இந்த வாழ்க்கையின் அசுர அடிகளை தாங்கி நடமாட ஒத்தாசை பண்ணுகிறது. தன்னைப் பொறுத்தவரை அது ஒன்றுதானே நிரந்தரமாய்போனது' (பக். 8)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அப்பா எதில் தன்னை இப்படிக் கரைத்துக் கொள்ளத் துடிக்கிறார்? தன்னிடமிருந்து தன்னை மறைத்துக் கொள்ள இதெல்லாம் உதவுமோ?' (பக். 11)

'அவனுக்குத் திருமணமாகி இருக்கலாம். எப்போ தாவது இந்தப்பக்கம் வரும்போது, கூத்துக் கொட்டா யைப் பார்க்கும்போது, அவனுக்கு ஞாபகம் வரலாம். சின்னதாய் வெட்கம் பூக்கலாம். மௌனமாய் சிரித்துக் கொள்ளலாம். அந்தக் கடிதத்துக்குப் பதிலே வராமல் போனதில் அவனுக்கு இப்போதும் வருத்தம் இருக்கலாம்' (பக். 16)

போன்ற வருணனைகள் ஆசிரியரின் எழுத்தாற்றலை வெளிப் படுத்தும் சான்றுகளாகும். இதுபோன்ற அக, புற வருணனை களும், சிறுசிறு வாக்கியங்கொண்ட தொடர்களையும் மலேசிய நாவல்களில் காண்பதரிது.

மலேசியச் சூழல்:

மலேசியாவில் தமிழகத்தோடு தொடர்புடையதமிழர்களும், தமிழகத்தோடு தொடர்பு இல்லாத தமிழர்களும் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் தமிழகத்தில் தொடர்புடைய குடும்பமாக, சிவகாமியின் குடும்பம் இந்நாவலில் காட்டப் படுகிறது. சிவகாமியின் தந்தை, வறுமையின் காரணமாக மலேசியாவில் காக்கை விரட்டியே பொருள் ஈட்டலாம் என்ற ஆசையின் காரணமாகத் தமிழகத்திலிருந்து மலேசியா வந்ததையும், வந்தபின் மலேசியாவில் பட்ட துயரையும் நினைப்பதாக ஆசிரியரால் காட்டப்படுகிறது. (பக். 24, 25).

ஜப்பானியர் மலேசியாவை ஆக்கிரமித்ததும், அவர்களால் போடப்பட்ட சயாம் மரண இரயில்வே பணியில் ஈடுபட்டதும் சிவகாமியின் தந்தை நினைவாகக் காட்டப்படுகிறது. (பக். 26).

இஃதன்றி, தைப்பிங் (8) ஈப்போ (6) பினாங்கு (25) என்ற மலேசிய இடங்களின் சுட்டலும், காடி (வண்டி) (பக். 30), ரோத்தான் (11), குசினி (சமையலறை, பக். 11) பேர் வெட்டுதல் (53) மலையாளக்காக்கா (பக். 44) சப்பாத்து (42).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிலுவார் 14) போத்தல் (14), கம்பம் (56) போன்ற சொற்களும் மலேசிய நாவல் என்பதற்குச் சான்றுகளாய் அமைகின்றன.

இக்கதையின் கரு, மலேசியச் சூழலுக்கு மட்டும் உரியதன்று, கதை நிகழ்ச்சிகளின் சில பின்னணிகள் மட்டும் மலேசியச் சூழலைக் காட்டுகின்றன. மாந்தர்களின் மனஉணர்வுகள் காலம், இடம், சூழலைத் தாண்டி நிற்கவல்லன என்பதற்கேற்ப இந்நாவலில் சிவகாமி பாத்திரம் சிறப்பாகப் படைக்கப் பட்டுள்ளது. மலேசியச் சூழலைப் படம் பிடித்துக் காட்டுகிறேன் என்ற உந்துதலில் தன்னை இழந்துவிடாமல், அதே நேரத்தில் மலேசிய வரலாற்று நிகழ்வுகளை, போகிறபோக்கில் காட்டிச் சென்று, கதைமாந்தரின் எண்ண உணர்வுகளுக்கு முழுமையான வடிவங்கொடுத்து, நாவலின் கட்டுக்கோப்பைச் சிறக்க வைத்திருக்கிறார் ஆசிரியர்.

அடிக்குறிப்புகள்:

1) மலேசியச் சூழலை முழுமையாக அறிய, கீழ்க்கண்ட நூலைப் பார்வையிடலாம். ம. மதியழகன், மலேசியத் தமிழ்நாவல்கள் – ஓர் அறிமுகம், ப்ரீத் வெளியீட்டகம், காரைக்கால், 1988.
2) இரா. தண்டாயுதம், நாட்டுப் பாடல்களில் தோட்டப்புறச் சமுதாயம், வானம்பாடி, கோலாலம்பூர், 21-3-81 முதல் 25-4-81 முடிய.
3) சீ. முத்துசாமி, விதைகள் பாலைவனத்தில் முளைப்பதில்லை, வானம்பாடி வெளியீடு, கோலாலம்பூர், 1980.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைமுறைகள் - ஒரு வட்டார நாவல்

கதைச்சுருக்கம்

நாகர்கோயில் வட்ட இரணியல் தெருவில், தன் பாட்டி உண்ணாமலை ஆச்சியிடம் கதைகேட்கும் பருவத்தினனாக விளங்கிய திரவி, தன் அக்காள் நாகம்மை, அவளுடைய கணவனால் புறக்கணிக்கப்பட, கணவனுடன் அவளை வாழ-வைக்க முயற்சி எடுக்கின்றான். அக்காளின் கணவன் ஆண்மை-யற்றவன் என்பதையும், தன் அக்காள் எந்தக் குறையும் இல்லாதவள் என்பதையும் உறுதியாக்கிக் கொண்டு, தன் அத்தான் செவந்தப் பெருமாளிடம் அக்காளுக்காக வாதாடு கிறான். அவன் திரவியின் வேண்டுதலை ஏற்றுக்கொள்ளாதது மட்டுமின்றி, வேறொரு பெண்ணையும் திருமணம் செய்து கொள்கின்றான்.

இந்நிலையில், உண்ணாமலை ஆச்சி எல்லாம் விதி என்று கூற, திரவியின் தந்தை இருவரையும் சேர்த்துவைக்க முயற்சி செய்து சோர்ந்துவிட, திரவி மட்டும் தன் நண்பன் குற்றாலத்திற்கு நாகம்மையை மறுமணம் செய்துவைக்க முயற்சிக்கின்றான். முயற்சி கைகூடி வரும் நிலையில், நாகம்மைக்குத் திருமணம் ஆகப்போகிறது என்பதாலும், இரண்டாவது மனைவியால் உதாசீனப்படுத்தப் பட்டோம் என்பதாலும், செவந்தப்பெருமாள் புத்தி பேதலித்துக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குற்றாலத்தைக் கொலை செய்துவிடுகிறான். இறுதியில், அப்பா, அம்மா, அக்காளுடன் திரவி அவ்வூரைவிட்டு வெளியேறுகின்றான்.

திரவிக்கு வேலை கிடைப்பதும், தன் பாட்டனின் வைப்பு வழி வரும் அம்மணிக்குட்டியிடம் மனதைப் பறிகொடுப்பதும், பாட்டன், பாட்டி பற்றிய கதைகளும் நாவலின் இடையிடையே வரும் செய்திகளாகும்.

நாவலின் சிறப்பு:

கதைக் கருவைப் படைத்துக்கொண்டு, அதற்கேற்ப கதை நிகழ்ச்சிகளை அமைத்துக்கொண்டு, படிப்பவர்க்கு ஆர்வத்தையும் நாட்டத்தையும் ஏற்படுத்துகின்ற மாதிரி கதையை எழுதிக் கொண்டு போவதைத்தான் பெரும்பாலான நாவல்களில் நாம் பார்க்கின்றோம். இத்தகைய பழமையான வாய்பாடுகளிலிருந்து மாறி ஒரு சமூகத்தின் பல்வேறு நாடித்துடிப்புக்களை அதாவது பிறப்பு முதல் இறப்பு வரை அவர்களிடையே நிகழும் சடங்கு முறைகள், பழக்க வழக்கங்களைக் காட்டுகின்றார் நீல பத்மநாபன். இதனை அவரே,

> 'வெறும் கதைப் பிரியர்களுக்கு நான் சொல்வதெல்லாம் கதையின் கருவை எப்படியாவது வருந்திக் கக்கிவிட்டுத் தப்பினோம் பிழைத்தோம் என்று தப்பித்துக்கொள்ள வேண்டும் என்று குறைந்தபட்ச குறிக்கோளோடு எழுதப்பட்ட நாவல் அல்ல இது'

என்று நாவலின் முன்னுரையில் 1970இல் தெரிவிக்கின்றார். நாவல் வடிவம் பற்றிய தெளிவான சிந்தனையை, ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன்னரே பெற்ற நாவலாசிரியரின் வரிசையில் நீலபத்மநாபனுக்குச் சிறப்பிடம் உண்டு என்பதையே அவரது வரிகள் காட்டுகின்றன.

இரணியல் செட்டிமார்களின் மூன்று தலைமுறையைச் சேர்ந்தவர்களுடைய குடும்ப வாழ்வின் பல்வேறு மனநிலை மாற்றங்களை, செயல்முறைப்பாடுகளைக் காட்டுவதே இந் நாவலின் சிறப்பாகும்.

ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள மக்களின் சமூக வாழ்க்கை பற்றிய சகல பரிமாணங்களையும் காட்டுகின்ற நாவலை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்பகுதியைச் சார்ந்த வட்டார நாவல் எனலாம். 'தலைமுறைகள்' நாவலும் நாகர்கோயில் வட்டார இரணியல் ஊரில் உள்ள செட்டிமார்களின் சமூக வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் நாவல் என்பதில் ஐயமில்லை. கதையைவிட, கதை நிகழ்ச்சிகளைவிட, அச்சமூகத்தின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான சகல சடங்கு முறைகளையும் காட்டுதலே இந் நாவலின் சிறப்பு எனலாம்.

வட்டார நாவல் என்ற அடிப்படையில் அவ்வட்டாரச் சூழலைப் படம் பிடிக்கும் வண்ணம் கதைப்பின்னல், கதைமாந்தர், கதை கூறும் முறை, பேச்சுமொழி என்ற நிலைகளில் எங்ஙனம் ஆசிரியர் தன் உத்தியைக் கையாண்டுள்ளார் என்று காண்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

நாவலும் சமூகமும்:

நாவல் இலக்கியத் தோற்றத்தை ஆராய்ந்த அறிஞர்கள் பலரும், மத்தியதர வர்க்கத்தின் தோற்றம் என்றும் அவ்வர்க்கத்தின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய இலக்கிய வகையாக நாவல் இலக்கியம் எழுந்தது என்றும் கூறினர். (கைலாசபதி, தமிழ் நாவல் இலக்கியம்). நாவல் இலக்கியப் போக்கில் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. கதை நிகழ்ச்சிகளுக்கு முதன்மை அளித்த நிலைமாறி, கதை மாந்தர்களுக்கு முக்கியத்துவம் என்கிறநிலை உடைந்து ஒரு குறிப்பிட்ட இனத்தின் அல்லது சமுதாயத்தின் அனைத்துச் செயற்பாடுகளையும் காட்ட வேண்டும் என்கிற நிலை உருவாகத் தொடங்கியது. சில நாவல்களைப் படிக்கும் போது (அலைவாய்க் கரையில், கோபல்ல கிராமம்) ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் வரலாறோ என்று ஐயுறுமளவிற்கு, பின்னணிகள் அமைந்திருக்கின்றன.

சமூக நாவல் என்பது சமகால வரலாற்று நாவல் (Contemprory Historical Novel) என்பதாகத் தோற்றம் கொண்டது. சமுதாயத்திற்கும் நாவல் இலக்கியத்திற்குமுள்ள நெருக்கத்தையே மேற்கூறிய கருத்துக்கள் உறுதிசெய்கின்றன. ஒரு சமூகத்தைக் காட்ட எண்ணிய படைப்பாளன் அச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூகத்தில் கையாளப்படும் இறப்பு, பிறப்பு, திருமணச் சடங்குகள் முதற்கொண்டு பல்வேறு நிகழ்ச்சிகளையும் இடத்திற்கேற்றவாறு தருகின்றான். அதுமட்டுமில்லாமல் அச்சமூகத்தின் கதைமாந்தர் எத்தகு பேச்சு மொழியை மேற்கொண்டனரோ அப்பேச்சுமொழியை அப்படியே கையாளுதல் என்கிற நிலையையும் நாவலாசிரியன் மேற்கொள்கின்றான். ஒரு குறிப்பிட்ட இனம், அவ்வினத்திற்குரிய பழக்க வழக்கங்கள், சடங்குகள், அவர்களுடைய பேச்சுமொழி என்கிற வரையறைக்குள் அச்சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்ற இலக்கிய வகையாக நாவல் விளங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

வட்டாரமும் நாவலும்:

ஓர் இலக்கிய வகையைப் பல்வேறு பிரிவுகளாகப் பிரித்துப் பார்ப்பது வசதி கருதிய பிரிவு எனலாமேயொழிய, பொருத்தமான, தேவையான பிரிவு என்று கூறமுடியாது. இலக்கியம் என்பதை இலக்கியமாகப் பார்க்க வேண்டும் என்று கருதுகின்றவர்களுக்கு இப்பிரிவுகள் செயற்கைத் தன்மை கொண்டவவாகவே தோன்றும். நாவல் இலக்கியத்தில் வட்டார நாவல் என்பதும் இத்தகு பிரிவு வகையைச் சேர்ந்ததே. குறிப்பிட்ட இடம். இனம், மொழி என்கிற நிலைகளைக் கடந்து நிற்பதே இலக்கியம். ஒரு குறிப்பிட்ட வட்டார மக்களின் வாழ்க்கையைக் காட்டினாலும், மனித உணர்வு; மனித நேயம் என்கிற நிலைகளில் அது உலகப் பொதுவான உணர்வுகளைக் காட்டுகின்ற இலக்கியப் படைப்பாகும்.

ஆய்வின் வசதிபொருட்டு இப்பிரிவுகளை நாம் ஏற்றுக் கொள்கிறோம் என்பதை நினைவில்கொள்ள வேண்டும். இந்நோக்கில் நீல பத்மநாபன் எழுதிய 'தலைமுறைகள்' என்ற நாவல் 'வட்டார நாவல்' என்கிற வகையில் இங்கு ஆராயப் படுகிறது. எந்தவொரு இலக்கியப் படைப்பும் தான் பிறந்த பின்னணிச் சூழலைக் காட்டாமல் இருக்க முடியாது. காட்டுகின்ற முறையில் வேண்டுமானால் வேறுபாடிருக்கலாம். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் பல்வேறு வகையான செயல்முறைகளையும், சடங்குகளையும் காட்டுவதே இந்நாவலின் தனிச் சிறப்பு எனலாம். இதனை ஆசிரியர் முன்னுரையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> '..... எனக்குப் பழக்கமான ஒரு சமூகத்தின் நாடித் துடிப்புக்கள், பூர்விக வரலாற்று விளக்கங்கள், ஆசார அனுஷ்டானங்கள், சடங்கு சம்பிரதாயங்கள், விழாக்-கள், விளையாட்டுக்கள், வாழையடி வாழையாய் வந்தடைந்த கதைகள், பாடல்கள், பழமொழிகள், பிராந்திய கொச்சை வார்த்தைகள், பேச்சு வழக்கு கள், தொனி விசேஷங்கள், வாக்கிய அமைப்புக்கள் - இத்யாதி இத்யாதியானவைகளை எல்லாம் கூடிய மட்டும் சிந்தாமல் சிதறாமல் கலாபூர்வமாய் வெளிப் பிரகடனம் பண்ண இங்கே கதை வித்தானது பக்கபலமாய்ப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது',

என்று கூறுவதால் ஆசிரியரின் நாவல் பற்றிய இலக்கியக் கொள்கைச் சிந்தனையும், வட்டார நாவல் என்பதன் அடிக் கருத்தும் புலனாகின்றன.

கதை கூறுதல் தன்னுடைய நோக்கமன்று; ஒரு சமூகத்தின் பல்வேறு பரிமாணங்களைக் காட்டுவதுதான் என்று ஆசிரியர் கூறும்பொழுது, அந்நாவல் அச்சமூகத்திற்குரிய அனைத்துப் பரிமாணங்களைக் காட்டுகிறது என்பது தெளிவாகிறது. அம் மண்ணின் மணமே வட்டார நாவல் என்கிற பிரிவில் அதை அடக்குகிறது. அம்மண்ணின் மனம் எவ்வெவ்வாறு வெளிப் படுத்தப்படுகிறது என்பதைக் இனிக் காண்போம்.

கதைப்பின்னல் வழி வெளிப்படுத்தல்:

ஆசிரியர் தன் முன்னுரையில் குறிப்பிட்டவாறே, கதைப் பின்னலை அமைத்துக்கொள்கிறார். நாகர்கோயில் வட்டார, இரணியல் செட்டிமார்களின் வாழ்க்கையின் பல்வேறு கூறு-களைக் காட்டுவதே இந்நாவலின் நோக்கம் என்றுகூடச் சொல்லலாம்.

வயதிற்கு வந்த பெண்கள், வீட்டில் தனியாக இருக்கும் போது எப்படி இருப்பார்கள். அவர்கள் இருக்கும் அறை எப்படி அமைந்திருக்கும் என்கிற செய்தியைக் கூறவந்த ஆசிரியர் நாகருபிள்ளை நடுக்கதவைத் தட்டுவதாகக் கூறி அதிலிருந்து அந்த அறையின் அமைப்பைக் கூறுகின்றார். (பக். 6). இத்தகு அமைப்பு, எல்லாக் குடும்பங்களிலும் காணக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடியதன்று. வீட்டின் பிற அமைப்புக்களையும் வரிசையாகக் கூறிச் செல்கின்றார்.

திரவியின் பாட்டி உண்ணாமலை ஆச்சி, ஏழூர்ச் செட்டிமார்களின் குலதெய்வம் நாகரம்மன் என்று கூற, ஏழூர் என்பதன் விளக்கமாகக் காவேரிப்பூம்பட்டணத்திலிருந்து நாகர்கோயிலுக்குத் தம் மூதாதையர் வந்த கதையைக் கூறத் தொடங்குகிறாள் (பக்.13).

திரவி, தன் அக்காள் நாகம்மையின் கணவன், திருமணம் முடித்த ஆறு மாதத்திற்குள்ளேயே தன் மனைவியை ஒதுக்கி வைக்கிறான் எனக் கேள்வியுறுகின்றான். அவன் மனதில் தன் அக்காளின் திருமணப் பேச்சு முதற்கொண்டு திருமணம் நடந்து முடிகிறவரையிலுள்ள நிகழ்ச்சிகள் திருப்புக் காட்சிகளாக (Flash back) வந்து போகின்றன (பக். 35-69). பொருத்தம் பார்த்தல், சீதனம் பற்றிப் பேசுதல், நிச்சயதார்த்தம் போன்ற ஒவ்வொரு சடங்கிலும் நிகழக்கூடிய அனைத்து நிகழ்ச்சிகளும் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன (பக். 110-120).

திரவி பள்ளிக்கூடம் போதல்; அங்கே தன் அக்காவின் திருமணம் பற்றி நினைத்தல் போன்ற நிகழ்ச்சிகளின் கோர்வையினால் கதைப்பின்னல் பின்னப்பட்டு நாவல் செல்கிறது. தன் மகளை திருமணம் செய்து ஆறுமாதத்திற்குள் தள்ளி வைத்திருப்பதன் காரணம் என்ன? என்று நாகரு பிள்ளை தன் மருமகன் வீட்டிற்குச் சென்று நியாயம் கேட்கும் போது திரவியும் உடனிருக்கின்றான். அவனுக்கு அந் நிகழ்ச்சியின்போது தன் அக்காளின் திருமணமும் சொப்பனம் போல் நினைவுக்கு வருகிறது. அவையிடையிடையே காட்டப் படுகின்றன. (பக். 158-161).

தெருவழியாக வந்துகொண்டிருக்கும் திரவி, பாண்டி விளையாட்டு, களச்சி விளையாட்டு ஆடுவதைப் பார்க்கின்றான். களச்சி ஆட்டம் பற்றியும் அதன் பாடல்களையும் ஆசிரியர் விளக்குகிறார் (பக்.142). பேத்தி விசாலம், பாட்டி உண்ணாமலை ஆச்சியிடம் கதை கூறும்படிக் கேட்க தவளைக் கதையைப் பாட்டாகக் கூறுகின்றாள் (பக். 151-152). திரவியின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரிய அக்காள் உண்ணாமலை தாய்மை அடைந்ததை முன்னிட்டுச் சடங்குகள் நடக்கின்றன. சீமந்த நிகழ்ச்சிகள் விரிவாகக் காட்டப்படுகின்றன (பக். 166-172). பிள்ளை பிறந்த பதினாறு கொண்டாடுகின்ற நிகழ்ச்சி காட்டப்படுகிறது (பக். 194-206). பிள்ளைக்குப் பெயரிடும் விழா பக் (226) பிறகு, ஓடுப்பறை நாகரம்மன் திருவிழாவுக்குக் கொழுக்கட்டை சுடுதல் (பக். 227-240), கண்ணாம்பொத்தி விளையாட்டு (பக். 256) போன்றவையும் வருகின்றன.

திரவியின் தங்கை விசாலம் பெரியவளாகிறாள். அச்சடங்கும் காட்டப்படுகிறது (பக். 263-270). திரவியின் அக்காள் உண்ணா மலையின் மகனுக்குக் காது குத்தும் சடங்கு (பக் 300-301), இறுதியில், உண்ணாமலை ஆச்சியின் மரண இறுதி ஊர்வலச் சடங்கு (பக் 383-394) காட்டப்படுகிறது. இவ்வாறு, பல வாழ்க்கை நடப்புச் சடங்குகளை அவ்வட்டாரச் சூழலுக்கேற்ப நடைபெறும் இயல்பையொட்டி, கதைப்பின்னலை அமைத்துச் சொல்லியிருப்பது, வட்டார நாவலுக்குரிய பின்னணியை முழுமையாகக் காட்டுகிறது எனலாம்.

ஏழூர் இரணியல் செட்டிமார்களின் வாழ்க்கை நடப்புக் களைப் படம் பிடித்துக் காட்ட ஆசிரியர், கதை நிகழ்ச்சிகளைத் திரவியின் எண்ணம் மூலமாகவும், திரவியின் நேரடி அனுபவம் மூலமாகவும் வெளிப்படுத்தியிருக்கும் பாங்கு நாவலின் கட்டமைப்பைச் சிறக்கவைக்கிறது.

கதைமாந்தர் வழி வெளிப்படுத்துதல்:

1) **திரவி:** இந்நாவலில் கதைகூறும் பாத்திரமாக வருபவன் திரவி. இவனுடைய எண்ணங்கள், செயல்கள் மூலமாகவே கதை நகர்ந்து செல்கிறது. இவனுடைய பார்வையில் இவனுடைய சிறிய தமக்கை நாகம்மையின் திருமணம், பெரிய தமக்கையின் சீமந்தம், பிள்ளைப்பேறு, பெயரிடு விழா, காதுகுத்தும் விழா, தங்கை விசாலத்தின் பூப்புச் சடங்கு, பாண்டி விளையாட்டு, களச்சி ஆட்டம் போன்ற அவ்வட்டாரத்திற்குரிய நடப்புக்கள், சடங்குகள், விளையாட்டுக் கள் ஆசிரியரால் காட்டப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2) உண்ணாமலை ஆச்சி: திரவியின் பாட்டி, இரணியல் செட்டிமார்களின் மூதாதையர் வரலாற்றைக் கூறுகின்ற மூத்தத் தலைமுறையினளாகப் படைக்கப்பட்டுள்ளார். இவள் மூலம், இரணியல் செட்டிமார் மூதாதையர் காவேரிப்பட்டணத்திலிருந்து ஏழூருக்கு வந்த வரலாறு கூறப்படுகிறது. இவளுடைய பேச்சில் நாகர்கோயில் வட்டார இரணியல் செட்டிமார்களின் வழக்குச் சொற்கள் அதிகம் இடம்பெறுவதையும் காண முடிகிறது. தன் பேத்தியின் குழந்தையைத் தாலாட்டிப் பாடும் பாட்டில் (பக்.193) அவ்வட்டாரப் பின்னணி தோன்றாவிடினும், தாலாட்டின் உண்மைக் கருத்தை உணரமுடிகிறது.

இவ்விரண்டு கதைமாந்தர்களும் இந்நாவலின் வட்டாரச் சூழலை எதிரொலிக்கும்படி, பல்வேறு நிலைகளில் இடம்பெறுகின்றனர். இவர்களன்றி, கூனங்காணிப்பாட்டா, தங்கம்மை, சசி, அம்மிணிக் குட்டி போன்றோரும் அவ்வட்டாரச் சூழலின் பல்வேறு பண்பாடுகளின் பிரதிநிதிகளாகப் படைக்கப்பட்டுள்ளனர். குமரி மாவட்டத்தின் இருமொழி, இருநாகரிகக் கலப்பின் பிரதிநிதிகளாக (Bilingual and Biculture) சசி அம்மணிக்குட்டி விளங்குகின்றனர். இவர்களின் பேச்சும் உரையாடலும் இருமொழிக் கலப்பின் (மலையாளம், தமிழ்) இனிமையை எடுத்தியம்புகின்றன.

7719

கதைகூறும் முறையில் வெளிப்படுத்துதல்:

திரவியின் தமக்கை நாகம்மை, அவனது கணவனால் கைவிடப்பட்டதனால் தனது அக்காளுக்கு வேறு மணம் முடிக்க முயலுகின்றான் திரவி. அம்முயற்சி, இறுதியில் நிறைவேறாமல், போனதால், அவ்வூரைவிட்டு திரவியின் குடும்பமே வெளியேறுவதுதான் 'தலைமுறைகள்' நாவலின் கரு. இக்கதையினை ஆசிரியரும், கதைமாந்தன் திரவியும் மாறி மாறிக் கூறிச் செல்வதாகக் கதை கூறும் முறை (Narration) அமைந்துள்ளது. கதை கூறுபவனின் தமக்கையின் வாழ்வைச் சுற்றிச் செல்லும் கதையாதலின் அக்கூற்றுமுறையே நாவலின் கட்டுக்கோப்பைச் சிறக்க வைக்கிறது. மேலும், கதையைக் கூறுதலைவிட அச்சமூகத்தின் பல்வேறு வாழ்க்கைச் சடங்குகளைக் காட்டுவதே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியரின் நோக்கமாதலின் அதற்கேற்ப, திரவியின் மன ஓட்டங்களும் அச்சமூகத்தின் பல்வேறு நடவடிக்கைகளும் அசிரியரால் விளக்கமுற, சமூக வரலாறாகப் படம்பிடிக்கப் பட்டுள்ளன.

திரவி சிறு வயதினனாக இருப்பினும், தன் சமூகத்தின் மூதாதையர் வரலாற்றைத் தன் பாட்டி உண்ணாமலை ஆச்சி மூலமாகக் கேட்டறிதல் போலவும், ஆறு மாதத்திற்கு முன் திருமணமான தன் அக்காள் நாகம்மை அவளுடைய கணவனால் கைவிடப்பட்ட நிலையில், தன் அக்காளின் திருமணத்தைப் பற்றி எண்ணிப் பார்ப்பது போலவும் அமைத்திருத்தல் கதை கூறும் முறையிலேயே அச்சமூகத்தின் பழைய வரலாறு, திருமணச்சடங்கு முதலியவற்றை ஆசிரியர் வெளிப்படுத்திவிடு கின்றார்.

பேச்சு மொழி:

இத்தகு சடங்கு முறைகளேயன்றி, அவ்வட்டாரப் பேச்சு வழக்கும் ஆசிரியரால் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளது. சில சொற்களும், உரையாடலும் வட்டாரத் தன்மையை அந்-நாவலுக்குக் கொடுக்கின்றன.

> 'எனக்கு ஓர்மை வந்தது முதல் இந்த ஆச்சி இப்படி வெள்ளைச் சீலை தானே உடுக்காள்' (பக். 4)
>
> 'ஒக்காது....இப்பம் கொஞ்சம் சொல்லேன் பாக்கியை பொறவி சொல்லலாம்' (பக். 14)
>
> 'அட முடிவானெ! பாவம். செட்டியாரு என்னேவாரு மகாசித்துவம் கெட்ட ராசாதான்' (பக். 19).

இவைபோன்ற அவ்வட்டாரப் பேச்சு மொழிச் சொற்கள் நாவல் முழுமையும் கையாளப்பட்டுள்ளன. இஃதன்றித் தங்கம்மை, சசி, அம்மினிக்குட்டி முதலியோரின் பேச்சில் வரும் மலையாளங்கலந்த தமிழும் அவ்வட்டாரச் சூழலைப் படம்பிடித்துக் காட்டுகிறது. (பக். 69-76).

இதுகாறும் கூறியவற்றால், 'தலைமுறைகள்' நாவல் கதை நிகழ்ச்சிகளைவிட, எடுத்துக்கொண்ட சமூகத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பல்வேறு பழக்க, வழக்கங்களை, சடங்குகளைக் காட்டுகின்ற நாவல் என்பதும் நாகர்கோயில் வட்டார, இரணியல் செட்டி மார்களின் சமூக வரலாறாக விளங்குகின்ற தமிழ்ப் பேழை என்பதும் அதற்கான கதைமாந்தர் படைப்பும், கதை கூறும் முறையும், கதைப் பின்னலும் அமைந்து, ஆசிரியர் தான் விரும்பிய சமூகத்தைக் காட்டுவதோடு, கட்டமைப்புடைய வட்டார நாவலாகவும் ஆக்கியுள்ளார் என்பதும் விளங்கு கின்றன.

குறிப்பு:

இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்ட நாவலின் பதிப்பு; நீல. பத்மநாபன், தலைமுறைகள், முத்துப்பதிப்பகம், மதுரை, 1987.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவல் இலக்கிய அணுகுமுறைகள்

இலக்கிய அணுகுமுறை என்பது இலக்கியத் திறனாய்வு முறைகளுள் ஒன்றாகும். ஒரு படைப்பின் பன்முகப்பட்ட சிறப்புக் கூறுகளை எடுத்து விளக்க இவ்வணுகு முறைகள் உதவுகின்றன. "Wilber Scott" - ஆல் எழுதப்பட்ட "Five Approaches to Literary Criticism" - முதற்கொண்டு பல வகை அணுகுமுறைகள் இன்று வெளிப்படுத்தப்பட்டுப் பயன் படுத்தப்படுகின்றன. நீதியியல் அணுகுமுறை, உளவியல் அணுகுமுறை, சமூகவியல் அணுகுமுறை, உருவவியல் அணுகு முறை, வாழ்க்கை வரலாற்றியல் அணுகுமுறை, அமைப்பியல் அணுகுமுறை, தொல்படிம அணுகுமுறை, குறியீட்டியல் அணுகுமுறை போன்ற அணுகுமுறைகள் குறிப்பிடத் தக்கவை.

இவ்வணுகு முறைகளையெல்லாம் பொது அணுகுமுறை எனலாம். அதாவது, சமூகவியல் அணுகுமுறை என்பதைச் சங்க இலக்கியங்களுக்கும் பொருத்திப் பார்க்கலாம். புதுக் கவிதைகளுக்கும் அப்பார்வையைச் செலுத்தித் திறனாய்வு செய்யலாம். நாவல் இலக்கியத்திற்கும் அவ்வணுகு முறையைக் கையாளலாம்.ஆனால் சிறப்பு அணுகுமுறைகள் என்பது இவற்றி-லிருந்து வேறுபட்டவை. தொடக்ககால நாவல்களிலிருந்து இன்றைய நாவல்கள் வரை பல்வேறுபட்ட, ஆயிரக்கணக்கான நாவல்கள் எழுந்துள்ளன. பிரதாப முதலியார் சரித்திரத்தைப் பார்த்த பார்வையில் கோபல்ல கிராமத்தையோ ஜே.ஜே. சில குறிப்புக்களையோ நோக்க முடியாது. தொடக்க கால

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவல்களுக்கும் இக்கால நாவல்களுக்குமிடையே கதைப் பின்னல், கதை மாந்தர், பின்னனி, ஆசிரியர் நோக்கம், உத்திகள். மொழிநடை போன்ற பல கூறுகளில் மிகப்பெரிய வேறுபாடுகள் உள்ளன.

பிரதாபமுதலியார் சரித்திர நாவலாசிரியர்க்கு நீதியை உணர்த்துவதும், அறிவுரை கூறுவதுமே நோக்கமாக உள்ளது. அதற்கேற்ற கதை, கதைமாந்தர், பின்னணி போன்றவைகளை ஆசிரியர் தன் நாவலில் அமைத்துக் கொள்கிறார். ஆனால், 'எக்ஸிஸ்டன்சியலிசமும் பேன்சிபனியனும்' என்ற நாவலின் ஆசிரியருக்கு நடைமுறை ஒழுக்கங்கள், சட்டதிட்டங்கள், பாலுணர்வு பற்றிய எண்ணங்கள் போன்றவற்றின் போலித் தன்மையைச் சாடல் நோக்கமாகிறது. அதற்கேற்ற, உத்தி அவரால் அந்நாவலில் கையாளப்பட்டுள்ளது. நாவல்இலக்கியத்திற்கென்று உருவாக்கப்பட்ட நெறிமுறைகளை உடைத்தெறிவதுஅவரது நோக்கமாக இருக்கிறது. எனவே, இவ்விரண்டு நாவல்களையும் ஒரே அணுகுமுறையான பொது அணுகுமுறையால் நோக்குவது சரியன்று என்பது தெளிவாகின்றது.

நாவல் என்ற இலக்கிய வடிவத்தின் தன்மையும் அணுகுமுறையை வேறுபட வைக்கின்றது. இது நாவலா? என்ற ஐயத்தைத் தோற்றுவிக்குமளவிற்கு அவற்றின் வடிவம் மாறி வருகின்றது 'கோபல்லகிராமம்' என்ற நாவல் பற்றிக் குறிப்பிடுகையில்,

> 'இதுவும் நாவல் என்றுதான் சொல்லப்படுகின்றது. ஆனால் இதுவரை எழுதப்பட்ட நாவல்கள் எது போலும் இது இல்லை. இதிலே நிறைய சம்பவங்கள் வருகின்றன. ஏராளமான மனிதர்கள் வருகின்றார்கள், ஆயினும் இதிலே கதை என்று சொல்லக் கூடியதாக எதுவும் இல்லை'

என்று நுஃமான் குறிப்பிடுகின்றார்.

அசோகமித்திரனின் 'கரைந்த நிழல்கள்' பற்றி சி. மணி குறிப்பிடுகையில்,

> "லைப் சைஸ் என்பது போல முழுமையாக உருவாகிற பாத்திரங்கள் கிடையாது. தொடக்கம், வளர்ச்சி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

> உச்சகட்டம், முடிவு என்னும் வழக்கமான கதையமைப்பும் இல்லை. இது முழுக்க முழுக்க வேறு மாதிரி'' (நூலின் பின்னுரை)

என்கிறார். ஜே.ஜே. சில குறிப்புகள், ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் போன்ற நாவல்களைப் படிக்கும்போது, இத்தகைய எண்ணங்களே ஏற்படும். இத்தகு நாவல்களை, கதைக்கரு, கதைப் பின்னல், பாத்திரப்படைப்பு என்ற கூறு-களைக் கொண்டு எந்த அடிப்படையில் அணுகுவது என்பதும் சிந்தனைக்குரியது.

> 'நாவல் என்றால் என்னன்ன இலக்கணங்கள் அவசியம் என்று பண்டிதர்கள் சொல்லுகிறார்களோ அத்தனை இலக்கணங்களையும் மீறி, ஒரு அற்புதமான நாவலை நமக்கு சிருஷ்டித்துத் தந்திருக்கிறார் ஆந்த்ரே ஜீடு'

என்று 'குறுகிய வழி' என்ற பிரஞ்ச் நாவலின் மொழிபெயர்ப்-பாசிரியர் குறிப்பிடுகிறார். இவ்வாறு புதிய புதிய முறைகளில் (உத்திகளைக் கையாண்டு) நாவல்கள் எழுவதால் அவற்றை அணுகும் போக்கும் மாறுபடத்தானே வேண்டும். இதுவே திறனாய்வாளர்களின் முன்நிற்கும் பெரிய சவாலாகும்.

'படைப்பும் படைப்பாளியும்' என்ற நூலில், தமிழவன் எடுத்தாண்ட கூற்றுக்கள், மேற்சொன்ன கருத்திற்கு அரண் செய்கின்றன. அந்நூலில் கேள்வி பதிலாக அமைந்த பகுதியாவது

> கேள்வி: ஒவ்வொருவகை நாவலுக்கும் அந்தந்தவகை இலக்கிய விமர்சனம் உண்டா?
>
> பதில்: ஆம். உண்டு. புதுவகை நாவலுக்கான இலக்கிய விமர்சனத்தை அமைப்பியல்வாதம் போன்ற சிந்தனா முறைகளிலிருந்து நாம் புதிதாய் உருவாக்க வேண்டும் (பக். 139).
>
> கேள்வி: ஜே.ஜே. சில குறிப்புகள் பற்றி ஏற்கனவே சில விமர்சனங்கள் வந்துள்ளனவே?
>
> பதில்: அந்த விமர்சனங்கள் பழைய நாவல்கள் மீது பயிற்சி செய்யப்பட்ட விமர்சன முறைகள் (பக். 138).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
Forwarded free of cost and with the Compliments of the Dept. of Edu... Govt. of India, New Delhi.

இப்பகுதியிலிருந்து, பழைய நாவல்களுக்குச் செய்யப்பட்ட விமர்சன அளவுகோல்களைக் கொண்டு, புதிய நாவல்களைப் பார்க்கக் கூடாது என்ற விளக்கமே கிடைக்கிறது. எனவே, நாவலுக்கேற்ற அணுகுமுறைகள் கைக்கொள்ளப்பட வேண்டும் என்பதே இங்கு உணரப்பட வேண்டியது. அத்தகு அணுகு முறைகளையே நாம் சிறப்பு அணுகுமுறைகள் எனலாம். அச் சிறப்பு அணுகுமுறைகளை உருவாக்குவதற்கான சில படி- நிலைகளை நாவல் இலக்கியவழி ஈண்டுக் காண்போம்.

ஒரு நாவலை அணுகுவதற்கு முன் அந்நாவலின்,

1) இலக்கிய வரலாறு
2) நாவல் இலக்கிய மரபு
3) நாவல் இலக்கியப் போக்கு
4) நாவலின் உட்கூறுகள்

போன்றவை தெளிவாக அறிந்து கொள்ளப்பட வேண்டும். ஒரு நாவலைப் படித்த பின்னர்தான், நாவல் இலக்கியப் போக்கில் அந்நாவல் எவ்விடம் பெறுகிறது? நாவலின் நோக்க மென்ன? நோக்கத்திற்கான கதையும் பிறவும் எவ்வாறு ஆசிரியரால் எடுத்தாளப்பட்டுள்ளன? என்பன தெளிவாகும். அதன் பின்னரே, அந்நாவலை எவ்வணுகுமுறையில் நோக்கி- னால் மிகுபயனை விளைவிக்கும் என்பதனையும் திறனாய்- வாளனே முடிவு செய்து கொள்ள வேண்டும்.

தொடக்ககால நாவல்கள் ஓரளவிற்குக் காப்பியத் தன்மையைப் பெற்றிருந்தன எனலாம். தன்னேரிலாத தலைவன், கற்பும் நற்குணங்களும் கொண்ட தலைவி, இருவர்க் கும் இன்னல்களைத் தரவல்ல எதிர்நிலைத் தலைவன் என்கிற நிலையில் கதைமாந்தர்கள் படைக்கப்பட்டனர். அதற்கேற்ற கதைக் கருவும் கதைப் பின்னல்களும் ஆசிரியரால் அமைத்துக் கொள்ளப்பட்டன. இத்தகு நாவல் இலக்கியப் போக்கு 1950 க்குப்பின் மாறத் தொடங்குகிறது. தன்னேரிலாத தலைவன் என்கிற நிலை மாறி, பல்வேறு குறைகளைத் தன்னகத்தே கொண்டவனும் கதைத்தலைவனாகப் படைக்கப்பட்டான். ஒரு நாவலில் கதைத் தலைவனுக்குரிய இடமும் அவனுக்குக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுக்கப்பட்ட முதன்மையும் சிதையத் தொடங்கியது (The disintegration of hero) கதைத் தலைவன் இல்லாமல் கூட நாவல்கள் எழத் தொடங்கின. ஒரு புளியமரம் கூட தலைமைப் பண்பைப் பெறக் கூடிய அளவில் நாவலின் போக்கு மாறியது.

கதைமாந்தர்களின் செயல்களைவிட, அவர்களின் எண்ணங் களுக்கும் உணர்ச்சிகளுக்குமே முதன்மையளிக்கப்பட்டன. இதனால், கதைநிகழ்ச்சிகள் குறையத் தொடங்கின. குறையவே, கதைப் பின்னல்களும் வலுவிழக்கத் தொடங்கின. இதனால் இது நாவல் இலக்கியம் தானா? என்று ஐயமுறும் அளவிற்கு நாவலின் வடிவம் மாறத் தொடங்கியது. கோபல்ல கிராமம், ஜே. ஜே. சில குறிப்புகள், சாயாவனம், கரைந்த நிழல்கள் போன்ற நாவல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவை என்பது முன்னரே சுட்டப்பட்டது.

இதுவரை நாம் கருதிவந்த நாவல் வடிவம் (Novel Form) என்பது மாறத் தொடங்கிவிட்டது. கதை கூறும் முறை, கதை மாந்தர்கள், பின்னணி போன்றவற்றில் ஏற்பட்ட மாற்றங்களை உள்வாங்கிக் கொண்டு, நாம் நாவல்களை அணுக வேண்டிய நிலையில் உள்ளோம். எனவேதான், பழைய நாவல்களைக் கொண்டு நோக்கிய விமர்சனங்களும், அணுகு முறைகளும் புதிய நாவல்களுக்குப் பொருந்தி வராது என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

இக்கருத்தையே இலக்கியக் கொள்கை என்ற வேறொரு கோணத்தில் நோக்கலாம். சில அணுகுமுறைகள் இலக்கிய மரபை அடியொற்றி, இலக்கியத்தினின்றும் இலக்கணம் எழுந்தாற்போன்று உருவானவை. 'அறம் பொருள் இன்பம் வீடடைதற் நூற்பயனே' என்பது நம் இலக்கிய மரபு. அம் மரபிற்கேற்ற அணுகுமுறைதான் நீதியியல் அல்லது அறவியல் அணுகுமுறையாகும். நீதியை உணர்த்தவும் அறத்தை நிலை நாட்டவும் இலக்கியம் என்ற கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு உருவாக்கப்பட்டது, இவ்வணுகுமுறை. ஆனால், இன்று இலக்கியத்தின் நோக்கமே கேள்விக்குட்படுத்தப்படுகின்றது. இலக்கியம், அறிவுரை கூறுவதற்கோ உலகைச் சீர்திருத்தம் செய்வதற்கோ எழவில்லை. இலக்கியத்திற்காகத்தான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியம் என்று கருத்து முன்வைக்கப்படுகிறது. அழகியல் கூறு தான் இங்கு முதன்மையாகிறது. எனவே, எதைச் சொல்கிறது என்பது பற்றி கவலை கொள்ளாமல், எப்படிச் சொல்கிறது என்பதிலேயே இக்கொள்கை நிற்கிறது. இக்கொள்கையின்படி நீதியியல் அணுகுமுறை கொண்டு இலக்கியத்தை அணுகக் கூடாது என்பது பெறப்படுகிறது. எனவே, அழகியல் அணுகு முறை (Aesthetic Approach) இங்குப் பரிந்துரைக்கப்படு-கிறது. இவ்வழகியல் அணுகுமுறை கொண்டு நோக்கும்போது பல நாவல்கள் தரமில்லாதனவாகத் தோன்றும். இவ்வழகியல் அணுகுமுறையும் உருவத்திற்குத்தான் முதன்மை அளிக்கின்ற தேயன்றி, உள்ளடக்கத்திற்கு முதன்மையளிக்கவில்லை எனலாம்.

'பாத்திரப் படைப்பு' என்ற நாவல் கூறை ஆராய வேண்டு மாயின், இதனை எப்படி அணுகவேண்டும் என்ற முடிவுக்கு வரவேண்டும். இதற்கு நாவல் இலக்கிய மரபும், தனிப்பட்ட ஆசிரியரின் கதைமாந்தர் படைப்பு பற்றிய நோக்கமும் தெரிந்திருக்க வேண்டும். மு.வ. வின் கதைமாந்தர்கள் குறிக்கோள் மாந்தராகவே பெரும்பாலும் படைக்கப் பட்டுள்ளனர். E. M. Forster - இன் கோட்பாட்டின் படி, இவர்கள் ஒரே நிலை மாந்தர்களா? (Flat Characters) முழுமை மாந்தர்களா? (Round Characters) என்று பார்ப் பதும், அதற்கேற்ற எண்ணங்களும், செயற்பாடுகளும் எப்படி அந்நாவலில் கையாளப்பட்டுள்ளன என்று காண்பதும் அச்செயற்பாடுகளுக்கேற்ப எங்ஙனம் நாவலின் நிகழ்ச்சிகளும், கதைப்பின்னல்களும் அமைந்து நாவலின் கட்டமைப்பை உருவாக்குகின்றன என்று நோக்குவதும் பழைய நாவல்களுக்கே பொருந்தக் கூடியது.

இதேநிலையில், சமூகவியல் அல்லது உளவியல் பார்வையில் அக்கதை மாந்தர்கள் எங்ஙனம் செயற்படுகின்றனர்? அதற் கேற்ற சமூகவியல் அல்லது உளவியல் காரணங்கள் என்ன? அவை எவ்வாறு நாவலின் கட்டுக்கோப்பை உருவாக்குகின்றன அல்லது சிதைக்கின்றன? என்று காண்பது உள்ளடக்கப் பார்வை ஆகும். இவ்வாறு உருவம், உள்ளடக்கம் என்ற இரண்டையும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒருசேர ஒரு கூறுக்குப் (பாத்திரப் படைப்பு) பார்க்கும் பொழுதுதான், அக்கூறு பற்றிய விளக்கங்கள் நமக்குக் கிடைக்க வாய்ப்பேற்படுகின்றது. இவ்வாறே, பிற கூறுகளுக்கும் இப்பார்வையைச் செலுத்தலாம்.

இங்கு, 'பாத்திரப் படைப்பு' என்ற கூறு ஒருநாவலில் தெற்றென விளங்கினால்தான் இத்தகு நோக்கிற்கு இடமளிக்கின்றது. அவ்வாறின்றி, கதைமாந்தரின் எண்ண ஓட்டங்களே கதையை நடத்திச் செல்லும்போது, கதை மாந்தரின் பல்வேறு ஆளுமைகள் வெளிப்பட இடமில்லாத நிலையைக் கொண்ட புதிய நாவல்கள் பல உருவாகி இருக்கின்றன. E.M. Forster-இன் கோட்பாட்டுக்கு அடங்காத கதைமாந்தர்கள் நாவலில் உலவும்போது அவற்றை எங்ஙனம் அளவிடுவது? போன்ற வினாக்கள் எழுகின்றன. கதை மாந்தர்களின் செயலை அடியொற்றியே பார்ஸ்டரின் பிரிவுநிலை இலங்குகின்றது. ஆனால் இக்கால நாவல்களில் செயல்களை வெளிப்படுத்தாத, எண்ணங்கள் மட்டும் கொண்ட கதை மாந்தர்களே படைக்கப் படுகின்றனர். சி. சு. செல்லப்பாவின் 'ஜீவனாம்சம்' நாவலில் வரும் கதைத் தலைவியின் எண்ண ஓட்டங்களே நாவலாக உருவெடுத்துள்ளது. அவளுடைய செயற்பாடு என்பது மிகக் குறைந்த விழுக்காடே காட்டப்படுகிறது. எனவே, பார்ஸ்டரின் எல்லைக்கோட்டைத் தாண்டிய கதைமாந்தராக ஜீவனாம்சத்தின் தலைவி சாவித்திரி உள்ளாள். எனவே, இத்தகு கதை மாந்தரை அணுகுவதற்குப் புதிய அணுகுமுறைகளையே நாம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

நீல. பத்மநாபனின் 'தலைமுறைகள்' நாவலில் வரும் திரவி, எண்ணங்கள், செயல்கள் இரண்டிலும் ஆட்படும் கதை மாந்தனாக வருகின்றான். திரவியைக் கூட பார்ஸ்டரின் கோட்பாட்டுக்குள் அடக்கிவிடலாம். ஆனால், ஜீவனாம்சத்தின் சாவித்திரி, ஜே. ஜே. சில குறிப்புக்களின் ஜேம்ஸ், கோபல்ல கிராமத்தின் கதைமாந்தர்கள், ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்களின் கதைமாந்தர்கள் போன்றோர் இவ்வட்டத்திற்குள் அடங்காதவர்கள். அவர்களையும் அடக்கும்படியான அணுகு முறைகளை இனிமேல்தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வரலாற்றியல் திறனாய்வு நோக்கில் நாவல் இலக்கியம்

இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு, இலக்கியக் கொள்கை மூன்றும் ஒன்றையொன்று மிகத்தழுவி அமைந்துள்ளன. இம்மூன்றில் ஒன்றினை மற்ற இரண்டின் துணையின்றி அறியமுடியாது. இலக்கியத் திறனாய்வின் ஒரு பகுதியான வரலாற்றியல் திறனாய்வுக்கு, இலக்கிய வரலாறும் இலக்கியக் கொள்கையும் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். இவ் வரலாற்றியல் திறனாய்வு, 'Literary History' என்னும் இலக்கிய வழி வரலாற்றோடும் ஓரளவுக்கு இணைந்து வருகின்றது எனலாம். இலக்கியத்தின் வரலாறே வரலாற்றியல் திறனாய்வுக்கு அடித்தளமிட்டது எனக் கூறுதலும் பொருந்தும். இலக்கிய வரலாறு பற்றிய சிந்தனையே வரலாற்றியல் திறனாய்வின் அடிப்படை எனலாம். குறிப்பிட்ட இலக்கியம், இந்தக் காலத்தைச் சேர்ந்தது என்ற வரையறைக் கணிப்பே வரலாற்றியல் திறனாய்வின் முதல்படி எனலாம்.

வரலாற்றியல் திறனாய்விலிருந்தே சமூகவியல் திறனாய்வு (Sociological Criticism) வளர்ச்சி பெற்றது எனலாம். இவ் வரலாற்றியல் திறனாய்வு, வாழ்க்கை வரலாற்றியல் திறனாய்வோடும் (Biographical Criticism) தொடர்பு கொண்டது திறனாய்வு முறைகள் பலவிருப்பினும், ஒன்றன் கூறு மற்றொன்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றில் கலந்திருப்பதும், ஒன்றையொன்று அவாவி நிற்பதும் தவிர்க்க முடியாதது. தெளிவு கருதியும், மிகுதி கருதியும் இவை தனித்தனிப் பார்வைகளாகக் கொள்ளப்பட்டு ஆராயப்பட்டுவருகின்றன தெளிவாக, வரையறுத்த (Watertight Compartment) போல இத்திறனாய்வுகளை நிகழ்த்த இயலாது. சமூகவியல் பார்வையில் உளவியலும், உளவியலில் வாழ்க்கை வரலாற்றியலும் சில கூறுகளாகக் கலந்து விரவியே நிற்கும். இவற்றையெல்லாம் உட்கொண்டே ஒரு திறனாய்வாளன் இலக்கியத்தை மதிப்பீடு செய்ய வேண்டும்.

வரலாற்றியல் திறனாய்வு என்பதை இருநிலைகளில் காணலாம்.

1. ஓர் இலக்கியப் படைப்பின் காலத்தைக் கொண்டு, அக்காலச் சமூக, அரசியல், பொருளாதார நிலைகளில் அவ்விலக்கியத்தின் பாடுபொருள், உத்தி, நடை போன்றவற்றை நோக்குதல்.

2. ஓர் இலக்கிய வகையின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றைக் கால அடிப்படையில் நோக்குதல் அல்லது ஒரு படைப்பாளனின் படைப்புக்களைத் தொடக்க முதல் இறுதி வரை கால அடிப்படையில் நோக்குதல்.

முதல் நிலையில், சமூகவியல் திறனாய்வோடு வரலாற்றியல் பார்வை ஓரளவு ஒத்திருப்பினும், அவற்றிடையே சிறுவேறுபாடு உண்டு. சமூகவியல் பார்வையில் ஓர் இலக்கியத் தோற்றத்திற்கான சமூகக் காரணிகளும், இலக்கியங் காட்டுகின்ற சமூக நிலைகளும் நோக்கப்படுகின்றன. வரலாற்றியல் பார்வையில் அக்காலகட்டச் சமுதாயக் காரணிகள் இலக்கியத்தில் இடம் பெற்ற தன்மைகள் நோக்கப்படுகின்றன.

இரண்டாவது நிலையில், காப்பியம் அல்லது நாவல் இலக்கியவகை தோற்றம் பெற்றதும், பல்வேறு காலச்சூழலுக்கேற்ப, அக்காப்பியம் அல்லது நாவல் இலக்கிய வகையில் ஏற்பட்ட மாற்றங்களைக் காணுதலும் அடிப்படையானது. மற்றொரு பகுதியில் பாரதியின் தொடக்ககாலப் படைப்பிலிருந்து இறுதிக்காலப் படைப்புவரை கால மாற்றத்தால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகழ்ந்த மாற்றங்களைப் பார்ப்பது, ஒரு நாவலாசிரியனின் முதல் நாவலிலிருந்து இன்றைக்கு அவன் படைக்கும் நாவல்கள் வரை ஏற்பட்ட மாற்றங்களைக் கால அடிப்படையில் பார்ப்பது என்பதும் அடங்கும்.

இக்கட்டுரையில், இரண்டாவது நிலையான ஓர் இலக்கிய வகையின் தோற்றம், வளர்ச்சி போன்றவற்றைக் கால அடிப்படையில் நோக்குதல் என்ற அடிப்படையில், தமிழ் நாவல்களை வரலாற்றியல் திறனாய்வில் நோக்குதல் மேற்கொள்ளப் பெறுகின்றது. இதற்கு, முன்னர்க் குறிப்பிட்டது போல நாவல் இலக்கியக் கொள்கையையும், நாவல் வரலாற்றையும் தெளிவாக உணர்ந்திருக்கவேண்டும். அத்தெளிவு இல்லையென்றால், இப்பார்வையில் குறைபாடு ஏற்படலாம்.

பெ. கோ. சுந்தரராஜனும் சிவபாதசுந்தரமும் எழுதிய 'தமிழ்நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூல் ஓரளவிற்கு வரலாற்றியல் பார்வையில் செய்யப்பட்ட திறனாய்வு எனலாம். அவர்கள் பிரித்துள்ள காலகட்டங்கள் பாடுபொருளையும், கொள்கைகளையும் கொண்டு பிரிக்கப் பட்டதேயன்றி, கால அடிப்படையின் வரலாற்றுப் பின்னணி கொண்டு பகுக்கப்படவில்லை. பண்பாட்டுக் கவலை, சமுதாய விமர்சனம், இலக்கிய உணர்வு என்ற பிரிவுகள் இதனை உணர்த்துகின்றன.

நாவல் வளர்ச்சிக் காலகட்டத்தை (1) 1876-1900 என்றும் (2) 1900-1930 என்றும் (3) 1930க்குப் பிறகு என்றும் பகுத்துள்ளனர். இவற்றில், முதற்காலகட்டம் மூன்று நிலைகளில் நோக்கப்பட வேண்டியுள்ளது. அவையாவன (1) அக்கால அரசியல் நிலை (2) தமிழ் இலக்கிய நிலை (3) படைப்பாளர்களின் வாழ்க்கை நிலை. இம்மூன்று நிலைகளையும் தெளிவாக உணர்ந்தால்தான், இம்முதற் காலகட்ட நாவல்களில் (பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம், பிரேமகலாவத்பம், தீனதயாளு) பாடுபொருள், மொழிநடை, கதை மாந்தர் படைப்பு, உத்தி போன்றவைகளின் பின்னணியை உணரமுடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அரசியல் நிலை:

ஆங்கிலேயரின் ஆதிக்கம் பல நிலைகளில் படரத் தொடங்கிய காலகட்டமது. இந்திய தேசிய காங்கிரஸ் (1885) என்ற அமைப்பு தோன்றாத காலகட்டத்திலேயே தமிழில் முதல் நாவல் எழுந்துவிட்டது. இவ்வமைப்பு தோன்றிய பின்னரும், அன்னியர் ஆதிக்கத்தை எதிர்க்கவேண்டும் என்றோ விடுதலை பெறவேண்டுமென்றோ எண்ணங்களை முன் வைக்காத காலகட்டமாக விளங்கியது. ஆங்கிலேய அரசிடம் தன் கோரிக்கைகளை முன்வைத்தும், ஒன்றிரண்டை அவர்கள் ஏற்றுக்கொண்டபோது, பாராட்டுப்பத்திரம் வாசித்தும் செயல் பட்டு வந்தது இந்தியதேசிய காங்கிரஸ். வெளிப்படையான அரசியல் அமைப்பு நிலைகளிலேயே இத்தகு போக்கு நிலவும்போது, இலக்கியப் படைப்பாளர்களிடம் அன்னியர் ஆதிக்கம் போன்ற எதிர்ப்புக் கருத்துக்களை நாம் எதிர்பார்க்க முடியாது. ஆதலால்தான், முதல் காலகட்ட நாவல்களில் அரசியலுக்கு அப்பாற்பட்ட செய்திகளே இடம் பெறலாயின என்பதும் இதன் வீச்சு முதற்காலகட்டத்தில் மட்டுமல்லாமல் இரண்டாம் கால கட்டத்திலும் நிலவியது என்பதும் இங்கு உணரத்தக்கது.

மேலும், விடுதலை என்கிற எண்ணம், இரண்டு நிலைகளில் செயற்பட்டது என்பதை இந்திய விடுதலை இயக்க வரலாற்றை அறிந்தவர்கள் உணர்ந்திருப்பர். அரசியல் விடுதலை, சமூக விடுதலை என்ற இருநிலைகளில் இது பிரிந்து நின்றது. அரசியல் விடுதலை கோஷத்தை முன்வைத்தால் ஆபத்து என்கிற நிலையை உணர்ந்த படைப்பாளர்கள், தங்கள் செயற் பாட்டிற்குக் குந்தகம் ஏற்படாத வகையில் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைத்து இலக்கியங்களைப் படைக்க முற்பட்டனர். காந்தியத் தாக்கம் பெற்ற நாவல்களில் கூட காந்தியின் சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களான மதுவொழிப்பு, தீண்டாமை, பெண்ணடிமை எதிர்ப்பு போன்றவைகளே அதிகம் இடம்பெற்றன என்பதும், உப்பு சத்தியாக்கிரகம், வெள்ளையனே வெளியேறு இயக்கம், ஒத்துழையாமை இயக்கம் போன்றவை அதிகம் இடம் பெறவில்லை என்பதும் மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்கின்றன எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கிய நிலை:

கிறித்தவ பாதிரிமார்களால் உரைநடை இலக்கியம் அறிமுகப்படுத்தப்பட்டு, ஓரளவிற்குப் பழக்கமான நிலையில் 'நாவல்' என்கிற படைப்பிலக்கியம் முன்வைக்கப்பட்டது. 'நாவல்' என்ற புதிய இலக்கிய வகையை எங்ஙனம் ஏற்றுக் கொள்வது என்கிற மனநிலைப்போக்கு அக்கால வாசகரிடத்து நிலவியதை முதல் நாவலாசிரியர்களின் முன்னுரைகள் மூலம் அறிந்துகொள்ளலாம். இலக்கியம் என்றாலே கவிதை என்பதை மரபாகக் கொண்டிருந்த தமிழ் மக்களிடையே 'நாவல்' என்ற உரைநடை இலக்கியத்தை உட்கொள்ளவே பல ஆண்டுகள் ஆகியது எனலாம். காவிய வடிவங்களையே கேள்விப்பட்ட அல்லது உணர்ந்த மக்கள் ஒருபுறம்; செவ்வியல் இலக்கியங்களைத் தவிர பிற இலக்கியங்களை ஏறெடுத்தும் பார்க்காத தமிழறிஞர்கள் மற்றொருபுறம்; ஆங்கிலக் கல்வியின் பயனாக மேனாட்டு இலக்கியங்களைத் தெரிந்து, அவற்றைத் தமிழில் அறிமுகப்படுத்தவேண்டும் என்ற புதுமை வேட்கை கொண்ட ஆங்கிலம் படித்த தமிழர்கள் வேறொருபுறம் — இத்தகு நிலையில்தான் நாவல் இலக்கியம் தமிழில் கால்கொள்ளத் தொடங்குகிறது.

இத்தகு இலக்கியச்சூழல் நிலவிய காலகட்டத்தில், முதல் தமிழ் நாவலாசிரியர்கள் அக்கால மக்களின் இலக்கிய ரசனைக்கேற்ற சில உத்திமுறைகளைக் கையாளத் தொடங்கினர். அதனால்தான், 1875-இல் தூ வி. சேஷயங்கார் என்பவர் 'ஆதியூர் அவதானி சரிதம்' என்ற செய்யுள் வடிவில் அமைந்த நாவலைப் (An original Tamil Novel in verse) படைத்தார். எனினும், நாவலுக்கும் உரைநடைக்குமுள்ள பிணைப்பு இந் நாவலை வெற்றிபெறச் செய்யவில்லை. இது, தமிழர்களுக்கு அறிமுகமாகாத நாவலாகவே இன்றுவரை உள்ளது. 'நாவல்' என்ற பெயரை ஏற்றுக்கொள்வதில்கூட, பெரும்போராட்டம் நிகழ்ந்திருக்கிறது. அதனால்தான், 'வசனகாவியம்' என்றும், 'சரித்திரம்' என்றும், 'புதினம்' என்றும், 'தமிழ் நவீனகம்' என்றும், 'திவ்ய சரித்திரம்' என்றும், 'கதாரத்னம்' என்றும் இது போன்ற பல பெயர்களும் இவ்விலக்கிய வகைக்கு இடப்பட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடுத்து, மொழிநடையை எங்ஙனம் கையாள்வது? என்கிற கேள்வியும் எழுப்பப்பட்டது. இலக்கிய மொழியைக் கையாள்வதா? பேச்சு மொழியைக் கையாள்வதா? என்ற கருத்துக்கள் எழுந்தன. பத்மாவதி சரித்திர ஆசிரியர் அ. மாதவையா தனது நாவலின் முன்னுரையில்,

> "கிரந்தத்தின் இடையிடையே கீழ்த்தரப் பாத்திரங்கள் பேசநேரும்பொழுது, இலக்கண வழுச் செறிந்த அவர் வாய்மொழிகளை அவ்வண்ணமே எழுதுவது வழக்கமாயினும், கிரந்தகர்த்தா நேரிற் கூறும் வரலாறுகள் வழுவின்றியிருத்தல் வேண்டும். கல்வித் தேர்ச்சி இல்லாரும் பயன்பெறும்படி எழுதப்படும் கிரந்தமாதலின் எவ்வளவு இலேசான நடையில் எழுதப்படினும் நலமே"

என்று குறிப்பிடுகின்றார். இதுபோன்ற கருத்துக்கள், அக்கால நாவலாசிரியர்கள் நாவலின் மொழிநடை பற்றி எவ்வளவு தூரம் சிந்தித்துள்ளனர் என்பதைக் காட்டுகின்றன. மேலும், அக்கால மக்களை நாவல் இலக்கியத்தை ஏற்றுக்கொள்ள வைப்பதற்கான படைப்பாளரின் முயற்சிகள் என்று கூடச் சொல்லலாம்.

ஆசிரியரின் பின்னணி:

'நாவல்' என்கிற புதிய இலக்கிய வகையை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் ஒருசிலருக்கு ஏன் ஏற்பட்டது? அவர்களுடைய வாழ்க்கைப் பின்னணி என்ன? என்பதும் அக்காலகட்ட நாவல்களில் வளர்ச்சிப் போக்கை நிர்ணயம் செய்யும் காரணிகள் எனலாம். மெக்காலேயின் கல்வித் திட்டத்தால் (1835) ஆங்கிலம் படிக்கும் வாய்ப்பு, தமிழர்களுக்கு முறையாகக் கிடைத்தது. கல்விமுறையில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. புதிய துறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்நிலையில், ஆங்கிலம் அறிந்த தமிழரும், ஆங்கிலம் அறியாத தமிழருமென்ற இரு அணிகள் ஏற்பட்டன. ஆங்கிலம் படித்த பலர், தமிழைப் பற்றிச் சிந்திக்காதிருந்தனர். ஒருசிலரே தமிழ்மொழிக்கு ஆக்கந்தேட வேண்டும் என்ற எண்ணங் கொண்டிருந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவ்வொருசிலரில் முதல் தமிழ் நாவலாசிரியர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். அவர்களுக்குக் கிடைத்த ஆங்கிலக் கல்வியின் பயனைத் தமிழுக்கு ஆக்கந்தரும் வகையில் பயன்படுத்த முனைந்தனர். அவர்களுக்கு அறிமுகமான ஆங்கில நாவல் களைப்போன்று, தமிழிலும் புதுவது புனைய வேண்டும் என்ற எண்ணத்தில், தமிழில் நாவல்களை அறிமுகப்படுத்தினர்.

மாயூரம் வேதநாயகம்பிள்ளை, ஆங்கிலம் படித்து, நீதிபதி யாகப் பணியாற்றியவர். இராஜமய்யரும், மாதவைய்யாவும் ஒரே கல்லூரியில் பயின்றவர்கள். தமிழ் இலக்கியம் பற்றிய தெளிவான கருத்தும் அவர்களுக்கிருந்தது என்பதை அவர்களது படைப்புக்கள் மூலமாகவே அறிந்துகொள்ளலாம். இராஜமய் யர் மிகக் குறுகிய காலத்திலேயே உலக வாழ்வை நீத்தவர். இத்தகு வாழ்க்கைப் பின்னணிகள் அவர்களது படைப்புக்களை அறிவதற்கும், இலக்கியப் போக்கை உணர்வதற்கும் வழி-வகுக்கும் எனலாம்.

ஆங்கிலத்தாக்கத்தின் விளைவாக அவர்கள் நாவலை உருவாக்கினாலும், தமிழ்க்கதை மாந்தர்களும், தமிழகச் சூழல்களும் கொண்ட நாவல்களைப் படைத்து, நாவலும் ஒரு தமிழ் இலக்கியமே என்று மக்கள் எண்ணுமாறு செய்ததில் வெற்றி பெற்றனர் என்று துணிந்து கூறலாம்.

இம்மூன்று நிலைகளையும் (அரசியல் நிலை, இலக்கிய நிலை, வாழ்க்கைப் பின்னணி) ஒருசேர வைத்துப் பார்க்கும் பொழுது, முதற்காலகட்ட நாவல்களின் பாடுபொருள், உத்தி, கதைமாந்தர் படைப்பு, மொழிநடை போன்றவைகளுக்கு ஓரளவு தெளிவாக விளக்கங்கள் கிடைக்கிறது எனலாம். அரசியல் நிலையைப் பற்றி எண்ணாத சூழலும், அதிலிருந்து தப்பித்துச் செல்கின்ற கற்பனை நிகழ்ச்சியில் லயித்தலும், தன்னைத்தேடுதல் என்கிற வேதாந்தக் கருத்தும், பெண்கல்வி என்கிற சீர்திருத்தக் கருத்துக்களை ஆங்காங்கே விரித்துரைத் தலும், இலக்கியமொழி, பேச்சுமொழி என்ற இரண்டையும் கையாளுகின்ற மொழி நடையும் இம்முதற்காலகட்ட நாவல் களில் இடம் பெற்றுள்ளதை உணரலாம். பிரதாப முதலியார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சரித்திரதில் கதைக்குள் கதை நிகழும்போக்கு, பஞ்சத் தந்திரக் கதையை நினைவூட்டுகிறது. இடையிடையே நகைச்சுவை ததும்பும் பேச்சுக்களைப் புகுத்தியிருப்பது, படிப்பவர்க்குச் சலிப்பு ஏற்படாமலிருக்க அவர் கையாண்ட உத்தியாக இதைக் கருதலாம். நாவல் என்கிற இலக்கியக் கொள்கையை வைத்துப் பார்க்கும்பொழுது, ஏ. வி. சுப்பிரமணிய அய்யர் கூறுவது போன்று பிரதாப முதலியார் சரித்திரத்தை நாவல் என்றே கூறமுடியாது.[1] கட்டுக்கோப்பு, கதைமாந்தர் படைப்பு போன்ற பல கூறுகளில் இந்நாவல் சிதைந்தே காணப்படு-கின்றது. எனினும், முதல் நாவல் முயற்சி என்ற நிலையில் அது போற்றப்பட வேண்டிய ஒன்றே.

1893-இல் தொடராக வந்த 'கமலாம்பாள் சரித்திரம்' நாவல் என்கிற நிலையில் சிறந்திருந்தாலும், ஆசிரியர் தெளிவானதொரு போக்கைக் கையாண்டுள்ளார் எனக்கூற இயலாது. நடப்பியல் வாழ்க்கையைக் கூறிச்செல்கின்ற இராஜமய்யர், இறுதியில் ஆன்மீகத் தேடலை முன்வைக்க முனைந்துவிடுகிறார். இது அரசியல், சமூக நிலையில் ஒதுங்கி நிற்கும் அதீத கற்பனைப் போக்கின் வேற்று வடிவமே எனலாம். 1898-இல் எழுதப்பட்ட 'பத்மாவதி சரித்திரம்' கடைசி வரை தெளிவானதொரு நிலையிலேயே சென்று முடிகின்றது எனலாம். இராஜமய்யரின் கதைமாந்தர்களைவிட மாதவையாவின் கதைமாந்தர்கள் வெறும்பேச்சில் காலங்கழிக்காமல், கொள்கை அளவில் உரையாடுவதைக் காணலாம். இவையெல்லாம், நாவல் இலக்கியக் கொள்கையில், படைப்பாளர்கள் பெற்ற மேனாட்டு இலக்கியப் பரிச்சயமே அவர்களுக்குத் தெளிவானதொரு பார்வையை வழங்கியது எனலாம்.

இரண்டாவது காலகட்டத்தில் அதிகமான மொழிபெயர்ப்பு மற்றும் தழுவல் நாவல்கள் எழுந்தன. கல்கியின் வருகை வரை இது மேலோங்கி நின்றது எனலாம். கோரிக்கை வைத்துச்செயல் பட்டுவந்த இந்திய தேசிய காங்கிரஸில் 1900க்கு மேல் திலகர் போன்றோரின் செயல்பாடுகளினால், வெள்ளையரின் ஆதிக்கம் வெளிப்படையாகச் சிலரால் எதிர்க்கப்பட்டது. தீவிர வாதிகளின் கை, 1920 வரை ஓங்கியிருந்தது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டாம் உலகப் போரின் விளைவுகளும், தமிழகத்தில் இந்தியத் தேசியம் என்ற உணர்வைவிட திராவிடத் தேசியம் என்கிற உணர்வு மேலோங்கி நின்றதும், ஆங்கிலேயர் சார்பாக எழுந்த நீதிக்கட்சியின் ஆட்சியும், காந்தியின் சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளும் தமிழகத்தைப் பொருத்தவரை (சென்னை மாகாணம்) மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியது எனலாம். பெரியார், திரு.வி.க., வ.உ.சி. போன்றவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து ஒதுங்கி நிற்கத் தொடங்கியதும் அப்போதைய குழப்பமான காலச்சூழலை உணர்த்துகிறது எனலாம்.

இக்குழப்பமான அரசியல் சூழலில், ஓரளவிற்கு நடப்பியல் நாவல்களை உருவாக்கிய முதல் தமிழ் நாவலர்களிலிருந்து விலகி, மொழி பெயர்ப்பு மற்றும் தழுவல்களைக் கொண்ட நாவல்களைப் படைக்கும் ஓர் எழுத்தாளர் அணி உருவாகத் தொடங்கியது. மேலைநாட்டு நாவல்களோடு வங்க நாவல்களும் இவ்வகையினருக்கு வழிகாட்டின எனலாம். அந்நாவல்கள் இடையிடையே சீர்திருத்தக் கருத்துக்களைக் கூறினாலும், அடிப்படையில் சமூக அரசியல் பிரச்சனைகளிலிருந்து தப்பித்துச் செல்லுதலும், துப்பறிதலும், திடுக்கிடும் சம்பவங்கள் நிறைந்ததுமான அதீதக் கற்பனைகளின் தடங்களிலேயே நடையிட்டன. காந்தியப் பின்னணிகொண்ட ஓரிரண்டு நாவல்களிலும், காந்தியின் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள் இடம் பெற்றனவேயன்றி, அரசியல் கருத்துக்கள் இடம் பெறாதது குறிப்பிடத்தக்கது. கா. சி. வேங்கடரமணியின் நாவல்கள் மட்டும் இக்காலகட்டத்தில் விதிவிலக்காகத் திகழ்கின்றன. இக்கால கட்டத்தில் காந்தி எதிர்ப்பு நாவல்களும் வந்துள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.[2]

இரண்டாவது காலகட்டத்தில் பத்திரிகைகளின் பெருக்கமும், மத்தியதரவர்க்கம் உருவாகி, வீட்டிலிருக்கும் பெண்களும் கதைகளைப் படிக்கின்ற நிலையும் ஏற்படுகின்றன. பத்திரிகை இலக்கியத்தின் சமூகவியல் பண்பிற்கேற்ப, பல வாசகர்களின் ஆர்வத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் பல தொடர்கதைகள் எழுந்தன. ஆரணியாரும், வடுவூராரும், வை.மு. கோதைநாயகி அம்மையாரும் ஜே.ஆர். ரங்கராஜும் இக்காலகட்ட எழுத்தாளர்களாகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்றாவது காலகட்டமான 1930க்கு மேல், அரசியலிலும் சமூகநிலையிலும் தெளிவானதொரு போக்கு காணப்படுகின்றது. காந்தியின் தலைமையால் விடுதலை இயக்க உணர்வு, மக்கள் இயக்கமாக மாறத் தொடங்குகிறது. நீதிக் கட்சியின் ஆட்சியும் 1936 - இல் சென்னை மாகாணத்தில் முடிவடைகிறது. தென்னிந்திய நலவுரிமைச் சங்கமும், பெரியாரின் தலைமையில் ஏற்பட்ட திராவிடர் கழகமும் சமூக சீர்த்திருத்தக் கட்சிகளாகவே செயல்படத் தொடங்கின. இக்கால கட்டத்தில் தான் கல்கியின் வருகை, பத்திரிகை உலகிலும், தொடர்கதை உலகிலும் பெரிய மாறுதலை ஏற்படுத்தியது. மொழிபெயர்ப்பும், தழுவல்களுமாக இருந்த தொடர்கதைகள், தமிழரின் பழம் பெருமை உணர்த்தும் வரலாற்று நாவல்களாகவும், காந்தியக் கருத்துக்களைத் தெரிவிக்கும் சமூக நாவல்களாகவும், வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில், தொடர்கதைகளாக வரத்தொடங்கின.

ஜனரஞ்சகப் பத்திரிக்கையான ஆனந்தவிகடனுக்கு எதிராக 1932இல் மணிக்கொடி எழுந்தாலும், அதில் பங்குகொண்ட எழுத்தாளர்கள் சிறுகதை இலக்கியத்திலேயே நாட்டம் செலுத்தினர். எனவே, நாவல் துறையில் கல்கியின் கையே ஓங்கி நின்றது. திராவிடர் கழகமும், பொதுவுடைமைக் கட்சியும் அதனைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகமும் தங்களது கட்சிக் கொள்கைகளை நிலைநாட்டும் வண்ணம் பிரச்சார நாவல் இலக்கியங்களை உருவாக்கின. ஆதலால் அப்படைப்பாளர்கள் நாவல் வடிவத்தில் கவலை கொள்ளாது, கதை நிகழ்ச்சிகளிலும், கருத்துக்களிலுமே கவனத்தைக் கொண்டிருந்தனர். எனவேதான், அவை எழுந்த காலத்தில், பரபரப்பை ஏற்படுத்தி விட்டு, பிறகு ஓய்ந்தன. இதற்கிடையில் புதிய இலக்கிய உத்திகளை நாவலில் கையாள வேண்டும் என்ற எண்ணத்தில் ஆர். ஷண்முகசுந்தரம், க.நா. சுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, போன்றவர்கள் தரமான நாவல்களைத் தர முனைந்தனர் இது 40, 50-ஆம் ஆண்டுகளில் ஓரளவிற்கும் 60 - களில் பெரிய அளவிற்கும் வளரத் தொடங்கியது. சரஸ்வதி, எழுத்து போன்ற சிறு இலக்கிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதழ்களின் தோற்றமும், பின்னர் எழுந்த சிற்றிலக்கியப் பத்திரிக்கைகளின் வளர்ச்சியும் நாவல் படைப்பையும் விமர்சனத்தையும் ஒருங்கெடுத்துச் சென்றன. இம்முயற்சிகளால் நாவல் இலக்கியம் புதிய தடத்தில் செல்லத்தொடங்கியது.

இப்புதிய தடம், நாவல் கொள்கை, கதைமாந்தர் படைப்பு, உத்திகள், மொழிநடை போன்ற பல கூறுகளிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இந்திய நாவல் வரிசையிலும், உலக நாவல் வரிசையிலும் இடம்பெறும் தகுதியை அளவில் இத்தடத்தில் எழுந்த நாவல்களே கொண்டிருந்தன

அடிக்குறிப்புகள்:

1 ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், தற்காலத் தமிழிலக்கியம் (மக்கள் வெளியீடு, சென்னை, மூன்றாம் பதிப்பு, 1985), பக். 113-114.

2 சபா. அருணாசலம், தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம் (காளத்தி நூலகம், தேவகோட்டை, 1981), பக். 16.

பயன்பட்ட நூல்கள்:

1 William K. Wimsatt & cleanth Brooks, Literary Criticism, A short History, Oxford & IBH Publishing Co., New Delhi, 1957.

2 பெ. கோ. சுந்தரராஜன், & கோ. சிவபாதசுந்தரம் தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1977.

3 கு. பகவதி(பதிப்பாசிரியர்), திறனாய்வு அணுகுமுறைகள், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, 1989

4 கா. சிவத்தம்பி, தமிழில் இலக்கியத் திறனாய்வு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1987.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்திய விடுதலைப் போராட்டம் தமிழ்ப் புனைகதைகளில் அதிகம் இடம்பெறாமைக்குரிய காரணிகள்

இந்தியாவைப் பொறுத்தவரை, தேசிய விடுதலைப் போராட்டம் கல்கத்தா, பம்பாய், சென்னை என்ற மூன்றிடங்களை மையங்களாகக் கொண்டு செயற்பட்டது. அவ்வவ்மாநிலங்களில் அரவிந்தர், சுபாஷ், திலகர், வ. உ. சி., பாரதி, வ. வே. சு. ஐயர் போன்றவர்கள் தீவிரமாகப் பங்குபற்றிய வரலாறு குறிப்பிடத் தக்கதாகும். எனினும், தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரையில், புனைகதைகளான நாவல், சிறுகதைகளில் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய செய்திகள் குறைந்த விழுக்காடே இடம்பெற்றுள்ளது. சமுதாய நிகழ்வுகள் இலக்கியங்களில் பிரதிபலிக்கப்படுமென்று சொல்லப்படுகிறது. ஆனால், பேரியக்கமாக நிகழ்ந்த தேசிய விடுதலைப் போராட்டம், ஆங்காங்கே சுட்டிச் சொல்லப்படும் அளவிற்குத்தான் இடம்பெற்றுள்ளது. தமிழ் நாவல்களில் தேசியச் சிந்தனைகள், சிறுசிறு தகவல்களாகவும் கதைகளோடு ஒட்டாத வெறும் குறிப்புகளாகவுமே காணப்படுகின்றன. முழு நனவு நிலையோடு கூடிய செயற்பாடாக நாவலாசிரியர்கள் அவற்றைக் கையாண்டனர் என்று சொல்வதற்கில்லை என்ற கருத்து முன்வைக்கப்படுகிறது.[1]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தேசிய விடுதலை வரலாற்றிலும் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் முத்திரை பதித்த பாரதி, விடுதலைப் போராட்ட நிகழ்வுகளான சிப்பாய்க் கலகம் (1857), வங்கப் பிரிவினை (1905), பஞ்சாப் படுகொலை (1919) போன்றவற்றைத் தம் கவிதையில் சுட்டிக்காட்டாமை வியப்பிற்குரியதாக உள்ளது. தேசிய விடுதலை இயக்கத்தில் ஈடுபட்டு, தலைமறைவாக வெளிநாடுகளில் அலைந்து,இறுதியில் புதுச்சேரி அடைந்த வ. வே. சு. ஐயர் தனது சிறுகதைகளில் விடுதலைப் போராட்டம் தொடர்பான கருத்துக்களை முன்வைக்கவில்லை.

நாவல்களில் தேசியக் கருத்துக்களை அதிகம் கையாண்டவர் கல்கி என்ற கருத்துண்டு. விடுதலைக்கு முன்னும் பின்னுமாக அவர் நாவல்களைப் படைத்துள்ளார். விடுதலைக்கு முன் 5 நாவல்களை (கள்வனின் காதலி, தியாக பூமி. மகுடபதி, அபலையின் கண்ணீர், சோலைமலை இளவரசி) அவர் எழுதியுள்ளார். இந்நாவல்களில் கா. சி. வேங்கடரமணியின் 'தேசபக்தன் கந்தன்' (1932) போன்ற நாவல் எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. கந்தனைப் போன்ற அரசியல் சார்பு கொண்ட கதைமாந்தர்கள் படைக்கப்படவில்லை. (Kandan is an exponent of Gandhian politics) இந்நாவல்களில் காந்தியடிகளோடு தொடர்புடைய அரசியல் நிகழ்ச்சிகள் காட்டப்படாமல், காந்தியின் ஆளுமையின் ஆற்றலை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளாகவே காட்டப்படுகின்றன. விறுவிறுப்பான கதையொன்றினைச் சொல்ல முனைந்த கல்கி, காந்திய அரசியலைப் பின்னணியாகப் பயன்படுத்திக் கொண்டாரேயொழிய, அதற்கு முதன்மையளித்து வெளிப்படுத்தல் அவருடைய நோக்கமன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்திய விடுதலை இயக்கம், தமிழ்ப் புனைகதைகளில் இடம் பெறுதல் என்பது, அரசியல் போராட்டங்களைக் கருவாக, கதைப்பின்னல்களாகக்கொண்டோ, அப்போராட்டங்களில் கதைமாந்தர் ஈடுபடுதல் என்ற நிலையிலோ காட்டப்படுவதாகக் கொள்ளப்படுகிறது. அதாவது அகநிலைத்தாக்கம் பெற்றிருப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பது. காந்தியின் அரசியல் போராட்டங்களான ஒத்துழையாமை இயக்கம் (1920), உப்புச்சத்தியாக்கிரகம் (1930), வெள்ளையனே வெளியேறு இயக்கம் (1942) போன்றவை இடம்பெறுதல் இங்குக் கொள்ளப்படுகிறது. சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் இடம் பெறுதல் இங்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

உண்மையில் காந்தியுக அரசியல் இயக்கமானது, அவர் அமரராகி, ஏறத்தாழ இருபதாண்டுகளுக்குப் பின்னரே, தமிழ் நாவல்களில் ஓரளவாவது குறிப்பிடத்தக்க பொருளாக எடுத் தாளப்பட்டுள்ளது என்ற கைலாசபதியின் கூற்று மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்கிறது.[2]

விடுதலை இயக்க நிகழ்வுகள் தமிழ்ப் புனைகதைகளில் இடம்பெறாமை என்பது இந்தியா விடுதலை பெற்றவரை (1947) என்பதை எல்லையாகக்கொண்டு இங்கே ஆராயப்படுகிறது. இப்போக்கிற்கான காரணிகள், இலக்கியத்தின் சமூகவியற்பண்பு, விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழக அரசியல் நிலை முதலியவற்றை நோக்கி முடிவுசெய்யப்பட வேண்டும்.

இலக்கியத்தின் சமூகவியற் பண்புகள்:

ஆங்கிலக் கல்வியின் பயனாகத் தமிழில் நாவல், சிறுகதை என்ற புதுவகை இலக்கிய வடிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழ் மக்களுக்கு அவை அறிமுகமாகும்போது, புதிய இலக்கிய வகை-புதுவகை உரைநடை-காப்பிய, புராண நிகழ்ச்சிகளுக்கு மாறுபட்ட நடப்பியல் நிகழ்ச்சிகள் போன்ற நிலைகளில் எழுத்தாளர்களுக்குச் சில சிக்கல்களை ஏற்படுத்தின. இச்சிக்கலுக் கிடையே அரசியல் கருத்துக்களை இடம்பெறச் செய்வதென்பது மேலும் சிக்கலுக்குரியதாகிவிடும். அஃதன்றி, தொடக்க கால நாவலாசிரியர்களுக்கு சமுதாய நிகழ்வுகளைக் கூர்ந்து கவனிக் கும் ஆற்றலும் அதனை இலக்கியத்தில் எடுத்தாளுகின்ற திறனும் இருந்திருக்க முடியாது. தமிழில் நாவல் ஒரு திட்ட மிட்ட இலக்கிய ரூபமாக அமையவேண்டும் என்ற நோக்கமும் கொள்கையும் நாவல் எழுதுவோரிடையே கடந்த 30, 35 ஆண்டுகளுக்குச் சற்று முன்பின்னாகத்தான் தோன்ற ஆரம்பித் தது என்ற கருத்துண்டு.[3] தொடக்க நிலையில், ஆங்கில

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவல்களைப் படித்து. அதுபோன்று தமிழிலும் அறிமுகப்படுத்த வேண்டும் என்ற ஆசை அவ்வெழுத்தாளர்களுக்கு இருந்ததே யொழிய, அவ்விலக்கியவழி, அரசியல் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்ற தெளிவு நிலை இருக்கவில்லை. அதனால்தான், தொடக்ககால நாவல்களில் சீர்திருத்தக் கருத்துக்கள், சொற் பொழிவு போல ஆசிரியர்களால் எடுத்தாளப்பட்டதேயன்றிக் கதையோடு ஒட்டிய நிகழ்வாக இல்லாதிருந்தன.

அந்நியரின் வரவு, அதனால் ஏற்பட்ட பண்பாட்டுச் சிக்கல்கள்தான் அப்போதுள்ள சிக்கலாகப் பட்டதேயன்றி, அரசியலோ பிறவோ எவ்விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்த வில்லை. மேலும், அரசியல் போராட்டம் வெகுஜன இயக்க மாகக் காந்தியின் தலைமைப் பொறுப்பிற்குப் பிறகே (அதாவது 1920க்குப் பின்) ஏற்படுகிறது. அதுவரை அரசியல் எதிர்ப் புணர்வு என்பது படித்த ஒரு சிலரிடத்தில் மட்டுமே நிலவியது எனலாம். விடுதலை இயக்கத்தில் அரசியல் விடுதலை, சமூக விடுதலை என்ற இரு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதில் தொடக்க கால நாவல்கள் சமூக விடுதலை தொடர் பான பெண் கல்வி, சாதிப் பிரிவினை, மதுவிலக்கு, தீண்டாமை நீக்கம் போன்ற சீர்திருத்தக் கருத்துக்களையே கொண்டி-ருந்தன.

சமூகத்தின் அடிப்படை நிறுவனங்களில் மாற்றம் ஏற்படும் போது, குறிப்பாகக் குடும்பத்தின் கட்டமைப்பில் அல்லது பொருளாதார வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் முரண்பட்ட சமூக மதிப்புக்களைத் தோற்றுவிக்கும்போது, அவை இலக்கியங் களில் வெளிப்படுகின்றன என்ற ஜான் ராக்வெல்லின் கூற்று இங்கு ஒப்பிடத்தக்கது.[4]

ஆங்கிலேயரின் ஆட்சி, அடிப்படைப் பண்பாடுகளாக் கருதப்பட்ட மதம், பழக்க வழக்கம் போன்றவற்றில் மாறுதல் களை ஏற்படுத்தியதால், பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்ற உந்துதலே, இலக்கிய வெளிப்பாடாகத் தொடக்கத்தில் எழுந்தது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமுதாயத்தில் நடக்கும் (பாதிக்கும்) மனித உணர்வுகள் தான் படைப்பாளர்களுக்குப் படைப்புக்கான தூண்டுதலை அளிக்கிறது. வரலாற்று நிகழ்வுகளைவிட அதனடியாய் நிகழும் மனித உறவுகள், எண்ணங்கள் ஆகியவற்றைப் படம்பிடிப்பதே படைப்பாளனின் உந்துதலாக இருக்கமுடியும். 'A Novelist should concern himself with inner matters not with history' என்ற பங்கிம் சந்திரரின் கூற்று மேற்கூறிய கருத்துக்கு அரண் செய்கிறது.[5] வங்கப்பிரிவினையும், சட்டமறுப்பு இயக்கம் ஒத்துழையாமை இயக்கம் போன்ற அரசியல் போராட்டங்களும் எழுத்தாளர்களை அதிகம் பாதிக்காததோடு குழந்தைத் திருமணம், விதவைக் கண்ணீர், மதுவின் சீரழிவு, தீண்டாமை போன்ற சமூக உணர்வுச் செயல்களே அவர்களின் படைப்பு-களுக்கான மூலங்களையும் கொடுத்தன. எனவேதான். சமூகச் சீர்திருத்தக் கருத்துக்கள் அதிகம் இடம்பெறவும், அரசியல் நிகழ்ச்சிகள் அதிகம் காட்டப்பெறாமலும் தமிழ் இலக்கியம் திகழ்ந்ததை உணரமுடிகிறது.

இந்நிலை, கன்னடம், மலையாளம் போன்ற தென்னிந்திய மொழிகளிலும் காணப்படுகின்றது. கன்னட புனைகதை இலக்கியத்தில் 1942-க்குப் பிறகே விடுதலை இயக்கக் கருத்துக்-கள் வெளிப்பட்டன. 1920, 30களில் ஒரு மலையாள நாவல் கூட தேசியக் கருத்துக்களை தெரிவிக்கவில்லை என்ற அனுஜனின் கூற்று இங்கு நோக்கத்தக்கது.[6]

சிறுகதை இலக்கியத்தை எடுத்துக்கொண்டோமானால் சிறுகதைகளில் நிகழ்ச்சியைவிட நிகழ்ச்சியின் அடியாய்த் தோன்றும் உணர்வுகளே சிறப்பிடம் பெறுகின்றன. சிறு கதையின் பண்பு விடுதலை இயக்க நிகழ்ச்சிகளைக் காட்டு வதற்கு ஏதுவாக இல்லாமல், மெல்லிய மன உணர்வுகளைச் சித்தரிக்கும் இயல்பினதாக விளங்குகின்றது. எனவே அரசியல் நிகழ்ச்சிகள் சிறுகதைகளில் இடம் பெறாமை வியப்பிற்குரிய தன்று. செம்மையான சிறுகதை இலக்கியத்திற்கு வித்திட்டு, அதனை வளர்த்தது மணிக்கொடி இயக்கம் என்பது இலக்கிய வரலாறு உணர்த்தும் உண்மையாகும். அம்மணிக்கொடி எழுத் தாளர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது, இலக்கியப் பரி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சோதனைகளேயன்றி, இலக்கியம் வழி அரசியல் கருத்துக்களை மக்களுக்குக் கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை. கலை கலைக்காக என்ற தூய இலக்கிய நெறியைப் பின்பற்று பவர்களாகவும் இலக்கியத்தைப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்து வதை எதிர்ப்பவர்களாகவும் இவர்கள் இயங்கினர். இந்நிலை யில், விடுதலை இயக்கக் கருத்துக்களை,அவர்களால் உருவாக்கப் பட்ட சிறுகதைகளில் எதிர்ப்பார்க்கமுடியாது. மணிக்கொடி எழுத்தாளர்களின் படைப்புக்களை நோக்கும் போது, தமிழகத் தில் விடுதலை இயக்கப் போராட்டம் நடந்ததாகவோ அவ் வியக்கம் வெகுசன இயக்கமாக மாறியதாகவோ, அம்மாற்றங் கள் எழுத்தாளர்களைப் பாதித்ததாகவோ அறியமுடியாது. அரசியல் இயக்கமெல்லாம் இலக்கியத்திற்குப் புறம்பானவை என்று விதிமுறை வைத்துக்கொண்டது போல் நடத்துகொண் டார்கள் மணிக்கொடிக்காரர்கள் என்ற கருத்து இங்கு அரணாக உள்ளது.[7] மேலும், ஆங்கில ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைக்குப் பயந்துகொண்டு பலர் இக்கருத்துக்களை எழுத முன்வரவில்லை. இதனை க.நா. சுப்பிரமணியன் இக்கட்டுரை- யாளரிடம் நேரில் பேசும்போது குறிப்பிட்டுள்ளார். மணிக்- கொடி எழுத்தாளர்கள் சிலரை நோக்கி, பாரதியின் நண்பர் வ.ரா. 'தேசம் ஒன்று இருக்கிறது என்பது உங்களுக்கு நினை விருக்கிறதா?' என்று கேட்ட நிகழ்ச்சியும், மணிக்கொடி எழுத் தாளர்களின் மனநிலையை வெளிக்காட்டும் எனலாம்.

தமிழக அரசியல் நிலை:

1885 இல் இந்திய தேசியக் காங்கிரஸ் துவக்கப்பட்டது. இருபது ஆண்டுகள்வரை, ஆங்கில ஆட்சிக்கு வாழ்த்துத் தெரி விப்பதும், விண்ணப்பம் செய்வதுமே அதன் செயற்பாடாக இருந்தது. 1906 இல் தாதாபாய் நௌரோஜி 'சுயராஜ்யம்' என்ற கோஷத்தை முன்வைத்தார். திலகர் போன்றோர் அதனைப் பின்பற்றித் தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர். கோகலே போன்றவர்களின் மிதவாதப்போக்கு அவர்களுக்கு உடன்பாடில்லை. இந்நிலையில், பாரதி ஒருவன்தான் கவிதை வழி சுதந்திர வேட்கையை உணர்த்துகின்றான். திலகரைப் பின்பற்றும் தீவிரவாதியாகத் திகழ்கின்றான். தீவிரவாதம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உச்ச கட்டத்தை அடையும் நிலையில் முதல் உலகப்போர் 1914 இல் தொடங்கியது. இந்தியா முழுமையும் தீவிரவாத இயக்கச் செயல்களும் முதல் உலகப் போரின் கொடுமைகளும் நிகழ்கின்றன.

இந்தியா விடுதலைப் போராட்டத்தில் சென்னை, மாநிலத்தின் போக்கு, வேறுபட்ட நிலையில் இருந்தது. முதல் உலகப்போரின் முடிவும், காங்கிரஸ் இயக்கத்திற்குக் காந்தியின் தலைமையும் (1919) புது எதிர்பார்ப்பை மக்களிடையே ஏற்படுத்தியது. அதுவரை இந்திய அரசியல் விடுதலைப் பேராட்டமானது, பொதுமக்களிடையே பரவலாகத் தாக்கம் பெறவில்லை. இந்நிலையில், பார்ப்பனரின் ஆதிக்கம் தமிழகத்தின் அரசியல் நிலையைப் புதிய திசைநோக்கித் திருப்பிக் கொண்டிருந்தது. ஆங்கிலேய எதிர்ப்பு என்கிற நிலை குறைந்து, பார்ப்பன எதிர்ப்பு என்ற நிலை 1916 அளவில் உருவாகத் தொடங்கியது. எல்லாப்பதவிகளிலும் பார்ப்பனர்களே பரவியிருந்ததை உணர்ந்த சி. நடேச முதலியார், டி. எம். நாயர், பனகல் அரசர், பி. டி. தியாகராய செட்டியார் போன்றோர் ஒன்றுகூடித் ‘தென்னிந்திய நலவுரிமைச் சங்கம்’ என்ற அமைப்பை 1917 அளவில் தோற்றுவித்தனர். அவர்களுடைய கருத்துக்களை வெளியிட்ட நாளிதழின் (The Justice) பெயரினாலேயே அவ்வியக்கம் நீதிக்கட்சி என்றழைக்கப்பட்டது. 1920 முதல் 1936 வரை, இக்கட்சியின் ஆட்சி, 16 ஆண்டுகள் சென்னை மாநிலத்தில் நடைபெற்றது. இக்கட்சி ஆங்கிலேய அரசுக்கு ஆதரவாகவும் காங்கிரஸ் இயக்கத்திற்கு எதிர்ப்பாகவும் அமைந்தது.

இக்கால கட்டத்தில், தனித்தமிழ் இயக்கமும் (1916) தோன்றுகிறது, ஆரிய எதிர்ப்புணர்வு, ஆரியமொழி எதிர்ப்புணர்வு போன்றவை எழுந்தன. இவையெல்லாம் இந்தியத் தேசியம் என்கிற எண்ணத்தை மாற்றித் தமிழ்த்தேசியம் திராவிட தேசியம் என்கிற நிலைக்குக் கொண்டுசெலுத்தியது. காந்தியின் செயற்பாடுகளை வ.உ.சி. போன்ற தீவிரவாதிகள் ஏற்றுக்கொள்ள முன்வர வில்லை. வ. உ. சி. 1920 அளவில் இயக்கத்தினின்றும் ஒதுங்கி, இலக்கியப் பணி ஆற்றத் தொடங்கினார். காங்ரஸிலிருந்த திரு.வி.கவும் பிற்காலத்தில் ஒதுங்கி நின்றார். பாரதியை அடியொற்றித் தாசனாக மாறி, ராட்டினப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டு பாடிய பாரதிதாசன், திராவிட நாடு, தமிழ்மொழி என்று பாடத் தொடங்கினார். காந்தியின் வருகை வரை வெகுஜன இயக்கமாக மாறாதிருந்த விடுதலை இயக்கம், தமிழகத்தின் அரசியல் நிலைப்போக்கால், மேலும் நிலை குலைந்து, வேறுதிசையில் அடியிடத் தொடங்கியது. நீதிக்கட்சி யோடு, சிங்காரவேலர் தொடங்கிவைத்த பொதுவுடைமைச் சிந்தனைகளும் தமிழகத்தில் பரவத் தொடங்கின. காங்கிரஸி லிருந்து விலகி சுயமரியாதை இயக்கத்திலிருந்த ப. ஜீவானந்தம் போன்றோர் பொதுவுடைமைக் கட்சி வளருவதற்கு உறு துணையாக நின்றனர்.

நீதிக்கட்சி ஆட்சியில் பல சமூக சீர்திருத்தச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன. பெண்களுக்கு வாக்குரிமை (1921), தேவதாசி ஒழிப்புச் சட்டம் (1930), கலப்பு மணப் பாதுகாப்புச் சட்டம் (1921), வகுப்புவாரி பிரதிநிதித்துவச் சட்டம் (1922) போன்றவை நிறைவேற்றப்பட்டன.[8] இதனால், ஆங்கிலேயே எதிர்ப்புணர்வு என்பது வேகம் குறைந்து, பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு மேலோங்கி நின்றதோடல்லாமல், சமூகச் சீர்திருத்த, கொள்கைகளே அடிப்படைக் கருத்தாக இருந்தது. அந்நிலை யில், எக்கொள்கையைப் பின்பற்றுவது என்ற குழப்ப நிலையில், எழுத்தாளர்கள் நடப்புக்களோடு ஒட்டாத மேனாட்டுத் தழுவல், மொழிபெயர்ப்பு என்ற நிலையில் நாவல்களை எழுதினர். இடையிடையே சீர்திருத்தக் கருத்துக்களையும் கூறினர். விடுதலை இயக்கக் கருத்துக்கள் இடம்பெறாத நிலையிலேயே பெரும்பாலான படைப்புக்கள் வெளிவந்தன. காந்திய எதிர்ப்பியக்க நாவல்களும் அக்கால கட்டத்தில் எழுந்தன என்பது குறிப்பிடத்தக்கது.[9] ஆயிரக்கணக்கான சிறு கதைகளில் ஏறத்தாழ பத்து சிறுகதைகளே அரசியல் போராட்டங்களை சுட்டுகின்றன.[10] இக்காலச் சூழலில்தான், எழுத்தாளர்கள் பலர் ஒன்றுகூடி, பாடுபொருளைத் தவிர்த்து, உருவத்தையேமையமாகக் கொண்ட இலக்கியப்படைப்புக்களை உருவாக்கத் தொடங்கினர். ந. பிச்சமூர்த்தி புதுக்கவிதை வழி யாகவும் புதுமைப்பித்தன், கு. ப. ரா., க. நா. சு. போன்றவர் கள் சிறுகதை மற்றும் நாவல் வழியாகவும் இச்சோதனை முயற்சி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களை மேற்கொண்டனர். 1933 அளவில் தோன்றிய மணிக்கொடி இயக்கம் மேற்கண்ட சூழலில் சிறுகதை சோதனை முயற்சிகளை மேற்கொண்டதையும் அவர்களது படைப்புக்களில் தேசிய இயக்கக் கருத்துக்கள் முற்றிலும் இடம் பெறாததையும் வைத்து நோக்கும்போது இக்கருத்து உறுதிப்படுகிறது எனலாம்.

மேற்கூறியவற்றால், பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைக்காலந் தொடங்கி இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலம் முடியவுள்ள (அதாவது இந்தியா விடுதலை பெற்ற ஆண்டுவரை) ஏறத்தாழ நூறாண்டு காலத்தில், புனைகதைகளான நாவல், சிறுகதை முதலியவற்றில் விடுதலைப் போராட்டத்தின் தாக்கம் குறைவாகவும் சமூக சீர்திருத்தக் கருத்துக்கள் அதிகமாகவும் இடம்பெற்றன என்பதும், இதற்கு இந்தியாவின் பிற பகுதியினின்றும் மாறுபட்ட அரசியல் போக்கு, தமிழகத்தில் நிலவியதும், இலக்கியத்தின் சமூகவியற் பண்பும் காரணிகளாக அமைந்தன என்பதும் தெளிவாகின்றன.

அடிக்குறிப்புகள்:

1 மா. இராமலிங்கம் — நூறாண்டு தமிழ் நாவல் தரும் செய்தி,(தி. பாக்கியமுத்து (பதி. ஆ.), கிருஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1979) பக். 61.

2 க. கைலாசபதி — தமிழ் நாவல்களில் மனித உரிமைகளும் மக்கள் போராட்டமும் (தி. பாக்கியமுத்து (பதி.ஆ)· கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1980) பக். 12.

3 பெ. கோ. சுந்தர்ராஜன் & சோ. சிவபாதசுந்தரம் — தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும் (கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1977) பக். 165.

4 Changes, for instance, in the structure and formation of the family or of economic life - changes which

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

produce a conflict of values which finds its expression in literature.

- Joan Rockwell — Fact in Fiction (London Routledge & Kegan paul, 1974.) P. 4.

5 K.M. George(ed.) — Comparative Indian Literature, (Kerala Sahithya Academie Trichur, 1984), Vol. I, P. 611.

6 It is interesting to note that creative prose was not much influenced by nationalist sentiments. No notable Novel was inspired by these ideals in Malayalam in the twenties and thirties.

- IBID Vol. II, P. 1240.

7 என். ஆர். தாசன் — மூன்று பார்வைகள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1984, பக். 212.

8 சே. இராசேந்திரன் — தமிழ்க்கவிதையில் திராவிட இயக்கத்தின் தாக்கம், (ஸ்ரீ மணி பதிப்பகம், சென்னை, 1985), பக். 52.

9 சபா. அருணாசலம் — தமிழ் நாவல்களில் காந்தியத் தாக்கம், (காளத்தி நூலகம், தேவக்கோட்டை, 1981) பக். 8-50.

10 ந. சாந்தா ஆப்தே — தமிழ்ச்சிறுகதைகளில் காந்தியத் தாக்கம் (செந்தில் முருகன் வெளியீடு, மதுரை, 1988), பக். 273.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிற மாநிலத்தில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள் — ஒரு கண்ணோட்டம்

ஒரே மொழியின் வெவ்வேறு நாட்டிலக்கியங்கள் தனித்தன்மை பெற்று விளங்குகின்றன. ஆங்கில மொழியில் எழுதப்பட்டாலும், இங்கிலாந்தின் இலக்கிய மொழிநடையும் அமெரிக்காவின் மொழிநடையும் மாறுபட்டனவாகும். அவற்றை, ஒரே மொழியால் பிரிக்கப்பட்ட இருநாடுகள் என்றுகூடச் சொல்லலாம். தமிழ் மொழியிலும், தமிழக மொழிநடையும், இலங்கை மொழிநடையும் வேறுபட்டனவே. இப்பிரிவுகட்குக் காரணம், ஒரே மொழியின் படைப்புக்கள் இடத்திற்கும், சூழலுக்குகேற்ப மாறுபடுகின்றன என்பதேயாகும். இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு, பிற மாநிலங்களில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள் இங்கு ஆய்வுக்குட்படுத்தப்படுகின்றன.

அதற்குமுன், சில வரையறைகளை வகுத்துக்கொள்வது தெளிவுக்கு வழிவகுக்கும்.

ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்குக் குடிபெயர்ந்து அங்கே இலக்கியம் படைத்தல் என்பது 'Immigrants Literature' என்ற பிரிவில் அடங்கும். இப்பிரிவில், பெருங்கூட்டமாகக் குடியேறிய மக்களில் சிலர் அங்கேயே வாழ்ந்து. வளர்ந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இலக்கியங்களைப் படைத்தல் என்பதும்[1], (இப்படைப்பு அந்நாட்டின் தேசிய இலக்கியமாகிவிடும். சான்று: மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்புக்கள்). எழுத்தாளர்களாக உள்ளவர்கள், தொழில் முதலிய காரணங்களால் வெளிநாடு சென்று தங்கும்போது இலக்கியங்களைப் படைத்தல் என்பதும் அடங்கும் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, பணியின் பொருட்டு போலந்து சென்றார். அங்குப் போலந்தின் பின்னணி கொண்டு 'ஏசுவின் தோழர்கள்' என்ற நாவலை எழுதினார். எழுத்தாளர் அகிலன் மலேசியா சென்றுவந்து 'பால்மரக் காட்டினிலே, என்ற நாவலை எழுதினார். இவை பிறநாட்டுப் பின்னணிகளைக் கொண்டிருப்பினும், தமிழகப் படைப்புக்களே. அவ்வந்நாட்டின் இலக்கியமாக அவற்றைக் கருதமுடியாது எனலாம்.

இக்கட்டுரையில், ஒருநாட்டிற்குள் தாய்மொழிப் பகுதியை விட்டு, வேற்றுமொழிப் பகுதியில் சென்று வாழ்ந்த / வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களே நோக்கப்படுகின்றன. இவ்வாய்வின்வழி, தாய்நாட்டிலிருந்து படைக்கும் இலக்கியத்திற்கும், பிறமொழி, பண்பாட்டுச் சூழலிலிருந்து படைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளையும் உணரமுடியும்.[2] வேறுமாநிலத்திற்குச் சென்று வாழும் எழுத்தாளர்களின் படைப்பு என்று நோக்கும்போதும் சில வரையறைகளை ஏற்படுத்த வேண்டியுள்ளது. ஒரு படைப்பை உருவாக்க நினைப்பவர்கள், அப்படைப்பின் பின்னணியை நேரில் கண்டும், அச்சூழலை உற்றுநோக்கியும் எழுத விரும்பி, அந்தப் பகுதிக்குச் சென்று, தங்கி, சில குறிப்புக்களை எடுத்துக் கொண்டு வந்து எழுதும் வழக்கமும் உண்டு. எழுத்தாளர் ராஜம் கிருஷ்ணன் 'வளைக்கரம்' என்ற நாவலை எழுதுவதற்கு கோவா சென்று தங்கி, தகவல்களைத் திரட்டினார் என்பதை அவரே குறிப்பிட்டுள்ளார். இம்மாதிரியான படைப்புக்கள் இவ்வரையறைக்குள் அடங்காது என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது. இவ்வாறன்றி, தமிழ் எழுத்தாளர்களாக உள்ளவர்கள் பணி மற்றும் பிற காரணங்களுக்காகப் பிற மாநிலங்களில் தங்கி வாழவேண்டிய சூழலில் படைக்கப்பட்ட இலக்கியங்களே இவ்வரையறைக்குள் வருகின்றன. இவ்வாறுள்ள நாவல், சிறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைகள் பல இருப்பினும், கட்டுரையின் வசதி கருதி, கீழ்க் கண்ட படைப்புக்கள் மட்டும் சான்றுகளாகக் கொள்ளப்படு கின்றன.

	நீல. பத்மநாபன்	(பள்ளிகொண்டபுரம்)
கேரளா	மா. அரங்கநாதன்	(வீடு பேறு)
	மாதவன்	(ஆனைச்சந்தம்)
	ஆதவன்	(காகித மலர்கள்)
டில்லி	இந்திரா பார்த்தசாரதி	(மாயமான் வேட்டை)
	வாஸந்தி	(மௌனப் புயல்)
பம்பாய்	நாஞ்சில் நாடன்	(மிதவை)
ஆந்திரா	அசோகமித்திரன்	(18-ஆவது அட்சக்கோடு)
	சுப்ரபாரதி மணியன்	(மற்றும் சிலர்)

(மேற்குறிப்பிட்ட எழுத்தாளர்கள் அனைவரும் இன்னமும் அவ்வப்பகுதிகளில் வாழ்ந்துகொண்டிருப்பவர்கள் அல்லர். இந்திரா பார்த்தசாரதி, அசோக மித்திரன், நாஞ்சில் நாடன் போன்றவர்கள் அவ்வப்பகுதியிலிருந்து திரும்பிவிட்டார்கள். எழுத்தாளர் ஆதவன் காலமாகிவிட்டார். மற்றவர்கள் அவ்வப்பகுதியிலேயே இருக்கிறார்கள். பிறமாநிலத்திலிருந்து எழுதும் தமிழ் எழுத்தாளர்களில் மேற்குறிப்பிட்டவர்களன்றி இன்னுஞ்சிலர் இருக்கின்றனர்.)

மேற்குறிப்பிட்ட படைப்புக்களை, தமிழகத்தில் எழுதப் பட்ட பல படைப்புக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மொழிநடை, பின்னனி, கரு, கதைமாந்தர் போன்ற பல வற்றிலும் வேறுபட்டிருப்பதைக் காணலாம். இவ்வாறு வேறு படுவது மட்டுமல்லாமல், ஒரு மாநில மொழி, பல்வேறு தேசிய இனப் பின்னணி கொண்ட இலக்கியங்களைப் பெற்றுவிடு கின்றது. பலமொழிகளில் எழுதப்பட்ட இந்திய இலக்கியம் என்ற வரையறையைக் கடந்து, ஒரே மொழியில் எழுதப்பட்ட பல்வேறு பண்பாட்டுச் சூழல்கொண்ட இலக்கியம் என்ற நிலையையும் இது ஏற்படுத்துகிறது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கரு:

பிறமாநிலத்தில் வாழுகின்றபோது, பிறமொழி பண்பாடு கொண்ட மனிதர்களை எழுத்தாளர் சந்திக்கின்றார். அங்கு நிகழ்கின்ற நிகழ்ச்சிகள், தமிழகத்தில் நிகழாதவையாகவும் இருக்கலாம். அத்தகு பிரச்சினைகள் எழுத்தாளரை எழுதத் தூண்டலாம். அத்தூண்டலில் எழும் கதையின் கரு, தமிழக எழுத்தாளர்களிடம் காண முடியாததாக இருக்கும்.

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி கொலையுண்டபோது, தில்லியில் பல சிக்கியர்கள் கொல்லப்பட்டனர். இந்நிகழ்ச்சி தில்லித் தலைநகரைப் பெரிய பாதிப்புக்குள்ளாக்கியது. ஆனால் தமிழக எழுத்தாளர்களிடம் இத்தகு கருவைக்கொண்ட படைப்புக்கள் எழுவதற்கு வாய்ப்பில்லை. தில்லியில் வாழும் தமிழ் எழுத்தாளர் வாஸந்திக்கு இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. அப்பாதிப்பின் விளைவே, 'மௌனப் புயல்' என்ற நாவலுக்கு அடித்தளமிட்டது.[3] இதுபோன்றபடைப்-புக்கள் தமிழுக்குப் புதுமையானவையே.

நீல பத்மநாபனின் 'பள்ளிகொண்டபுரம்' நாவல் பற்றிக் கூறவந்த க. நா. சு.,

> 'இது சிறந்த நாவல்' தமிழில் மலையாளி ஒருவரின் வாழ்க்கையைத் தருவதால் நாவலுக்கு ஆழம் கூடு-கிறது. இந்த மாதிரி Bicultural நாவல்களினால் தமிழின், தமிழ் நாவலின் Dimensions கூடுகின்றன. இந்த நாவலை வாசுதேவன் நாயர் எழுதியிருந்தால் வேறு விதமாக இருக்கும்.

என்கிறார்.[4] பிற பண்பாடு ஒன்றினை மற்றொரு பண்பாடு கொண்ட எழுத்தாளர் எடுத்துக்கூறும் நிலை என்பது, பிற மாநிலத்தில் வாழும் எழுத்தாளர்களாலேயே ஏற்படக்கூடிய ஒன்று என்பது உணரத் தக்கது.

மொழி தெரியாத மாநிலத்தில் வாழத் தலைப்படும் சிறுவனின் மன நிலையைக் காட்டும் சிறுகதையும் உள்ளது. இதுபோன்ற கருவுடைய கதைகள் இப்பகுப்பிற்குள் அடங்குவன-வாகும். மா. அரங்கநாதனின் 'வீடுபேறு' என்ற சிறுகதைத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொகுப்பில் 'ஆதல்' என்ற கதை இப்பின்னணி கொண்டு எழுதப்பட்டது. இக்கதை, மொழிநடை என்ற பகுப்பிற்குள் அடங்குவதைவிட, மொழிச் சிக்கலைக் கருவாகக்கொண்டு உருவெடுத்துள்ளது என்பதே பொருந்தும். மதுரையிலிருந்து கேரளாவுக்குச் சென்ற சிறுவன், மொழிபுரியாமல் எதிலும் ஆர்வமில்லாமல் இருக்கின்றான். ஒருநாள், எதிர்வீட்டில் பிள்ளையைப் பறி கொடுத்த தாய் புலம்புகின்றாள். அம்புலம்பலில் 'என்றே பொன்னு மவனே – இனிநான் ஞான் எந்து செய்யும்' என்கிறாள்.[5] அப்போது அச்சிறுவனுக்குத் தன் தாய் தம்பியைப் பறிகொடுத்து, 'என்னப் பெத்த ராசா – இனிநான் என்ன செய்வேன்' என்று புலம்பிய சொற்கள் புரிந்து விட்டதாக ஆசிரியர் காட்டுகின்றார். சிறுகதையின் கருவே இதுதான். இத்தகு கதைகள், தமிழில் புதிய பரிமாணத்தைப் பிற மாநிலம் வாழ் எழுத்தாளர்கள் மூலம் பெறுகின்றன என்பது சிந்திக்கத்தக்கது. இம்மாதிரியான சூழல் நிச்சயமாகத் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் எழுத்தாளர்கட்கு வாய்க்காது என்பதும் குறிப்பிடத்தக்கது. பம்பாய்க்கு வேலை தேடிச் செல்லும் இளைஞன் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கருவாகக்கொண்ட, 'மிதவை' நாவலும் ஹைதராபாத்திற்குக் குடும்பத்தோடு செல்லும் இளைஞனின் மனநிலை, மற்றவர்களோடு பழகும் போக்கு போன்றவற்றைக் கருவாகக்கொண்ட '18 வது அட்சக் கோடு' நாவலும் தமிழுக்குப் புதிய கருவுடைய படைப்புக்களாகும்.

பின்னணி:

வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட தமிழ்ப்பகுதிகளே பெரும்பாலும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்பில் இடம்பெறும். பிற மாநிலத்தில் வாழும் எழுத்தாளர்கள் படைக்கும்போது, தமிழகம் அல்லாத பின்னணி கொண்ட படைப்புக்கள் தமிழில் புதுமையானவையே. (மொழிபெயர்ப்புப் படைப்புக்களை இங்கே எடுத்துக்கொள்ளக்கூடாது).

'மிதவை' என்ற நாவலில் நாஞ்சில் நாடன், தன் புதினத்தின் கதைக்களனைக் கன்னியாகுமரியின் உள் கிராமம் ஒன்றிலிருந்து இந்தியாவின் பெரும் நகரமான பம்பாய்க்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நகர்த்திச் சென்றிருக்கிறார். வேலைதேடி பம்பாய் செல்லும் இளைஞனின் கதை இங்கே ரத்தமும் சதையுமாகப் படைக்கப்பட்டிருக்கிறது.[6] பம்பாய் என்னும் நகரத்தின் நெருக்கடிகளும் மூச்சுத் திணறல்களும் ஒரு திரைப்படம் போல் நம் கண்முன் விரிகின்றன. இவைபோன்ற கதைப் பரப்பெல்லாம் தமிழ் நாட்டில் இருந்துகொண்டு எழுதும் எழுத்தாளர்கட்கு வாய்ப்பதில்லை.

'மற்றும் சிலர்' என்ற சுப்ரபாரதிமணியன் எழுதிய நாவலுக்கு முன்னுரை எழுதிய செ. யோகநாதன் 'தமிழ் வாசகர்களுக்குப் புதிய களம் ஒன்றினை அறியப்படுத்துகின்ற இன்னொரு தரமான கதை 'மற்றும் சிலர்' என்று குறிப்பிட்டுள்ளார்.[7] புதிய களம் என்பது ஆந்திர மாநிலத்தின் செகந்திராபாத்தின் பின்னணியையே குறிக்கும். செகந்திராபாத்தின் நகரச் சூழல், அங்கு வாழும் மக்களின் இந்தி, தெலுங்கு கலந்த பேச்சுமொழி போன்றவை தமிழ் நாவலுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுக்கின்றன.

அசோகமித்திரனின் '18வது அட்சக்கோடும்' ஆந்திராவின் பின்னணியை, இந்தியா சுதந்திரம் பெறுவதற்கு முன்னும் பின்னுமுள்ள கால அளவில் காட்டுகின்றது. ஹைதராபாத் நகரம், பஷீர்பாக், கிங்க்ஸ்வே, ரெஜிமெண்டல்பஜார் போன்ற இடங்கள் நாம் பார்த்திராவிட்டாலும்கூட, பார்த்திருப்பது போலவே தோற்றமளிக்கிறது.[8] இதேபோல் டில்லியின் சூழல்களை ஆதவனின் 'காகித மலர்க'ளிலும்[9] இந்திராபார்த்தசாரதியின் 'மாயமான் வேட்டை'யிலும்[10] காணலாம்.

'பள்ளிகொண்டபுரம்' நாவலுக்கு அணிந்துரை எழுதிய என்.பி. கிருஷ்ணவாரியார் 'திரு நீலபத்மநாபன் திருவனந்தபுரம் நகரின் ஆத்மாவை தம் கற்பனையின் பரந்த நுண்ணிய அலை வீச்சில் சிக்கெனப் பிடித்து நாமெல்லோரும் காண தெள்ளத் தெளிவாய் காட்டுகிறார்' என்கிறார். மேலும், தகழி போன்றவர்கள் கூட மனித வாழ்வெனும் நாடகத்தைச் சித்தரிக்க வசதியான ஒரு பின்னணியாகத்தான் திருவனந்தபுரத்தைப் பயன்படுத்தினார்கள் என்றும், நீல பத்மநாபனுக்குத்தான்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கேரளத் தலைநகரின் ஆத்மாவின் ஒரு பரிபூரண தரிசனத்தைப் பெற முடிந்திருக்கிறது என்றும் குறிப்பிடுகிறார்.[11]

இவ்விடத்தில் இன்னொன்றையும் கவனத்திற்கொள்ள வேண்டும். சில துப்பறியும் நாவல்களில் பம்பாய் டில்லி போன்ற பெருநகரங்கள் இடம் பெறுதலுண்டு. ஒரு போலீஸ் அதிகாரியோ, துப்பறியும் கதைத் தலைவனோ அந்நகரங்களுக்குச் சென்று வருவதாகக் கூறப்பட்டிருக்கும். இருப்பினும், கதைமாந்தர்களோடு பிணைந்த பின்னணியாக அவை அமையாது. ஆனால், இங்குக் கூறப்பட்டிருக்கும் படைப்புக்கள் எழுத்தாளர் நேரடியாகக் கண்டும், உணர்ந்தும் எழுதப் பட்டவை என்பதும், அப்பின்னணிகள், கதையின் களத்தை விரிவுபடுத்துவதாகவோ கதைமாந்தர்களின் செயற்பாடுகளைப் பாதிப்பதாகவோ அமைந்திருக்கும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கதை மாந்தர்கள்:

பிறமாநிலத்தில் வாழும் தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்களில் வரும் கதைமாந்தர்கள் தமிழகக் கதைமாந்தரிடமிருந்து பல்வேறு வகைகளில் வேறுபட்டவர்களாகவும், பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொள்பவர்களாகவும் விளங்குகின்றனர். தமிழ்நாட்டிலிருந்து புலம்பெயர்ந்து. வெளியூருக்குச்சென்று வாழ்கின்ற தமிழர்களின் பல்வேறு பிரச்சனைகளை நோக்குவதே இப்படைப்புக்களின் நோக்கமாக இருக்கலாம்.

இதுவரை குறிப்பிடப்பெற்ற நாவல், சிறுகதைகளின் கதைமாந்தர்கள், இப்பின்னணியிலேயே நடமாடுகின்றவர்களாக விளங்குகின்றனர். தெலுங்குதேசத்தில் குடியேறிய ஒரு தமிழ்க் குடும்பத்தின் – குறிப்பாக இந்துக் குடும்பத்து மூத்த பையனின் அனுபவங்களைப் பற்றியது அசோகமித்திரனின் '18வது அட்சக்கோடு'. சந்திரசேகரனின் தந்தைக்கு, ரயில்வேயில் மாற்றலாகி, ஹைத்ராபாத்தில் பணி செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. ரயில்வே காலனியில் உள்ள தமிழ்ச் சிறுவர்களுடன் நெருக்கத்தை உணருவதைவிடவும், தமிழரல்லாத முஸ்லீம், கிறிஸ்தவச் சிறுவர்களுடன் அதிக அன்னியோன்னியமாக உணருகிறான் சந்திரசேகரன். வேற்றூரில், வேற்றுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலாச்சாரத்திடையே வளர நேர்கிற இளஞ்சிறார்கள்; தம் பரம்பரையான மரபுச் சூழலில் தம்மை முழுதும் இழந்து-விடாமல் இதற்கப்பாலும் பார்க்கத் தெரிந்த பரந்த கண்ணோட்டம் உள்ளவர்களாக, தம் சூழலிலிருந்து மாறுபடு-கிறவர்களிடமும், நேசமுள்ளவர்களாக உருவாகிறார்கள். இத்தகு பிரச்சனைகளை மையமிட்ட கதைமாந்தர்களை, பிற-மாநிலத்தில் வாழும் எழுத்தாளர்களாலேயே உருவாக்கமுடி-யும். இந்திராபார்த்த சாரதியின் கதைமாந்தர்கள் டில்லியில் எதிர்கொள்ளும் அரசியல் பிரச்சனைகளின் பிடியில் சிக்கித்-தவிப்பவர்களாகக் காட்டப்படுகின்றனர். மாயமான் வேட்டை யில் வரும் ஜெயராமன், டில்லியின் அரசியல் சூழலில் மாட்டி, வெளியேற முடியாதவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.

முன்னரே, மா. அரங்கநாதனின் 'ஆதல்' என்ற சிறுகதை யில், மொழி புரியா முத்துக்கருப்பன் என்ற கதைமாந்தனைக் கண்டோம். மொழிபுரியாத் தேயத்து எதிர்கொள்கின்ற பிரச்சனைகளைக் கொண்டுள்ள கதைமாந்தர்கள், இவ் வரையறையில் வெளிப்படுகின்றனர்.

புதிய இடத்தில் தமிழ்க் கதைமாந்தர்களைப் படைத்தல் மட்டுமின்றி, பள்ளிகொண்டபுரம் நாவலில் வருகின்ற அனந்தன் நாயர் போல அம்மாநிலக் கதைமாந்தர்களைப் படைத்தல் என்ற நிலையிலும், தமிழகப் படைப்புக்கள் புதிய பரிமாணங்-களைப் பெறுகின்றன. இப்படைப்புக்களால் புதிய பண்பாடு கொண்ட, தமிழகத்தில் இடம்பெறாத பிரச்சனைகளின் பின்னணி கொண்ட கதை மாந்தர்களை அறியமுடிகின்றது.

மேலும், தமிழகத்தில் வழக்கில் இல்லாத பெயர்களைக் கொண்ட - கதைமாந்தர்கள் நமக்கு அறிமுகமாகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. சிவ்ராம் ராவுத், ஷ்யாம் சரண் சுக்லா (மிதவை) தாராபூர்வாலா, (18-ஆவது அட்சக்கோடு) குஞ்ஞி (ஆனைச்சந்தம்) விக்கிரமன் தம்பி (பள்ளிகொண்ட புரம்) மன்மோஹன்சிங் (மௌனப்புயல்) போன்ற பெயர்கள் தமிழுக்கும், தமிழகத்துக்கும் அறிமுகம் ஆகாதவை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மொழிநடை:

ஒரே மாநிலத்தில் தோன்றிய படைப்பாயினும், வட்டாரச் சூழலுக்கேற்ப, (தஞ்சை, நாகர்கோயில், சென்னை) மொழி நடையும், எடுத்துக்கொண்ட பின்னணி, கதைமாந்தர்க்கேற்ற பேச்சு மொழியும் வேறுபடுதலைக் காணலாம். பிற மாநிலச் சூழலில் இலக்கியம் எழும்போது, அம்மாநில வழக்குச் சொற்கள் இடம்பெறுதல் இயல்பாகிறது. புதிய சொற்கள் தமிழ்ப்படைப்புக்களில் அறிமுகமாகின்றன. 'பள்ளிகொண்ட புரம்' நாவலில் பல சொற்கள் புதிதாக எடுத்தாளப்பட்டு உள்ளன. அவற்றின் பொருளும் அடிக்குறிப்பில் இடம்பெறுகின்றன. மலையாளச் சொற்கள் தமிழ் உருவம் பெறுகின்றன என்று சொல்லுமளவிற்கு அமைந்துவிடுகின்றன. சான்றாக,

1. ஊட்டுப்புரை வார்ப்புக்கள் (பக். 15) – கோவிலுக்குள் பந்திச் சாப்பாடு நடக்கும் இடத்துப் பெரிய பாத்திரங்கள்.
2. கெட்டியவள் (பக். 18) - மனைவி
3. தறவாட்டுக்காரணவர் (பக். 21) - குடும்பத் தலைவர்
4. செறுப்பக்காரணன் (பக். 22) – இளைஞன்
5. சீவேலி (பக். 26) – திருவிழா

போன்றவை குறிப்பிடத்தக்கன. இதைப் போன்று, தெலுங்கு, இந்திச் சொற்களும் தமிழில் கலப்பதை இவர்கள் படைப்புக்கள் வழி உணரமுடிடுகிறது.

இந்திரா பார்த்தசாரதியின் நாவல்களில் ஆங்கிலச் சொற்கள் அதிகம் கலந்து வருவதற்கான காரணத்தைக் குறிப்பிடும்பொழுது, 'அநேகமாக டில்லியிலுள்ள சமூகத்தைப் பற்றிதான் நான் எழுதி வருகிறேன். நம் நாட்டில் சமூகத்தின் மேல் தளத்தில் உள்ள படித்தவர்கள் அறிவுபூர்வமான ஒரு விவாதத்தில் ஈடுபட்டிருக்கும்போது ஆங்கிலத்தில் பேசுவது சகஜமாக இருக்கிறது'.[12] என்று குறிப்பிடுகின்றார். எனவே, எடுத்துக்கொள்ளும் கதை, பங்கேற்கும் கதைமாந்தர் போன்றவற்றிற்கேற்ப மொழிநடை அமையும் என்பதும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புலனாகின்றது. இந்திராபார்த்தசாரதியின் கதைமாந்தர்கள் பெரும்பாலோர் உயர்தர மத்திய வர்க்கத்தினர் (Upper middle class) என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் இன்னொன்றையும் நினைவில் கொள்ளவேண்டும். பிற மாநிலங்களுக்குச் செல்லும் எழுத்தாளர்களின் கல்வி, தொழில் போன்றவற்றின் அடிப்படையிலும் அவரது படைப்புக்கள் நோக்கப்படவேண்டும். அவ்வாறு பார்ப்பின், மொழி நடையின் தன்மையையும் உணரமுடியும். இந்திராபார்த்தசாரசி, வாஸந்தி ஆகியோர் படைப்புக்களில் இந்தி கலந்த தமிழ் நடையும் அசோகமித்திரன், சுப்ரபாரதிமணியன் முதலியோர் நாவல் களில் இந்தி, தெலுங்கு கலந்த தமிழ் நடையும் நீல பத்மநாபன் ஆ. மாதவன் போன்றோர் இலக்கியங்களில் மலையாளங்கலந்த தமிழ் நடையும் காணப்படுகிறது.

கேரளப் பின்னணி கொண்டு எழுதும் மற்றொரு, எழுத்தாளரான ஆ. மாதவனைப் பற்றி பி. மணி என்பவர் 'திருவனந்தபுரத்து சாலை வட்டாரத்துத் தமிழை பேச வைத்து இலக்கியம் செய்பவர்களுக்குள் முதல் ஸ்தானத்திலேயே நிற்பவர் மாதவன்'[13] என்ற கூற்று அவ்வெழுத்தாளனின் மொழிநடைக்குக் கட்டியங் கூறுகின்றது.

மேற்கூறியவற்றால், பிறமாநிலங்களில் வாழும் சூழலில் தமிழ் எழுத்தாளர்கள் படைக்கும் இலக்கியங்கள், தமிழகத்தில் படைக்கப்படும் இலக்கியங்களினின்றும் கரு, கதைமாந்தர், பின்னணி, மொழிநடை போன்ற கூறுகளில் வேறுபட்டிருப்பதையும், ஒரு மாநில மொழி பல்வேறு தேசிய, பண்பாட்டுப் பிரச்னைகளைக் கொண்ட தேசியப் படைப்புக்களை உருவாக்க முடியும் என்பதையும் இதனால் தமிழ்மொழிக்குப் புதிய பரிமாணங்கள் கொண்ட படைப்புக்கள் கிடைக்கின்றன என்பதையும் அறியமுடிகின்றது.

அடிக்குறிப்புக்கள்:

1 வெளிநாடுகளில் குடியேறிய தமிழர்களின் இலக்கியத் தன்மையை மேலும் அறிய வேண்டுமாயின் காண்க.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1 இரா. தண்டாயுதம், 'பலமொழி - பண்பாட்டு சூழலில் இலக்கியத்தின் பங்கு' ஓர் இலக்கிய ஆய்வு, தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1985, பக், 255-276.

2 ம. மதியழகன், குடியேறிகளின் இலக்கியத் தன்மை, ஆறாம் உலகத் தமிழ் மாநாட்டு மலர், மலேசியா, 1987, பக். (குறிக்கப்பெறவில்லை).

3 வாஸந்தி, மௌனப்புயல், கங்கை புத்தக நிலையம், சென்னை, 1985.

4 நீல பத்மநாபன், தலைமுறைகள், ஸ்ரீ கிருஷ்ணம்மாள் வெளியீடு, நாகர்கோயில், 1968. பதிப்பின் பின்னால் க. நா. சு. வின் இக்கருத்து கூறப்பட்டுள்ளது.

5 மா. அரங்கநாதன், வீடுபேறு, வேள் பதிப்பகம், சென்னை, 1987, பக். 84.

6 நாஞ்சில் நாடன். மிதவை, அன்னம் வெளியீடு, சிவகங்கை, 1986.

7 சுப்ரபாரதி மணியன், மற்றும் சிலர், நர்மதா பதிப்பகம். சென்னை. 1987.

8 அசோகமித்திரன், 18வது அட்சக்கோடு, சுந்தர நிலையம். சென்னை, 1986.

9 ஆதவன், காகித மலர்கள், நர்மதா பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு, 1985.

10 இந்திரா பார்த்தசாரதி, மாயமான் வேட்டை, தமிழ்ப் புத்தகாலயம். சென்னை, (இரண்டாம் பதிப்பு,) 1984.

11 நீல. பத்மநாபன். பள்ளிகொண்டபுரம், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் (இரண்டாம் பதிப்பு,) 1985. அணிந்துரையில் என்.வி. கிருஷ்ணவாரியார்.

12 இந்திரா பார்த்தசாரதி, தீபம் கட்டுரைகள், கலைஞன் பதிப்பகம், சென்னை, 1985, பக். 73.

13 ஆ. மாதவன், ஆனைச்சந்தம், அன்னம், சிவகங்கை, 1881, முன்னுரையில் பி. மணி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அசோகமித்திரனின் 'விடிவதற்குள்'

இந்திய மொழிகளில் சிறந்த சிறுகதைகளைத் தொகுத்தால், தமிழ் மொழியிலிருந்து அசோகமித்திரனின் சிறுகதை நிச்சயம் இடம்பெறும். இவரது கதைகள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. 'கரைந்த நிழல்கள்', '18 வது அட்சக்கோடு' போன்ற நாவல்கள் குறிப்பிடத் தகுந்த அவரது படைப்புக்களாகும். அசோகமித்திரனின் 'முறைப்பெண்' சிறுகதைத் தொகுப்பில் பல கதைகள் அடங்கியுள்ளன. அவற்றுள் ஒன்று 'விடிவதற்குள்' என்ற கதையாகும். இது 1984ஆம் ஆண்டின் இலக்கியச் சிந்தனையின் சிறந்த சிறுகதைக்கான முதற்பரிசைப் பெற்றது. படைப்பாளர் எம்.வி. வெங்கட்ராம் தெரிவு செய்த சிறுகதையிது. கணையாழியின் ஆசிரியராக இருந்தவர் அசோகமித்திரன். அவ்விலக்கிய இதழுக்குப் புதுமெருகூட்டிய பெருமை அசோகமித்திரனைச் சேரும். சாகித்ய அகாடமி வெளியீடான 'இன்டியன் லிட்டரேச்சர்' என்கிற இதழில் விமர்சனக் கட்டுரைகள் பல எழுதியவர். 'மூன்று பார்வைகள்' என்ற நூலில் என். ஆர். தாசனோடு இணைந்து இவர் எழுதிய நூல், விமர்சனக் கண்ணோட்டத்தில் குறிப்பிடத்தக்கது.

இலக்கியத்திற்கு இலக்கணம் காணுதல் என்பது பண்டு எளிதாயிருந்தது. நவீன படைப்புகளை வரையறை செய்தல் என்பது இன்று இயலாத காரியமாக உள்ளது. வரையறை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்ய இயலாமையே அதன் சிறப்பியல்பு என்று கூறுமளவிற்கு அவற்றின் போக்கு காணப்படுகின்றது. சிறுகதைக்கு இலக்கணம் வகுக்க முயன்ற எட்கர் ஆலன்போ திகைத்து நின்றான். இப்படித்தான் இருக்கிறது என்று வரையறையை வகுத்தவுடன், அதை மீறிப் புறப்பட்டு, இன்னொரு சிறுகதை வெளிவருகிறது.

இன்றையப் படைப்பாளர்கள் எவ்வளவு உத்தி முறைகளைக் கையாள முடியுமோ அவற்றையெல்லாம் பயன்படுத்தி வருகின்றனர். வெற்றிபெற்ற சிறுகதைகளைக் காட்டி இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சுட்டுவதும் பயனில்லாத முயற்சியாக முடிகிறது. வரையறைகளைத் தாண்டி நிற்கும் தன்மையைப் பெற்றதுதான் படைப்பிலக்கியம். இத்தகு போக்கிற்கு இடமளிக்கும் பேழையாகச் சிறுகதை மற்றும் நாவல் இலக்கியம் விளங்குகிறது எனலாம்.

உத்திக்காக வெற்றிபெற்ற சிறுகதைகள், உணர்வுகளை அழகுற வெளிக்காட்டிய சிறந்த சிறுகதைகள், கதையம்சம் அல்லது நிகழ்ச்சியை அழகுற வெளிப்படுத்திய, சிறுகதைகள் என்று பல்வேறு நிலைகளில் வெற்றிபெற்ற சிறுகதைகள் இது வரை வெளிவந்துள்ளன. அசோகமித்திரனின் 'விடிவதற்குள்' என்ற சிறுகதையில், எத்தகு உத்தியையும் கையாளாது நேரடியாகக் கதை சொல்லும் முறை (Straight Narration) இயல்பாக அமைந்த விதம், இச்சிறுகதையின் சிறப்பிற்கு முதற் காரணமாய் அமைகிறது. பல்வேறு உளைச்சல்களிடையேயும் மனித மனத்தின் ஓரிடத்தில் கருணை என்கிற இரக்கவுணர்வு மறைந்து நின்று, எப்போதோ வெளிப்படுகின்ற தன்மையை எடுத்துக் காட்டிய தன்மை, இச்சிறுகதையின் சிறப்பிற்கு இரண்டாம் காரணமாகிறது.

தண்ணீர் கிடைப்பதே அரிதான செயல் என்கிற நிலையில், பல்வேறு கஷ்டங்களுக்கிடையில் உடலாலும், மனத்தாலும் உளைந்த பங்கஜம், இரவு நேரத்தில் கண்விழித்து இரு வாளிகள் தண்ணீர் பெறுகிறாள். அவ்வாறு பெற்ற தண்ணீரை அவ்வீதியில் சுற்றும் கன்றுக்குட்டி வாய்வைத்துக் குடிக்கும் நிலையில், வேகம் வந்து அக்கன்றை விரட்ட வேண்டிய உடல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலை மற்றும் மனநிலையில் இருக்கும் பங்கஜம், 'சரி குடி' என்று சொல்கிறாள். அவ்வளவுதான்! கதையும் முடிந்துவிடுகிறது.

'சரி குடி' என்று பங்கஜம் கூறிய நிலையிலேயே வாசகர்களுக்கு உணர்த்த வேண்டியதை அசோகமித்திரன் தான் தொடங்கிவைத்த நிகழ்ச்சி மூலமாக உணர்த்தி விடுகிறார் அதற்குப்பின், அவளுடைய மனநிலையையோ அவளது தயாள குணத்தையோ ஆசிரியர் விவரிக்கவில்லை. விவரிக்க வேண்டிய நிலையில் சிறுகதையை அவர் உருவாக்கவில்லை. விவரித்திருந்தால் சிறுகதையின் உயிர்ப்புக் கெட்டு, அறிவுரைக் கட்டுரையாக மாறியிருக்கும்.

ஒரு கைக்குழந்தையும் சுமாராகப் பத்து வயதுடைய முத்து என்கிற பையனும் கொண்ட குடும்பம் பங்கஜத்தினுடையது. எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பினும் வாயில்லா ஜீவனுக்காக இரங்குகின்ற மனமுடைய பங்கஜம் தன் பிள்ளையிடம் எப்படி. யிருப்பாள்? கதையின் தொடக்கத்திலேயே ஆசிரியர் இயல்பாக அதனை வெளிக்காட்டிவிடுகிறார். 'பங்கஜத்துக்கு முத்துவை எழுப்புவதற்கு வேதனையாகத்தான் இருந்தது' என்றுதான் இச்சிறுகதை தொடங்குகிறது. தூங்கிக்கொண்டிருக்கின்ற தன் மகனை எழுப்பவேண்டாம் என்றுதான் நினைக்கிறாள். இரவு நேரம் தனியாகவும் செல்லமுடியாத நிலை; நிறைய வாளிகள் தண்ணீர் பிடிக்கவேண்டிய அவசரம் எல்லாம் சேர்ந்து அவளை வாட்டினும், தன் பிள்ளையைக் கஷ்டப்படுத்துகிறோமே என்ற தாய்மையின் உணர்வே இம்முதல் வரியில் வெளிப்பட்டு விடுகிறது.

நிகழ்ச்சியைவிட, நிகழ்ச்சியினடியாய்த் தோன்றும் உணர்வுகளே சிறுகதைப் படைப்பைச் சிறக்க வைக்கின்றன. கஷ்டப் பட்டுத் தண்ணீர் பிடிக்கும் தாயின் நிலை என்பதுதான் கதை நிகழ்ச்சி. கதையின் முடிவு வாசகர் மனத்தில் தோற்றுவிக்கும் பாவங்களே (உணர்வுகளே) சிறப்பான சிறுகதையாக இதனை நிலைநிறுத்துகிறது. 'மிகச் சில வரிகளில் மனித வாழ்க்கையின் உன்னதத்தைத் தொட்டும் காண்பித்துவிட்டார் ஆசிரியர்' என்கிறார் மாலன்.[1] அவர் கூற்று முற்றிலும் உண்மையே- ஆனால் ஒரு திருத்தம். சில வரிகள் என்பதற்குப் பதில், சில

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொற்கள் என்று கூற வேண்டும். மனித வாழ்க்கையின் உன்னதத்தைத் தொடுகின்ற படைப்புக்கள்தாம் காலம் மாறினும் நிற்கக் கூடியவையாக இருக்கும்.

பங்கஜத்தைச் சுற்றியுள்ள பின்னணிகள் எல்லாம், இரக்க-மென்பது இன்னதென்று அறியாதன. தண்ணீர் பிடிக்கச் செல்லும் இடத்தில் ஓர் ஆள் பங்கஜத்திடம், 'இனிமே இங்கே வராதீங்கன்னு போன தடவையே சொன்னேனே?' என்கிறார். இறுதியில், 'பக்கெட்டை வச்சுட்டு வெளியே நில்லுங்க. தண்ணி வந்தா உள்ளே வந்துக்கலாம்' என்கிறார். ஐஸ் டெப்போவில் தண்ணீர் பிடிக்கச் செல்கிறாள் பங்கஜம். 'ஏய் எங்கே போறே?' என்கிற காவல்காரனின் கொடூரமான வார்த்தைகள்; 'இன்னிக்கி ஒத்தரை உள்ளேவிட முடியாது. போ போ போ!' என்கிற வசவுகள் ஆகியவற்றை எதிர்கொள்கிறாள்

மீண்டும் பழைய இடத்துக்குத் தண்ணீர் பிடிக்க வருகிறாள் பங்கஜம். அங்கே நுழையும்போதே, 'இப்போ வந்துட்டே எங்கே உள்ளே போறே? நாங்கள்ளாம் உனக்கு மனுஷாள்-களாகத் தெரியலியா?' என்று ஒரு கிழவி ஏசுகிறாள். அடித் தடித்துத் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும் நிலையில், ஒரு பெண்ணிற்கு உதவுகிறாள் பங்கஜம். அவளுடைய வாளியை நிரப்பி வைத்துத் தன் வாளியை நகர்த்தும்போது, 'ஒருத்தரே அண்டா அண்டாவாத் தண்ணீ எடுத்துப்போனா மத்தவங்க என்ன பண்ணுவாங்க?' என்று ஒருவர் குறை கூறுகிறார்.

இவ்வாறு இரக்கமென்பதே எள்துணையும் இல்லாத கூட்டத்துக்கிடையில்தான் பங்கஜம், மூச்சே நின்றுவிடும் அளவிற்குக் கஷ்டப்பட்டுத் தண்ணீர் அடித்துச் சேமிக்கின்றாள். மனித வாழ்க்கையின் உன்னதத்தை வெளிப்படுத்த ஆசிரியர், இத்தகு முரணான பின்னணியை இயல்புறக்காட்டி அழகாக வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்கூறிய பின்னணிகளைக் காட்டியதால்தான், 'சரி குடி' என்று பங்கஜம் கன்றைப் பார்த்துக் கூறுகின்ற இரு சொற்களின் மகத்துவம் புரிகிறது. பங்கஜம் என்ற பெண்ணின் இதயத்தின் அடியில் இருக்கும் இரக்கவுணர்வை வெளிப்படுத்துதல் என்பது அப்பெண்ணிற்கு மட்டும் உரியதன்று.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனித குலத்திற்கே உரியதாகும். அது சில நேரங்களில் சில வடிவங்களில் வெளியாகும். அசோகமித்திரன் 'சரி குடி' என்ற இரு சொற்களின் வடிவமாக அதனை வெளிப்படுத்தியுள்ளார். அதற்காக அவர் பிரயாசைப்பட்டு, எவ்வித உத்திகளையும் கையாளவில்லை. நேரடியாக நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்வதின் மூலம் அவ்வெற்றியை அவர் பெற்று விடுகிறார். இம்முறை, கைதேர்ந்த எழுத்தாளர்களுக்கே கைவரக் கூடியது.

பங்கஜத்தின் குடும்பப் பின்னணியை விரிவாகக் கூறா விட்டாலும் ஒரு சில வரிகளிலேயே உணர்த்திவிடுகிறார். கைக்குழந்தையை வீட்டில் இரவு நேரத்தில் தனியாக விட்டு வரக் கூடிய சூழல். கணவன் இருந்தாலும் இதுவரையில் கணவன் அவளுக்குத் தண்ணீர்பிடிக்க உதவவில்லை. தண்ணீர் பிடிக்க உதவவில்லையென்றாலும், வீட்டில் காவலுக்காவது உதவுவான் என்றால், வீட்டிலும் இல்லை. இச்சூழலில்தான் அவள் கஷ்டப்பட்டுத் தண்ணீர் பிடிக்கிறாள். இரண்டு குழந்தைக்குப பிறகு குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சை செய்து கொண்டிருக்கிறாள். அதனால் ஏற்பட்ட வலியின் திவிரம், பம்பில் தண்ணீர் அடிக்க அடிக்க மேலும் அதிகமாகிறது அந்நிலையிலும் வேறொரு பெண்ணிற்குத் தண்ணீர் அடித்துக் கொடுக்கும் உதவியைச் செய்கிறாள்,

இரக்கமேயில்லாத மனித கூட்டத்திற்கிடையே தண்ணீர் பிடிக்கும் நிலை; சிறு பிள்ளையை வீட்டில் தனியாக விட்டு, இரவில் சிறு வயதுப் பையனைத் துணைக்கழைத்துச் செல்லும் நிலை; அறுவை சிகிச்சையினால் ஏற்பட்ட தொந்தரவு; இவ்வளவுப் பின்னணிகளுக்கிடையில், அந்தத் தாயின் இதயத் திலிருந்து வெளிப்படும் வாயில்லாத ஜீவனிடத்தில் காட்டும் இரக்கவுணர்வு. இந்த மனித நேயத்தை வெளிப்படுத்திய முறையினாலேயே அசோகமித்திரன் சிறந்த சிறுகதை-யாசிரியராகி விடுகிறார்.

தண்ணீர் பிடிப்பதற்காகப் பங்கஜம் படுகின்ற துன்பங்களை ஆசிரியர் முதலில் காட்டுவதனால், சமுதாயத்தில் தண்ணீருக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காக மக்கள் படும் அவதிகளைக் காட்டத்தான் இச்சிறுகதையை அசோகமித்திரன் எழுதினார் என்று தவறாகக் கொள்ளலாம். ஆசிரியரின் நோக்கம் தண்ணீர்ப் பிரச்சனையைக் காட்டுவ தன்று. எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையே தண்ணீர் பிடிக் கின்ற ஒரு பெண்ணின் மனதில் ஒரு மூலையில் குடிகொண் டிருக்கும் இரக்கவுணர்வை வெளிக்காட்டி, அதன்வழி மனித நேயத்தை நிலைநிறுத்துவதுதான் ஆசிரியரின் நோக்கம் என்பதை உணரவேண்டும்.

1 விடிவதற்குள், வானதி பதிப்பகம், சென்னை, 1985 என்ற நூலில், எம்.வி. வெங்கட்ராம், மாலன் ஆகியோரின் முன்னுரைகள் இடம் பெற்றுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுக்கவிதை - சில விளக்கங்கள்

கவிதைகள் என்று இவற்றைக் குறிப்பிடலாமா? என்கிற விமர்சனங்களையெல்லாம் தாண்டி வெளிப்பட்ட தமிழ்ப் புதுக்கவிதைகள், தேக்கநிலை அடைந்துவிட்டன என்று விமர்சிக்கும் அளவிற்கு வந்து, இப்போது எவ்வழிச் செல்லலாம் என்று இளைப்பாறும் நிலையில் உள்ளன. பாரதியால் தொடப் பட்ட இப்புதுக்கவிதை, பிச்சமூர்த்தியால் உள்வாங்கப்பட்டு, எழுத்துக் கவிஞர்களால் சோதனை செய்யப்பட்டு, வானம் பாடிக் கவிஞர்களால் வானதிர முழங்கப்பட்டு, இன்று தனிக் கவிஞர்களின் திறமை வெளிப்பாட்டிற்கு ஊடகமாக நிற்கின்றது.

புதுக்கவிதையின் முக்கிய பண்புகளாகச் சொல்லப் படுவனவற்றுள், புரியாத்தன்மை (Obscurity) என்பதும் ஒன்று. இக்கவிதை புரியவில்லை என்பது கம்பனிடத்தும் உண்டு; வள்ளுவரிடத்தும் உண்டு. ஆனால் அப்புரியாத் தன்மை-யிலிருந்து வேறுபட்டது இப்புதுக்கவிதையின் புரியாத்தன்மை- அதற்கு மேலை நாட்டுக் கலை, இலக்கியப் பின்னணி பற்றிய அறிவு தேவைப்படுகின்றது. இதற்குக் கலைகளுக்கும் இலக்கியங்களுக்குமுள்ள தொடர்புகள் நோக்கப்பட வேண்டும். ஓவியம், சிற்பம் போன்ற கலைகளில் ஏற்பட்ட மாற்றங்களே, பின்னால் கவிதைகளிலும் இடம் பெறலாயின.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேலைநாடுகளில் புகைப்படக் கருவி கண்டுபிடித்த பின்னர், ஓவியக் கலையில் பெரும் மாற்றங்கள் ஏற்படலாயின. இருக்கின்ற பொருளை அப்படியே படம் பிடித்தல் என்பது போய் (அதனைப் புகைப் படக்கருவி செய்வதனால்) கலைஞனின் கற்பனை, அப்பொருள்மேல் ஏற்றப்பட்டு, ஓவியங்கள் பிறக்கலாயின. காணப்படுகின்ற பொருளும் மனிதனும் போலி. அப்பொருளின் மறுபக்கமும் மனிதனின் எண்ணங்களும் வெளிப்படத் தெரியாதவை. அவற்றை வெளிப்படுத்தலே நவீன ஓவியத்தின் தலையாய செயலாக விளங்கியது. இதுவே, காணும் பொருள்களிலிருந்து விடுதலை (Emancipation of the object)என்னும் கருத்தை முன்னெடுத்து வைத்தது. பிக்காஸோ போன்ற புகழ்பெற்ற ஓவியர்கள், க்யூபிசம் போன்ற ஓவியக் கோணங்களில் பொருள்களைப் படைக்கத் தொடங்கினர். இவ்வாறு ஓவியங்களில் செய்யப்பட்ட நவீன முயற்சிகள், அப்பொலினேர் போன்ற சர்ரியலிசவாதிகளால் கவிதைகளிலும் செய்யப்பட்டன.

இந்நிலையில், ப்ராய்டின் கனவு பற்றிய கருத்துக்கள் சர்ரியலிசவாதிகளுக்கு மேலும் தெம்பூட்டின. மனிதனின் கனவுகளே அவனுடைய உண்மையான எண்ணங்கள் என்பதை ஏற்றுக்கொண்டு, கனவு காணத் தொடங்கினர். கனவில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளை அப்படியே கவிதை வடிவில் தந்தனர். கனவு எப்படி தொடர்ச்சியாக இருக்காதோ,அப்படியே கவிதைகளும் தொடர்பில்லாத நிகழ்ச்சிகளாக அமைந்தன. இதற்கு கொலேஜ் '(Collage)' என்ற பெயரை அப்பொலினேர் இட்டார். தொடர்பில்லாத பல பொருள்களை ஒன்றிணைத்து ஓர் உருவத்தை ஏற்படுத்துவது போல, பல நிகழ்ச்சிகளை அடுக்குவதன் மூலம் ஒரு கருத்தை வெளிப்படுத்தலாம் என்றார்.

மேற்குறிப்பிட்ட இந்தப் பின்னணியில் உருவாகிய கவிதைகள், புரியாத் தன்மை பெறுதல் இயல்பேயாகும். அத்தகு தன்மை கொண்டு மேலைநாட்டுக் கவிதைகளைப் படித்து, அதைப் போல தமிழிலும் தரவேண்டும் என்ற உந்துதலில் எழுத்துக் கவிஞர்கள் பலர், கவிதை எழுதினர். மேலைநாட்டுப் பின்னணியில் எழுந்த கவிதைகளுக்கும் பெரிய இடைவெளி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உண்டு. மேலை நாட்டில் எழுந்த நம்பிக்கை வறட்சி, அந்நியமாதல், எதிர்கால பயம், விரக்தி மனப்பான்மை போன்றவை இங்கே இன்னமும் முழுமையாக ஏற்படவில்லை. எனவே, 'போலச் செய்தல்' ('Imitation') முறையில் எழுந்த பெரும்பாலான கவிதைகள் உள்ளார்ந்த வெளிப்பாடாகவும் இல்லை; நுகர்வோரின் மனதையும் தொடமுடியவில்லை.

இதனால் தான் எஸ்.வி. ராஜதுரை, 'கலை இலக்கியங்கள் இருவகைப் போக்குகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டிக் கொள்கின்றன. ஒன்று, பெரும் கலை இலக்கியப் புரோகிதர்களால் மட்டுமே புரிந்து கொள்ளப்பட்டு, அருள் பாலிக்கப்பட்ட மேட்டுக் குடியினருக்கு மட்டும் விளக்கப்படுகிற பூடகமான படைப்புகள்'[1] என்று மேலைநாட்டுப் பாணியில் எழுந்த புதுக் கவிதைகளைச் சாடுகிறார்.

ஒரு கவிதையின் வெற்றி என்பதும் அது வாசகர்களால் உள்வாங்கப்படுவது என்பதும் அம்மண்ணின் சூழலில், அம் மண்ணின் புழுதியிலிருந்து வெளிப்பட்டதாக இருக்க வேண்டும். இம்மண்ணில் காலூன்றிக் கொண்டு, வெளிநாட்டுப் புகையைச் சுவைத்து இன்புறும் அல்லது துன்புறும் எத்தகு வெளிப்பாடும் இயற்கைத் தன்மை பெறவியலாது.

> ''புறப்பட்டு வந்த இடத்தை நான் விரும்பவில்லை
> போய்க் கொண்டிருக்கும் இடத்தையும்
> நான் விரும்பவில்லை
> பின் எதற்குப் பொறுமையற்று நான்
> சக்கரத்தை மாற்றும் அவனைப் பார்த்து நிற்கிறேன்''

என்கிற Bertolt Brecht — இன் கவிதையும்,

> ''நீ எங்கு போனாய் என்பது தெரியாது
> நான் எங்கு போவேன் என்பதும் அறியேன்
> தெருவிலே எமது தலைவிதி உள்ளது
> உன்னையும் பிடிக்கலாம் என்னையும் பிடிக்கலாம்
> யார் இதைக் கேட்க''

— சேரன் (இரண்டாவது சூரிய உதயம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்கிற கவிதையும் இங்கு ஒப்பிட்டு நோக்கத்தக்கன. முன்னது விரக்தி வாழ்வின் வெளிப்பாடு, பின்னது, போராட்ட வாசலில் நின்று தவிப்பவனின் கூற்று, பின்னதின் சூழலை (இலங்கைப் போராட்டம்) உணர்ந்து அதை நுகரும் வாசகனின் மனதில் ஏற்படுத்தும் உணர்வு, முன்னதில் வெளிப்படும் என்பதை நாம் எதிர்பார்க்க முடியாது

ஓவியக் கலைஞர்களால் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு கூறு பொருள்களைச் சிதைத்தலும் கூறுபடுத்தலுமாகும். (Distortion & Fragmentation) ஒரு பொருளைச் சிதைத்தும் கூறு. படுத்தியும் காட்டும்போது,புரியாத்தன்மை ஏற்படுதல் இயல்பே அதேபோல மரபாகக் காட்டப்பட்டு வரும் மனிதனை வேறு-படுத்தியும், மனித எண்ணங்களை பச்சையாகக் காட்டும்போதும் நமக்கு அதிர்ச்சி மட்டுமல்லாது, புரியாமலும் போய்விடுகிறது 'Surprise is our resource' என்று சர்ரியலிஸக் கவிஞர்கள் கருதினார்கள்.

'My hands are always as bad as my character'

என்று பைரன் கூறும் போது, அதிர்ச்சி அடையாத நாம்,

"My heart is as heavy as lady's backside"

என்று அப்பொலினேர் கூறும் போது, அதிர்ச்சி அடைகிறோம் தமிழில்,

"பூவை விட காயை விட்
பழத்தை விடவும் மரம் உயர்ந்தது அல்லவா?
சொல்லடி கண்ணே!
உன் அன்னையையும் நான் காதலிக்கிறேன்"

என்று கூறும்போது, நமக்கு அதிர்ச்சி ஏற்படுகிறது.

நம் கவிதை மரபில் சுருங்கக் கூறல் என்பது உண்டு என்றாலும், அடைமொழியும், உவம உருபுகளும், சாரியைகளும் நிறைந்து கருத்தைப் புலப்படுத்த உதவுகின்றன. புதுக்கவிதையால் சொற்செட்டு மிக முக்கியம். இதனாலேயே கவிதையின் பொருள் புரியாமலும் போகும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"நேர்கோடாய் நிற்கும்
நெடும்பனை
குறும்புக் காற்று
தண்ணீர்த் திரையில்
நெளியும் நாகம்"

என்ற தி.சா. வேணுகோபாலனின் கவிதை (மீட்சி விண்ணப்பம்) எத்தகு இணைப்புச் சொற்களுமின்றி, தனித்தனியே நிற்பது போல் தோன்றுகிறது. இதுவும் புதுக்கவிதையின் முக்கியப் பண்பு எனலாம்.

புராண, இதிகாசச் செய்திகளை இன்று முரண்பட்ட நோக்கில் பார்க்கின்ற பார்வையும் புதுக்கவிதைகளில் குறிப்பிடத்தக்கபண்பாகும். பாஞ்சாலியைத் துகிலுரியும் துச்சாதனன், சீதையைத் தூக்கிச் செல்லும் இராவணர்கள்தாம் நாம் கண்ட பாத்திரங்கள். ஆனால் புதுக்கவிஞர்களின் பார்வையில், இவையெல்லாம் இக்காலச் சூழலில் எப்படிப் பார்க்கப்படுகின்றது என்பதைக் கீழ்க்கண்ட கவிதைகள் வெளிப்படுத்தும். சமூகச் சூழலும், அரசியல் சூழலும் மாற மாற, புராண, இதிகாசக் கருத்துக்களும் புதுவடிவம் கொள்கின்றன. இன்றைய புதுக் கவிஞர்களிடத்தில், கம்சன் என்ற அரக்கன் கண்ணனை அழிக்க, பூதகியை அனுப்பியது நாமறிந்த புராணச் செய்தி. கவிஞர் இன்குலாபை, இப்புராணச் செய்தி இலங்கைப் பிரச்சனையில் எவ்வாறு பார்க்க வைக்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும்.

"கம்சனின் பிடியில் ஈழக்குழந்தை
கதறி அழுகிறது உண்மைதான்!
அதற்காகப் பூதகியைப் போய்ப்
பாலூட்டச் சொல்லாதீர்கள்!" (இன்குலாப்

என்று கூறுவதை இணைத்துப் பார்க்க வேண்டும்.

"இந்த பத்மாசுரனை அழிக்க
எத்தனையோ மோகினி அவதாரங்கள்
கடைசியில்
மோகினிகள் கற்பிழக்கின்றனர்"
(ஆகாய கங்கை, முத்துராமலிங்கம்)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"புறத்திணைச் சுயம்வர மண்டபத்தில்
போலி நளன்களின் கூட்டம்
கையில் மாலையுடன்
குருட்டுத் தமயந்தி"

(பால் வீதி, அப்துல் ரகுமான்)

"பாரதப் பாஞ்சாலியை
துகிலுரியும்
நவீன கண்ணப் பரமாத்மாக்கள்"

மேற்குறிப்பிட்ட கவிதைகள் புராண, இதிகாசச் செய்திகளைக் கையாண்டாலும், எவ்வாறு முரண்பட்டு நிற்கின்றன என்பதும் அவ்வாறு முரண்படுதலால், நிகழ்கால நடப்புக்களின் உண்மைகள் எவ்வாறு குத்தீட்டிப் போலப் பாய்கின்றன என்பதும் சிந்திக்கத்தக்கன. புதுக்கவிதைகளில் புராண, இதிகாசச் செய்திகள் குறியீடுகளாகத்தான் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாவல், சிறுகதை, நாடகம் போன்றவற்றில் அவை விமர்சனங்களாகவும், புதிய படைப்பாக்கங்களாகவும் வெளிப்பட்டுள்ளன. (பார்க்க:, 'நவீன இலக்கியங்களில் புராண, இதிகாசச் செய்திகள்', பக் 151.)

இவ்வாறு புராண, இதிகாசச் செய்திகளன்றி, எல்லா-வற்றையுமே புதிய கோணத்தில் சிந்திக்கும் நவீன காலத்தின் இயல்பும் புதுக்கவிதையை வளப்படுத்துகின்றன. பாரதி பார்த்த பார்வையை அப்படியே பின்பற்றாமல், பாரதி காலத்துக்குப் பின்வந்த சிந்தனை வளர்ச்சியையே பின்வரும் கவிதை காட்டுகிறது.

'தனியொரு வனுக்கு உணவிலையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம் என்றான் பாரதி
இன்று ஜெகத்திற்கே உணவில்லை அதற்குக்
காரணமான தனிமனிதனை அழித்திடுவோம்"

என்று இலங்கைக் கவிதை இயம்புகிறது. நிகழ்கால எண்ணங்களை வெளிப்படுத்துவதில் சற்றும் இளைக்காத கவிதைகள் இவையெனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிகழ்கால விமர்சனங்களாகப் பல கவிதைகள் எழுந்துள்ளன

"இரவிலே வாங்கினோம்
இன்னும் விடியவில்லை"

(எ. அரங்கநாதன்)

"அன்னிய விலங்குகளை அகற்றிவிட்டு
நாம் செய்த
சொந்த விலங்குகளையே கட்டிக்
கொண்ட நாள்"

(மு. மேத்தா)

"சுதந்திர இந்தியாவில்
முதன் முதலாக ஆயுள் தண்டனை
அளிக்கப்பட்ட ஒரு நிரபராதி
நீதி"

(சீதையின் மைந்தன்)

போன்றவை விமர்சனக் கவிதைகளாகவே வெளிப்பட்டுள்ளன. இக்கவிதைகளைப் புரிந்து கொள்வதற்கு, சமீபத்திய வரலாற்று, சமூக நிகழ்வுகளைத் தெரிந்து வைத்திருப்பது அவசியம்.

அரசியல்வாதிகளால் நாடு சீரழிந்து போவதை எல்லோருமே உணருகின்றனர். ஆனால், செயலற்று நிற்கின்றனர். கவிஞன் என்ன செய்வான்! அவன் பார்வையில் மரங்கூட அரசியல்வாதியாகிவிட்டது. பாடிவிடுகிறான்! அவனால் முடிந்தது அவ்வளவுதான்!

"பக்கத்து வீட்டு நிலத்திலெல்லாம்
வேர் பாய்ச்சி
நீரெடுத்துக்கொண்டு சொந்தவீட்டிற்கு
மட்டும்
சோறு போட்டுக் கொண்டிருக்கும்
அரசியல்வாதி!"

(பூமிக்குப் புரிய வைப்போம்-
தமிழ் மகன்)

இவை இக்காலத்தின் தவிர்க்க முடியாத பார்வைகள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு மேலைநாட்டு இலக்கிய வெளிப்பாட்டின் தாக்கமும், உள்நாட்டின் அரசியல், சமுதாயச் சூழல்களின் மோதலும் கலந்த வெளிப்பாடாகவே இன்றைய புதுக்கவிதைகள் விளங்குகின்றன. இவற்றின் பின்னணியில், இக்கவிதைகளை நோக்கினால்தான் புரியச் செய்யும். இல்லையெனில், என்றும் புதிராகவே இருக்கும்.

அடிக்குறிப்பு:

1. எஸ். வி. ராஜதுரை, இரண்டாவது சூரிய உதயம், பொதுமை வெளியீடு, சென்னை, (இரண்டாம் பதிப்பு) 1983, முன்னுரை, பக். 5.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நவீன இலக்கியங்களில் புராண, இதிகாசச் செய்திகள்

புராண, இதிகாசக் கருத்துக்கள் விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவையாக இருந்த காலம் மாறி, அவற்றை மறுபரிசீலனை செய்யும் போக்கு இருபதாம் நூற்றாண்டிலிருந்து தொடங்குகிறது. புராணங்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

''கவிதை மிக நல்லதேனும் அக்கதைகள்
பொய்யெனத் தெளிவுறக் கண்டோம்''

என்கிறான் பாரதி. இப்போக்கிற்கு, ஆங்கிலக் கல்வியும், விடுதலை வேட்கையும் கொண்ட அரசியல், சமூக பொருளாதாரப் பின்னணிகளே காரணங்களாக அமைகின்றன. மேலும், நவீன இலக்கியப் பண்பும் இப்போக்கினை வளர்த்தெடுக்க உதவியது எனலாம்.

இலக்கியப் படைப்புக்களுக்குத் தொன்மம் (Myth) என்பது காரணியாக அமைகின்றது என்கிற நார்த்ராபிரையின் (Northrop Frye) தொன்மவியல் திறனாய்வு முறை குறிப்பிடத்தக்கது. இன்றைய ஒப்பிலக்கிய ஆய்வில் (Comparative Literature), இந்திய இலக்கியங்களில் புராண, இதிகாசக் கருத்துக்கள் எங்ஙனம் உள்ளோடியிருக்கின்றன என்ற ஆய்வும் குறிப்பிடத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்விரண்டு கண்ணோட்டங்களையும் விடுத்து, இக் கட்டுரை, புராண, இதிகாசச் செய்திகள் நவீன இலக்கியங் களில் இடம்பெற்றுள்ளமையைக் கீழ்க்கண்ட இருநிலைகளில் விளக்க முற்படுகின்றது.

1 புராண, இதிகாசக் கதைமாந்தர்களின் பண்புகள் அல்லது செயல்கள் விமரிசிக்கப்படுதல்.

2 புராண, இதிகாசக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, புதிய படைப்பாக்கங்களை உருவாக்குதல்.

இருபதாம் நூற்றாண்டில் இவ்விருப்போக்குகளும் நவீனப் படைப்பாளர்களால் மேற்கொள்ளப்பட்டமைக்கான அரசியல்' சமூக, இலக்கியப் பின்னணிகளும் நோக்கப்படுகின்றன.

நவீன இலக்கியப் பண்பு:

தன்னேரிலாதத் தலைவனும் தலைவியும், நற்பண்புகளும் குணங்களும் கொண்ட அப்பழுக்கில்லாதத் தலைவர்களாகளாக இலக்கியங்களில் படைக்கப்பட்டு வந்தனர். 'அறம் பொருள். இன்பம், வீடடைதல் நூற்பயனே' என்ற இலக்கிய மரபு கொண்ட இலக்கியங்களில் நல்லதன் பகுதியே நோக்கப்பட்டது தீயதன் பகுதி வெறுத்து ஒதுக்கப்பட்டது. பரத்தையர் ஒழுக்கங் கொண்டவனாகக் கோவலன் காட்டப்பட்டாலும் இறுதியில், அதற்குத் தண்டனையாகக் கொல்லப்படுகின்றான். மாடலமறையோன் வாயிலாக அவனது புகழ் பேசப்படுகின்றது.

இச்செவ்வியல் இலக்கிய மரபிற்கு மாறாக, நவீன இலக்கியங்களில் தீய இயல்பு கொண்ட மனிதன் கூட கதைத் தலைவனாக்கப்படுகின்றான். இராம குணமும் இராவண குணமும் ஒரே மனிதனிடத்தில் ஒளிந்திருக்கும் இயல்புகளே. ஒருவன் எப்போதும் இராமனாகவும் எல்லாநேரமும் இராவணனாகவும் இருக்க முடியாது. மனிதனை முழுமனித-னாகக் காட்டவேண்டும் என்ற நவீன இலக்கிய மரபே, இத்தகு கதைமாந்தர்களைப் படைக்க வித்திடுகிறது. மேலைநாட்டு சர்ரியலிசப் போக்கும் இங்கு நினைக்கத்தக்கது. இதுவரை இலக்கியங்கள் காட்டியவை, போலி மனிதர்கள் என்றும் உண்மையான மனிதனை வெளிப்படுத்தலே இலக்கியத்தின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோக்கமாகும் என்று கூறி, இலக்கிய இயக்கங்கள் பல உருவாகி, அதனைப் பின்பற்றிப் பல இலக்கியங்கள் எழுதப் பட்டன.

மேலும், உயர்ந்த தலைவர்களாகப் போற்றப்படும் இராமன், தருமன், விசுவாமித்திரன் போன்றோரின் செய்கைகள், நவீன காலத்தில் விமர்சனத்திற்கு உள்ளாகின்றன இவ்விமர்சனத்தைத் துவக்கி வைத்தவன் பாரதியே! தருமன், மகாபாரதக் கதைத் தலைவர்களில் உத்தமனாகப் போற்றப் படுகின்றவன். அவன் துரியோதனனிடம் சூதாடி, நாட்டையே வைத்திழக்கின்றான். இச்செய்கையைப் பாரதி,

> ''ஆயிரங்களான நீதியவை யுணர்ந்த தருமன்
> தேயம் வைத்திழந்தான் சிச்சீ!
> சிறியர் செய்கை செய்தான்''

என்று பாஞ்சாலி சபதத்தில் ஏசுகிறார். இப்போக்கு, நவீன காலச் சிந்தனையின் வெளிப்பாடு எனலாம். இப்போக்கினால் கவிதை, நாடகம், சிறுகதை, நாவல் போன்ற பல இலக்கிய வகைகளிலும் புராண, இதிகாசக் கதைமாந்தர்களின் செயல்கள் விமரிசனத்திற்கு உட்பட்டன.

அரசியல், சமுதாயப் பின்புலம்:

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்தில் நிலவிய அரசியல் சமுதாயப் பின்னணிகள் நோக்கப்பட்டால், இவ்வாய்வின் பொருள் தெளிவடையும். 1916 அளவில் ஏற்பட்ட நீதிக் கட்சியின் ஆட்சியும், பிராமணர் – பிராமணர் அல்லாதோர் என்ற பிரிவும், பெரியாரின் சுயமரியதை இயக்கமும் இந்திய அரசியல் மற்றும் சமுதாய நிலையிலிருந்து வேறுபட்ட திசையில் தமிழகத்தைக் கொண்டு செலுத்தின. ஆரியர்–திராவிடர் என்ற பிரிவு, வரலாறு, மொழி, பண்பாடு போன்ற பல நிலைகளிலும் எதிரொலித்தது. இராமாயணக் கதை மாந்தர்களான இராமனும் சீதையும் ஆரியர்களாகவும் இராவணனும் கைகேயியும் திராவிடர்களாகவும் நோக்கப் பட்டனர். நாவலர் சோமசுந்தர பாரதியாரின் 'இராவணன் மாட்சியும் வீழ்ச்சியும்' 'தசரதன் குறையும் கைகேயி நிறையும்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற நூல்களும், புலவர் குழந்தையின் 'இராவண காவியம்' என்ற கவிதை நூலும் எழுந்தன. அண்ணாவின் 'ஆரிய மாயை' போன்ற நூல்களும், திராவிட இயக்கத்தாரின் நாடகங்களும் புராண எதிர்ப்புச் செயல்களை மேற்கொண்டன.

இராமாயணத்தில் கிளைக்கதையாக வரும் இரணியன் வரலாறு, ஒரு வீழ்ச்சியுற்ற தலைவனின் கதையைக் கூறுவது. அவ்விரணியனை ஒப்பற்ற வீரனாகக் காட்டிப் பாரதிதாசன், 1939 இல் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகத்தை உருவாக்கினார். இப்பின்னணிகளில் கீழ்க்கண்ட படைப்புக்கள் நோக்கப்படுகின்றன.

புராண. இதிகாசக் கதைமாந்தர்களின் பண்புகள் அல்லது செயல்கள் விமரிசிக்கப்படுகின்ற நோக்கில்,

1. புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் (சிறுகதை)
2. வள்ளத்தோளின் அச்சனும் மகளும் (நாடகம்)
3. கு. ப. ராவின் பெண் இருதயம் (நாடகம்)
4. இந்திராபார்த்தசாரதியின் கொங்கைத்தீ (நாடகம்)

ஆகியவை ஆராயப்படுகின்றன. சில புதுக்கவிதைகளையும் நாம் இவ்வகையில் அடக்கமுடியும்.

புராண, இதிகாசக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு புதிய படைப்பாக்கங்களை உருவாக்குதல் என்கிற நோக்கில்,

1. பாரதிதாசனின் இரணியன் அல்லது இணையற்ற வீரன் (நாடகம்)
2. புதுமைப்பித்தனின் பக்த குசேலா (நாடகம்)
3. எம்.வி. வெங்கட்ராமின் 'நித்ய கன்னி' (நாவல்)
4. தி.சு. இளஞ்செழியனின் 'வேதாளம் சொன்ன கதை' (நாடகம்)

ஆகியவை நோக்கப்படுகின்றன.

புதுமைப்பித்தனின் 'சாப விமோசனம்' என்ற சிறுகதையில், இராமனின் செய்கை விமரிசிக்கப்படுகிறது. காட்டில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சந்திக்கின்ற அகலிகையும், சீதையும் உரையாடுவதாகக் கதையை அமைத்துள்ளார். இந்திரனால் கற்பை இழந்த, தன் மனைவியான அகலிகையைக் கல்லாகும்படிச் சபிக்கிறார் கௌதம முனிவர். அப்படிக் கல்லான அகலிகை இராமனின் காலடிப்பட்டு மீண்டும் உயிர்த்தெழுகிறாள். அவ்வாறு உயிர்த்தெழுந்த அகலிகை, தன் கணவன் கௌதம முனிவரோடு காட்டில் வாழ்ந்து வருகையில், இராவணனிடமிருந்து மீட்டு வரப்பட்ட சீதையைச் சந்திக்கிறாள். ஊராரின் பேச்சைக் கேட்டு காட்டிற்கனுப்பினான் இராமன் என்பதைக் கேள்விப்படுகிறாள். ஊருக்கு ஒரு நியாயம் தனக்கொரு நியாயம் பேசும் இராமன் தனக்குச் சாபவிமோசனம் அளிக்கத் தகுதியற்றவன் என்று கருதி, அகலிகை மீண்டும் கல்லாகி விடுகிறாள். இச்சிறுகதையில், அகலிகை மூலம், இராமனை விமர்சனம் செய்கிறார் புதுமைப்பித்தன் என்பதே பெறக் கூடியது.

மலையாளக் கவிஞர் வள்ளத்தோளின் 'அச்சனும் மகளும், என்ற சிறுகாப்பியத்தில் விசுவாமித்திரனின் செய்கை கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. விசுவாமித்திரனுக்கும் மேனகைக்கும் பிறந்த சகுந்தலை, அனாதையாக்கப்பட்டு, கண்வ முனிவரால் வளர்த்தெடுக்கப்படுகின்றாள். அவள் தன் குழந்தையோடு ஆசிரமத்தில் வசித்துவருகிறபோது, விசுவாமித்திரன் தற்செயலாக அவளைச் சந்தித்துத் தன் மகள் என்பதை உணர்கிறான். தன் மகளின் இந்நிலைக்கு, துஷியந்தனே காரணம் என்று கேள்விப்பட்டு, அவன்மீது சினங்கொள்கின்றான். அப்போது சகுந்தலை, பெற்றவர்களால் உதாசீனப்படுத்தப் பட்ட தான், கணவனாலும் உதாசீனப்படுத்தப்பட்டதாகக் கூறி விசுவாமித்திரனைத் தலைகுனிய வைக்கிறாள்.

கு.ப ராஜகோபாலின் 'பெண் இருதயம்' என்ற நாடகம் சகுந்தலையின் அன்னை மேனகையை விமரிசனம் செய்கிறது. தேவருலகில் வாழும் மேனகை, தன்மகளைக் கண்டு தன்னோடு சேர்ந்து வாழக் கூப்பிடுகிறாள். அன்னையின் ஆசையை மறுத்து, அவளோடு வாதம் புரிகிறாள் சகுந்தலை. பெற்று விட்டு, அனாதையாகத் தன்னை விட்டுச்சென்று, இப்போது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாய்-மகள் என்று உறவு கொண்டாடுவது எவ்வகையில் நியாயம் என்று கேட்கிறாள்.

இந்திராபார்த்தசாரதியின் 'கொங்கைத் தீ' என்ற நாடகத்தில் கோவலன் மூலம், கண்ணகி விமர்சனத்திற்கு ஆளாகிறாள். கலை மனம் கொண்ட கோவலன், தன் மனைவியிடம் ஊடல் முதலாய அனைத்தையும் எதிர்பார்க்கின்றான். அது கிடைக்காத நிலையில் மாதவியை நாடிச் செல்கின்றான். கணவன் எது செய்தாலும் எதிர்த்துப்பேசா மடந்தையாக வாழ்கின்ற கண்ணகியின் செய்கையே, கோவலனைத் தவறு செய்ய வைக்கின்றது என்பதைத் தன் நாடகத்தில் வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

மேற்குறிப்பிட்ட இலக்கியப் படைப்புக்கள், விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள் (வேதம்போல) என்று கருதி வந்த காப்பியத்தலைவர்களும், புராணத் தலைவர்களும் நவீன இலக்கியப்பண்பு காரணமாகவும் சமுதாய, அரசியல் மாற்றத்தால் விளைந்த எண்ணமாற்றத்தாலும் கண்டித்தல், பரிகாசித்தல், விமர்சித்தல் போன்ற நிலைகளுக்கு ஆட்பட்டனர் என்பதற்கு ஏற்ற சான்றுகளாகும்.

இரண்டாவது பகுதியான புதிய படைப்பாக்கங்கள் என்பது முன்னர்க் கூறிய விமரிசனம் செய்தல் என்ற நிலையிலிருந்து மாறி, புராண, இதிகாசச் செய்திகளை மையமிட்டு, புதிய கண்ணோட்டத்தில் நவீன காலத்திற்கேற்ற பின்னணிகளைக் கொண்டிருப்பது.

இரணியன், தன் மகன் பிரகலாதன், தன் பெயரைக் கடவுள் 'நாமமாகக் கருதாமல், 'நாராயணன்' பெயரைக் கருதியதால் அவனிடம் சினந்து பேச, பிரகலாதனைக் காக்கத் தூணிலிருந்து நாராயணன், நரசிம்ம உருவில் வெளிப்பட்டு இரணியனை அழித்ததாக இரணியன் வரலாறு கூறப்படுகிறது. இப்புராணக் கதையினைப் பல மாற்றங்களுக்கு உள்ளாக்கி, தமிழர்க்கு இன உணர்வும் பகுத்தறிவும் ஊட்டவல்ல கருத்தோவியமாக, புதுப்படைப்பாக்கமாகப் பாரதிதாசன், 1939 இல் 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகத்தைப் படைத்தளித்துள்ளார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வாறு, புராணத்தில் வரும் பொல்லார்களை நல்லார்களாகக் காட்டும் போக்கு, தெலுங்கு மொழியிலும் காணப்படுகின்றது. ராமசாமி சௌத்ரி என்பவரின் 'குருட்சேத்திரம்' என்ற நாடகத்தில் துரியோதனன் நல்லவனாகக் காட்டப்படுகின்றான். 'அசோகமு' என்ற நாடகத்தில் இராமன் பழிக்கப்பட்டும், இராவணன் நல்லவனாகவும் காட்டப் படுகின்றனர். இங்குப் பாரதிதாசன் தன் நாடகத்திற்குப் புராணக்கருவை எடுத்துக்கொண்டு, பிறவற்றையெல்லாம் ஆரிய-திராவிட சூழ்ச்சிப் போராட்டமாக அமைத்துப் புதிய படைப்பாக்கமாக ஆக்கியுள்ளார் என்பதே குறிப்பிடத்தக்கது.

புதுமைப் பித்தனின் 'பக்த குசேலா' என்ற நாடகம், குசேலர் கதையை அடியொற்றி எழுந்த புதிய படைப்பாக்கமாகும். இந்நாடகத்தின் தொடக்கத்தில் புதுமைப்பித்தன்

> "கரியுக மாடல் குசேலர்", சனாதன தர்மம் என்ற பழைய நங்கைக்கும் இரும்பு நாகரிகம் என்ற புது அரக்கனுக்கும் ஏற்பட்ட பலவந்த சம்பந்தத்தில் ஜனித்தகுழந்தை'

என்ற பழைய கதையை நவீன யுகத்திற்கேற்றவாறு படைத்தளிப்பதை அழகுறக் கூறியுள்ளார். தென்கலை வைணவரான குசேலர் பல குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கஷ்டப் படுகின்றார். அவருடைய பால்ய கால நண்பர் கிருஷ்ணசாமி சர்மா என்பவர் பெரிய ஆலையின் இயக்குநராக இருக்கிறார். அவருடைய உதவியினால் குசேலரின் மகன் வேலை பெறுகிறான். குசேலரின் துன்பங்கள் தீர்கின்றன. இது பழைய புராணக் கதையை அடியோற்றி எழுந்த புதிய படைப்பாக்கத்திற்கு ஏற்ற சான்றாக அமைகின்றது.

எம்.வி. வெங்கட்ராமின் 'நித்ய கன்னி' என்ற நாவல் மகாபாரதக் கதையைக் கருவாகக் கொண்டிருப்பினும், இன்றைய ஆணாதிக்க வெளிப்பாட்டின் உச்சகட்ட நிலையை உணர்த்தும் படைப்பாக்கமாகும். இதனைக் கடந்தகாலத்தை உள்ளடக்கிய நிகழ்காலப் படைப்பு (Recreation of the past) எனலாம். பிள்ளையைப் பெற்றதும் மீண்டும் கன்னித்தன் மையை அடைந்துவிடும் சாபம் பெற்ற, மாதவி என்ற பாத்திரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெறுகின்ற அல்லல்களை, இரக்கச் சிந்தனையோடு ஆசிரியர் பார்த்த பார்வையின் விளைவே 'நித்ய கன்னி' என்ற நாவலாக உருவெடுத்துள்ளது.

தி. சு. இளஞ்செழியனின் 'வேதாளம் சொன்ன கதை' என்ற நாடகம், மக்களிடையே வழங்கிவரும் கதைக் கருவைக் கொண்டதாக இருப்பினும், நிகழ்காலச் சமுதாய நடப்புக்களை வேதாளத்துக்கும் ஒரு நடுத்தரவர்க்க மனிதனுக்கும் இடையே நடக்கும் உரையாடல் மூலம் வெளிப்படுத்துகிறது. வேதாளம் ஒரு நிகழ்ச்சியை இளைஞனிடம் கூற, அதற்குச் சரியானதொரு விடையைக் கேட்கிறது. அவனும் சரியான விடையைக் கூற, வேதாளம் மரத்தில் ஏறப்பார்க்கிறது அவ்விளைஞன் வேதாளத்திடம் தான் மூன்று கோரிக்கைகளை வைத்து, நிறைவேற்றச் சொல் கிறான். என் மகனுக்கு மருத்துவக் கல்லூரியில் இலஞ்சம் கொடுக்காமல் இடம் வாங்குவது; வீடுகட்ட பதிவுத் துறையில் இலஞ்சம் கொடுக்காமல் அனுமதி வாங்குவது என்று கேட்க, வேதாளம் நிறைவேற்ற முடியாமல் தலைவெடித்து இறக்கிறது.

மேற்குறிப்பிட்ட படைப்புக்கள் புராண, இதிகாசச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டிருப்பினும், அதிலிருந்து நிகழ்காலப் பிரச்சனைகளை எடுத்து விளக்குவதன் மூலம் புதிய படைப்பாக்கங்களாக உருவெடுத்துள்ளன. இவ்வாறு, கதை மாந்தர்களை விமரிசனம் செய்தல், பழைய கருத்துக்களைக் கருவாகக் கொண்டு புதிய படைப்பாக்கங்கனை உருவாக்குதல் என்னுமிரு நிலைகளில், இந்திய நவீன இலக்கியங்கள் முழுமையும் பார்க்கப்பட்டால், இந்திய இலக்கிய நவீனத் தன்மையின் ஒரு கூறு புலப்படுத்தப்படலாம்.

கட்டுரையில் கையாளப்பட்ட படைப்புக்கள்:

1. புதுமைப் பித்தன், 'சாப விமோசனம்' புதுமைப்பித்தன் படைப்புக்கள், ஐந்திணைப் பதிப்பகம்,சென்னை, 1987.
2. புதுமைப்பித்தன், 'பக்த குசேலா', புதுமைப்பித்தன் படைப்புகள், ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 1988.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. வள்ளத்தோள், 'அச்சனும் மகளும்', வள்ளத்தோள் கவிதைகள்' சாகித்ய அகாடமி, டெல்லி, (இரண்டாம் பதிப்பு), 1987.

4. கு.ப. ராஜகோபாலன், 'பெண் இருதயம்', ஆத்ம சிந்தனை, அல்லயன்ஸ், சென்னை, 1986.

5. இந்திரா பார்த்தசாரதி, கொங்கைத்தீ, தமிழ்ப் புத்த காலயம், சென்னை, 1990.

6. எம்.வி. வெங்கட்ராம், நித்திய கன்னி, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1975.

7. பாரதிதாசன், இரணியன் அல்லது இணையற்ற வீரன், பூம்புகார் பிரசுரம், சென்னை, (ஐந்தாம் பதிப்பு), 1978.

8. தி. சு. இளஞ்செழியன், 'வேதாளம் சொன்ன கதை' சுயம்வரம், (தொகுப்பு – மீரா), அன்னம், சிவகங்கை, 1986.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சொல்லடைவு

[எண்: பக்க எண்]

அக்னிப் பிரவேசம் 17
அகிலன் 49,50,55,127
அசோகமித்திரன் 128,99,131,
133,135.138,143
அண்ணாதுரை 50
அநுத்தமா 49,50
அப்பொலினேர் 145,147
அமைப்பியல் நோக்கு 3
அரங்கநாதன். மா. 128,
130,133.
அரிஸ்டாட்டில் 2,80
அலைவாய்க் கரையில் 90
அழகிரிசாமி. கு. 55
அழகியல் அணுகுமுறை 103
அழகியல்நோக்கு 3,7
ஆதவன் 128,131
ஆதியூர் அவதானி சரிதம் 109
ஆறுமுகம். எஸ். பூவை 44
இந்தியத்தேசிய காங்கிரஸ்
108,112
இந்தியத் தேசியம் 113
இந்திரா பார்த்தசாரதி 32,
33, 127, 128, 134, 135,
155,157
இராமசாமி. மு. 31
இராமலிங்கம். மா. 63
இராமானுஜம் 31
இராஜமய்யர் 111, 112
இலக்கியக் கலை 46
இலக்கிய மரபு 51
இலக்கியவிசாரம் 49
இளஞ்செழியன். தி.சு. 32,40,
155,159
இளந்திரையன் சாலை 54
இன்குலாப் 148
எக்ஸிஸ்டன்ஸியலிசமும்
பேன்சி பனியனும் 18,99
எலியட். டி.எஸ். 9
எழுத்து 16,42,114
எழுபதுகளில் கலை இலக்கியம்
28
ஏற்கனவே சொல்லப்பட்ட
மனிதர்கள் 104
கண முத்தையா 44
கமலாம்பாள் சரித்திரம் 45,47,
53,112
கமலாக்ஷி 47
கரித்துண்டு 49
கருத்துமுதல் வாதிகள் 15
கருணாநிதி 50
கரைந்த நிழல்கள் 99,102
கல்கி 46,52,53,50,112,117,114
கலியாணசுந்தரம். திரு.வி. 55,
113
கலை கலைக்காகவே 15
காந்தி 123

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலம் காலமாக 39
குமாரன் ஆசான் 17
குறள் 8
குறிஞ்சித்தேன் 54
கைலாசபதி. க. 13,44,54,56,60,63,90
கோதைநாயகி. வை,மு. 113
கோபல்ல கிராமம் 90,99,102,104
கோமல் சுவாமிநாதன் 32,35
சங்கர்ராம் 48
சங்கரபிள்ளை. ஜி. 31
சண்முகசுந்தரம். ஆர். 48
சந்திரிகையின் கதை 45
சமூகவியல் அணுகுமுறை 98
சமூகவியல் திறனாய்வு 105,106
சயாம்மரண ரயில்வே 83,86
சர்ரியலிசம் 14
சரஸ்வதி 42,114
சரஸ்வதி ராம்நாத் 55
சாபவிமோசனம் 17
சாமி சிதம்பரனார் 46
சாமிநாதய்யர். உ.வே. 55
சாயாவனம் 102
சிக்மெண்ட் ப்ராய்டு 7
சிதம்பர சுப்பிரமணியன் 48
சிதம்பரநாத முதலியார் டி.கே. 49,55
சிதம்பரம்பிள்ளை. வ.உ.சி. 113,122,116
சிதம்பர ரகுநாதன் 49
சிவத்தம்பி. கா. 13,54
சில்லையூர் செல்வராசன் 51,
சீனிவாசப்பிள்ளை. கே.எஸ் 43
சீனி வேங்கடசாமி 25
சுந்தர்ராஜன். பெ.கோ 107
சுப்பிரமணி அய்யர். ஏ.வி 12,45,47,56,60,112
சுப்பிரமணி அய்யர். பி.எஸ் 63
சுப்பிரமணியம். க.நா 47,48,50,51,53,55,56,60,114,121,123,129
சுப்ரபாரதி மணியன் 128,131,135
செல்லப்பா. சி.சு. 104,114
சேஷயங்கார். து.வி 109
சோதனை முயற்சி நாடகங்கள் 31
சோமசுந்தர பாரதி 154
ஞாநி 31,32,33
ஞான சம்பந்தம். அ.சா 46
ஞான ராஜசேகரன் 32,37
ஞானி 54
டாடாயிசம் 14
தண்டாயுதம். இரா. 44,56,60,63
தமிழ்நேசன் 79
தமிழ்ப்பொழில் 62
தமிழ் வரலாறு 43
தமிழவன் 4,100
தருமு சிவராம் 64
தளையசிங்கம். மு. 64
தனித்தமிழ் இயக்கம் 122
தாமரை 62
திராவிடர் கழகம் 114
திருப்புக்காட்சி 93
திலகர் 121

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொல்காப்பியம் 30
தேனுகா 28
தீனதயாளு 47
தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் 144 122
தோதாத்ரி 54
நாகம்மாள் 47
நாஞ்சில் நாடன் 131,128
நார்த்ராப் பிரை 152
நாற்காலிக்காரர் 38,39
நீதிக்கட்சி 122,123,113,114, 154
நீதியியல் அணுகுமுறை 102, 103,98
நீல பத்மநாபன் 3,89,91,104, 128,132 129
நுஃமான். எம் ஏ 15,63,99
படித்திருக்கிறீர்களா 48,49
படைப்பும் ;படைப்பாளியும் 4,100
பத்மாவதி சரித்திரம் 53,47, 110, 112
பாரதி 6,8,16,106,116,149, 144,152,14
பாரதிதாசன் 123,155,157, 158
பாரதியார் 9,15
பிகாஸோ 32
பிச்சமூர்த்தி. ந. 16,123,144
பிரதாப முதலியார் சரித்திரம் 45,47,53,112
பிரபஞ்சன் 34
பிரேமகலாவத்யம் 63
புத்தம் வீடு 54
புதுமைப்பித்தன் 3,4,6 16,17, 49,155.156,158
புரியாத்தன்மை 144
பூரணலிங்கம் பிள்ளை எம்.எஸ் 43 45
பெர்டோல்ட் பிரக்ட் 35
பெரியார் 113,114
பொன்னகரம் 17
பொன்னுதுரை. எஸ் 61
மணிக்கொடி 15,42.114 120
மரபு மீறல் 11
மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் 52
மறைமலையடிகள் 46
மாதவன். ஆ. 128, 135
மாதவையா. அ. 110,111,112
மாயூரம் வேதநாயகம் பிள்ளை 63,111
மாலன் 140
மீனாட்சி சுந்தரம் தெ.பொ 46,47
முத்துசாமி. சி. 79,80
முத்துசாமி. ந. 31,38
முட்டை 34
முதல் ஐந்து தமிழ் நாவல்கள் 47
ரங்கராஜு. கே.ஆர் 49,113
ராமாமிருதம். லா.ச 16
ராஜகோபாலன். கு.ப ,16,17, 123,155,156
ராஜம் கிருஷ்ணன் 128
ராஜதுரை. எஸ். வி. 146

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வட்டார நாவல் 91,92,94,97
வரலாற்றில் திறனாய்வு 105,
106
வரதராசன் மு. 49,50,51,67,
103,44
வ. வே. சு. ஐயர் 116,117
வ. ரா 48,49,121
வள்ளத்தோள் 17,155,156
வாழ்க்கை
வரலாற்றியல்திறனாய்வு 105
வானம்பாடி (இதழ்) 78
வானம்பாடிக் கவிஞர்கள் 144
வாஸந்தி 128,129,135
விந்தன் 50
வெங்கட் சாமிநாதன் 28,32,
63
வெங்கட்ராம். எம்.வி. 138,
155,158
வேங்கடரமணி. கா. சி. 113,
117
வேணுகோபாலன். தி.சா. 148
வேதநாயகம் பிள்ளை 46
வேர்ட்ஸ்வொர்த் 9
ஜகந்நாதன். கி.வா. 44,52,53,
54,55
ஜானகிராமன். தி. 3,16
ஜீவனாம்சம் 104
ஜீவானந்தம். ப. 123
ஜீன் பால் சார்தர் 2
ஜெயகாந்தன் 3,16,17,50,67
ஜே.ஜே. சில குறிப்புகள் 98,
100,104
ஹெகல் 26,27
ஹென்றி இப்சென் 30

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

DONATION

771 C

पुस्तकालय

பிழை திருத்தம்

பக்	வரி	பிழை	திருத்தம்
6	13	தலவர்களும்	புலவர்களும்
10	23	புதுமைப்புத்தன்	புதுமைப்பித்தன்
15	34	கலைக்காவே	கலைக்காகவே
17	25	இறைவனுகே	இறைவனுக்கே
28	4	இயல்பினிது	இயல்பினது
47	4	தொ.பொ.மீ	தெ.பொ.மீ.
50	14	வழுவூரார்	வடுவூரார்
64	14	மதிபீடுகள்	மதிப்பீடுகள்
112	1	சரித்திரதில்	சரித்திரத்தில்
134	21	உணரமுடிடுகிறது	உணரமுடிகிறது
128	23	பின்னனி	பின்னணி
153	3	எழுதப்ட்டன	எழுதப்பட்டன
157	25	அடியோற்றி	அடியொற்றி
158	10	சரிரினதெரு	சரியானதொரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost and with the
Compliments of the Dept. of Education,
Govt. of India, New Delhi.

DONATION

GURUKUL KANGRI LIBRARY

Acces on 27/6/53
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar